# ஸ்ரீ வேதாந்த தீபிகை

தொகுதி-25 எண்- 10.11.12.

ஏப்ரல் முதல் ஜூன் வரை.

1937

JL
R.65m 211,N12
N37.25.10-12
160136

# SRI VEDANTA DIPIKA

Vol. 25] APRIL 1937 [Part 10


470

# ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபையாரால்

ப்ரசுரிக்கப்படும் மாதத் தமிழ்ப் பத்ரிகை.

OFFICE OF THE ... MAY 1937

தாது ௵



பங்குனி ௴

பத்ராதிபர் :

வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்


CONDUCTED BY

Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,

VILAS 4–5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ப்ரசார ஸபை, லிமிடெட்.

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்:—வாணி விலாஸ், 4-5 பத்திரய்ய கார்டன் தெரு,

பார்க் டவுன், மதறஸ்.

## விசேஷ விளம்பரம்

நாளது ஈச்வர வருஷம் சித்திரை மாதத்தில் ஸ்ரீ பகவத் இராமானுஜருடைய திருவவதார தினமும் ததங்கமான உத்ஸவாதிகளும் கொண்டாடப் போகிறபடியால் அதற்கு வருகிற சித்திரை மாத ஸஞ்சிகையில் விசேஷமாக அநேக ஆசார்யர்களாலும் பண்டிதர்களாலும் அவ்வவதார புருஷனுடைய வைபவத்தைப் பற்றியும், ஸித்தாந்தத்தைக் குறித்தும் அவருடைய திவ்யாக்ஞை விஷயமாகவும் அநேக வியாஸங்கள் பிரசுரிக்கப்படும்.

நம் தீபிகையின் வருஷம் சீக்கிரத்தில் முடிவு பெறுமாகையால் நம் சந்தாதாரர்கள் அனைவரும் பாக்கியுள்ள சந்தாத் தொகைகளை தாமதமன்னியில் மேல்கண்ட விலாஸத்துக்கு அனுப்ப வேண்டுமாய் கோருகிறோம்.

T. RAJAGOPALACHARI
R. TIRUMALAI TATACHARI
*Joint Secretaries.*


अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முதுமொழி கூறுகிறது.

“अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।”

“अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।”




தலைவலி, ஜலதோஷம், சுளுக்கு முதலான சகல நோய்களையும் தீர்க்கவல்ல ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

அதிர்ஷ்டம்! எப்படி?

L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

விலை மலிவு! சுவை பெரிது!

நன்மை தரும்!

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு

நல்ல பெப்பர்மெண்டு !!

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

**SRI L. N. CONFECTIONARY,**

Sales Depot:—West Chitrai St., Madura.

*MADRAS OFFICE*:—**Phone No. 3658.**

Y. M. I. A. Buildings, Armenian St., Madras

---

**L** காயம்—பெருங்காயம் **G**

இதை ஹிங்கு—ஹிங்கு என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ரவேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ணம் செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து [illegible] திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை கும்பகோணம்


160136

ஶ்ரீ:

ஶ்ரியை நம:

[illegible]

# விஷய ஸூசிகை


1. ஸ்ரீ ராமாயண ரஸாஸ்வாதம் — 445
   [ஸ்ரீ. உப. தி. வீரராகவாசார்யர்]
2. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் ச்ருதி ஸ்ம்ருதிகளுக்கு ஸந்நிஹிதமானதே — 453
   [ஸ்ரீ. உப. R. ராமாநுஜாசார்யர்]
3. தினசர்யை — 462
   [ஸ்ரீ. ஸ்ரீ.]
4. வரதராஜ பஞ்சாசத் — 467
   [ஸ்ரீ. உப. எ. வி. கோபாலாசார்யர்]
5. ப்ருஹ்ம விசாராதிகார நிர்ணயம் — 470
   [ஸ்ரீ. உப. மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்யர்.]
6. ஸித்தாந்த ஸம்பந்த விருத்தாந்தங்கள் — 476
7. சதுஸ் ஸூத்ரீ ஸ்வாரஸ்யம் — 481
   [ஸ்ரீ. உப. வே. தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்]
8. தாய்மொழி பேனால் — 489
   [பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி. ரெ. திருமலை ஐயங்கார்]
9. ஸ்ரீ வைகுண்ட ஸ்தவம் — 133—138
   [ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர், மாம்பலம்]
10. திவ்விய சூரி சரிதம் — 345—360
   [வங்கீபுரம் கோ. ஸ்ரீ. உப. ஸ்ரீனிவாஸாசார்யர்]


---

குறிப்பு:—ஸமஸ்த விஷயங்களுக்கும் சபையின் ரிஜிஸ்டர்ட் ஆபீசின் விலாஸத்தைக் கவனிக்கவேணும்.

**T. Rajagopalachari,**
*General Secretary.*

ஸ்ரீ

# ஸ்ரீ ராமாயண ரஸாஸ்வாதம்

[சிரோமணி, தர்கார்ணவ, பண்டித ரத்ந
ஸ்ரீ. உப. உத்தமூர். தி. வீரராகவாசார்யர்]

இப்படிப்பட்ட கவிகளிலும், தபோயோக மஹிமை வாய்ந்தவர்களாய், ஸகல பதார்த்த ஸாக்ஷாத்காரம் பெற்றவர்களாய், பரம காருணிகராய், ஸர்வார்த்த கர்பமாய் ஸர்வ ஜனரஞ்ஜகமுமான காவ்யரத்நத்தை அருளிச் செய்தவருமான வ்யாஸரும் வால்மீகியுமே கவிரத்னங்கள். ஸ்ரீமத் ராமாயணம், ஸ்ரீ மகாபாரதம் என்கிற காவ்யரத்னங்களை அடிக்கடி ஆவ்ருத்தி செய்தே காளிதாஸாதிகள் கவிதாமார்கத்தைக் கொஞ்சம் கற்றறிந்தனர். "இப்படி வ்யாஸரும் வால்மீகியும் நெஞ்சில் இருக்கச் செய்தே, நம்முடைய கவனம் சோபிக்காது என்று நிற்காமல் அடியோடு வெட்கமற்று காளிதாஸ ப்ரப்ருதிகளும் கவனம் பண்ணப் புறப்பட்டார்களே" என்று ஸ்ரீதேசிகனே யாதவாப் யுதயத்திலே அருளிச்செய்தார்.—

"[illegible] हृदयस्थिते ।
[illegible] कवयः काव्यं [illegible] वाः ॥"

அவ்விருவர் தன்னிலும் வால்மீகியே சிறந்த கவியாவார்.

"[illegible] नानार्थ [illegible] ।
[illegible] सारोऽयं कृतः काव्यात्मना कृतः ॥"

என்கிறபடி காவ்யமாய், வ்யாஸ மஹர்ஷியைப் பார்த்து ப்ரஹ்மாவினாலே—

"जन्मप्रभृति सत्यां ते वेद्मि गां (வாக்கை) ब्रह्मवादिनीम् ।
त्वया च काव्यमित्युक्तं तस्मात् काव्यं भविष्यति ॥
अस्य काव्यस्य कवयो न समर्था विशेषणे ॥"
(ஆதி பர்வ 2-97)

என்று ஸர்வாதி சாயியென்று அனுக்ரஹிக்கப்பட்டதுமான மகாபாரதத்தைக் காட்டிலும் விஷய வைலக்ஷண்ய விசோபிதமாய் சாகோபாங்யான விஸ்தரமில்லாமல் ச்ருதி மனோஹரமாய் ஸரளகம்பீரமுமான இந்த வால்மீகி கோகில கூஜிதத்திற்கே உத்கர்ஷம் அதிகம். ஆக கவிப்ரதம பத்ததி

யான் இதுவே பிறப்பினாலும் பெருமையினாலும் முதன்மையை வஹித்திருப்பதாலே நிருபாதிக காவ்யத்வம் இதற்கே யாம். ஆகையாலே 'காவ்யம் ராமாயணம்' என்ற ச்லோகத்தில் காவ்ய பதத்தை மட்டும் ப்ரயோகித்து உலகினிற் காணப்படும் இதர காவ்யங்களுக்கு இதுவே ஆதியென்பதை விளக்குவதற்காக ஆதி காவ்யமென்று வழங்கப்பட்டு வருகிறது. இது "இத்யார்ஷே ஸ்ரீமத்ராமாயணே வால்மீகீயே ஆதிகாவ்யே—" என்று ஒவ்வொரு ஸர்கத்தின் முடிவிலிருக்கும் வாக்யத்தாலும், "ஆதிகாவ்யமிதம் க்ருத்ஸ்நம்—". (யு-131-102) என்கிற ச்லோகத்தாலும் ஸ்பஷ்டம்.

இங்கே *சிலர் உத்தரராம சரிதமென்கிற நாடகத்திலே 'வால்மீகஸ்யாஷ்டிசெத்யாயேயம் ச்லோக:' என்று பவபூதி எழுதியிருப்பதாலே வால்மீகி ராமாயணம் பவபூதி கவியின் காலம் வரையில் ஸர்கபந்தரூப காவ்யமாக வழங்கப் படவில்லை. அதற்குப் பிறகே இதைக் காவ்யமென்று ப்ரஸித்தப் படுத்துவதற்காக ஸர்க்க விபாகம் செய்யப்பட்டது. புராணங்களிற்போலே அத்யாய விபாகமே ஆதியிலுள்ளது. இப்படி காவ்யமென்பதை ஸ்தாபிப்பதற்காகவே ஒவ்வொரு ஸர்கத்திலும் கடைசியில் பெரிய வ்ருத்தங்களில் சுலோகங்கள் ப்ரக்ஷேபிக்கப் பட்டனவென்று விமர்சிக்கிறார்கள். இதனைச் சற்று விசாரிப்போமாக. காளிதாஸன் பவபூதிக்கு முன்பட்டவன் என்பது நிர்விவாதம். அவன் ரகுவம்சத்திலே உத்தரகாண்டத்திற் சொல்லிய அர்த்தங்களையெல்லாம் ஸங்க்ரஹித்திருக்கிறான் (14, 15. ஸர்கம்). அதில்—

"உபயோரபி யதா லோக: ப்ராவீண்யேந விஸிஸ்மியே ।
ந்ருபதே: ப்ரீதிதாநேஷு வீதஸ்ப்ருஹதயா ததா ॥" (15-68)

[மஹாராஜனான ஸ்ரீராமன் ஸந்தோஷப்பட்டுச் செய்த நன்கொடைகளில் இவர்களுடைய (குசன் லவன்) ஆசையற்றிருக்கும் தன்மையைக் கண்டு ஸபை ஜனங்கள் எவ்வளவு ஆச்சர்யம் கொண்டார்களோ, அவ்வளவு அவர்களுடைய ஸங்கீதாபிநய ஸாமர்த்யத்தைக் கொண்டில்லை]

"ச்ருத்வா விம்சதி ஸர்காம்ஸ்தாந் ப்ராத்ருபிர் ப்ராத்ருவத்ஸல:। (7-94-17)
அஷ்டாதச ஸஹஸ்ராணி ஸுவர்ணஸ்ய மஹாத்மந: ।
ப்ரயச்ச சீக்ரம் காகுத்ஸ்த யதந்யதபிகாங்க்ஷிதம் ॥
... ... ... ... ... ...
தீயமாநம் ஸுவர்ணம் தந்நாக்ருஹ்ணீதாம் குசீலவௌ ।
ஸுவர்ணேந ஹிரண்யேந கிம் கரிஷ்யாவஹே வநே ॥"

*Prof Weber, and C. V. V. Vaidya.



என்கிற ச்லோகங்களின் அர்த்தத்தைச் சுருக்கி அறிவித்தான். உத்தர காண்டம் பின்னிட்டெழுதப்பட்டது என்கிறவர்களும் பவபூதிக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னமே ஏற்பட்டதாக நினைத்திருக்கிறார்கள். 'விம்சதி ஸர்காந்' (இருபது ஸர்கங்களை) என்று ஸர்கவிபாகம் சொல்லப் பட்டிருக்கிறது. இப்படியே "ஏவமேவ விம்சதிஸ்ஸர்கா: ஜ்ஞேயா ..." "ததா ஸர்கசதாந் பஞ்ச" என்றிவ்வாறாக உத்தர காண்டத்திலும் பால காண்டத்திலும் ஸ்ரீமத் ராமாயணத்திலேயே சொல்லப்பட்டும், ஒவ்வொரு ஸர்கம் முடிவில் குறிக்கப்பட்டுமிருக்க, பவபூதிக்குப் பின்னுள்ளார் இப்படி ஏற்படுத்தினதாகச் சொல்வது எவ்வளவு அஸங்கதமாயிருக்கிறது கவனியுங்கள்! இப்படி பவபூதிவாக்யத்தைக் கொண்டு இவ்வளவு வ்யக்தமான விஷயத்தை மறுப்பதைவிட பவபூதியே அறியாமலோ, அல்லது மற்ற புராணங்களின் அநுபவத்தாலேற்பட்ட வாஸனையாலோ, ஸர்கம் என்றாலும் அத்யாயமென்றாலும் ஒரே தாத்பர்யந்தான் என்கிற பாவத்தாலோ, 'அத்யாயே' என்றான் என்று விமர்சிப்பதல்லவோ இங்கு ந்யாயமாகும். மேலும் பவபூதி அப்படிச் சொன்னதாகவும் நிச்சயிக்க முடியவில்லை. ஏனெனில், உத்தரராம சரிதத்தில் 'வால்மீகஸ்யாஷ்டிசெத்யாயேயம் ச்லோக:' என்று பாடமிருப்பதாக விமர்சகர் எழுதியிருக்கிறார். அச்சிட்ட புத்தகத்தில் ஒன்றில், 'வால்மீகிசரிதஸ்யாஷ்டெத்யாயே ஷள ச்லோகா:' என்று பாடமிருக்கிறது. ப்ராசீன பாடத்தை ப்பராமர்சித்து அச்சிட்டதாகச் சொல்லிய மற்றொரு புத்தகத்தில் 'வால்மீகிசரிதஸ்யாஷ்டமே ஷள ச்லோகா:' என்றிருக்கிறது. இதில் அத்யாயபதமில்லை. வ்யாக்யாதாவுக்கும் இந்த பாடமே அகப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. 'வால்மீகிசரிதஸ்ய வால்மீகஸ்ய அஷ்டமஸர்கே' என்று அவ்விடத்தில் வ்யாக்யானம். தவிர 'அயம் ச்லோக:' என்று சொல்லி மேலெடுத்த ச்லோகத்திலே

"ப்ரியாதா ஸீதா ராமஸ்ய தாரா: விதர்க்யா இதி ।
ப்ரியபாவஸ்து தயா ஸ்வகுணைரேவ வர்த்தித: ॥"

என்று விமர்சகஸம்மதமான பாடம். அத்யாய பதமில்லாத பாடமுள்ள புஸ்தகத்தில் உத்தரார்த்த பாடம் 'ஸ்வகுணைரேவ வர்த்திதோ வ்யவர்த்த' என்றிருக்கிறது. இப்போதைய ஸ்ரீமத் ராமாயண பாடம் 'குணாத்ரூபகுணாச்சாபி ப்ரீதிர்பூயோ(அ)ப்யவர்த்த' என்றிருக்கிறது. இந்த பாடம் சற்றேறக்குறைய ஒத்திருப்பதால் அத்யாய பதமில்லாத பாடமுள்ள புத்தகமே சுத்தமாயிருக்கவேணுமென்று ஊஹிக்க இடமிருக்கிறது. ஆனால் இங்கே 'ஷள ச்லோகா:' என்று சொல்லி

"ததைவ ராமசந்த்ராய: ப்ராணேப்யோऽபி ப்ரியோऽநுஜ: ।
ஸர்வஞ்சைவ ஜாநாதி வ்ருத்தியோகம் ஸமாஸத: ॥"

என்று மற்ரெருரு ச்லோகமும் எடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீராமயணத்திலோ இப்படி ஒரு ச்லோகம் பாலகாண்டத்தின் கோடியிலில்லை. 'ஸர்வஞ்சைவ ஜாநாதி வ்ருத்தியோகி ஸமாஸத:' என்று ஒரு புஸ்தக பாடமிருப்பதாக ஏற்படுகிறது. இன்னுமொரு அர்யமில்லை. ஆனால் 'தஸ்யாஸ்ய உத்தரராமசரிதம் ஸர்வம் ப்ரதிபத்ஸ்யதே' என்று அவ்வர்க்கங் கொண்ட அர்யமிருக்கிறது. விமர்சகர் ஸ்வயம் ச்லோக: என்றெழுதி ஒரு ச்லோகத்தைக் குறித்திருப்பதால் இந்த இரண்டாவது ச்லோகம் உத்தரராம சரிதத்திலேயே யில்லை யென்று சொல்ல வேண்டியிருக்கிறது. லவன் சொல்வதாக விமர்சகர் எழுதுகிறார். குசன் சொன்னதாகப் புத்தகத்திலிருப்பது. ஒரு புஸ்தகத்தில் 'உதீர்யதாம் வத்ஸ' என்றிருவரையும் ஸ்ரீராமன் சொல்ல ஏவினானெனத் தக்க பாடம். மற்ரெருரு புஸ்தகத்தில் 'உதீர்யதாம் வத்ஸ:' என்று ஒருவனை ஏவினதாக. இவ்வளவு வ்யவஸ்தையில்லாத அபத்த புஸ்தகத்தை வைத்துக்கொண்டு அச்ராவ்ய பதத்தை பவபூதி ப்ரயோகித்ததாக நிச்சயித்து வ்யக்தமாய் ஏற்பட்ட ராமாயண ஸர்க வ்யவஸ்தையை அழிக்கப் பார்க்கும் விமர்சகருடைய விமர்சவினோதத்தை என்னவென்று நாம் சொல்லுவது.

இவ்வளவால் 'ஸர்கபந்தோ மஹாகாவ்யம்' என்றிருப்பதாலே இதையும் மஹா காவ்யமாக்குவதற்காக ஸர்கபந்த மாக்கினதென்பதும் பிசகென்று ஸ்பஷ்டமாகும். மேலும் காவ்யத்தில் ஸர்கவிபாகமே செய்ய வேண்டுமென்கிற நிர்பந்தமுமில்லை. உச்வாஸம், ஆச்வாஸம், ஸ்தபகம், பரிச்சேதம் என்றிப்படி பெயர் வைத்தாலும் காவ்யத்வ சோபை போய்விடாது. ஆனாலும் 'கவிரேக: ப்ரஜாபதி:' என்கிறபடி கவியும் ஒரு ஸ்ரஷ்டாவாகையாலே அவன் செய்யும் க்ரந்த மென்கிற ஸம்ஸாரத்தில் ஒவ்வொரு பாகத்தை ஒவ்வொரு ஸர்கமாக ஏற்படுத்துவது யுக்தமே. 'ஆர்ஷே புநஸ்ஸர்கா: ஸ்யுராக்யாநஸம்ஜ்ஞகா:' என்று ஆர்ஷமான மஹா காவ்யத்தில் ஸர்கமென்பதுக்குப் பதிலாக ஆக்யானம் என்று பெயரென்று ஆலங்காரிகர் சொல்லியபடி யோசித்தால் ஸர்கபந்த மென்றேற்படுத்துவதற்காக ஸர்கவிபாகம் பின்னிட்டு செய்யப்பட்டிருந்தால் வேறிடத்தில் மஹா காவ்யத்திலே காண்டவிபாக மிராமல் ஸாக்ஷாத் ஸர்கவிபாகமே யிருப்பதால் இங்கே பாலகாண்டம் அயோத்யாகாண்டம் என்றிப்படி காண்ட விபாகங் கூட விடப்பட்டிருக்க வேண்டும். ஆகையால் ராமாயணம் பிறந்தபோதே ஸர்கபந்த மென்பதில் யாதொரு பாதகமுமில்லை. ஸர்வ ஸர்கந்தோறும் கடைசியிலிருக்கும் பெரிய வ்ருத்த ச்லோகங்களும் 'ஏகவ்ருத்தமயை: பத்யைரவஸாநேऽந்யவ்ருத்தகை:'



என்கிற ஸர்க நிர்பந்தத்தை யனுஸரித்துப் பின்னிட்டுச் சேர்க்கப்பட்டவையென்பதும் ஸரியன்று. ராமாயண ப்ரப்ருதி ப்ராசீன மஹா காவ்யங்களின் ஸ்திதியைப் பார்த்து ஆலங்காரிகருடைய லக்ஷண க்ரந்தங்கள் ஏற்பட்டிருக்க லக்ஷண க்ரந்தங்களுக்குத் தக்கபடி இந்த லக்ஷ்ய க்ரந்தக்கள் பரிஷ்கரிக்கப்பட்டதாக விமர்சிப்பது அழகல்ல. ராமாயணத்திலே சிற்சில விடங்களில் வேறு வ்ருத்தமில்லாமலிருக்கிறது. நிர்பந்தத்தை யனுஸரித்திருந்தால் அப்படி விடப்பட்டிராது. உள்ள விடங்களில் அத்தகைய ச்லோகங்கள் அவ்வோ ஸர்கங்களின் அர்த்தத்திற்கு ஸங்க்ரஹமாகவும், சில விடங்களில் மற்ற ச்லோகங்களைப்போலே அபூர்வமான கதாபாகத்தை விளக்குகின்றனவாகவும், மற்றும் சில விடங்களிலே மேல் ஸர்கத்தின் அர்த்தஸங்க்ரஹமாகவும் பலவாறாக யிருக்கின்றன. அவற்றில் முன் பின் சொல்லப்படாத கதா பாகத்தைப் பற்றின ச்லோகங்களை ப்ரக்ஷிப்தங்களென்றெடுத்து விட்டால் முன் பின் கதையே சேராதாகையால் அச்ச்லோகங்களை வால்மீகி எழுதினதாக அங்கீகரித்துத் தீரவேண்டும். உதாரணமாக வால்மீகியே எழுதினதாக ஒப்புக் கொள்ளப்பட்ட அயோத்யா காண்டம்—12, 13, 31, 32, 33, முதலிய பல ஸர்கங்களிலும் காண்க. ஆனால் சிற்சில விடங்களில் புனருக்தமாகத் தோன்றினாலும் ஸர்கார்த்த ஸங்க்ரஹமென்றே கொள்ள வேணும். ப்ரபலமான காரணமிருந்து சில விடங்களில் ப்ரக்ஷிப்தமாக ஏற்படலாம். அவ்வளவைக்கொண்டு பெரிய வ்ருத்த ச்லோகம் பூராகவும் பின்னிட்டவை யென்ன வொண்ணாது. சில விடங்களில் ஸர்கம் பூராகவும் பெரிய வ்ருத்தமிருக்கிறது, அனுஷ்டுப் ச்லோகங்களும் அனேகம் ப்ரக்ஷிப்தங்களாயிருக்கின்றன. ஆகையால் 'காவ்யம் ராமாயணம்' என்கிறபடி இதற்கு ஸர்கபந்தாத்மகமேவ மஹா காவ்யத்வம் ஆஜந்மஸித்தமென்றே நிச்சயிக்கப்படுகிறது.

இப்படி இது காவ்யமானாலும் ஆதிகாவ்யமென முடியுமோ? வால்மீகிக்குமுன் கவிகளே இருந்திலர் என்று எங்ஙனே சொல்லக்கூடும்! அவருக்கு முன் அனேக யுகங்கள் அதீதங்களாயினவே என்று மற்றோர் ஆக்ஷேபம். இங்கு விமர்சகரின் கொள்கை இவ்வாறு—நாரத மகர்ஷி வால்மீகியாச்ரமத்திலிருந்துத் திரும்பினவுடன் மாத்யாஹ்னிக ஸ்நாநத்திற்கு பரத்வாஜர் என்கிற சிஷ்யரோடே வால்மீகி புறப்பட்டு, அதிக நாழிகையாய்விட்டபடியாலே கங்கைக்குச் செல்லாமல் தமஸா நதியிலேயே நின்று, அங்கே விளையாடிக் கொண்டிருக்கும் க்ரௌஞ்ச மிதுனத்தில் ஆண் பக்ஷியை அடித்துத் தள்ளின வேடனைப் பார்த்து மனது நொந்து,

"மா நிஷாத ப்ரதிஷ்டாம் த்வமகமச்சாச்வதீஸ்ஸமா: ॥
யத்க்ரௌஞ்சமிதுநாதேகமவதீ: காமமோஹிதம் ॥" (1-2)

என்று சபித்த பிறகு

" பாதபத்தோऽக்ஷரஸமஸ்தந்த்ரீலயஸமந்வித: ।
ஶோகார்தஸ்ய ப்ரவ்ருத்தோ மே ஶ்லோகோ பவது நாந்யதா" ॥ (1-2-18)

[சுலோக மிருக்கவேண்டியபடி ஸமமாக அக்ஷரங்களுள்ளதாய், ஒவ்வொரு வீணு வாத்யகானத்திற் கிசைந்ததாய், சோகத்தினலே வருந்தின என்னிடமிருந்து வெளிவந்த இது ச்லோகமேயாம்; வேறில்லை] என்று நான்கு பாதங்களையும் ஸம ஸங்க்யமான அக்ஷரங்களையும் பார்த்து ச்லோகமிது வென்று மஹர்ஷி அநுமானம் செய்கிருர். அக்காலத்தில் சுலோகம் செய்வது ஸஹஜமாயிருந்தால் இவ்வளவு அநுமான ப்ரயாஸத்திற்கு அவகாசமேது. மேலே "ப்ரதிஜக்ராஹ ஸந்துஷ்டஸ்தஸ்ய துஷ்டோऽபவத்குரு: " என்கிறபடிச் ச்லோகந்தானென்று சிஷ்யர் அங்கீகரிப்பதும் அதனல் ஆசார்யர் ஸந்தோஷப்படுவதும் வர்ணிக்கப்கட்டதி லிருந்தும் இது வ்யக்தம். மாத்யான்னிகச் சடங்கை முடித்துக்கொண்டு ஆச்ரமமேற எழுந்தருளின பிறகு, அவரைப் பார்க்க எழுந்தருளின ப்ரம்மாவை பாத்யம், அர்க்யம், ஆஸனம், வந்தனம் முதலிய முறைகளாலே ஆதரித்து அவருடைய அநுமதியின் பேரில் ஆஸனத்தில் வீற்றிருந்து, மறுபடியும் க்ரௌஞ்சிக்குப் பதி வியோகத்தா லேற்பட்ட சோகத்தை யநுஸந்தித்துக் கொண்டு தாம் பண்ணின ச்லோகத்தை அஸ்பஷ்டமாய் மனதிற்குள்ளே பாடிக்கொண்டிருந்தார் என்று

" ஶோசந்நேவ முஹு: க்ரௌஞ்சீமுபஶ்லோகமிமம் புந: ।
ஜகாவந்தர்கதமநா பூத்வா ஶோகபராயண: ॥ "

என்கிற ச்லோகத்தில் சொல்லி யிருப்பதாலும்,

'ஶ்லோக ஏவ த்வயா பத்தோ நாத்ர கார்யா விசாரணா' என்று நீர் செய்தது ச்லோகந்தானென்று ப்ரம்மா வாய்மலர்ந்தருளினதி லிருந்தும் அக்காலத்தில் அநுஷ்டுப் ச்லோக நிர்மாணங்கூட ஓர் ஆச்சர்ய கார்யமென்று புலப்படுகிறது. ஆக ருக் யஜுஸ் ஸாம அதர்வ ரூபமும் அனந்த சாகமுமான வேதத்தை ஆதரத்தோடு அப்யஸிப்பதிலும், அதன் அத்புதார்த்தங்களை அநுபவிப்பதிலும், அதன் ஸ்வரூபத்தை யதாவத்தாக ரக்ஷிப்பதிலும் அதி ச்ரத்தையை வஹித்த அந்நாளிலே ஸ்வதந்த்ரமாக ச்லோகம் எழுதுகிற தென்கிற ப்ரக்ரியையே இல்லாம லிருந்தது. அதனலேயே வால்மீகி இப்படி விஸ்மயிக்க நேரிட்டது. ஆதியில் ஸரஸ்வதி பூமியில் வால்மீகியிடமே ஆவிர்பவித்தாளென்பது மிகவும் ப்ரஸித்தம். 'பாதந்யாஸம் ப்ரதமமநகா பாரதீ யத்ர சக்ரே' என்று பாதுகாஸஹஸ்ரம். ரகுவம்சம் 14 வது ஸர்க்கத்தில் 'நிஷாதவித்தாண்டஜதர்ஶநோத்த: ஶ்லோகத்வமாபத்யத யஸ்ய ஶோக:' [வேடனல் அடிக்கப்பட்ட பக்ஷியைப் பார்த்ததி



லிருந்து உதித்த அவருடைய சோகமே உருவ மெடுத்ததோ] என்கிற விடத்தில் வ்யாக்யானத்தில் 'ததா ப்ரப்ருதி சந்தாம்ஸி பத்யாந்யஸ்ய வக்த்ராத்; பூர்வம் வாக்யாந்யேவ நிர்ஜாயந்தே' என்றும் சொல்லப்பட்டது. ஆகையால் அதற்கு முன் ச்லோகமே கிடையாது. கத்யங்கள் இருந்திருக்கலாம்.

இப்படி விமர்சகரின் கொள்கையும் ப்ராமாணிகமல்ல. யுத்தகாண்டத்திலே

" ருஷே: கண்வஸ்ய புத்ரேண கண்டுநா பரமர்ஷிணா ।
ஶ்ருணு காதாம் புரா கீதாம் தர்மிஷ்டாம் ஸத்யவாதிநீம் (18-26)

[கண்வருடைய குமாரரான கண்டுமஹர்ஷியின் கதையைக் கேளீர்.] என்று சொல்லி மேலே நாலு ச்லோகங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

"மநு: ப்ரஜாபதி: பூர்வமிக்ஷ்வாகுஸ்து மநோ: ஸுத:"(1-70-20)

என்கிறபடியே இக்ஷ்வாகு வம்சத்துக்கு மூல புருஷரான மனுவே ஸகல ஜனஸம்ப்ரீணனமான சைலியிலே அற்புதமாக தர்ம சாஸ்திரம் இயற்றியுள்ளார். கிஷ்கிந்தா காண்டத்திலே

" ஶ்ரூயதே மநுநா கீதௌ ஶ்லோகௌ சாரித்ரவத்ஸலௌ ।
க்ருஹீதௌ தர்மகுஶலைஸ்ததா தச்சரிதம் ஹரே ॥" (18-32)

என்று சொல்லி மேலே மநு ஸ்மிருதியிலிருந்து.

" ராஜபி: க்ருததண்டாஸ்து க்ருத்வா பாபாநி மாநவா: ।
நிர்மலா: ஸ்வர்கமாயாந்தி ஸந்த: ஸுக்ருதிநோ யதா ॥" (மநு 8-318)

ஶாஸநாத்வா விமோக்ஷாத்வா ஸ்தேந: ஸ்தேயாத்விமுச்யதே ।
அஶாஸித்வா து தம் ராஜா ஸ்தேநஸ்யாப்நோதி கில்பிஷம் ॥ "
(மநு 8-316)

என்று இரண்டு ச்லோகங்களை எடுத்திருப்பதிலிருந்தும் இது வ்யக்தம். பிராட்டி ஹனுமாரைத் திருத்தும் ஸமயத்திலே

" அயம் வ்யாக்ரஸமீபே து புராணோ தர்மஸம்ஹித: ।
ருக்ஷேண கீத: ஶ்லோகோ மே தம் நிபோத ப்லவங்கம ॥ "

என்று சொல்லி:—

" ந பர: பாபமாதத்தே பரேஷாம் பாபகர்மணாம் ।
ஸமயோ ரக்ஷிதவ்யஸ்து ஸந்தஶ்சாரித்ரபூஷணா: ॥" (யு. 116-43)

என்று ப்ராசின ச்லோகம் எடுத்திருப்பதையும் காண்க. இப்படி 'ஶ்ருதிம் யஜ்ஞே ஹவிர்ஹிதீக்ஷிதாஃ ப்ரோக்ஷகாஃ ஸ்ருவதே வஸுநா' என்று தொடங்கி, மூன்று சுலோகங்கள் (யு—16—7, 8, 9.) உதாஹரிக்கப்பட்டன. ஸ்ரீ ராம னுக்கு முன்பட்ட மத்ஸ்ய-கூர்ம-வராஹ-நரஸிம்மாவதாரங்களிலும், த்ரு வாதிகள் ஸாக்ஷாத்கரித்த அவதார விசேஷங்களிலும் பகவத் குணங்களை ஆழ்ந்து அனுபவித்து அத்புதமான ச்லோகங்களைப்பணித்த பெரியோர்கள் பலர் இருந்திருக்கவேண்டும். ஆக ஸ்ருஷ்ட்யாரம்பம் முதல் ச்லோகரசனை யுண்டென்று சொல்லலாம்.

அப்படியானல் வால்மீகிக்கு இது ச்லோகமா அல்லது வாக்யமா என்கிற ஸந்தேஹம் எங்ஙனே பிறந்ததெனில்—இப் ப்ரகரணத்தைப் பரா மர்சித்தால் அவருக்கு இப்படி ஸந்தேஹ முதித்ததாக ஒப்புக்கொள்ள வேண்டியது அவச்யமென்று தெரியவில்லை. இதை விவரிக்கிறோம். மனுஷ்ய னுக்கு கோபம், பக்தி, சோகம் முதலிய ஏதேனுமொரு ஹாவம் விஞ்சின போது அதன் பரீவாஹமாக வாக்யம் வெளிக்கிளம்புவது ஸர்வர்க்கும் அபி மதமே. அதில் தனக்கு ப்பரிசயமுண்டான பாஷையில் அவ்வாக்ய முண் டாகுமே யல்லது வேறு பாஷையில் வர ந்யாயமில்லை. ஆக இங்கே வால் மீக்கு ஸம்ஸ்க்ருத பாஷையிலே 'மா நிஷாத—ப்ரதிஷ்டாம்' என்று ச்லோக மாக வெளிவந்ததால் அச்காலத்தில் ஸம்ஸ்க்ருத பாஷையில் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று ஏற்படுகிறது.

"தாரயந் ப்ராஹ்மணம் ரூபம் இல்வலஸ் ஸம்ஸ்க்ருதம் வதந் ॥" (3-11-58)

என்று இல்வலாஸுரன் ப்ராம்மண ரூபமெடுத்து ஸம்ஸ்கிருத பாஷையில் பேசிக்கொண்டு ப்ராம்மணர்களை நிமந்த்ரணம் செய்ததாகச் சொன்னதிலி ருந்தும் ப்ராம்மணர்கள் இந்த பாஷையில் பேசி வந்ததாகத் தெரிகிறது. இதற்கு மேல் ச்லோகத்தில் 'ப்ராதரம் ஸம்ஸ்க்ருதம் க்ருத்வா ததஸ்தம் மேஷரூபிணம்' என்கிற விடத்தில் 'மேஷ ரூப மெடுத்த ப்ராதாவான வாதாபியை ச்ராத்தத்துக்கு வேண்டியபடி பாக ஸம்ஸ்காரத்திற்குட்படுத்தி சமைத்து' என்று அர்த்தமாகையால் ஸம்ஸ்க்ருதபதத்திற்கு வேறு அர்த்த மானாலும் இங்கே ஸம்ஸ்கிருத பாஷையென்கிற அர்த்தமே உசிதமானது. ச்ராத்தமென்கிற வைதிக க்ரியைக்குத் தக்கபடி ஸம்ஸ்கிருதத்தில் அச்ச மயம் பேசினதாக அவ்விடத்திற் கொண்டாலும் இங்கே வால்மீகிக்கு அவ சரமாக வார்த்தை வரும்போது ஸம்ஸ்கிருதத்தில் வந்தது அப் பாஷை யிலேயே வ்யவஹாரத்தை அறிவிக்கிறது. சாபம் கொடுப்பது ஸம்ஸ்கிரு தத்திலேயே இருக்கவேண்டு மென்கிற நிர்பந்தமில்லை. எந்த பாஷையிற் செய்தாலும் நிக்ரஹாநுக்ரஹங்கள் பலித்தே வருகிறன. ஆக ஸம்ஸ்கிரு தத்திற்சொன்னது பேசும் வழக்கத்தாலே வந்ததென்றேகொள்ளவேணும்.

ஸ்ரீ:

# ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் ச்ருதி ஸ்மிருதி களுக்கு ஸந்நிஹிதமானதே

[ஸ்ரீ உப. R. ராமானுஜாசார்யர், M. A., Professor of Philosophy, அண்ணுமலை யுனிவர்ஸிடி.]

சென்ற மாதம் வெளிவந்த தீபிகையில் "யாகஞ் செய்வதைப்பற்றி ஓர் அபிப்ராயம்" என்ற மகுடத்தின் கீழ் ஸ்ரீ உ. வே. அனந்தாசார்ய ஸ்வாமியால் வரையப்பட்டிருக்கும் லேகத்தைப் பார்த்ததும் அடி யேனுக்கு ஜனித்த சில அபிப்ராயங்களை தீபிகாபிமானிகளிடம் விக்ஞா பித்துக்கொள்ள விரும்புகிறேன். இது அபசாரகோடியில் புகுமானல் மஹான்கள் க்ஷமித்தருள வேணுமாய்ப் பிரார்த்திக்கிறேன். பசு ஹிம்ஸை செய்து யாகம் அவச்யம் அநுஷ்டிக்கப்படவேண்டுமென்று சொல்வதில் அடியேனுக்கு முக்கியமான நோக்கமில்லை. ஆயினும், நமது ஸித் தாந்த ஸம்பந்தமாய் ஸ்ரீ உ. வே. அனந்தாசாரியர் வெளியிட்டிருக் கும் சில குறிப்புகளை மட்டும் (அதாவது—'ஸ்ரீ வைஷ்ணவனுக்கு ச்ருதி ஸ்மிதிகளில் மிகக் கொஞ்சமே ஸம்பந்த முண்டு' முதலியன) இங்கு பரா மர்சிக்கவேண்டு மென்ற அவாவின் மிகுதியால் இதை எழுதத்துணிகிறேன்.

"ஜீவ ஹிம்ஸை கூடாதென்ற பொது விதிக்கு யாகத்தில் பசு ஹிம்ஸை விலக்கு விதி யென்பது மீமாம் ஸாந்யாயமானலும் ஸ்ரீவைஷ் ணவ ஸித்தாந்தத்தைப் பார்க்கும்போது யாகஞ் செய்வதைப் பற்றி விரோ தமான அபிப்ராயத்தையே கொள்ள வேண்டியதாய் நேருகிறது", என்று முதலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தம் உண்மை யில் மீமாம் ஸாந்யாய விருத்தமென்பது இந்த ஸ்வாமியின் திருவுள்ளமா? அப்படியானல் ஸ்ரீ ஆளவந்தார் "மீமாம்ஸாஶாஸ்த்ரயுக்திபிர் நாஸ்த்யேஶ்வர இதி" என்று ஸித்தாந்த விருத்தமான சாஸ்திரத் தில் தமக்குள்ள பாண்டித்யத்தைப் பெருமையாகப் பேசி யிருப்பாரா? மேலும் ஸ்ரீ பாஷ்யகாரர் 'ஸம்ஹிதமேதச்சாரீரகம் ஜைமினீயேந ஷோடஶலக்ஷணேந' என்ற வ்ருத்திக்ரந்தத்தை ஆதாரமாகக் காட்டி ஸித்தாந்த விருத்தமான பூர்வ மீமாம்ஸையோடு உத்தர மீமாம்ஸையை ஏகசாஸ்திர மாக ஸமர்த்தித்திருக்கக் கூடுமா? பூர்வ மீமாம்ஸையில் தேவதா நிராகரண பரமாயும் ஈஶ்வராநிராகரண மாயும் தோன்றும் ஸூத்திரங்களுக்கு தத்வ டீகையில் ஸ்ரீதேசிகன் தேவதாங்கீகார பரமாய் வ்யாக்யானஞ் செய்திருப்பது போல் யாகீய பஶுஹிம்ஸா விஷயத்திலும் அந்யதா திருவுள்ள மிருப்பின் அதை யெங்கேயாவது ஒரு விடத்தில் நிரூபித்திருக்க மாட்டாரா? சததூ ஷணீ மூன்றும் வாதத்தில் ஐகசாஸ்திரயத்தை ஸமர்த்திக்கும்போது விருத்தமாகத் தோன்றும் சில பூர்வ மீமாம்ஸா ஸித்தாந்தங்களை எடுத்து

ஸமாதானஞ் செய்திருப்பதுபோல், இவ்விஷயத்திலும் ஸ்ரீ ஸ்வாமி தேசிகனுக்கு அந்யதா திருவுள்ள மிருப்பின் அதையும் அங்கே நிரஸித்திருக்க வேண்டாமா? இனி வஸ்து ஸ்திதியை விசாரிப்போம். 'ந ரிஷ்யஸி' நீ ஹிம்ஸிக்கப்படவில்லை என்று சொல்லும் மந்திர வர்ணங்களையும் பசுவிற்கு ஏற்படப்போகும் அதிசயித ஃபலத்தையும் நோக்கி வ்ரண சிகித்ஸா ந்யாயத்தால் அது ஹிம்ஸையாக மாட்டாதென்றும், ஆகையால் 'ந ஹிம்ஸ்யாத்' என்ற நிஷேத சாஸ்திரத்திற்கு விஷயமில்லை என்றும், ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவுள்ளம். 'அஶுத்தமிதி சேந்ந' என்ற ஸூத்திரத்தின் ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவித்தவர்களுக்கு இதில் எள்ளளவேனும் ஸந்தேஹமுண்டாக ப்ரஸக்தியில்லையே. யாகீய பசு ஹிம்ஸை ஹிம்ஸையானாலும் உத்ஸர்க்காபவாத ந்யாயத்தால் அது தோஷமாகமாட்டா தென்பதாய் ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இவ்விடத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரின் ஸித்தாந்தத்தை ஸ்ரீ ஸுதர்ஶந ஸ்வாமி ஶ்ருதப்ரகாஶிகையில் நிரஸித்திருக்கிறாரென்பதை விமர்சகர்களறிவார்கள். எப்படியானாலும் யாகீய பசு ஹிம்ஸை அஶாஸ்த்ரீயமென்று நம் ஆசார்யர்களில் ஒருவராவது திருவுள்ளம் பற்றி யிருப்பதாய்த் தெரியவில்லையே.

உபநிஷத்பாஷ்ய காரரான ஸ்ரீரங்கராமாநுஜஸ்வாமி 'அஹிம்ஸந் ஸர்வபூதாந்யந்யத்ர தீர்த்தேப்ய:' என்னும் சாந்தோக்யவாக்யத்தை ஶாஸ்த்ரீயஹிம்ஸாவ்யதிரிக்தம் ஹிம்ஸாஶக்யவர்ஜந: என்று வ்யாக்யானஞ் செய்திருப்பதை சாஸ்த்ரஜ்ஞர்களறிவார்கள். இப்படியிருக்க வைதஹிம்ஸையில் நம் ஆசார்யர்களுக்குத் திருவுள்ளம் இல்லையென்பது பொருந்துமா? 'ஸர்வாபேக்ஷா ச யஜ்ஞாதி ஶ்ருதேரஶ்வவத்' என்ற ஸூத்ரத்தில் யஜ்ஞாதிகள் அவச்ய கர்த்தவ்யங்களென்று காட்டப்படவில்லையா? இங்கு 'ததா பஶோராலம்பநம் ந ஹிம்ஸா' என்ற பாகவத ஶ்லோகம் ஸ்ரீதரரால் 'தேவதோத்தேஶேந யஜ்ஞபஶ்வாலம்பநம் ததாலம்பநம் ந ஹிம்ஸா, பக்ஷணோத்தேஶேந க்ரியமாணமேவ பஶ்வாலம்பநம் ஹிம்ஸா' என்று வ்யாக்யாநம் செய்யப்பட்டிருப்பது கவனிக்கத் தக்கது. மனுவும்

"யஜ்ஞார்த்தம் பஶவஸ் ஸ்ருஷ்டா: ஸ்வயமேவ ஸ்வயம்புவா ।
யஜ்ஞோஸ்ய பூத்யை ஸர்வஸ்ய தஸ்மாத்யஜ்ஞே வதோऽவத: ॥
யா வேதவிஹிதா ஹிம்ஸா நியதாஸ்மிந் சராசரே ।
அஹிம்ஸாமேவ தாம் வித்யாத் வேதாத்தர்மோ ஹி நிர்பபௌ ॥"

யாகஹிம்ஸை ஹிம்ஸையாகமாட்டாதென்று நன்கு தனது அபிப்ராயத்தை வெளியிடுகிறார்.



மஹாகவி காளிதாஸனும்

'பஶுமாரணகர்மதாருணோऽப்யநுகம்பாம்ருதுரேவ ஶ்ரோத்ரிய:'

என்று பசு மாரணத்திலிருந்து ச்ரோத்ரியனை நிர்த்தயனாகச் சொல்லக் கூடாதென்ற விஷயம் பாமர ஜனங்களுக்கும் விதித மென்பதைச் செம்படவன் வாயிலாக வெளிப்படுத்தி யிருக்கிறான். இதை ஸஹ்ருதயர்கள் அறிவார்கள்.

ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரத்தில் [illegible] விஹிதங்களானாலும் ஶிஷ்டபரிக்ரஹ விரோதங்களாகையால் அநாதரணீயங்கள் என்ற ஆக்ஷேபத்தைச் சொல்லுமிடத்தில் "விஹிதங்களேயாகிலும் ந்யாயப்ராப்தி ஶிஷ்டபரிக்ருஹீதங்களல்லாதபடியாலே அதிதிஸத்காராதிகளிலே விஹிதங்களான மதுபர்க்காதிகள்போலே உபாஸநாதிகள் ஶிஷ்டபரிக்ரஹ விருத்தங்களாகையினாலே அநாதரணீயங்களன்றோ" என்ற வாக்யம் காணப்படுகின்றது. ஸ்வாமி தேசிகனுக்கு அவிஶேஷேண யாகீய பசு ஹிம்ஸை அநிஷ்டமாயிருந்தால், 'மதுபர்க்காதிகள் போலே' என்னுமிடத்தில் 'யாகீயபசு ஹிம்ஸாதிகள் போலே' என்றும் சொல்லியிருக்கலாமே. அதுவும் ஸ்ரீ தேசிகன் திருவுள்ளந்தானென்பது இந்த ஸ்வாமியின் அபிப்ராயமா வென்பது தெரிய வேண்டும்.

பிறகு "ஶ்ருதி ஸ்ம்ருதிகளை மாத்திரம் வைத்துக்கொண்டு ஸ்ரீ வைஷ்ணவ தர்மங்களை நிலை நிறுத்துவது அஸாத்யம். ஸ்ரீ வைஷ்ணவனுக்கு ஶ்ருதி ஸ்ம்ருதிகளில் மிகக் கொஞ்சமே ஸம்பந்தமுண்டு. ஶ்ருதிகளை முழுவதுமே ப்ராமணமாக எடுத்துக்கொண்டால் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை முற்றிலும் விட்டொழிக்க வேண்டு மென்பதில் தடையில்லை" யென்று எழுதப்பட்டிருக்கிறது. இந்த வாக்யங்களை அந்த ஸ்வாமி அவஹித மநஸ்கராய் மறுபடி ஒருதரம் பார்த்தால் மிகவும் அநுசயிக்க நேரிடு மென்பது அடியேனுடைய மிக்கத் தாழ்மையான அபிப்ராயம். ஸச்சரித்ரரக்ஷையில் 'ப்ரம்ஸ: ஶ்ருதிஸ்மரணாந் ஶிஷ்டாசாராஹா:' என்றறுதியிடும் நம் தேசிகன் ப்ரமாண பதத்தால் ஶ்ருதி ஸ்ம்ருதிகளை ப்ரதானமாகக் கணிசியாமல் பாஞ்சராத்ராதிகளையே திருவுள்ளம் பற்றுகிறாரா? நம் ஆசார்யர்கள் அங்கங்கே நமது ஸித்தாந்தம் தான் ஶ்ருதிக்கு மிகவும் ஸந்நிஹிதமென்று உத்கோஷித்திருக்க அது ஶ்ருதிக்கு வெகு தூரத்திலிருக்கிறதென்று ஸ்ரீ. உ. வே. அனந்தாசார்யர் ஸ்வாமி சொல்லுவது மிகவும் ஆச்சர்யத்தை விளைவிக்கிறது. ஸச்சரித்ரரக்ஷையில் ப்ரயோகாதிகாரோப ஸம்ஹாரத்தில்

"ஶ்ரீமத்வேங்கடநாதேந ஸம்யகேதத்ப்ரதர்ஶிதம் ।
ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாதிஸித்தம் சக்ராதிதாரணம் ॥"

என்று ஸ்ரீதேசிகன் அருளிச்செய்திருப்பதை இந்த ஸ்வாமி கடாக்ஷிக்க வில்லையா? அல்லது இவ்வருளிச் செயல் ப்ரதாரகோக்தி யென்று இந்த ஸ்வாமியின் திருவுள்ளமா? ஊர்த்வபுண்ட்ராதிகாரத்திலும் ஊர்த்வபுண்ட்ரதாரணத்திற்குப் ப்ரமாணமாக 'ஸந்த்யத்ர பஹூநி ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸாதி வசாம்ஸி தத்ர தாவச்ச்ரௌதாநி நிதர்ஶ்யந்தே' என்று ஶ்ருதிகளையே முதலில் ப்ரமாணமாக எடுத்திருப்பது ஸம்ப்ரதாய நிஷ்ணாதர்களுக்குத் தெரியாத விஷயமில்லையே. ஸ்ரீரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஶாஸ்த்ரீய நியமநாதிகாரத்தில்

"ஶ்ருதிஸ்ம்ருதிர்மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ மத்பக்தோऽபி ந வைஷ்ணவ: ॥

மநீஷீ வைதிகாசாரம் மநஸாऽபி ந லங்கயேத் ।
ஸ்வம் விஜ்ஞாயந்த்ருஹ: மர்யாதாம் வேதநிர்மிதாம் ।
ப்ரியோऽபி ந ப்ரியோऽஸௌ மே மதாஜ்ஞாவ்யதிவர்த்தநாத் ॥"

என்ற ப்ரமாணங்களைக் காட்டி ப்ரபன்னன் சரீரத்தோடு இருந்த காலம் ஶ்ருதிஸ்ம்ருதி வஶ்யனுப் அடிமை செய்யவேணுமென்றும் பகவதாஜ்ஞா ரூபமான ஶ்ருதி ஸ்ம்ருதிகளை உல்லங்கநஞ்செய்வது ஶரண்யனது அப்ரீதியை விளைவிக்கு மென்றும் நிரூபித்து "ஶ்ருதிஸ்ம்ருத்யாசாரை: ஸம்மதிமதிஸ்ஶ்ரமநஸாம்" என்று உபஸம்ஹரித்திருப்பதைப் பராமர்சிப்பவர்கள் நம் ஸித்தாந்தம் வேதத்திற்கு மிகக் கொஞ்சமே ஸம்பந்தமுள்ளதென்று சொல்லத் துணிவார்களா? பரதேவதா பாரமார்த்த்யாதிகாரத்திலும் "த்ரய்யந்தைரேககண்டைஸ்ஸமநுமநுவசநைர்வ்யாஸஸூத்ரைர்த்ருடிஸ்ம" என்று நமது ஸித்தாந்தம் ஸாங்கேதிகமன்றென்றும், உபநிஷதாதி ஸம்மதமென்றும், மந்வாதி மஹர்ஷி ஸித்தமென்றும் சொல்லப் படவில்லையா? இனி "யத்வை கிஞ்ச மநுரவதத் தத்பேஷஜம்" என்றும் "ய: ஶாஸ்த்ரஸ்ய பகவாந்" என்றும் கொண்டாடப்படும் மனுவின் ஸித்தாந்தம் யாதென்பதை விசாரிப்போம். "ஸோऽபித்யாய ஶரீராத்ஸ்வாத்" என்ற சுலோகத்திற்கு வ்யாக்யானஞ் செய்யும்போது ஸ்ரீகுல்லூகபட்டர் "அத்ர த்ரயீணிவேதாந்திநாம் மதமேவ மநோரபிமதம் பாதி" என்று சொல்லுகிறார். இது எதிரிகையாலே விடுதிட்டானபடியே யிருப்பதால் நாம் ஒன்றுமிங்கு அதிகஞ் சொல்லத் தேவையில்லை. இப்படி



யிருக்க 'ஸ்ம்ருதிகளுள் வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்குக் கொஞ்சமே ஸம்பந்தமுள்ளது' என்று எழுதுவோரின் கருத்தென்ன? "வைஶம்பாயந ஶௌநக ப்ரப்ருதய: ஶ்ரேஷ்டா: ஶிர: கம்பிந:" என்று நம் ஆசார்யர்களின் ஸ்ரீ ஸூக்திகளைக் கேட்டு மஹர்ஷிகள் ஆனந்த பரவசர்களாய் ஶிர:கம்பம் பண்ணுகிறார்கள் என்று சொல்லும் போது, ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் ஸ்மிருத்யாதிகளுக்கு தூரத்திலிருக்கிறது என்று சொல்வது உசிதமாகுமா? பாஞ்சராத்ரத்தை ப்ரமாணமாக அங்கீகரிப்பதாலேயே ஶ்ருதி ஸ்மிருதிகளை ப்ரமாண கோடியிலிருந்து விலக்கி விட்டார்களென்று சொல்வது உசிதமாகுமா? பாஞ்சராத்ராதிகளிற் சொல்லியிருக்கும் தர்மங்களையும் வைதிக கார்யங்களுக்கு விரோதமில்லாத படியாகச் செய்யவேணுமென்பதே ஸ்ரீ தேசிகனின் திருவுள்ளம். இவ்வர்த்தம் "வைஷ்ணவ தர்ம சாஸ்திரங்களிற் சொன்ன ஜபாதிகளும் அவச்யகர்த்தவ்யங்களான நித்ய நைமித்திகங்களுக்கு விரோதம் வாராதபடி அவற்றிற்குப் போக்கி மிக்க காலத்திலே ஆகக் கடவது. 'ஶ்ருதிதர்மாவிரோதேஷு காம்யேஷு ஜபாசாரேஷு' என்று நாரதாதிகளும் சொன்னார்கள்" என்ற ஸ்ரீ ஸூக்திகளால் தெளிவாக வில்லையா? பூர்வாசார்யர்களும் யாகாதிகளை யனுஷ்டித்திருக்கிறார்கள் என்பது "பெரிய நம்பி முதலான பரமாசார்யர்களும் தம் தாம் ஸூத்திரங்களின்படியே யக்ஞாதிகள் பண்ணினார்கள் என்னுமிடம் ஸர்வருக்கும் ப்ரஸித்தம்' என்ற ஸ்ரீ ஸூக்தியால் ஸ்பஷ்டமாகவில்லையா?

மேல் "ஸ்மிருதிகளிலும் புராணங்களிலும் வைதிக கர்மநிஷ்டன் செய்ய வேண்டிய நித்யமான வ்ரதங்களில் சிவராத்திரி...முதலான அனேக வ்ரதங்கள் ஜயந்த்யாதிகளைப் போலவே அவச்ய கர்த்தவ்யங்களாகப் படிக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஸ்மிருதிகளை ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் புறக்கணித்து நிற்கிறது" என்று எழுதப்பட்டிருக்கிறது. இதற்கு 'அவரவர்கள் அதிகாரத்திற்கேற்றபடி நித்யநைமித்திக காம்யங்களைத் தெரிந்தெடுத்துக் கொள்ளவேண்டும்' என்ற இவருடைய வாக்யமே ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம் ஏன் இவ்விருதங்களைப் புறக்கணித்து நிற்கிறதென்பதற்கு ஸமாதானமாகாதா?

"சதுர்விதா மம ஜநா பக்தா ஏவ ஹி தே ஶ்ருதா: ।
தேஷாமேகாந்திந: ஶ்ரேஷ்டா: தே சைவாநந்யதேவதா: ।
அஹமேவ கதிஸ்தேஷாம் நிராஶீ: கர்மகாரிணாம் ॥"

என்று ஶரண்யனால் கொண்டாடப்படும் ஶுத்தாந்த ஸித்தாந்திகளான அதிகாரிகள் வேறு. ஸாமாந்யாதிகாரிகள் வேறு, என்பது ஸம்ப்ரதாய நிஷ்ணாதர்களறிந்ததே. இங்கு,

" தேஶகாலாதிகாராதி விஶேஷேண வ்யவஸ்திதா: ।
ந தர்மா: ப்ராப்திமர்ஹந்தி தேஶகாலாந்தராதிஷு ॥ "

என்ற சரமஶ்லோகாதிகார ஸ்ரீ ஸூக்தி ஏன் ஸமாதாநமாக மாட்டாது? மேலும் "தன் வர்ணாஶ்ரம நிவ்ருத்தி ப்ரமாணாதிகாரத்துக்கநுரூபமான" என்ற க்ருதக்ருத்யாதிகார ஸ்ரீஸூக்தியின் வ்யாக்யாநமான ஸ்ரீஸாராஸ்வாதிநியில் காணப்படும்

" வர்ண: - ப்ராஹ்மணாதி: ; ஆஶ்ரம: - ப்ரஹ்மசர்யாதிகள்; ஶாஸ்த்ரம் - ஶ்ருதிஸ்ம்ருத்யாதி:; தந்நிவ்ருத்த்யர்ஹ: - ஶிக்ஷாதி: ; நிவ்ருத்தம் - ப்ராயஶ்சித்தாதி ; தந்நிவ்ருத்த்யர்ஹ: - வைஷ்ணவஸேவாதி: ; ஶரண: - வைஷ்ணவத்வம் ; தந்நிவ்ருத்த்யர்ஹ: - தேவதாந்தர வர்ஜநாதி: ॥ "

என்ற வாக்யங்களை ஸேவித்திருந்தால் ஏன் ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயம் ஶிவ ராத்ர்யாதிகளைப் புறக்கணித்து நிற்கிறதென்பது புலப்படும். உபாயாதிகாரத்தில் ஸ்ரீதேஶிகன் "திருமந்த்ரார்த்தத்தை அநுஸந்திப்பார் ஊரிலி ருக்குமவர்களுக்கும் ரக்ஷகனை ஸ்ரீயபதியைப் பற்ற விஶ்வாஸதார்ட்யமும் ரக்ஷகாந்தராந்வேஷணமும், க்ஷம் ஶரணம் என்று பிணைக்கும் நிரூபகாநுஶேஷத்வமும், தேவதாந்தரப்ராவண்யமும், தத்ஸம்ஸர்க்கமும்......... மற்றும் ஸ்வநிஷ்டாவிரோதிகள் ஒன்றும் பின்னாதது" என்று உபன்யஸித்திருப்பதை நாம் ஸதாசார்ய ஸகாசத்தில் கேட்டிருக்கவில்லையா? "அந்யோபாஸ்யவ்யவஸ்தா ஶாஸ்த்ரமானபோது அந்யரைப் பற்ற ஶேஷத்வ ஸ்வாதந்த்ர்யாத்ம ஜ்ஞான முடையவனுக்கு ததீயவர்க்கமாக தேவதாந்தர ஸம்பந்தம் நிவ்ருத்தமாயிற்று" என்ற ஸ்ரீஸூக்திகளை நோக்கினால் இச்சங்கை ஏற்படக் காரணமில்லையே. "உபாயோபேய நிஷ்டாம் நியமயதி ஸம்பந்தநியோ:" என்ற பட்டரின் ஸ்ரீ ஸூக்தி இச் சங்கைக்கு ஸமாதாநமளிக்கவில்லையா? கேசித்ப்ரயோஜநான தேவஶ்ரவணம் ஸ்வர்ணத்தோடொக்கும் ஸாத்விகர்களுக்கு தேவதாந்தர ஸம்பந்தம் ஸ்வநிஷ்டாவிரோத மென்பதை ஸ்ரீதேஶிகன் அங்கங்கே பலபடியாக நிரூபித்திருப்பது கவனிக்கப்படவேண்டாமா? அவைகளில் இரண்டொரு ஸ்தலங்களைமட்டும் இவ்விடம் குறிப்பிடுவது அநுசிதமாயிராதென்று எண்ணுகிறேன்.

(1) "தேவதாந்த்யஸம்பந்தம்" என்றும் "தேவதாந்தர ப்ரணாமம்" என்றும் இப் புடைகளிலே யத்தாஸ்த்ரஸித்ஹாஸாதிகளிற் சொன்ன



வாசாரமும் ஸாத்விகர்க்கு ஶாஸ்த்ரவஶத்தாலே பகவத்விஷயத்திலே நியதம். ஆகையால் ஒரு ஶாஸ்த்ரங்களுக்கும் விரோதமில்லை."

(2) க்ஷயாஜவி ப்ராப்ய தேவம் யதஸம் தோஷயாஶ்ரஹ: ।
நாஹமாராயயாமி க்ஷாம் தவ பக்தோஜயமஜ்ஞம் ॥

ஸக்ஷம் ப்ரஹார வா ஸவா மயி வஜ்ரம் வாஸந்தர ।
நாஹம் தீர்த்ஜ்யம் ஶிவிந் அந்யமாராயயாமி ஹே ॥

இத்யாதிகளிற்படியே நித்தியநைமித்திகங்களில் விசேஷணமாய்ப் புகுமன வொழிய, மற்றும் ஸர்வாவஸ்தையிலும் தேவதாந்தரஸ்பர்ச மற்றிருக்கை உசிதம்."

ஆழ்வார்களும் " இனிப்போய் ஒருவன் தனக்குப் பணிந்து கடைத் தலை நிற்கை நின்சாயை யழிவு கண்டாய்" "உன்னித்து மற்றொரு தெய் வம்தொழாளவனையல்லால்" "என்றேளிருக்கமணை நீராட்டி" "வரு தேவர் மற்றுளரென்றென் மனத்திறையுங்கருதேன்" "உனக்கே நாமாட் செய்வோம்" "களைவாய்த்துன்பங்களையா தொழிவாய் களைகண் மற்றி லேன்" என்று அங்கங்கே தேவதாந்தரவர்ஜனத்தை மிகவும் வற்புறுத்தி யிருக்கவில்லையா? ஆகவே, ராஜஸூயாதிகளில் ப்ராம்மணாதிகளுக்குப் போலவும், க்ருஹஸ்த நியதமான தர்மங்களில் ஸன்யாஸிக்குப் போலவும், ஓரதிகாரிக்கு நியதமானதர்மங்களில் மற்றொரு அதிகாரிக்கு அதிகார மில்லை யென்பதே நம் ஸித்தாந்தம்.

" பசு ஹிம்ஸையினாலே யாகங்களைச் செய்யாவிட்டால் ப்ராயஶ்சித் தம் எங்கும் விதிக்கப்படவில்லை" யென்று சொல்லப்படிருக்கிறது. சென்ற தீபிகையில் ஸ்ரீ. உ. வே. கோஷ்டீபுரம் ஸ்வாமியாலும் ராமானுஜ தாதாச் சார்யராலும் ஸோமயாகாதிகள் செய்யப் படாவிட்டால் தௌர்ப்ராஹ் மண்யாதி ப்ரத்யவாய முண்டென்பது எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

'த்ரவ்ய ஸம்பத்துள்ளவனுக்கு த்ரவ்யத்தை விநியோகப்படுத்த இது ஒரு மார்க்கமே யொழிய வேறில்லை' என்பதைப் பார்க்கும் போது வைதிக கர்மங்களனைத்தும் கொண்டிமாட்டின் கழுத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் மரக்கட்டை போன்றது என்ற சிலரின் வார்த்தை ஞாபகத்துக்கு வருகிறது. இதே ந்யாயத்தால் ஶ்ராத்தாதிகளும் த்ரவ்ய ஸம்பத்துள்ளவனுக்குத்தான் என்று ஏன் ஏற்படக்கூடாது? அகரணே ப்ரத்யவாய வசநங்கள் உபய த்ராவிதமாயுள. த்ரவ்ய மில்லாதவன் த்ரவ்யத்தை ஸம்பாதித்துக்கொண்டு நித்ய நைமித்திகங்களை அவச்யஞ் செய்யவேண்டுமென்று பூர்வ மீமாம்ஸை

யின் ஸித்தாந்தம். அபாத்ரங்களிலிருந்து த்ரவ்யத்தைச் சேகரித்து யாகஞ்செய்யக்கூடாதென்பதை யார் ஆக்ஷேபிக்கின்றனர்?

“ ஶ்ரு-தி ஸ்ம்ருத்யு-தி-தாஶேஷ ஸதா3சார பராங்முகீ ”

“ ஸு-க்ஷ்ணாத் நந்தி3ஹோத்ராத3ள உக்தம் கார்ய3வேக்ஷிவந் ”

இத்யாதிகளான வங்கிபுரத்து நம்பிகளின் காரிகைகளால் ஶ்ருதிஸ்மிருதிக ளிற் சொல்லப்பட்ட கர்மங்களைச் செய்யாததை எண்ணி அநுசயிக்க வேண்டுமென்று தெறிகிறதே யொழிய, அவைகள் புறக்கணிக்கப் படுவ தாய்த் தெரியவில்லையே.

கடைசியாக ‘அனாதிகாலந்தொட்டு பசுவத யாகத்தில் விவாதமிருந்து வருகிறது’ என்றெழுதப்பட் டிருக்கிறது. அனாதிகாலமாக விவாதமிருந்து வருவதாலேயே அசாஸ்த்ரீயமானால், பலவிதமான துன்பங்கள் நேரிடாதா? பூர்வோத்தர மீமாம்ஸா ஸித்தாந்தங்களில் பலவிதமான விவாதங்களை எடுத்துரைத்து நிர்ணயிக்கப்படுவதால் அவைகளும் இந்த ஸ்வாமியின் திரு வுள்ளப்படி அப்ரமாணமாக ஆகும். வேதத்திலும் “ஹோதவ்யு3ந்தி3ஹோத்ரம் ந ஹோதவ்யமிதி மீமாம்ஸந்தே ப்3ரஹ்மவாதி3ந:” என்று பல விடங்களில் மீமாம்ஸாபூர்வகமாகவே விஷயங்கள் நிர்ணயிக்கப் படுகின்றன.

இனி உபரிசரவஸுவின் வ்ருத்தாந்தத்தைக் கவனிப்போம். தேவர் களும் ருஷிகளும் பிஷ்டத்தால் யாகமனுஷ்டிக்கப் படவேண்டுமா அல்லது ஸாக்ஷாத் பஶுவினாலா? என்று உபரிசரவஸுவைக் கேட்கும்போது அவன் முதலில் தேவர்களின் பக்ஷமெது ருஷிகளின் பக்ஷமெது என்ப தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு பிறகு தேவ பக்ஷத்தை ஆதரிக்க வேண்டு மென்ற நோக்கத்துடன் ஸாக்ஷாத் பசுவினால் யாகஞ் செய்ய வேண்டு மென்று தெரிவித்தான். உடனே ருஷிகளால் இவன் தேவ பக்ஷத்தை ஆத ரிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் சொல்லுகிறான் என்ற காரணத்தினால் சபிக்கப்பட்டு பூமியின் விவரத்தை யடைந்து பிறகு நாராயணனால் கருட னைக் கொண்டு மேலே அழைத்து வரப்பட்டான். இதிலிருந்து உபரிசர வஸுவின் உத்தரம் ஶாஸ்த்ர ஸம்மதமானாலும் அவன் ஶாஸ்த்ரஸம்மத மென்பதை எண்ணாது தேவதைகளின் அபிப்ராயத்தை ஒட்டிச் சொல்ல வேணுமென்ற நோக்கத்துடன் உத்தர மளித்ததினாலேயே சபிக்கப்பட்டா னென்று தெரிகிறது. இவன் சொன்ன விஷயம் ஶாஸ்த்ரா விருத்தமாயிருந் தப்படியினாலேதான் கருடனால் மேலே அழைத்துச் செல்லப் படுகிறான். மேலும் தான் அச்வமேத யாகத்தைப் பிஷ்ட பசுவினால் செய்து, பிறருக்கு ஸாக்ஷாத் பஶுவினால் செய்யவேண்டுமென்று இவன் உபதேசஞ் செய்கி



றான் என்ற காரணத்தால் அவனது தாத்பர்ய மறியாதவர்களால் சபிக்கப் படுகிறான். ச்வேதத்வீபவாஸிகளான ஶுத்த யாஜியான விலக்ஷண இவ் வதிகாரிக்கு மட்டும் பிஷ்ட பஶு யாகம் பொருந்தலாம். ஆனால், இது ஸாமான்யாதிகாரிகளுக்குப் பொருந்தாது என்று எண்ணி ஸாக்ஷாத் பஶு யாகம் செய்ய வேண்டுமென மஹர்ஷிகளுக்குச் சொல்லுகின்றான். இவன் விலக்ஷணாதிகாரியாக இல்லாவிட்டால் பகவான் நாராயணன், ப்ருஹஸ்பதி முதலானவர்களுக்குத் தோன்றாது இவனுக்கு மட்டும் நேராகத் தோன்றி இவனது புரோடாசத்தை வாங்கிப் போயிருக்கக் கூடுமா? ஆகையால் விது ராதிகளுக்கு ப்ருஹ்மமேதாதிகள்போல் இப் பிஷ்ட பசு உபரிசரன் போன்ற வ்யக்தி விசேஷங்களில் மட்டும் வ்யவஸ்திதமென்று ஏன் சொல்லக்கூடாது? இப்பிஷ்ட பசு சில விடங்களில் சொல்லப்பட் டிருப்பதும் மாம்ஸாதிகளில் ஆசையுள்ளவனுக்கு ஸாக்ஷாத் மாம்ஸ பக்ஷணம் கூடாதென்றும் பிஷ்டம் முதலானவற்றால் பசு முதலியனபோல் செய்து உண்ணலா மென்றும் நோக்கமுடையது. இந்த விஷயம்

“ குர்யாத்3 க்4ருத பஶும் ஸங்கே3 குர்யாத்பிஷ்ட பஶும் ததா2 ।
ந த்வேவ து வ்ருதா2 ஹந்தும் பஶுமிச்சே2த் கதா3சந ॥ ”

என்ற சுலோகத்தின் கீழுள்ள அடியிற் கண்ட குல்லூகபட்டரின் வ்யாக் யானத்தால் ஸ்பஷ்டமாக வில்லையா?

ஸங்கே3—ப்ரஸக்தே பஶுப4க்ஷணாபி4லாஷே க்4ருதமயம் பிஷ்டமயம் வா பஶும் ப்ரதிக்ருதிம் க்ருத்வா கா2தே3த் । ந புநர்தே3வதோத்3தே3ஶம் விநைவ பஶுமிச்ச2 கா2தி3தும் ஹந்துமிச்சே2த் ॥

பிஷ்டபஶு ஶாஸ்த்ரஸம்மதமாயும் உபரிசரவஸுவின் அபிப்ராய மாயு மிருந்தால் பீஷ்மரிடம் இவன் விருந்தாந்தத்தைக் கேட்ட யுதிஷ்டி ரன்

“ க்ஷயம் யேந யதா2காமம் ஸ்வப்நேஷு: ப்ரயதிஷ்டிதா2 ।
ஹவிஷ்டி யதா2 ப்3ரஹ்மம் தத்ர ஸம்விஷ்யதாம் ॥ ”

என்று ஸாக்ஷாத் பசு யாகத்தைச் செய்யத் துணிந்திருப்பாரா?

மேற்கூறிய காரணங்களால் நமது ஸித்தாந்தம் ச்ருதி ஸ்மிருதிக ளுக்கு வெகு தூரத்திலுள்ளதல்ல, ஸங்க்3ருஹீதமானதே; ச்ருதி ஸ்ம்ருதிகளை யநுஸரித்ததே என்று சொல்வதுதான் மிகப் பொருத்த முடையதாகும்.

# தினசர்யை 3

## ஸ்ரீ. ஸ்ரீ.

கீழ்ப் பகுதியில் குறிக்கப்பட்டவாறு தனக்கு விஹிதமான நித்ய கர்மங்களை அநுஷ்டித்து, காலையில் பகவதபிகமனத்தைச் செய்ததும், உபாதாநத்திற்கு ஆரம்பிக்கவேண்டும். உபாதாநமாவது—த்ரவ்ய ஸம்பாதநம். அடுத்த காலமான இஜ்யையில் செய்யவேண்டிய பகவதாராதநத்திற்காகப் பொருளை சேகரித்தல். தனக்காக என்று ஒருவன் ஸம்பாதிப்பானாகில், அவன் மேலும் மேலும் ஸம்ஸாரத்திலேயே உழலுவான்; பகவத் யக்ஞத்திற்காக என்று சேகரிக்கவேண்டும்.

**यज्ञार्थात् कर्मणोऽन्यत्र लोकोऽयं कर्मबन्धनः ।**
**तदर्थं कर्म कौन्तेय मुक्तसङ्गः समाचर ॥** (III 9.)

என்று கீதையில் பகவானும் உபதேசித்தான். ஆகையால் திருத்துழாய் புஷ்பம், சந்தநம், தயிர், பால் முதலிய ஸகல உபகரணங்களையும் பகவானுக்காக என்று சுத்தமான இடத்திலிருந்து சுத்தமானவைகளாக சேகரிக்கவேண்டும். சில புஷ்பங்களை சில தினங்களில் பூஜைக்கு உபயோகிக்கலாம். சில நிஷித்தங்கள் என்றும் வேறு வேறு திதிகளுக்கு வேறுவேறு புஷ்பங்களை உபயோகிப்பது சிறந்தது என்றும் இவ்வாறாக பலவிதிகள் உள்ளன. வாஸனையுள்ள வெள்ளை புஷ்பங்களும், சிவப்பில் தாமரை முதலானவற்றையும் உபயோகிக்கலாம். தன்னுடைய தோட்டத்தில் தன்னாலேயே வளர்க்கப்பட்டதிலிருந்து கிடைக்கும் புஷ்பங்களும் பழங்களும் மிகச் சிறந்தவை. பெரியாழ்வாரும் தொண்டரடிப் பொடியாழ்வாரும் இப்படிச் செய்தது இதற்கு உதாரணம். காடு முதலான பொது ஸ்தலங்களிலிருந்து எடுத்து வருவது மத்திமம். விலைக்கு வாங்கினதும் யாசித்துப் பெற்றதும் சிறந்ததல்ல. பிறர் கொடுத்த புஷ்பத்தைக் கொண்டு பூஜித்தால், பூஜாபலன் கொடுத்தோனைச் சேருகிறது. புஷ்பங்களை நூலினால் தொடுக்கலாகாது. உதிர்ந்த புஷ்பங்களைக் காட்டிலும் ஒரு நாரில் தொடுக்கப்பட்ட மாலையும் அதைக்காட்டிலும் பல நார்களினால் தொடுக்கப்பட்ட ஸ்ரக்கும் (स्रक्) சிறந்தன. தாமரை, நீலோத்பலம் முதலான நீரில் உண்டாகும் புஷ்பங்களை இரண்டுநாள் வரைக்கும் உபயோகப்படுத்தலாம். வாடினதும், முகர்ந்துபார்க்கப்பட்டதும், நாம் உபயோகித்து மிகுந்ததும், அசுத்தமானதுமான புஷ்பங்களையும் பழங்களையும் பகவானுக்கு ஸமர்ப்பிக்கலாகாது. பிறரிடமிருந்து பெறவேண்டி வந்தால், டம்பம் முதலான



துர்க்குணங்களும், துர்நடத்தையும் அற்றவர்களிடமிருந்து பெறவேண்டும் அவர்களும் 'பகவதர்ப்பணம் என்று கொடுக்க, நாமும் அவ்விதமே பெறவேண்டும்.

ஏற்கனவே சொத்தும் சக்தியுமில்லாதவனுக்கே வேறொரிடத்திலிருந்து ஸம்பாதிப்பது என்பது. அவரவர்களுடைய சாஸ்திரங்களில் கூறப்பட்ட வழியில் சரீர யாத்திரை நடக்காவிடில், அவ்விதமான ஆபத்காலங்களில் அதற்கடுத்த வர்ணத்தார்க்குக் கூறப்பட்ட வ்ருத்தியால் ஸம்பாதிக்கலாம். பிராமணர்களுக்கு வேதம் ஓதுவித்தல், யாகம் செய்வித்தல், முதலியன உள்ளன. அவை நடக்காவிடில் கிருஷி வாணிஜ்யம் முதலிய வற்றால் ஜீவிக்கலாம். அதிலும் நியமமுண்டு. அதிக சிரமத்தைக் கொடுப்பதும், தன்னுடைய தியானம் முதலானவற்றிற்கு இடையூறாயிருப்பதுமான கார்யங்களைச் செய்து ஸம்பாதிக்கலாகாது. ஸம்பாதிக்க வேண்டிய அவச்யமுமில்லை.

**अक्लेशेन शरीरस्य कुर्वीत धनसञ्चयम् ।**
**अप्रयत्नागताः सेव्याः गृहस्थैर्विषयाः सदा ॥**

அவாப்த ஸமஸ்தகாமனான பகவானுக்கு நாம் கொடுப்பதால் ஒரு லாபமில்லை, ஸர்வ ஜகத் ஸ்வாமியான பகவானுக்கு அவனுடையதில்லாத ஒன்றை நாம் கொடுக்கப்போகிறதுமில்லை. ஆனால் ஸகல போக்ய வஸ்துக்களையும், பகவானுக்கு ஸமர்ப்பிப்பது அவற்றை சுத்தமாக்குவதற்கும், அதனால் நாம் உஜ்ஜீவிப்பதற்காகவுமே. அவன் திருப்தியடைவது ஒரு பூர்ண கும்பத்தைக் காட்டுவதாலும், சிறிது ஜலம் திருவடிகளை அலம்ப ஸமர்ப்பிப்பதாலும், இவையும் இல்லாவிடில் ஒரு நன்மொழியாலும்; இதைத் தவிர வேறொன்று வேண்டுவதில்லை.

**अन्यत् पूर्णादपां कुंभात् अन्यत् पादावनेजनात् ।**
**अन्यत् कुशलसंप्रश्नात् न चेच्छति जनार्दनः ॥**

**पत्रं पुष्पं फलं तोयं यो मे भक्त्या प्रयच्छति ।**
**तदहं भक्त्युपहृतं अश्नामि प्रयतात्मनः ॥** (IX 26.)

இலை, பூ, பழம், ஜலம், எதுவாயிருந்தாலும் ஆதரவோடு பக்தி பூர்வகமாகக் கொடுத்தால் அதை நான் அதிகமாக அனுபவிக்கிறேன் என்று கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவான் கொடுப்பவனின் மனோபாவத்தின் ஏற்றத்தைப் பார்க்கிறானே அல்லது கொடுக்கப்படும் வஸ்துவின் சிறுமை பெருமை பார்க்கிறதில்லை.

இவ்வாறு சுத்தமான திரவ்யங்களை ஸம்பாதிப்பது போலவே ஆத்ம குணங்களையும் ஒருவன் ஸம்பாதிக்க வேண்டும், ஆத்மகுணங்களாவன **दया सर्वभूतेषु, क्षान्तिः, अनसूया, शौचं, अनायासः, मङ्गलं, अकार्पण्यं, अस्पृहा.** ஸர்வ ஜந்துக்களிடத்திலும் தயை, பொறுமை, அஸூயையின்மை, சுத்தி, ஆயாஸமின்மை (மனத்தாங்கலற்றமை), மங்களமான எண்ணம் வார்த்தை, செயல், உத்ஸாஹம் மாறாமை, ஆசையற்றமை ஆகிய எட்டு குணங்கள். கௌதமர் தன் தர்மஸூத்ரத்தில் ஒரு பிராமணனுக்கு நாற்பது ஸம்ஸ்காரங்கள் இல்லாவிட்டாலும், இந்த எட்டு குணங்களே மேன்மையைக் கொடுக்கும் என்று கூறியுள்ளார். இந்த குணங்களில்லாதபோது அஹங்காரம், அஸூயை, கோபம் முதலிய துர்க்குணங்கள் மனதில் குடியேறும். அந்த இடத்தில் பகவத் ஸந்நிதானம் இராது. ஆகையால் பாஹ்யத் திரவியங்களையும் இந்த ஆத்ம குணங்களையும் யதாசக்தி ஒருவன் ஸம்பாதித்துக் கொண்டு, மூன்றாவது காலத்தில் செய்ய வேண்டியதும் ஒரு தினத்தில் செய்யவேண்டியவற்றுள் பிரதானமானதுமான பகவதாராதநத்திற்குச் சித்தமாக வேண்டும்.

இஜ்யையாவது பகவதாராதநம். இது மத்யாஹ்ந காலத்தில் செய்ய வேண்டிய கர்மம். ஸ்நாநம் செய்து மாத்தியாஹ்னிக கர்மங்களை முடித்துக் கொண்டு மனோ வாக்காயங்களால் சுத்தனாய், பக்தியோடு பகவத் ஸந்நிதிக்குச் செல்லவேண்டும். செல்லும்போது தன்னை மங்களமாகவும் அழகாகவும் பதி முன் செல்லும் பதி விரதையைப் போல அலங்கரித்துக் கொள்ளவேண்டும். த்வார பாலகர்களின் அநுமதி பெற்று, பகவானை மணி ஓசையினாலும் கைகளை மும்முறை தட்டியும் எழுப்பி, த்வயம், சரணாகதிகத்ய வாக்யங்கள். அல்லது ந்யாஸதசகம் இவற்றால் சரணமடைந்து தன் இஜ்யையை ஏற்றுக்கொண்டு தன்னை ஆட்கொள்ளும்படி பிரார்த்திக்கவேண்டும். ‘ஸநகாதி யோகிகளாலும் எண்ண முடியாத பெருமையை யுடைய பகவான் தன் ஸௌலப்யத்தால் என்னுடைய குடிசையில் எழுந்தருளியிருக்கிறான். அவனைப் பூஜித்து நான் கிருதார்த்தனாக வேண்டும்’ என்று எண்ணினாலும் ஸரியே.

முதலில் தன் சரீரத்தை ஸர்வோத் க்ருஷ்டனான பகவானை ஆராதிப்பதற்காக பரிசுத்தமானதாகச் செய்யவேண்டும். அதைத்தான் **(भूतशुद्धि)** பூத சுத்தி என்கிற கர்மம் சொல்லுகிறது. இங்கே விரிவஞ்சி அதை நிறுத்திக்கொள்ளுவோம். அந்த கர்மத்தால் தன் சரீரம் சுத்த ஸத்வமயமானதாக தியானம் செய்துகொண்டு, அஷ்டாக்ஷராதி ஜபங்களைச் செய்து, மாநஸிகமாக ஒரு ஆராதநம் செய்யவேண்டும். வெளியில் செய்யும் ஆராதநத்தில் ஏற்படும் குறைதீர, இதில் பகவானை நன்றாக ஆராதிப்பதாக தியானம் செய்யவேண்டும். பிறகு ஆவாஹநம் செய்யவேண்டும்.



ஆராதநத்தில் உபயோகிக்கப்படும் பொருள் நான்கு வகை: **औपचारिक, सांस्पर्शिक, सान्दृष्टिक, आभ्यवहारिक।** ஔபசாரிகமாவது — உபசாரமாக ஸமர்ப்பிக்கப் படுவன. ஸாம்ஸ்பர்சிகமாவது--சந்தனம் புஷ்பம் முதலியன போல் ஸுகஸ்பர்சத்திற்காக உள்ளன. ஸாந்திருஷ்டிகமாவது—கண்ணாடி, தீபம் முதலிய பார்ப்பதற்கானவை. ஆப்யவஹாரிகமாவது நைவேத்யங்கள். இவைகளைக் கொண்டு ஸர்வேச்வரனை ஆறு ஆஸநங்களில் ஆராதிக்கவேண்டும்.

ஒவ்வொரு ஆஸநத்திற்கும் அர்க்கியம், பாத்யம், ஆசமநீயம், கந்தம், புஷ்பம்,தீபம் தூபம்,தாம்பூலம் முதலான ஷோடசோபசாரங்கள் உண்டு. முதல் மூன்று மட்டுமாவது அவச்யம் ஒவ்வொரு ஆஸநத்திலும் செய்ய வேண்டும்.ஒரு ஆஸநத்திலிருந்து மற்றொரு ஆஸநத்திற்கு எழுந்தருளும் போது பாதுகை ஸமர்ப்பித்து, அதை சாற்றிக் கொண்டு எழுந்தருளும்படி பிரார்த்திக்கவேண்டும். இவற்றுள் முதலாவது மந்திராஸனம். இரண்டாவது ஸ்நாநாஸநம். பகவானுக்கு ஸ்நாநத்திற்குரிய வஸ்திரங்களை ஸமர்ப்பித்து, வாஸனைத் திரவ்யங்களாலும் மற்றும் சுத்த ஜலத்தாலும் புருஷ ஸூக்தம் முதலான மந்திரத்தைச் சொல்லி நீராட்டுதல். மூன்றாவது அலங்காராஸனம். திருமஞ்சநத்திற்குப் பிறகு சிறந்த ஆடை ஆபரணங்களாலும், கந்தம், புஷ்பம், முதலியவற்றாலும் பகவானை அலங்கரித்தல். பிறகு தூபதீபாதிகளை ஸமர்ப்பித்து, திருத்துழாய் புஷ்பம் முதலியவற்றால் வேத மந்திரங்களாலும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களாலும், ஸ்தோத்திரங்களாலும், பகவந்நாமங்களாலும் பகவானை அர்ச்சிக்கவேண்டும். இதுவே மந்திர புஷ்பம் என்பது. பிறகு போஜ்யாஸநம். பகவான், ஸ்ரீ பூமி நீளைகள், ஆபரண ஆயுதாழ்வார்கள், அநந்தன், கருடன், விஷ்வக்ஸேனர், ஆசார்யர்கள் எல்லோருக்கும் முறையே அமுது செய்வித்து தாம்பூலாதிகளை ஸமர்ப்பிக்கவேண்டும். ஐந்தாவதான மந்திராஸனத்தில் (கண்ணெச்சில்தீர) நீராஜனம் செய்வித்துப் பல்லாண்டு பாடவேண்டும். ஆறாவதான பர்யங்காஸநத்தில் சயநோசிதமான அலங்காரங்களைச் செய்து, ஜகத் ரக்ஷணார்த்தமான யோக நித்ரைக்குப் பகவானை எழுந்தருளும்படி பிரார்த்திப்பது. இவற்றில் செய்யும் ஒவ்வொரு உபசாரத்தையும் பகவானுடைய அநுக்ஞை பெற்று, காட்டி, ஸ்வீகரிக்கும்படி பிரார்த்தித்து. ஸமர்ப்பித்து, பிறகு க்ஷமை கொள்ளவேண்டும்.

கடைசியில் பகவத் குணங்களைப் பாடி, ப்ரதக்ஷிண ப்ரணாமாதிகளைச் செய்து, விஷ்வக்ஸேநாதி பரிவாரங்களிடத்தில் தாயாய், தந்தையாய், மற்றுமாய் முற்றுமான பரம்பொருளை ஒப்புவித்து, பேருவகையோடு பகவத் ப்ரஸாதமான தீர்த்தாதிகளை ஸ்வீகரித்துக்கொண்டு வெளியில் வந்து,

தன் ஆராதனமான தன் கர்மாவை அடியேனைக்கொண்டு நிறைவேற்றிக் கொண்டான் என்று ஸாத்விகத்யாகம் செய்யவேண்டும். பிறகு அதிதிகளோடுகூட பகவத் பிரஸாதத்தை உண்பதே அநுயாகம். இதுவும் வைச்வாநராக்நி ரூபமான சரீரத்தில் உள்ள பகவானுக்கு ஆராதனமே. **अहं वैश्वानरो भूत्वा पचाम्यन्नं चतुर्विधं** என்று கீதையில் சொன்னான். லோகத்தில் உள்ளார் அநுபவிக்கும் ஸர்வ போகங்களையும் தங்களுடையதை தாங்கள் அநுபவிக்கிறோம் என்று அவர்களைப் போல் எண்ணாமல், பரமைகாந்தியான ஒருவன், 'பகவச் சேஷபூதனான நான் பகவத் பிரஸாதத்தை அநுபவிக்கிறேன்' என்று அநுபவிக்கிறான். இது இவனுக்கு மோக்ஷ பர்யந்தம் உதவுகிறது. இதுவே பரமை காந்தியின் பெருமை.

இந்த இஜ்யையானது ஆசார்யோபதேசத்தினாலேயே அறியக்கூடியது; அப்படித்தான் அறியமுடியும். இங்கு அடியேன் எழுதினது அதில் ஒரு ஆசையை உண்டாக்கி முறைப்படி எல்லோரும் தெரிந்து அநுஷ்டிக்க வேண்டும் என்பதற்காகவே யாதலால் இதில் முற்றும் கூறவில்லை. ஸர்வோபகரணங்களோடு ஸகலாஸநங்களிலும் ஆராதிப்பது முக்கிய கல்பம்; ஸங்கட ஸமயங்களில் மந்திராஸநம், போஜ்யாஸநம், பர்யங்காஸநம் என்பதோடும் நிறுத்திக் கொள்ளலாம். உபகரணங்களிலும் அகப்பட்டவரையில் கொண்டு பூஜிக்கலாம்.

**कथञ्चित् उपकारेण कृतेनैकेन तुष्यति ।** (ராமா. அயோ.)

எவ்வளவு சிறியதாயிருந்தாலும் உபகாரம் என்று செய்தால் பகவான் திருப்தியடைகிறான் என்றல்லவா ஸர்வேச்வரனின் கிருதக்ஞதையும் ஸௌலப்யமும். ஆகையால் யதாசக்தி யதாசாஸ்திரம் ஒரு நாளில் செய்வதில் பிரதானமான இஜ்யையைச் செய்து கிருதார்த்தனாகவேண்டும்.

---

ஸ்ரீ:

# வரதராஜ பஞ்சாசத்

[ஸ்ரீ. உப. ஏ. வி. கோபாலாசார்யர், அட்வொகேட், திருச்சி.]

𑌬𑌾𑌲𑌾𑌕𑍃𑌤𑍇𑌰𑍍𑌵𑌟𑌪𑌲𑌾𑌶𑌮𑌿𑌤𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑌭𑍂𑌦𑍁𑌦𑌰𑍈𑌕𑌦𑍇𑌶𑍇 ।
𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌤𑌦𑍍𑌵𑌰𑌦 𑌹𑌨𑍍𑌤 𑌕𑌥𑌂 𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌂.
𑌵𑌾𑌰𑌾𑌹𑌮𑌾𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌤𑍋 𑌵𑌪𑍁𑌰𑌦𑍍𑌭𑍁𑌤𑌂 𑌤𑍇 ॥ 22

𑌵𑌰𑌦 - வரதரே, 𑌬𑌾𑌲𑌾𑌕𑍃𑌤𑍇𑌃 - பாலரூபனாய், 𑌵𑌟𑌪𑌲𑌾𑌶𑌮𑌿𑌤𑌸𑍍𑌯 - ஆலிலை ப்ரமாணமுடைய, 𑌯𑌸𑍍𑌯 𑌤𑍇 - எந்த உம்முடைய 𑌉𑌦𑌰𑍈𑌕𑌦𑍇𑌶𑍇 - வயிற்றின் ஓர் ஏகதேசத்தில் (பாகத்தில்) 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌮𑌣𑍍𑌡𑌲𑌮𑍍 - ப்ரஹ்மாண்டங்களுடைய கூட்டமானது, 𑌅𑌭𑍂𑌤𑍍 - இருந்ததோ, 𑌤𑌤𑍍 - அந்த ப்ரஹ்மாண்ட ஸமூகமானது. 𑌵𑌾𑌰𑌾𑌹𑌮𑍍 - ஏனமான, 𑌵𑌪𑍁𑌃 - திருமேனியை 𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌤𑌃 - பரிக்ரஹித்த, 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌤𑍇 - அதே உனக்கு, 𑌕𑌥𑌮𑍍 - எப்படி, 𑌪𑍍𑌰𑌭𑍂𑌤𑌮𑍍 - போதுமானதாயிற்று?

அவ—அவதாரங்களை வர்ணிக்க ஆரம்பிக்கிறார். பேரருள்தான் அவதாரஹேது. வடபத்ர சாயி வராஹர் இவ்வதாரங்களை சேர்த்து இங்கே பேசுகிறார். ஸமுத்ரம் பெரிய வீடென்றார் முன் ச்லோகத்தில். அது பாற்கடற் பள்ளிப் பெருமாளுக்குப் போதும். வராஹநயினாருக்கு ஸமுத்ரங்கள் முழங்காலாழந் தானிருந்தன, '𑌜𑌾𑌨𑍁𑌦𑌘𑍍𑌨𑍇 𑌸𑌹𑍋𑌦𑌯𑌾𑌃' என்று ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் ஸாதிக்கப்பட்டது. ஸமுத்ரம் அவருக்குப் போதவில்லை. ஆனாலும் அந்த அவதாரம் அண்ட மண்டலத்திற்குள் ஏற்பட்டது. '𑌜𑌾𑌤𑌮𑍍' என்று ஒருவாறு ஜந்மத்தை முன் ச்லோக முடிவில் கூறினார். இங்கே ப்ரளய ஸமுத்திரத்தில் பாலனான ஸ்திதியை முதலில் எடுக்கிறார்.

𑌬𑌾𑌲𑌾𑌕𑍃𑌤𑍇𑌃—"பாலனாய் ஏழுலகுண்டு ஆலிலைமேல் அன்ன வசம் செய்யும் அண்ணலார்" என்கிற திருவாய் மொழி நெஞ்சிலே ஓடுகிறது, அவதாரங்களைப் பேச ஆரம்பிகையில் ஆழ்வாரநுபவித்தபடி ஆரம்பிக்கிறார்.

"𑌵𑌟𑌸𑍍𑌯 𑌪𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌪𑍁𑌟𑍇 𑌶𑌯𑌾𑌨𑌂 𑌬𑌾𑌲𑌂 𑌮𑍁𑌕𑍁𑌨𑍍𑌦𑌂 𑌮𑌨𑌸𑌾 𑌸𑍍𑌮𑌰𑌾𑌮𑌿"

என்று சிறு குழந்தைகளுக்குச் சொல்லி வைப்பர். 'பாலனாய்' என்றும் திருவாய் மொழியில் ஆழ்வாருக்கு பால்யம் வந்து (குழந்தையாகி) அம்பில்

மாலையைக் கொண்டுவா என்பதுபோல் ‘அந்த அவதாரத்தை கொண்டுவா’ ‘இந்த அவதாரத்தைக் கொண்டுவா’ என்று அழுததாக நூற்றந்தாதியில் ஸாதிக்கப்பட்டது ‘பாலரைப்போல் சீழ்கிப் பரனளவில் வேட்கையாலே’ என்று அந்தாதி. ஆழ்வார் தாம் குழந்தையாக பெருமானுடைய குழந்தை யவஸ்தையை அநுபவிக்கப் பாரிக்கிறார். ‘தஜ்ஜாதா’ பெருமாள் குழந்தையாயினும் பெருமாள் பெருமானே. பாலனாயினும் ஏழுலகை யுண்டு சிறு வயிற்றின் ஏக தேசத்தில் உட்கொண்ட பாலன். ஆக்ருதி மட்டும் பால னைப்போல். உண்மையில் ப்ரஹ்மபாலன், ப்ரஹ்மகி சோரம். ஆக்ருதியென்ற வேஷத்தால் மட்டும் பாலன் என்று ஸூசனம். ‘ தஜ்ஜாத’ என்பதையு மிங்கே நினைக்கிறார்.

வடவளாஸஜிதஸ்ய—குழந்தையில் மிகச் சின்ன குழந்தை. இவ்வளவு அல்ப பரிமாணமுள்ள குழந்தையை உலகத்தில் கண்டிலோம்.—ஓர் ஆலிலை யில் அடங்கும் அளவுடைய குழந்தை. ஆலிலையில் ப்ரளய ஸமுத்திரத்தில் படுத்துத் தூங்கும் குழந்தை. அந்த இலையிலும் சிறியது பெரிய விராட் புருஷரூபம். வைச்வாநரரூபம் விச்வ ரூபம் போலிருந்தால் அந்த ரூபத் திற்குள் விச்வம் இருப்பது ஆச்சர்யமா யிராது. ஆலிலையி லுறங்கும் சிறு குழந்தையாக விருக்கும் சிறிய மேனியின் வயிற்றின் ஓர் கோணத்தில் (ஏழுலகும்] ப்ரஹ்மாண்ட மண்டலமெல்லாம் இருப்பது ஆச்சர்யம். இதால் ப்ரஹ்மத்தின் மஹிமை நன்றாய் அறியப்படும். ஜிதஸ்ய என்பதால் அங்குஷ்ட மாத்ர ப்ரமிதமாய் ஹ்ருதயத்திற்குள் இருக்கும் பெருமானை யும் ஒருவாறு ஸூசிக்கிறது. முன் ச்லோகம் முடிவில் பேசிய அந்தர்யாமிப் பொருள் தான் இவர், அங்குஷ்டமாத்ரக் குழந்தை.

யஸ்ய எவருடைய - உதரைகதேசே—வயிற்றின் ஓர் ஸ்வல்ப பாகத்தில் வயது முற்றினபின் கண்ணன் விச்வரூபத்தில் உலகம் அடங்கி யிருப்பது பெரிதல்ல. சிறு குழந்தைப் பருவத்தில் கண்ணன் வாயிற்குள் யசோதை உலக முழுவதையும் கண்டதுதான் ஆச்சர்யம். கண்ணன் பாலத் திருமேனியும் ஆலிலைமேல் படுக்கவியலாது. தொட்டில் வேண்டும்; யசோதை பாலனிலும் மிகச் சிறிய பாலன்.

ப்ரஹ்மாண்டஷண்டம்—ப்ரஹ்மாண்ட ஸமூகம். எத்தனையோ ப்ரஹ்மாண் டங்கள் சேர்ந்து, ஆஸீத் - இருந்ததோ. ‘ஆஸீத்’ என்கிற ச்ருதி பதத்திற்கு ப்ரதிபதம். ஸ்ருஷ்டிக்கு முன் ப்ரளயத்தில் இருந்ததோ.

தஸ்யைவ தே - அதே உம்முடைய, ச்லோகத்தில் ஸூக்ஷ்ம மான இடத்திற்குள் உள்ளதாகப் பேசின அந்தர்யாமியேதான் பாலாக் ருதியாய் அவ்வண்டத்திற்குள் அவதரித்தவர். எத்தனையோ அண்டங்



களை யெல்லாம் சேர்த்து உட்கொண்டு வயிற்றின் ஏகதேசத்தில் வைத்துக் கொண்டு உறங்கினவர் இப்பொழுது அண்டத்திற்குள் ஏனமாக ஆவதரித் தார். இந்த இரண்டாம் ஏழுலகுண்ட வயிற்றின் ஓர் மூலையில் வைத்து ரக்ஷித்த பெருமானுக்கு எப்படி போதுமானதாயிற்று.

அத்புதம் வாராஹம் வபு:—பகவானுடைய அவதாரம் ஆச்சர்யமே. ஸமுத்ரம் குளப்படியான மஹத்தான திருமேனியை. யஜ்ஞ வேதியில் யாகாக்நியாக அவதரித்த இப்பெருமாள் யஜ்ஞவராஹராக அவதரித்தா ரென்பது உசிதமே. ‘இருளுமொன்று’ என்ற ப்ரத்ய பிஜ்ஞை ஸூலபமே.

ஸ்வீக்ருதவத:—பரிக்ரஹித்தவரான அதே உமக்கு கதம் - எப்படி.

பர்யாப்தம் அபூத்—உம் திருமேனி கொள்ளும்படிக்கும் உம் திருமேனி ஓடியாடி ஸஞ்சரிக்கும்படிக்கும் தாராளமாகப் போதுமான தாயிற்று. அண்டம் பெரிதாயும் திருமேனி அதற்குள் தாராளமாக அடங்குவதாகவும் எப்படி ஆயிற்று. தே வபுரத்புதம் - உம்முடைய திருமேனியின் ஆச்சர்ய சக்திதான் இந்த விரோதத்திற்கு சமாதானம் செய்கிறது. பிறர்—இவையெல்லாம் மாயம். அவதாரங்கள் மாயமே. ஸத்யமல்ல. ஸத்யமல்லாத வெறுந் தோற்றங்களில் சிறிதுக்கும் பெரிதுக் கும் என்ன விரோதம்? எல்லாம் மாயம் என்பர். ‘நாரதரே! என்னைப் பார்க்கிறீரே இதெல்லாம் மாயைதான்’ என்று நாரதரைப் பார்த்து சொன்ன பெருமாள் வார்த்தையை ப்ரமாணமாகக் காட்டுகிறார்கள்.

“மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யந்மாம் பச்யஸி நாரத” மாயை என்பதற்கு ‘அத்புத சக்தி’ யென்று பொருள் என்று நமது பதில். பொய் யென்று அவர்கள் ஸமாதானம். திருமேனியின் மாயை என்னும் அத்புத சக்தி. ப்ராக்ருதப் பொருளாயிருந்தாலன்றோ விரோதம் வரக்கூடும். ஸர்வ விலக்ஷணமான அப்ராக்ருத ஜ்ஞாந ஆநந்தமயமான திருமேனியின் ஆச் சர்ய சக்திகளை சாஸ்த்ரம் சொல்லுகிறபடி ஸத்யமாகக் கொண்டு ஆச்சர்ய சக்தியால் விரோத பரிஹாரம் செய்து கொள்கிறோம். வபுரத்புதம் - உம்முடைய திருமேனி அத்புத சக்தியுடையது. தே அத்புதம் - உம்மு டைய மாயை அத்புத சக்தி. கேட்கும் கேள்விகளுக்கு ஸமாதானத்தையும் ஸூசிக்கிறார். தத்வமுக்தாகலாபத்தின் இதுவிஷயமான ச்லோகம் இங்கே ஸ்ரீ கரூர் ஸ்வாமி வ்யாக்யாநத்தில் காட்டப்பட்டது. விச்வத்திற்குள்ளி ருக்கும் ஓர் சிறு பாலனுடைய வயிற்றினுள் ஸர்வமும் இருக்கிறதென்று சொன்னால் யார் நம்பக்கூடும்? ஆகையால் உபேந்த்ரராகிய விஷ்ணு தம் முடைய இச்சாவசத்தால் விளையாட்டாக இப்படி இந்த்ரஜாலம் காட்டினு ரென்று கொள்ளவேணும் என்று பூர்வபக்ஷம் வர ஸித்தாந்தம் கூறப்படு கிறது. இந்த்ரஜாலமாகாது. ஆச்சர்ய சக்தியைக் கொண்டு உண்மை யென்றே எல்லா ஆப்த ப்ரமாணங்களாலும் ஸித்திக்கிறது. நினைத்தபடி சுருங்கவோ விரியவோ மாறவோ அபாரமான ஆச்சர்ய சக்தி யிருப்பதைக் கொண்டு விரோதம் பரிஹரிக்கப்பட்டதாகும் என்று அந்த ச்லோகார்த்தம்.

ஸ்ரீ:

# ப்ரஹ்ம விசாராதிகார நிர்ணயம்

[ஸ்ரீ. உப. தி. ஈ. வீரராகவாசார்யர், மதுராந்தகம்.]

சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி

"𑌵𑌿𑌧𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌽𑌧𑍀𑌤𑍍𑌯 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍" என்று முன் உதாஹரிக்கப்பட்ட அதிகரண ஸாராவளி ஸ்ரீஸூக்தியில் "[illegible]" என்று ப்ரஹ்ம விசாரத்துக்கு உபயோகியான பாகமாத்ரத்தை அத்யயனம் செய்து ப்ரஹ்மவிசாரம் செய்து வரும் மாஹான்களும் பாக்யவான்களாக ஸ்ரீ தேசிகனால் கொண்டாடப் பட்டார்கள். இந்த ச்லோகத்தில் "𑌵𑍇𑌦𑌾𑌨𑍍" என்று பஹுவசனாந்த நிர்தேசத்தால் நான்கு வேதங்களுமே விவக்ஷிதம்

"[illegible]" "[illegible]" "[illegible]"

என்றிவ்வாராக நான்கு வேதங்களுக்குமே பஹுவசனாந்த நிர்த்தேசம் காணப்படுகிறது, மேலும் "𑌵𑍇𑌦𑌾𑌨𑌧𑍀𑌤𑍍𑌯" என்று மநுஸ்ம்ருதி வசநம் ப்ரத்ய பிஜ்ஞாபிதமாகிரபடியாலும், க்ருதயுகாதிகளில் அபரிமித ப்ரஜ்ஞா பலசாலிகளான அதிகாரிகளாகையால் எல்லா வேதாத்யயனமே செய்திருக்கக் கூடுமாகையாலும் இங்கு நான்கு வேதங்களும் விவக்ஷிதமாகத் தட்டில்லை. இதர்க்கு ப்ரதி நிர்த்தேசமான [illegible]ம் என்பதால் ஸம்பூர்ணமாக நான்கு வேதங்களையும் அத்த்யயனம் செய்யாமல் என்று அர்த்தமாவதால் "[illegible]" என்று ஸ்ரீ தேசிகனாலேயே அதிகாரி விசேஷத்தில் ஏகதேசாத்யயனம் அநுமதிக்கப்பட்டிருப்பதாலும் "𑌅𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑍋𑌽𑌪𑍍𑌯𑍇𑌕𑌦𑍇𑌶𑍋 𑌯𑌦𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇" என்று பாராசர ஸ்ம்ருதியினாலும் ப்ராமாணிகமாக ஏற்படும் ப்ரஹ்ம விசாரோபயோகி பாகமாத்ராத்யயநத்தைக் கொண்டு என்று விவக்ஷிக்கையும் உசிதமே.

இப்படி நான்கு வேதங்களுக்கும் அத்யயனம் ப்ரஹ்ம விசாரத்துக்கு ஆவச்யகமாகில் கர்ம ப்ரஹ்ம மீமாம்ஸைகளுக்கு ஐகசாஸ்த்ர்யம் ஒப்புக் கொள்ளும் ஸித்தாந்திகள் பக்ஷத்தில் கர்ம விசாரத்துக்குப் பூர்வ பாவியாக க்ருத்ஸ்ந வேதாத்யயநம் ஸித்திப்பதால் "𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌃" இத்யாதிகளால் விதிக்கப்பட்ட ஸாங்கஸ்வசாகாத்யயனம் செய்த



உடனேயே தர்ம விசாரம் கர்த்தவ்யமாக "𑌅𑌥𑌾𑌤𑍋 𑌧𑌰𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾" என்று பூர்வ காண்ட ஸூத்ரத்துக்கு வ்யாக்யானம் செய்தது எப்படி பொருந்தும்; வேதாந்தரங்களின் அத்யயனத்தால் வ்யவதானம் ஏற்படுமே? என்னில் அந்த விளம்பம் கர்ம விசாரத்துக்கு உபயோகியாகையால் பாதகமாக மாட்டாது. '[illegible] 𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍋𑌽𑌧𑍍𑌯𑍇𑌤𑌵𑍍𑌯𑌃' என்கிர விதி என்று ஒப்புக்கொண்ட மீமாம்ஸகர்களும் வேதாந்தராத்யயனமன்றியில் கர்ம விசாரம் அஸம்பாவிதமாகையால் கர்ம விசாரத்தினால் வேதாந்தராத்யயனம் ஆக்ஷேபிக்கப்படுகிரது என்றார்கள், "[illegible]" என்று சாகாந்தராதிகரணத்தில் தந்த்ரவார்த்திகம். "𑌅𑌧𑍀𑌤𑍍𑌯 𑌸𑍍𑌨𑌾𑌯𑌾𑌤𑍍" என்று ஸ்நாநத்துக்கு அத்யயனாநந்த்ர்யம் ப்ரதீதமான போதிலும் மீமாம்ஸா விசாரமும் உபயோகியாகையாலே அதனால் ஏற்படும் வ்யவ்தாநம் பாதகமன்று என்று—

> "[illegible] ।
> 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌸𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌾𑌂 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌾𑌂 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑌤𑍇 ॥
> [illegible] ।
> [illegible] ॥
> 𑌅𑌤𑍍𑌰𑌾𑌽𑌧𑍍𑌯𑌯𑌨𑌾𑌦𑍌 [illegible] ।
> [illegible] ॥
> 𑌅𑌨𑍁𑌜𑍍𑌞𑌾𑌤𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌨 𑌸𑍍𑌨𑌾𑌨𑌂 𑌵𑍍𑌯𑌵𑌧𑌾𑌯𑌕𑌮𑍍 ।
> 𑌅𑌤𑍋 𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑌯𑌾 𑌨𑌾𑌤𑍍𑌰 𑌵𑍍𑌯𑌵𑌧𑌾𑌨𑌂 𑌵𑌿𑌰𑍋𑌧𑌕𑍃𑌤𑍍 ॥"

என்கிர தத்வடீகா ஸ்ரீ ஸூக்தியால் ஸ்ரீ தேசிகன் நிஷ்கர்ஷித்தருளினார்.

அந்த க்ரமத்திலே ப்ரக்ருதத்திலும் வேதாந்தராத்யயனத்தினால் ஆநந்த்ரயம் பாதிக்கப் படமாட்டாது. அப்படி வேதாந்தராத்யயனத்தால் ஆநந்தர்யம் பாதிக்கப்படுவதானால் "சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கு மெல்லை யில்லாவற நெறி யாவும் தெரிந்தவன்" என்று கொண்டாடப் பட்ட வைபவத்தையுடைய ஸ்ரீ பாஷ்யகாரருக்கும் தத்துல்ய வைபவரான ஸ்ரீ தேசிகாதிகளுக்கும் கர்ம விசாரத்தில் முக்யாதிகாரமில்லையென்றும் வேதாந்தராத்யயனமன்றியில் ப்ரவர்த்திக்கிறவர்களுக்கே முக்யாதிகாரம் என்றும் சொல்லவேண்டி வரும். ஸ்வாத்யாய விதியே அர்த்த ஜ்ஞானபர்யந்தமாகையால் கர்ம ப்ரஹ்ம விசாரம் அதனால் ஆக்ஷேபிக்கப்படுகிறது என்றார்கள் மீமாம்ஸகர். ராகப்ராப்தம் கர்ம பரஹ்ம விசாரம்

என்று நம்முடைய ஸித்தாந்தம். பக்ஷத்வயத்திலும் கர்ம ப்ரஹ்ம விசாரோபயோகி வேதாந்தராத்யயனம் ஆக்ஷேபிக்கப்படுகிறது என்பது தாத்பர்யம். 'ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய:' என்கிற விதியால் ஏக சாகாத்யயநமே விதிக்கப் படுவதால் வேதாந்தரங்களுக்கு அத்யயனம் கூடாது என்று ஆக்ஷேபித்து வசனாந்தரத்தால் வேதாந்தராத்யயநம் ஆவச்யகம் என்பதை நிஷ்கர்ஷித் தார்கள். இங்கு

"ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய இதி க்ருத்ஸ்நவேதாத்யயநம் ப்ரத்யாஶ்ரமீய ஸ்தாநக்ரம விவக்ஷிதைகஶாகா ஏகஶாகாமாத்ராத்யேதவ்யா। நந்வேவம் வேதாந்தஸ்யாத்யயநம் ந ப்ராப்நோதி। ந; ஸ்வஶாகாந்தரேண ப்ராப்தி ப்ரஸங்காத் "அநதீத்ய விதர்யா இதி।" ததா 'வேதாநதீத்ய வேதௌ வா' இதி ஶாஸ்த்ரம்" என்று ஶாகாந்தராதிகரண தந்த்ரவார்த்திகம் அநுஸந்தேயம் ॥

இப்படி விஹிதமான அத்யயனமானது வேதத்ரயத்திலுள்ள ஒவ்வொரு சாகைக்கு மட்டுமேயன்றி சாகாந்தரத்துக்கு அவச்யமன்று என்பது

"வேதாநதீத்ய த்ரீநபி ஸ்நாதாநந்தரோயேந வேதத்ரய மதேதைகஶாகாத்யயநமேவ பாபஶாந்த்யர்த்தம் மத:"

என்கிற பாட்டதீபிகா வசநத்தினால் ஏற்படுகிறது. இப்படி ப்ரத்யவாய பரிஹாரார்த்தமாகச் சொல்லப்பட்ட அத்யயனம் வேதத்ரயத்திலுள்ள ஒவ்வொரு சாகாமாத்ரத்துக்கே யாகிலும் கர்மப்ரம்ஹ விசாரம் செய்யும் அதிகாரிகளுக்கு ததுபயோகியாக சாகாந்தரங்களுக்கும் அத்யயனம் ஆவச்யகம்

"விசாராய ப்ரவ்ருத்தேவாத்ர ப்ராக்ஸ்த்யத்யயநம் விதே:।
அதீதாநதீத வேதஸ்ய விசார: ஶ்ருதி வாரித: ॥"

என்று தத்வடீகையிலும்

"ந தாவதநதீத வேதஸ்ய வேதாந்த ஶ்ரவணேऽவகல்பதே அநதிகாராத் ॥

என்று ஸ்ரீசததூஷணியிலும் ஸாதிக்கப்பட்டது. இந்த ந்யாயத்தினால் கர்ம ப்ரஹ்ம விசார விஷயீ பூதங்களான எந்த வேத பாகங்களும் அத்யயநமன்றியில் விசாரிக்கப்படக்கூடாது என்பது ஸ்பஷ்டம். ஆகையால் எல்லா வேதசாகைகளையும் க்ரமமாய் அத்யயனம் செய்வது துச்சகங்களாகையாலே ஏகதேசாத்யயநத்தை அநுமதிக்கும் பூர்வோதாஹ்ருத



ப்ரமாணங்களால் கர்ம ப்ரும்ம விசாராபேக்ஷிதமான பாகமாத்ரத்துக்கு அத்யயனத்தையன்றி வேருவிதமான அதிகாரம் ஸம்பாதிக்க வரவில்லை. ஸித்தாந்தத்தில் ஸ்வாத்யாயத்துக்கு அத்யயநோத்தேச்யத்வமே ஒப்புக் கொள்ளப்படுகிறபடியால் க்ரஹைகத்வாதிகரண ந்யாயத்தால் உத்தேச்ய விசேஷணம் அவிவக்ஷிதமாகையால் ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய: என்கிற விதியினாலே வேதாந்தரங்களுக்கும் அத்யயனம் ப்ராப்தம் என்று நிர்வாஹம் கதஞ்சித் ஸம்பாவிதமானாலும் ஸ்வாத்யாய சப்தம் ஸ்வசாகாமாத்ரவாசி என்று பூர்வாசார்யர்கள் நிஷ்கர்ஷித்திருப்பதால் பேசிற்றே பேசலல்லால், என்கிறபடியே பூர்வோக்த நிர்வாகமே உசிதம்.

இப்படி எல்லா வேதங்களும் வ்யாக்யேயங்களானாலும் வ்யாக்யாநங்களான கர்ம ப்ரஹ்ம மீமாம்ஸைகளுக்கு ஐகசாஸ்த்ர்யம் உபபன்னமே. எப்படி யென்றில் அவ்வோ அதிகாரிகளுக்கு ஸ்வஸ்வஶாகைகள் ப்ரதானங்களாயும் மற்ற சாகைகள் தம்தம் சாகைகளிலுள்ள அர்த்த விசேஷ நிர்ணயார்த்தமாக அப்ரதானங்களாயும் வ்யாக்யானம் செய்யப்படுவதால் ஐகசாஸ்த்ர்யம் ஸித்திக்கிறது. இவ்வர்த்தம்

"ஶாகாந்தரேஷ்வ வேதாந்தாநாமுக்தாந்யகாரிகாகாரித ஸம்ப்ரமோऽவகம்யதே। ஶாஸ்த்ரேஷு ஸ்வநீதாநி நிரபேக்ஷஸ்தத்ஸங்ஜ்ஞா திஷ்டாநாதி ஶப்தவ்ருத்தௌ தத்ஸம்ப்ரதாயஸ்ய நிர்திஷ்டா விகல்ப: । ஶாகாந்தரேஷ்வேவ ச ஶாகாஶாஸ்த்ர மத ப்ராஹ்மணாந்த ஸம்பந்தோபாஸ்யம் ॥"

என்கிற தந்த்ரவார்த்திக வசநத்தினால் ஸித்தம்.

ஆக இவ்வளவால்

"அநதீத்ய த்ரயீம் விப்ரா யேஷு ஶாஸ்த்ரே ஶ்ரியோऽபதே।
ஸஞ்சாரேண நதீஜ்ஞாநம் ஶ்ரீய இவ ப்லவம் ॥"

என்றிவை முதலிய ப்ரமாணங்களால் வேதத்ரயாத்யயனமன்றியில் ஶாஸ்த்ராந்தர பரிசயம் நிஷேதிக்கப்படுவதாலும் முண்டகோபநிஷத் முதலியவைகளில் ப்ரஹ்ம ப்ராப்திக்கு பரம்பரா ஸாதநமாக க்ருத்ஸ்ன வேதாத்யநமே ஆவச்யகமாகச் சொல்லப்பட்டிருப்பதாலும் ஏகசாகா மாத்ராத்யயனத்தாலோ ததேகதேச மாத்ராத்யயனத்தாலோ ப்ரஹ்ம விசாரம் சாஸ்த்ரீயமாகமாட்டாது. கர்மப்ரஹ்ம விசாரத்துக்கு உபயோகியான வேதத்ரய பாகத்தை மட்டுமாவது அத்யயனம் செய்வதாலேயே ப்ருஹ்ம விசாரம் சாஸ்த்ரானுமதம் என்று உபபாதிதம்.

இப்படி ஏகதேசாத்யயனம் அதிகாரி விசேஷத்திலாவது அனுமதிக்கப் படுவதானால்

“ ந ஹொபநிஷந்மாத்ராத்யயநம் கஸ்ய சித்ஶாஸ்த்ரீயம் । ஸ்வாத்யாயோ யேத்தவ்ய இத்யவர்ணஸங்க்ரஹணாத் । தந்மாத்ராத்யயந விதி ஶ்ரவணாச்ச ॥ ”

என்று ஸ்ரீ ஶததூஷணியில் 8-வது வாதத்தில் உபநிஷந்மாத்ராத்யயநத்தை நிஷேதித்திருப்பது எப்படி உபபன்னம் எனில் ‘அபக்ஷ க்ஷத்ர வா த்யஞ்ஜாத்யயநம்’ என்றும் ‘கேஷாஞ்சித் கேவலவேதாந்தாத்யயநஶ்ரமிதி’ என்றும் தாமே ஏகதேசாத்யயனத்தை அதிகாரி விசேஷத்தில் அனுமதித்திருப்பதாலும்

“ அத்யேதவ்யோ வேதஶேஷோ யதி ஸர்வம் ந ஶக்யதே ।
வேதாநாம் கிம் விதீயேத் வை ப்ராஹ்மணை: ”

இத்யாதி ப்ரமாணங்களாலும் ஆது ஸித்தமாகையாலும் ஏகதேசாத்யயநம் ஒருவருக்கும் உசிதமன்று என்று பாவவர்ணநம் பொருந்தாது. மேலும் ‘அத வேதாந்தாநாம் ஶ்ரவணஸ்ய ஸ்வயம் விதே:’ இத்யாதிக்குப் பிறகு “ ஸர்வம் ராமாநுஜாத் ஶ்ரவணலக்ஷணவிதே: ஸித்தி: ” என்று ஸித்தாந்தாரம்பத்துக்குப் பூர்வத்திலுள்ள இவ்வசனம் மீமாம்ஸா ஶ்ரவணம் விஹிதம் என்று சொல்லும் ப்ரதிபதி பக்ஷியின் ஸித்தாந்தத்தை அப்யுபகமம் பண்ணி தத்ஸூத்ர ந்யாயேந ஸமாதானம் சொல்லுவதாயிருப்பதால் அந்யபரமான இவ்வசநத்தைக் கொண்டு தாத்பர்ய நிர்ணயம் ஆபாதப்ரதீதிவிலஸிதம். இதற்கு பாவம் என்ன வென்றில் வேதாந்த சிரவணம் விதிப்ராப்தமேயல்லது ராகப் ராப்தமன்று என்கிற பூர்வ பக்ஷத்திலும்

“ ஸ்வாத்யாயம் ஸாங்கமாதாய க்ரமாதுச்சரயீத வேதம் ந விஜாநாதி யோ ஹ்யேவ ॥ ”

என்கிற ப்ரமாணத்திலை் கர்ம விசாரம் பண்ணியே ப்ரஹ்ம விசாரம் செய்ய வேண்டுமென்று ஏற்படுகிறது. இங்கு விசாரத்துக்குச் சேஷபூதமாக அனுவதிக்கப்பட்ட அத்யயனம் உபநிஷன்மாத்ராத்யயநமன்றே? ‘ஸ்வாத்யாயோ(அ)த்யேதவ்ய:’என்று சொல்லப்பட்ட க்ருத்ஸ்நாத்யயநமன்றோ? இவ்விதிஸித்தமான அத்யயநத்தை யன்றோ அநுவதித்து அர்த்த விசாரத்தை விதிப்பதாக நீங்கள் ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். இவ்விதிக்கு கர்ம ப்ரம்மோபயபாகாத்யயனமே அர்த்தமாக எல்லா மதத்திலும் ஒப்புக் கொள்ளப்பட்டது. ‘ஸ்வாத்யாயம்’ என்கிற வசநத்திலை் அனுவதிக்கப்பட்ட அத்யயனம் ஸ்வாத்யாயாதயயவிதிஸித்த மன்று. உபநிஷந்மாத்ராத்யயநத்தை விதிக்கும் வசநாந்தரம் என்றில், அப்படி உபநிஷந்மாத்ரத்தை அத்யயனம் செய்யவேண்டுமென்று விதி ஶ்ரூயமாணமாக வில்லையே என்பது. “ அத்யேதவ்யோ வேதஶேஷோ யதி ஸர்வம் ந ஶக்யதே”



என்று பராசரஸ்ம்ருதிவசநம் இருந்தபோதிலும் அது ஸ்மிருதி வசனமானதால் அதின் அர்த்தம் ஶ்ருதியிலை் அனுவதிக்கப்படுவதாகக் கொள்கை அவ்வளவு உசிதமன்று. மேலும் சரமயுகமாத்ர விஷயமாகையால் இந்த ஸ்மிருதி ஸர்வகால விஷய மன்றாகையாலும், அத்யந்தா சக்த விஷயமாகையால் ஸர்வாதிகாரி விஷயமன்றாகையாலும், இதன் அர்த்தமான ஏகதேசாத்யயனத்தை அநுவதித்து விதிக்கப்படும் விசாரமும் கால விசேஷாதிகாரிவிசேஷ விச்ராந்தமாகு மாகையால் விவக்ஷிதார்த்தம் கூடாது. ஆகையால் ஸ்வாத்யாயோ(அ)த்யேதவ்ய:, என்கிற விதியையே விசாரத்துக்கு பரயோஜகமாகக் கொள்ளவேண்டும். இது க்ரமேண கர்ம ப்ரஹ்ம பாகத்வயாத்யயனத்தையே விதிப்பதால் விசாரமும் பாகத்வத்யத்துக்கே யாகவேண்டும். இப்பொழுது ஔசித்யத்தால் கர்ம விசாரம் செய்யாது ப்ரம்ம விசாரம் செய்யப்படவேண்டுமென்று ஸித்திக்கிறது ‘ஸாகாங்க்ஷாஸ்வாத்வேதாநா’ என்று முன் உதாஹரிக்கப்பட்டதம்த்ரவார்த்திக வசநத்திற்கு க்ருத்ஸ்நவேதவிசாரமும் ஸித்தமாகும் என்றும் பாவம். தந்மாத்ராத்யயந விதிஶ்ரவணாச்ச என்பதால் ஏகதேசாத்யயநவிதாயக ப்ரத்யக்ஷஶ்ருதி இல்லை என்றதாகிறதே யன்றி அப்படிப்பட்ட ஸம்ருதி இல்லை என்று சொல்லப்படவில்லை.

“ அத க்ருத்ஸ்நவேதாத்யயநம் கதம்பஶக்தவேதைகதேஶாத்யயநம் ஸ்வாநுஜ்ஞாதம் அத்யயநா ஸர்வம் நிவ்ருத்திர் அஸ்திகாயயாதிதி” என்று அவதரிப்பித்து கியதம்ஶாத்யயநமஸ்யாநுஜாநாதி தத்ராஹ ஏஷ இதி, ந்யாயாத்யயநந்யாயேநாஸ்தி காயஸ்யஸவ்யாபாஸநயோக்யவேதஶாஸ்த்ராநம் ஶக்நீயாத் । வ்யாஸ ரஹிதகேவந, தயோரஶக்த்யா ஸம்ஹவாஸ ॥ ”

என்று பராசர மாதவீயத்தில் இந்த ஸ்ம்ருதி வ்யாக்யாதம். இந்த ஸ்மிருதி ஸம்ப்ரதிபன்னமானாலும் விசாரவிதிப்ரயோஜகமாக பிறர் பக்ஷத்தில் கொள்ளக்கூடாது என்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம். உபநிஷந்மாத்ராத்யயனம் அசாஸ்த்ரீயம் என்கிறதேயன்றி அசக்தவிஷயமன்று. ஆகையால் யதாதிகாரம் ப்ரஹ்ம விசாரத்தில் ப்ரவர்த்திக்கத் தட்டில்லை.

ஸ்ரீ:

# ஸித்தாந்த ஸம்பந்த விருத்தாந்தங்கள்

## (1)

## ஸ்ரீ உபய வேதாந்த ப்ரவர்த்தன ஸபை, பெங்களூர்.

இந்த ஸபையின் 35-வது வருஷத்திய ரிபோர்ட் ஒன்று வரப் பெற்றோம். இந்த ஸபை 1902-வது வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நாளது வரை மேன்மேலும் விசேஷாபி வ்ருத்தியுடன் நடந்து வருவதாக அறிய நாம் மிகவும் ஸந்தோஷப்படுகிறோம். இச்சபை விசிஷ்டாத்வை ஸம்பரதாய ஜ்ஞானத்தை நாட்டில் விசேஷமாகப் பரவச் செய்ய அங்கங்கு பாடசாலை வைக்கவும், உபந்யாஸங்கள் ஏற்பாடு செய்யவும் ப்ரசாரகர்களை வைத்து ப்ரசாரங்களை நடத்தவும், வருடந்தோறும் நம்முடைய தர்சன ஸ்தாபகரமான ஸ்ரீ எம்பெருமானாருக்கு விசேஷபஹுமானத்திற்கிடமான திருநாராயணபுரத்தில் வேதங்களிலும் வேதாந்தங்களிலும் இவ்வாறே திவ்ய ப்ரபந்தங்களிலும் தத்வ்யாக்யானமான பகவத் விஷயத்திலும் உத்தம, மத்யம, பாலசாகைகளென்று மூன்று விதமாகப் பிறித்து பல வித்யார்த்திகளை பல விடங்களிலிருந்தும் வரவழைத்து தக்க வித்வான்களைக் கொண்டு பரீக்ஷையை நடத்தி அவர்களுக்கு தகுந்த ஸம்மானங்களையும் செய்து அதன் மூலம் தேசத்தில் வேதவேதாந்த ஜ்ஞானத்தைத் தழைக்கச் செய்யவும் ஏற்பட்டதெனத் தெறியவருகிறது. இதில் முக்யமாக ஒரு விஷயத்தை நாம் ச்லாகிக்காம லிருக்க முடியவில்லை. அதாவது தேசத்தில் எங்கும் விசிஷ்டாத்வை ஸம்ப்ரதாயத்தில் எல்லோரும் ஸ்ரீ உடையவர் திருவடிகளா யிருந்தும் பிற்பாடான கலா வைஷம்யத்தால் இழுக்கப்பட்டு பல சச்சரவுகள் ஏற்பட்டு பிறர்கள் பரிஹஸநீய ஸ்திதியில் இருக்கிறார்கள் என்பது யாவருமறிந்ததே. இப்படிப்பட்ட காலத்தில் இச்சபையில் இருகலையோரும் ஒன்று சேர்ந்து ஐகமத்யம் பொருந்தி கார்யங்கள் செய்வதுடன் இரு வகுப்பிலுள்ள பண்டிதர்களையும் வித்யார்த்திகளையும் இருவருக்கும் பொதுவில் கொண்டாடத் தக்கதொரு க்ஷேத்ரத்தில் ஒன்று சேர்த்து ஒரு கார்யத்தில் அந்வயிக்கும்படி செய்து, சிறிதும் வைஷம்ய புத்திக் கிடமில்லாத ரீதியில் கௌரவித்து ஸம்பாவனை வழங்கி அவர்கள் மனதிலும் இந்த வைஷம்ய புத்தி யொழியும்படி செய்ய முயற்சித்து வருகிறார்கள் என்பதேயாம். இம்மாதிரி ஸ்தாபனங்கள் மற்றும் நம் நாட்டில் பல விடங்களிலும் ஏற்படுமாகில் இக் கலா வைஷம்யத்தை யறவே நாம் ஒழிக்கலாம். இதற்கு சரண்யனுடைய அநுக்ரஹம் பூர்ணமாக விருக்கு மென்பதில் ஸம்சய லேசமுமில்லை.

இந்த பரீக்ஷை வேதம், வேதாந்தம், திவ்ய ப்ரபந்தம் என்ற மூன்று பாகங்களிலும் பால, மத்யம, உத்தம சாகைகள் என்று மூன்று பிரிவுகளாக



ஏற்பாடு செய்து அவ்வோபாகத்திற்கும் பிரிவிற்குந் தக்கவாறு க்ரந்தங்களையும் ஏற்பாடு செய்து நடைபெருகிறது. இருகலையோர்களுக்கும் பொதுவான பாகத்தைத்தவிர ஸம்பரதாயபேத மிருக்கக் கூடிய பாகத்தில் இரு ஸம்பரதாயத்திலிருந்தும் இரண்டு க்ரக்தங்களை ஏற்படுத்தி அவரவர்களுடைய ஸம்பரதாயப்படி ஏதாகிலு மொன்றில் பரீக்ஷைக்கு வரலாமென்றும் குறிப்பட்டிருக்கிறார்கள்.

ஸம்பாவனை—பரீக்ஷயர்களாக வந்த வித்யார்த்திகளுக்கு அவரவர்கள் எடுத்துக் கொண்ட பாகத்திற்கும் வகுப்பிற்கும் தக்கவாறு ரூ. 5. முதல்30 வரையில் ஸன்மானம் கொடுக்கப்படுகிறது. இதைத்தவிர வித்யார்த்திகளை உத்ஸாஹப்படுத்துவதற்காக ஸபையார் கொடுக்கும் ஸம்பாவனையுடன் உத்தமமாக தேறும் வித்யார்த்திகளில் சிலருக்கு அவரவர்களுடைய விபாகத்தை யநுஸரித்து ரூ. 5. முதல் 30. ரூ. வரையில் அதிக பஹுமானமும் (Special Prizes.) கொடுக்கும் படி சில மஹான்கள் ஏற்பாடு செய்து அதன்படி நடந்து வருவதாகவும் தெறியவருகிறது.

பரீக்ஷகர்களான வித்வான்களுக்கும் தக்க ஸன்மானம் அளிக்கப்படுகிறது. ஸபைக்கு வந்த வித்வான்கள் வித்யார்த்திகள் யாவருக்கும் போஜன ஸௌகர்யம் முதலியனவும் வெகு அழகாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த ஸபை ப்ரதிஸம்வத்ஸரமும் திருநாராயண புரம் என்கிற மேல் கோட்டையில் ஸ்ரீ உடையவர் உத்ஸவத்தின் போது நடைபெறும்படி இச்சபாதிகாரிகள் ஏற்பாடு செய்துள்ளார்கள். இதுவல்லவோ நம் உடையவருக்கு உண்மையில் சந்தோஷத்தை அளிக்கூடிய உத்ஸவம்.

இச்சபைக்குச் சொந்தமாயிருக்கும் மூலதனத்தின் வ்ருத்யம்சத்தைக் கொண்டும் பல கனவான்களுடைய உபகாரங்களைக் கொண்டும் முக்கியமாக மைசூர் மஹாராஜா, ஸ்ரீ பரகால ஸ்வாமி முதலிய மடாதிபதிகள் மற்றும் சில சாரிடிகள் இவர்களின் உபகாரத்தைக் கொண்டும் இச்சபை நடைபெற்று வருகிறது.

இதைத் தவிர இந்த ஸபைக்கு மூன்று வித்யார்த்திகளுக்குக் குறைவில்லாமல் பாடம் சொல்லிவைத்து பரீக்ஷைக்கு அனுப்பும் வித்வான்களுக்கு முதல் மூன்று வித்யாத்திகளை அனுப்பியதற்காக ரூபா 5ம் மேல் மூன்று வித்யார்த்திகளை அனுப்பியதற்காக ரூபா-20-ம் ஸன்மாக அளிக்கப்படுகிறதாம். இதுவும் மிக ச்லாகாஸ்பதமான விஷயம். இவ் வருஷம் இந்த ஸபைக்கு ஸ்ரீ பெரும்தூர் காரப்பங்காடு முதலிய வெகு தூர தேசத்திலிருந்தும் வித்யார்கதிகள் வந்திருந்தார்கள் என்றும் அறிவித்திருக்கிறார்கள்

நவநவ நாகரீகங்கள் மூலம் தர்மச்ரத்தை குறைந்து மதத்தில் விச்வாசமும் நம்பிக்கையும் முற்றிலும் தவறியிருக்கிற இக் காலத்திலும் இப்படிப்பட்ட உத்யமங்களை ஸபலமாக நடத்திக்கொண்டு அன்யர்களுக்கு மார்கதர்சிளாகவிருக்கும் இச்சபாதிகாரிகளான M. T. நாராயணய்யங்கார் முதலியோரை நாம் மிகவும் பாராட்டுகிறோம்.

(2)

## ஸ்ரீ ஸத்வித்யா பாடசாலை சைதாப்பேட்டை.

சைதாப்பேட்டை ஸ்ரீஸத்வித்யா பாடசாலையின் ஒன்பதாவது வார்ஷிக மஹோத்ஸவம் 4-4-37 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15மணிக்கு, பிராமணத் தெரு ஸ்ரீ ஸுந்தரேச்வரர் ஸ்வாமி ஆலயத்தில், கவர்ன்மெண்டு அபிவிருத்தி இலாகா உதவிக்காரியதர்சி ஸ்ரீ உப. கமலாபுரம் R. ராமஸ்வாமி ஐயங்கார் B. A. அவர்களின் அக்ராஸனத்தின் கீழ் நடைபெற்றது. மாலை 4 மணிக்கு அக்ராசனர் வாத்தியங்களுடனும் பூர்ண கும்பத்துடனும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்டனர். ஷை பாடசாலை பிரின்ஸிபாலாகிய, ஸ்ரீ. உப. R. வரதாசார்யர் ஸ்வாமி B. A. L. T. அக்ராஸனருக்கு வாழ்த்துரை கூறி வரவேற்புப் பத்திரம் படித்தார். பின் அக்ராஸனர் சிறிது முன்னுரை கூறி முடிந்த பின்னர் டீச்சர்ஸ் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ. உப. K. ஸுதர்சனாசார்யஸ்வாமியால் அறிக்கைப் பத்திரம் படிக்கப் பட்டது. பின்பு பாடசாலை மாணவர்கள் வேத பாகங்கள், ஸ்தோத்ரங்கள், கத்யங்கள், பண்ணிசைப் பாடல்கள், ஸம்ஸ்க்ருதோபந்யாஸங்கள் முதலியவற்றால் கேட்போர் செவிக்கு இன்னமுதூட்டினர். இவற்றினிடையே ஷை பாடசாலை மாணவிகள் பாடின பண்ணிசைப் பாடல்கள் அங்குள்ளார் உள்ளத்தை உருக்கிப் பரவசமாக்கின. இம் மாணவிகளுள் இருவர் முறையே வட மொழியிலும் தென் மொழியிலும் செய்த உபந்யாஸங்கள் பண்ணிசைப் பாடல் பஜனை, கும்மி, கோலாட்டம் முதலியனவும் ஒப்புயர்வற்று விளங்கின. அப்பால் அரை மணி நேரம் சிறுவரின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. அதில், ஸினிமா ப்ரஸித்தி பெற்ற 10 வயதுள்ள மாஸ்டர் ராமுடுவின் ஸங்கீத ரஸமும் சைதாப்பேட்டை ப்ரஹ்ம ஸ்ரீ மூர்த்தி ராவ் பாகவதர் அவர்கள் குமாரன் சி. சசிதரன் என்பவனின் மிருதங்க நயமும் யாவராலும் போற்றப்பட்டுப் புகழ் எய்தின. பின்பு அக்ராஸனருக்கு மாலை மரியாதைகள் செய்யப்பட்டன. அன்னார் தமது முடிவுரையில் இக்கலாசாலை மாணவர் தென்மொழி வடமொழிகளில் ஆழ்வாராசார்யர்கள் அனுக்ரஹித்துள்ள அருளிச் செயல்களை ஸேவாக்ரமத்திலும் பண்ணிசைப் பாடல் வாயிலாயும் ஸுசிக்ஷித்தமாகப்பயின்றிருத்தல் பிராட்டத் தக்கதென்றும், இம்மாதிரியாகவே இங்குக் குழுமியிருக்கும் பெற்றோரும் மற்றோரும் தங்கள் குழந்தைகளை இக் கலாசாலைக்கனுப்பி



ஸநாதந தர்ம முறையில் பயிற்றுவித்தால் பிற்காலத்தில் அன்னார், ஆஸ்திக்யம், அடியார் பக்தி, தெய்வவழி பாடு முதலிய நற் பெருங் குணங்களை எய்தி மேம்பாட்டையடைய வழி உண்டாகுமென்றும் இவ்வுயர் குணங்கள் யாவும் ஒருவன் இளமையில் அடையாவிட்டால் முதுமையில் அவன் அவற்றை எள்ளளவும் எய்தப் பெறுனென்றும், தத்கால நாகரீகம் ஆத்மோஜ்ஜீவனத்துக்கு இம்மியும் பயன் தராததோடு அவனை அடியோடு அழித்து விடுவதற்கே காரணமாகின்றதென்றும், மானிடப் பிறவி எடுத்தவர் தம் பிறவியின் பயனை நன்குணர்ந்து அதற்கேற்றபடி நல் வழியில் நடக்கவேண்டியதே கடமையென்றும், அதற்கு இத்தகைய கல்வியே ஒருவன் பெற வேண்டிய பேறுகளில் முதன்மையானதென்றும் கூறி முடித்தார். பின்னர் பாடசாலையின் அங்கத்தினர் ஸ்ரீமான் A. நடராஜையரவர்கள் B. A. அக்ராஸனருக்கு வந்தனோபசாரங்கள் வழங்கி இரவு 7½-மணிக்கு சபை கலைந்தது.

(3)

## ஸ்ரீ பட்டாபிராம வேதபாராயண ஸபை புது அக்ரஹாரம் திருவையாறு

இச்சபையின் கார்யதர்சி ஸ்ரீமான். கே. ரங்கநாதய்யங்கார் அவர்களிடமிருந்து மேற்கண்ட வேதபாராயண ஸபா ஸம்பந்தமான ப்ரகடன பத்ரிகை யொன்று வரப் பெற்றோம். அதிலிருந்து ஷை ஸபையில் ஒரு வேத பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு அதன் மூலம் அபேக்ஷித்தவர்களுக்கு வேதாத்யயனம் சொல்லிக் கொடுப்பதும் வேத பாஷ்யம் காவ்யம் முதலிய பாடங்கள் சொல்வதும், இயலுமான காலங்களில் ஸந்த்யாவந்தன மந்த்ரங்கள் சொல்லிக் கொடுப்பதும் இன்னும் வித்வான்களைக் கொண்டு உபந்யாஸங்களை நடத்துவதும் நோக்கமென அறிகிறோம். இது மிகக் கொண்டாடத் தகுந்தவைகளில் முதன்மையானதொன்றாகும். வேதாத்யயநம் எங்கும் லுப்தமாய்விட்ட இக்காலத்தில் இத்தகைய முயற்சிகள் பல விடங்களிலும் நடைபெரும்படி செய்தல் ஆஸ்திகர்களான எல்லோருக்கும் கடமையாகும். இந்த பத்ரிகையில் வேதாத்யயனம் பிராஹ்மணனாகப் பிறந்த அனைவரும் செய்தே தீர வேண்டு மென்னும் விஷயத்தை அனேக ச்ருதி, ஸ்ம்ருதி இதிகாஸ, புராண, ஆகம, பூர்வாசார்ய வாக்யங்கள் முதலியவற்றைக் கொண்டு விளக்கிக் காட்டி அச்சிடப்பட்டிருக்கிறது. அம்மாதிரி ப்ரயத்நத்தை எல்லோரும் செய்யுமாறு தூண்டும்படி இப்பத்ரிகையை நமது நாட்டிலிருக்கும் ஆஸ்திகர்களனைவருக்கும் வழங்கி யிருக்கிறார்கள் என்றும் அறிய மிகச் சந்தோஷமாயிருக்கிறது.

இச்சபையின் அக்ராஸனாதிபதி ஸ்ரீ. உப. எஸ். வேதாந்தம் ஐயங்கார் ஸ்வாமி. ரிடைட் பிரஸ்பால் ராஜாஸ் காலேஜ் திருவையாறு. கார்யதர்சி ஸ்ரீமான். கே. ரங்கநாதய்யங்கார் ஸ்வாமி. இச்சபையின் சார்பில் ஷெடி புது அக்ரஹாரம் ஸ்ரீ பட்டாபிராம ஸ்வாமி தேவாலயத்தில் மாலை. 5முதல் 6 மணி வரையில் வேதபாராயணம் நடந்து வருவதாகவும் அதில் குறிப்பிட்டிருக்கிறது. இதுவே இம் முயற்சியை ஸர்வேச்வரன் ஸபலமாக்கக் கூடு மென்பதற்கு ஒரு அறிகுறியாகும்.

(4)

## ஸ்ரீரங்கம் ஆண்டவன்

ஸ்ரீ ரங்கம் ஸ்ரீ ஆண்டவன் ஸன்னிதியை ச்சேர்ந்த ஸ்ரீ பரமஹம்ஸ பரிவ்ராஜக - ஸ்ரீ நிவாஸமஹா தேசிகன் என்கிற ஸ்வாமி திருவணை யாத்திரையாய் எழுந்தருளும் மார்க்கத்தில் புதுக்கோட்டை வழியாய் காரைக்குடி முத்துப்பட்டணத்துக்கு 6-3-37-ல் எழுந்தருளி அங்கிருந்து அரியக்குடிக்கு 13-3-37-ல் எழுந்தருளி அங்கு தமது சிஷ்யர்களுக்கு ஒரு மாதம் வரை அபேக்ஷிதமான ஸம்ப்ரதாய க்ரந்த காலக்ஷேபம் ஸாதிக்கத் திருவுள்ளம் பற்றியிருப்பதாக காரைக்குடியிலிருந்து ஒரு ஸ்வாமி தெறிவித்திருக்கிறார்.

(5)

## ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம், சேலம்.

சென்ற மூன்று மாத காலமாக சேலம் ஆரிய வைசிய வாசகசாலையில் திருமலை காண்டூர் வித்வான். உ. வே: ராமாநுஜாசார்ய ஸ்வாமி ஸ்ரீமத் ராமாயண உபந்யாஸம் செய்து 7-3-37 ஞாயிற்றுக்கிழமையன்று காலை 8-மணிக்கு பட்டாபிஷேகம் வெகு விமரிசையாக நடந்தேறியது.ஸ்வாமியின் அற்புதமான உபந்யாஸத்தை மிக்க ச்ரத்தையுடன் எல்லா மதத்தினரும் கேட்டு ஆநந்தித்தார்கள். இது ஒன்றே ஸ்வாமிகளின் பெருமையை விளக்கக் கூடியது. ரிடைர்ட் ஜட்ஜ் திவான் பகதூர் ஸுந்தரம் செட்டியாரவர்கள் அக்ராஸநத்தில் விஜயம் செய்திருந்து விசேஷ ஸம்மானங்களை வழங்கினார். மற்றும் பல வித்வான்களும் ஸ்வாமியின் பாண்டித்யத்தை கௌரவித்து தமிழில் 10 செய்யுட்களில் செய்யப்பட்ட 'புகழ்த்திருமாலை' என்கிற பத்திரிகையும் வாசித்துக் கொடுத்தார்கள் என்று சேலம் செவ்வாபேட்டை மாதவராய செட்டி தெரு ஸ்ரீ நிகமாந்தமகா தேசிகன் ஸபை காரியதரிசி அறிவித்துள்ளார்.

---

ஸ்ரீ:

# சதுஸ்ஸூத்ரீ ஸ்வாரஸ்யம்

[ஸ்ரீ. உப. வேதாந்த சிரோமணி, தோட்டாலம் வேணுகோபாலாசார்யர்.]

சதுஸ்ஸூத்ரீ ஸ்ரீவேத வ்யாஸரான த்வைபாயநரால் அருளிச் செய்யப்பட்ட சாரீரக மீமாம்ஸா சாஸ்த்ர மெனப்படும் ப்ரஹ்ம ஸூத்ரங்களின் நான்கு அத்யாயங்களுள் முதல் அத்யாயத்தின் முதல் பாதத்திலிருக்கும் முதல் நான்கு ஸூத்ரங்கள். இவை நான்கும் இந்த சாஸ்த்ரத்தை ஆரம்பிக்க உபயுக்தமான உபோத்காதமாக செய்யப்பட்ட ஸூத்ரங்களாகும். இவற்றில் ஒரு ஸூத்ரம் மட்டுமே உபோத்காதமென்று சிலர். மற்றும் பலர் இந்த நான்கையும் உபோத்காத மென்பர். இருந்தும் இவை எவ்வாறு இச்சாஸ்த்ரத்திற்கு உபோத்காத மாகின்றன வென்பதில் பலர் பலவிதமாக அபிப்ராயப்படுகிறார்கள். அவற்றின் விசாரத்தை இங்கு சுருக்கமாகக் காணலாம்.

வேத வாக்யங்களைக் கொண்டு அவைகளுக்கு அர்த்தமான தர்மத்தையோ ப்ரஹ்மத்தையோ அவற்றின் பரிகரங்களுடன் நிரூபிக்கப் புகுங்காலத்தில் அதற்கு ஸாதகமாயிருக்கும் ந்யாயங்களை யெடுத்துரைக்கும் சாஸ்த்ரத்திற்கு மீமாம்ஸை என்கிற பெயர் வழங்குகிறது. இவ்வர்த்தத்தை பூர்வீகர்கள்

"யஜெ்ல ஷ்ரீயஶாணெ தூ வெஜெ_ந கூாணாநா ।
ஐதி கதவ்யதாஹாஹம் ஶ்ரீஶாம்ஸா வரிஷ்யதி ॥"

என்று வெளியிட்டார்கள். இங்கு தர்ம சப்தம் ஸித்த தர்மரூபமான ப்ரஹ்மத்தையும் சொல்லக்கூடும். இது 'அதாதோ தர்மஜிஜ்ஞாஸா' என்று தொடங்கி 'அநாவ்ருத்தி: ஶப்தாதநாவ்ருத்தி: ஶப்தாத்' என்ற வளவாக 20 அத்யாயங்களடங்கியது. இது தர்ம, தேவதா, ப்ரஹ்ம காண்டங்களென்று மூன்று விதமாகப் பிறிந்து முறையே மூவர்களால் செய்யப்பட்டிருந்தபோதிலும் அல்லது மற்றொரு விதமான பரிகணநத்தை யநுஸரித்து தர்ம ப்ரஹ்ம மீமாம்ஸைகள் என்று இருவிதமாகப் பிறிந்திருந்தாலும் ஒரே வேதத்திற்கு அதன் அர்த்தத்தை நிச்சயிக்க உபகாரகங்களாகின்றனவென்கிற காரணத்தால் (விஷய ப்ரயோஜநங்கள் ஒன்றானபடியால்) இது முழுமையும் ஒரே சாஸ்திரமாகி மீமாம்ஸா சப்தத்தால் வழங்கப் படுகி

றது. இக்காரணம் பற்றியே வித்யாஸ்தானங்களை பதினான்காகப் பிறிக்கும்போது இந்த சாஸ்த்ரத்தை மீமாம்ஸை என்கிற ஒரே சப்தத்தால் குறிப்பிட்டிருக்கிறார்கள். இல்லையேல் வித்யாஸ்தானங்கள் அதிகமாய் பதினைந்தாய் அப்பதினைந்தாவதற்கு வேறு பெயருமிட வேண்டிவரும்.

இவ்வாறு ஒரே சாஸ்த்ரமாகில் இதன் ஆரம்பத்தில் 'அதாதோ த4ர்மஜிஜ்ஞாஸா' என்று தர்ம விசார மாத்ர ப்ரதிஜ்ஞை செய்யப்படலாமோ? ப்ரஹ்ம விசாரத்திற்குமல்லவோ பொதுவாக ப்ரதிஜ்ஞையிருக்கவேண்டும். அப்பொழுது 'அதாதோ வேதா3ர்த2ஜிஜ்ஞாஸா' என்றிருந்தால் பொருந்தும். அப்படிக்கில்லாமல் பூர்வபாக மாத்ரத்திற்கு உறியதான ப்ரதிஜ்ஞையை காண்கிறோமே யெனில்—'அதாதோ த4ர்மஜிஜ்ஞாஸா' என்பதே இரண்டுபாகங்களுக்கும் பொதுவான ப்ரதிஜ்ஞையாகும். 'அலௌகிகமான ச்ரேயஸ்ஸுக்கு ஸாதநம் தர்மம்' என்ற தர்ம லக்ஷணம் ப்ரஹ்மத்திற்கும் பொருந்தும். ஸித்த ரூபமான ப்ரஹ்மத்தினிடமும் தர்ம சப்தம் மஹர்ஷிகளால் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. 'க்ருஷ்ணம் த4ர்மம் ஸநாதநம்' இத்யாதி ஸ்தலங்களில். ஸாமான்ய ப்ரதிஜ்ஞையில் விசேஷப் ப்ரதிஜ்ஞை அந்தர்பூத மாகலாமென வைத்துக்கொண்டு ஸாத்யரூபமான தர்ம விசாரம் பூர்வ காண்டத்தில் செய்யப்பட்டது. அல்லது அந்தந்த காண்டங்களில் தனித்தனி அந்தந்த ஸூத்ரங்களில் விசேஷ ப்ரதிஜ்ஞையே யுள்ளது. ஸாமான்ய ப்ரதிஜ்ஞைக்கு மதுவே உபலக்ஷணமாகும். அல்லது அதற்கு ஆக்ஷேபத்தால் ஸித்தி யென்றும், அல்லது ஸாத்ய தர்மத்தைச் சொன்னதிலிருந்து தத3நுப3ந்தி4யான ஆராத்ய தேவதா ஸ்வரூபமும் அதற்கு பர்யவஸாந பூமியான ப்ரஹ்ம ஸ்வரூபமும் விவக்ஷிதந்தானென்றும் சொல்வதுண்டு. வஸ்து ஸ்திதியில் முழுமையும் ப்ரஹ்மவிசார சாஸ்த்ர மெனச் சொல்லவேண்டும். அப்போது ப்ரஹ்ம மீமாம்ஸையின் மூன்றும் அத்யாயத்தில் உபாஸநத்தை நிரூபணம் செய்யும்பொழுது அதற்கு கர்மங்கள் பரிகரங்களான படியால் உபாஸந நிரூபணம் செய்யவேண்டிய ஸ்தானமே அதன் பரிகரங்களுக்கும் ஸ்தானமாயிற்று. இருந்தபோதிலும் அவ்விசாரம் வெகு விரிவான க்ரந்தத்தின் மூலம் செய்யவேண்டிய தவச்யமானபடியால் அதைத் தனி க்ரந்தமாகப் பிறித்து தர்ம மீமாம்ஸை என்கிற பெயரால் வழங்கினார்கள் என்றும் ஸமாதாநம் சொல்வதுண்டு.

இவ்வாறு சாஸ்த்ர ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டு முதலில் தர்ம மீமாம்ஸா சாஸ்த்ரம் முடிந்ததும் ப்ரஹ்ம மீமாம்ஸா விசாரம் 'ஸாங்க்ஷ தேநாஸூத்ர' என்றாரம்பித்துச் செய்யவேண்டியிருக்க சதுஸ்ஸூத்ரிக்கு ஆவச்யகதை ஏது? இவை இவ்விசாரத்திற்கு உபோத்காதங்களா



கச் செய்யப்பட்டவைகளெனில் ஸித்த தர்ம ரூபமான ப்ரஹ்ம விசாரமும் கர்தவ்யமே யென்று பூர்வ மீமாம்ஸை முதல் ஸூத்ரத்தாலேயே கிடைக்கவில்லையோ! அப்படி உபோத்காதம் அவச்ய மென்றாலும் இதற்கு நான்கு ஸூத்ரங்கள் அவச்யமோ என்றிது முதலிய ஆக்ஷேபங்களும் அவற்றின் ஸமாதாநங்களும் இந்த உபோத்காத ஸூத்ரங்களில் ஸூத்ரகாரருக்கு விவக்ஷிதங்கள் என்னு மம்சம் அவற்றை நிரூபிக்கும்போது ஸ்பஷ்டமாகும்.

கீழ் உபபாதித்த ரீதியில் ஸாங்கமாக முழு வேதத்தையும் அத்யயநம் செய்த அதிகாரிக்கு பூர்வகாண்ட விசாரம் முடிந்ததும் உபநிஷத் பாகங்களிலும் ஆபாத ப்ரதீதியாலுண்டான ஸம்சய விபர்யயங்களை போக்கி நிர்ணயஜ்ஞாநம் பிறப்பதற்காக உபநிஷத்பாக விசாரமும் செய்ய வேண்டிய தவச்யமென்று ஸித்தித்திருந்தபோதிலும் மேற் சொல்லப்போகும் நான்கு விதமான பூர்வ பக்ஷிகளின் ஹேதுக்களால் அந்த விசாரம் தடைபட்டுவிட அவற்றை நான்கு ஸூத்ரங்களால் நிரஸநம் பண்ணி மறுபடி அவ்விசாரத்தில் ருசியைப பிறப்பிக்கிறார் ஸூத்ரகாரர். அந்நான்கு யுக்திகளையும் அவைகள் ஒன்றையொன்று உபஜீவித்திருப்பதை யொட்டிய அவற்றின் க்ரமத்தையும் அதிகரண ஸாராவளியில்

“ஸித்3தே4 வ்யுத்பத்திராதௌ3 ந ப4வதி ந ச யத்கார்யதாத3ர்த்2யஸித்3தே4ர்
கிம் ஶாஸ்த்ரேணாந்யஸித்3தே4 ந ச நிருபயிதும் ஶக்யஸம்ப3ந்த4போ3தே4 ஹேயம் ஸ்யாத் ।
ஸுஜ்ஞேயம் ந சாநாந்யபா4வ நிஷ்ட2 ஜநிர் ஸம்ஸிதே தத்3விசாரே
ஶாஸ்த்ராரம்ப4ம் வத3ந்த: ஸூத்ரவத்3 யத3பி3 நிர்தோ3ஷ ஹேதூந்
[தாந்ஸி4ம்ஸ ॥” (22)

என்று ஸ்ரீதேசிகன் வெகு அழகாக ஸங்க்ரஹித்து ஸாதித்திருக்கிறார்.

அந்த யுக்திகளாவன—(1) ஸித்தரூபமான பொருளில் சப்தத்திற்கு வ்யுத்பத்தி யுண்டாவதில்லை-'கா3 மாநய, கா3ம் ப3தா4ந' என்றிது முதலிய பெரியோர்களின் வ்யவஹாரத்தைக் கொண்டே பாலர்கள் ஆரம்பத்தில் சப்த வ்யுத்பத்தியை க்ரஹிக்கின்றனர். ஆகையால் கார்யரூபமான அர்த்தத்தில் தான் முதல்முதல் வ்யுத்பத்தி ஏற்படுகிறபடியால் ஸித்த ரூபமான பொருளை சப்தம் தெறிவிக்கமாட்டாதானபடியால் உபநிஷத் வாக்யங்களைக் கொண்டு ப்ரஹ்மத்தை விசாரிக்க வேண்டியது அநாவச்யமாகும். இது முதல் (ஜிஜ்ஞாஸா) அதிகரணத்தின் பூர்வபக்ஷம்.

2. ஸித்த வஸ்துவில் சப்த வ்யுத்பத்தியை யங்கீகரித்தாலும், சப்தம் ஒரு பொருளைத் தெறிவிக்கும் பொழுது அது இம்மாதிரியானது என்று

அதற்கு ஒரு லக்ஷணத்தைக் காட்டி அதன் முகமாகவே அதை உணர்த்த வேண்டியிருக்கிறது. ப்ரக்ருதத்தில் 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே' என்று லக்ஷணமாகச் சொல்லப்பட்ட ஜந்மாதிகளும் ப்ரஹ்மத்துக்கு விசேஷணங்களென்றால் விசேஷணங்கள் அனேகங்களானபோது விசேஷ்யமும் (ப்ரஹ்மமும்) பலவாக வேண்டி வரும். அவைகளை உபலக்ஷணங்களாக எடுத்துக் கொண்டாலோ ப்ரஹ்மத்தினிடம் பூர்வம் தெறிந்த ஒரு அம்சம் (வ்யாவ்ருத்திவணாகாரம்) அங்கீகரித்தபின் இந்த உபலக்ஷணங்களால் புதிதான ஒரு அம்சம் போதிக்கப்படக் கூடுமாதலால் அப்படிப்பட்ட அம்சம் (வ்யாவ்ருத்திவணாகாரம்) ப்ரஹ்மத்தினிடம் இல்லாமையால் உபலக்ஷணங்களாகவிருந்தும் அவைகள் லக்ஷண ஸமர்பக்மாக மாட்டா. ஆகையால் ஒரு லக்ஷணத்தாலு மறியக்கூடாத வஸ்துவை சப்தம் போதிக்கமாட்டா தாகையால் அந்த விசாரம் அநாவச்யகமானது. இது இரண்டாவது ஜந்மாத்யதிகரண பூர்வபக்ஷம்.

3. லக்ஷணம் ஸம்பவிக்குமா யிருந்தாலும், 'விலக்ஷணமான ஸமுத்ரம் மலை முதலிய கார்ய வர்க்கங்களுக்கு அதற்குத் தகுந்த சக்தி பொருந்திய ஒரு விலக்ஷண கர்த்தாவான ஈச்வரனிருக்க வேண்டும்' என்ற அநுமாநத்தைக் கொண்டு ப்ரஹ்மத்தை அறியலாமாதலால் உபநிஷத் வாக்யங்களைக் கொண்டு ப்ரஹ்மவிசாரம் செய்யவேண்டுமென்பது உசிதமில்லை. இது மூன்றுவது சாஸ்த்ரயோநித்வாதிகரண பூர்வபக்ஷம்.

4. உபநிஷத்தைக் கொண்டே ப்ரஹ்மம் அறியக் கூடியதாக அங்கீகரித்தாலும் ப்ரஹ்மம் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளில் அந்வயமில்லாத வஸ்துவாதலால் அவ் விசாரம் ஸபலமல்லாத தாகையால் ப்ரயோஜந சூன்யமான ப்ரஹ்மத்தினிடம் உபநிஷத்துகளுக்கு தாத்பர்ய மில்லை யாகையால் அந்த விசாரம் அநாவச்யகமானது. இது நான்காவது ஸமந்வயாதிகரண பூர்வபக்ஷம்.

இந்த நான்கு யுக்திகளால் ப்ரஹ்ம விசாரம் தடைபட்டு நிற்க இவைகளுக்குத் தக்கவைகளான நான்கு ஸித்தாந்த யுக்திகளால் (முதல் நான்கு ஸூத்ரங்களால்) நிரஸநம் செய்து ப்ரஹ்ம விசாராரம்பத்தை ஸமர்த்திக்கிறார் ஸூத்ரகாரர். அவையாவன (1) இவர் உன் தகப்பன் இவள் உன் தாய் என்று அவர்களை விரலால் காட்டித்தெறிவிக்க, குழந்தைகளும் அநாதியான ஸம்ஸ்கார பாடவத்தால் அச் சொற்களுக்கும் அப்பொருள்களுக்கும் ஒரு ஸம்பந்த்தை யறிந்து கொள்கிறார்கள். அந்த அப்யாஸ விசேஷத்தால் பின்னிட்டும் தாங்களும் அவ்வாறே அச் சொற்களைக் கேட்டவுடன் அப்பொருள்களை உணர்கிறார்கள். 'உனக்கு பிள்ளை பிறந்தது' 'உன் வீட்டில் நிதி இருக்கிறது' இதுமுதலிய வாக்யங்களும் ப்ரீதி முதலியதைஉண்டாக்கக் கண்டிருக்கிறோம். ஆகையால் சப்தம் ஸித்த வஸ்துவையும் ப்ரதிபாதநம் பண்ணக் கூடியதே. இதுமுதல் (ஜிஜ்ஞாஸா) அதிகரண ஸித்தாந்தம்.



(2) ஜந்மாதிகள் ப்ரஹ்மத்துக்கு விசேணமாயும் உப லக்ஷணமாயும் லக்ஷணமாகலாம். ஒன்றுக்கொன்று விருத்தமாயிருக்கும் விசேஷணங்கள் தான் விசேஷ்யத்தைப் பலவாகக் காட்டும். விருத்தமல்லாத விசேஷணங்கள் விசேஷ்யத்தை பலவாக்கமாட்டா. 'கருத்தும் யுவாவாயும் கண் சிவந்தவனும் பருத்துமிருப்பவன்' என்றால் ஒருவனிடம் இந்த விசேணங்கள் யாவுமமையலாம். ஆகையால் விசேஷணபக்ஷம் கூடும். உப லக்ஷணமென்றாலும் குறையில்லை. புருஷஸூக்தாதிகளில் புருஷன் என்று ப்ரஸித்தமான புருஷன் பூர்வம் ப்ரதிபன்னன். ஜகத்காரணத்வாதிகளும் ப்ரஹ்ம குணம் என்று ப்ரஸித்தமே. இந்த ஜகத்காரணத்வாதிகளைக் கொண்டு இவனே ப்ரஹ்மம் என்று அறியலாமாகையால் பூர்வ ப்ரதிபன்னாகாரத்திற்கும் குறையில்லை. ஆகையால் ஜந்மாதிகள் ப்ரஹ்ம லக்ஷணங்களாகக் கூடுமாகையால் லக்ஷண முகத்தால் அறியக் கூடிய வஸ்துவை (ப்ரஹ்மத்தை) உபநிஷத்து அறிவிக்கக் கூடுமாகையால் உபநிஷத்விசாரம் செய்யத் தக்கதேயாகும். இது இரண்டாவதான ஜந்மாத்யதிகரண ஸித்தாந்தம்.

(3) ஈச்வரனை அநுமானத்தால் ஸாதிக்க முயற்சிப்பதும் உசிதமல்ல. அநுமானத்தால் ஈச்வரன் ஸித்திக்கும் பொழுது லோகத்தில் கண்டிருக்கும் ரீதியில் விச்வாமித்ராதிகள் போல் ஜகத் கர்த்தாவாக ஒருவன் ஸித்திக்கலாமே யொழிய விலக்ஷணமாக ஸித்திக்க ந்யாயமில்லை. ஆகையால் அநுமானத்தால் ஸித்திக்க வழியில்லை யாதலால் உபநிஷத்தைக் கொண்டே யறியவேண்டிய படியால் தத்விசாரம் அவச்யமானதே. இது மூன்றுவதான சாஸ்த்ரயோநித்வாதிகரண ஸித்தாந்தம்.

(4) ப்ரஹ்மத்துக்கு ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளில் அந்வயமில்லாததால் ப்ரஹ்ம விசாரம் ப்ரயோஜனமுள்ள தாகாதென்றதும் ஸரியல்ல. 'உன் வீட்டில் நிதியிருக்கிறது' என்னும்போது நிதி இருக்கிறது என்ற ஜ்ஞானத்தால் மட்டுமே ஆநந்தமுண்டாகக் காண்பதால் பின் அதை அடைவதற்கு முயற்சித்து அடைவதுபோல் நம்முடைய ஸம்ரக்ஷணத்தில் தீக்ஷிதனும் ஸுந்தரூபனும் ரஸகனும் ஸர்வைச்வர்ய ஸம்பன்னனுமொருவனிருக்கிறான் என்பதால் மட்டுமே மஹாநந்த முண்டாய் பின் அவனை அடைய முயற்சிக்கலாமாகையால் இந்த உபநிஷத் விசாரமும் ஸப்ரயோஜநமே யாகும். இது நான்காவதான ஸமந்வயாதிரண ஸித்தாந்தம்.

63

இவ்வளவால் இந்த சதுஸ்ஸூத்ரீ (நான்கு அதிகாரணங்களும்) சாஸ்த்ராரம்ப ஸமர்த்தனார்த்தம் ஏற்பட்டதாகையால் ஏக பேடிகையாயிருந்து சாஸ்த்ரோபோத்காதமாகிறது. அவற்றில் முதலிரண்டு ஸூத்ரங்கள் தனிபேடிகை யென்றும் மேலிரண்டு ஸூத்ரங்கள் தனிபேடிகையென்றும் கொள்ளப்படுகின்றன. அதில் முதலிரண்டு ஸூத்ரங்களால் ஸித்த ப்ரஹ்மத்தினிடம் சப்தங்களுக்கு வயுத்பத்தி ஸமர்த்தனத்தாலும் லக்ஷண ஸமர்த்தனத்தாலும் வேதாந்த வாக்யங்கள் (ப்ரஹ்ம ப்ரதீதிஜநகம்) ப்ரஹ்மத்தை அறிவிக்க ஸமர்த்தமே என்பது விளக்கப்பட்டது. மற்ற இரண்டு ஸூத்ரங்களால், ப்ரஹ்மம் ப்ரமாணாந்தர ஸித்தமானபடியாலும் ப்ரயோஜனமில்லாமையாலும் வேதாந்த விசாரம் அநாவச்யகமென உதித்த சங்கைகளை வரிசையாய் பரிஹரித்து வேதாந்த வாக்யங்களுக்குண்டான வைபல்ய சங்கையைப் பரிஹரிக்கின்றன. இவ்வர்த்தங்கள் ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்த அதிகரண ஸாராவளியில்.

“ஸாத்யாஸாக்ஷ ப்ரதீதி ப்ரஜநநநிஹிதம் ஸித்தவைவே வாக்யவிந்து
ஸாத்யம் வைபல்யஶங்கா ததநு பரிஹ்ருதா ஶாஸ்த்ரதஜ்ஞை:
[ஸூத்ரை: ॥” (24)

என்கிற ச்லோகத்சால் விசதீகரிக்கப் பட்டிருக்கின்றன.

இது சதுஸ்ஸூத்ரியின் விஷயக்ரமம். இதுவே ஸ்ரீ பாஷ்யகாராதிகளால் ஆதரிக்கப்பட்ட மார்கம். இதுவே ஸூத்ரகாரருடைய ஹ்ருதயமுமாகும்.

ததாஹி—ஸாங்காத்யாயியான அதிகாரிக்கு வேதாந்தங்களில் (உபநிஷத்பாகங்களில்) ஆபாதத: அர்த்தம் ப்ரதிபன்னமாக அவ்வர்த்த நிர்ணயத்திற்காக உபநிஷத் வாக்யங்களைக் கொண்டு ப்ரஹ்ம விசாரம் செய்யவாரம்பிக்கும் போது பூர்வ பக்ஷிகளின் யுக்திகளால் ப்ரஹமம் சப்த ப்ரதிபாத்யமாகாதென்று உண்டான ஆக்ஷேபத்தை பரிஹரித்து ப்ரஹ்மம் சப்தப்ரதிபாத்யந்தான் என்று முதலில் ஸாதிப்பது ஸூத்ரகாரருக்கு அவச்யமாயிற்று. அவ்வாக்ஷேபங்கள் இரண்டு விதத்தில் வரக்கூடும். முதலாவது ஸித்த ரூபமான எந்த அர்த்தத்திலும் எந்த சப்தமும் வ்யுத்பன்னமல்ல, கார்ய ரூபமான அர்த்தத்தில் தான் வ்யுத்பன்னம் என்பதாகும். இரண்டாவது அப்படி சப்தம் ஸித்தமான அர்த்தத்தில் வ்யுத்பன்னமாயிருந்தாலும் ப்ரஹ்மத்துக்கு லக்ஷணம் சொல்லக்கூடாமையால் ப்ரஹமத்தைத் தெறிவிக்க வேதாந்த வாக்யம் சக்தமல்ல. ஆகையால் உபநிஷத் விசாரம் அநாவச்யகம் என்று. இவ்விரண்டில் பொதுவில்



சப்தஸாமான்யத்துக்கு ஸித்தவஸ்துவினிடத்தில் வ்யுத்பத்தி ஸமர்த்தனம் செயயாதவரையில் ப்ரஹ்ம சப்த விசேஷத்துக்கு அதை ஸாதிப்பதற்கோ அதை ஆக்ஷேபிப்பதற்கோ இட மிராதப்படியால் சப்த ஸாமான்யத்திற்கு ஸித்தவஸ்துவில் வ்யுத்பத்தி ஸமர்த்தனம் முதல் அதிகரணத்தில் செய்துவிட்டு அதன்பின் லக்ஷண ஸமர்த்தன மூலம் ப்ரஹ்ம சப்தத்திற்கு அது அவச்யமாயிற்று. ஆக இவ்வளவால் இவ்விரண்டு ஸூத்ரங்களுக்கும் ‘ப்ரதீதிஜநநம்’ என்ற ப்ரயோஜநம் ஒன்றே யென்றும் அவற்றிலும் ஸித்தத்தில் வ்யுத்பத்தி ஸமர்த்தனத்திற்கு முதல் ஸ்தாநமென்றும் ப்ரஹ்மத்துக்கு லக்ஷணஸமர்ந்தநத்தால் ப்ரஹ்ம சப்தத்திற்கு தத்ஸமர்த்தனம் அதன் பின்தான் செய்யவேண்டியதென்றும் இந்த க்ரமத்தை மாற்றிச் செய்ய இடமில்லை யென்றும் நிர்ணீதமாகிறது.

அதன்பின் மேலிரண்டு அதிகரணங்கள் தாத்பர்யலிங்க ஸமர்த்தனத்திற்காக ஏற்பட்டவை. அதாவது—உபநிஷத் வாக்யங்களால் ப்ரஹ்மம் ப்ரதிபன்னமானாலும் அந்த ப்ரஹ்மம் ப்ரமாணாந்தரவேத்ய மாகவோ ப்ரயோஜந சூன்யமாகவோ இருந்தால் இவ்வுபநிஷக்துகள் அந்த ப்ரஹ்மத்தைத் தெரிவிப்பதில் தாத்பர்யமில்லாதவைகள் (ஸூத்ரங்கள்). ஆனபடியால் விசாரம் அவச்யமில்லை யென்று முடியுமாகையால் ப்ரஹ்மம் ப்ரமாணாந்தர ஸித்தமாயிருந்தால் (அநுமான ஸித்தமானால்) அந்த ப்ரஹ்மத்தைத் தெறிவிப்பதில் உபநிஷத்துகளுக்கு தாத்பர்யமில்லை யென்று முடியுமாதலால் ப்ரமாணாந்தர ஸித்தமா இல்லையா என்ற விசாரம் அவ்விரண்டிலும் முதன் முதலில் (சாஸ்த்ரயோன்ய திகரணததில்) செய்ய வேண்டியதவச்யமாயிற்று. அதன் பின் ப்ரஹ்மம் அநுமான ஸித்தமாகாமல் உபநிஷதேக கம்யமாயிருந்தபோதிலும் அந்த ஜ்ஞானத்துக்கு ப்ரயோஜநமில்லை யானதால் நிஷ்ப்ரயோஜந மானவற்றில் உபநிஷத்துகளுக்கு தாத்பர்யமில்லை யென்று தத்விசாரம் அநாவச்யமென்று வர அது ஸப்ரயோஜநந்தான் என்று ஸாதிப்பது அதற்குப் (சாஸ்த்ரயோன்யதிகரணத்திற்கு) பின்னடிதான் பொருத்தமுள்ளதான படியால் இதற்கு (ஸமந்வயாதி கரணத்திற்கு) நான்காவது ஸ்தானமே யுக்தம். ஆக இவ்வளவால் (1) வ்யுத்பத்தி யில்லாமை (2) ப்ரதிபத்தியில்லாமை, (3) ப்ரமாணாந்தரத்தால் ஸித்தி, (4) பலமில்லாமை இந் நான்கு விதமான ஆக்ஷேபங்களையும் பரிஹரித்துக்கொண்டு சாஸ்த்ராரம்பத்தை ஸமர்த்தனம் செய்வதற்காக ஏற்பட்டது இந்த சதுஸ்ஸூத்ரீ நான்கு ஸூத்ரங்கள்( முதல் நான்கு அதிகரணங்கள்)என்பது ஸித்தமாயிற்று. இவ்வர்த்தத்தை பூர்வாசார்யர்கள் ஸங்க்ரஹித்து இருக்கும் சுலோகங்களால் அறியலாம்.

1 "வ்யாவ்ருத்த்யாஹாவக: ப்ருதிவீத்வாதிஷ்வஶேஷ்யாதிநவவிதைஸ்ஸ்வஸ்வகுணத்வம் ।
அநேகவிதஸம்ஸ்ந்த்ய நிரவகாஶ ந்யாயவைஶேஷிக: ப்ருதிவ்யாத்யேத
[தக ॥ என்றும்

2 ।வ்யாவ்ருத்த்யாஹாவ: ப்ருதிவீத்வாதிஷ்வஶேஷ்யேந ஸ்விஜ்வஶாஸ்வலக்ஷ்ம ।
வதாநி வைவ ஸூக்த வதாஷ்டயே நாநாஸம்ஹாரிதாநி நிராக
[க்ருதாநி ॥" என்றும்.

இவ்வர்த்தங்களையும் அவைகளின் க்ரமத்தையும் ஈஷத்தாவது மாற்றுவதாயிருந்தாலும் வேறு விஷயங்களை புகாவிடுவதாயிருந்தாலும் வேறு ப்ரயோஜநத்தை கல்பிப்பதாயிருந்தாலும் ஸூத்ரங்களின் பூர்வோத்தர க்ரமம் பாதிக்கப்படுவதுடன் இவைகளுக்கு சாஸ்த்ரோபோத்காதத்வமும் ஸித்தியாமல் ஸூத்ரகாரருக்கு அஸாமர்த்யத்தையும் கல்பித்துக்கொடுப்பதாகுமாகையால் அது ஸர்வதா அநுசிதமேயாம். ஆனால் பிறமதங்களில் விஷயங்கள் மாறுபட்டிருக்கின்றன.

முதல் ஸூத்ரத்திற்கு (ஜிஜ்ஞாஸாதிகரண) விஷயமாகச் சொல்ல வேண்டியவற்றை நான்காவது ஸமந்வய ஸூத்ரத்திற்கு விஷயமாக்கியும் நான்காவது ஸூத்ரத்திற்கு விஷயமாகச் சொல்லவேண்டியதை முதல் ஸூத்ரத்திற்கு விஷயமாகச் சொல்லியும் அவ்வாறே மற்றும் சிற்சில மாறுதல்களையும் செய்து அர்த்த வர்ணநம் செய்திருக்கிறார்கள். இச் சதுஸ் ஸூத்ரீ நான்கு ஸூத்ரங்களும் ப்ரஹ்ம மீமாம்ஸா விசார சாஸ்த்ரத்தின் ஆரம்பத்தை ஸமர்தித்துக் கொடுப்பதற்காக வந்த உபோத்காத ஸூத்ரங்களென்றும் ஈக்ஷத்யதிகரணம் முதல் தான் விசார சாஸ்த்ரம் ஆரம்பிக்கிறதென்றும் எல்லோரும் அங்கீகரித்தவர்களே. இந்த நான்கு ஸூத்ரங்களிலும் பூர்வ பக்ஷம் வாச்யமாகவில்லை. ஸித்தாந்தம் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டதிலிருந்து அதற்குத் தக்க ரீதியில் பூர்வபக்ஷம் ஊஹிக்கத் தகுந்ததாயிருக்கிறது. இங்கு பிறர்களின் ஸம்சய பூர்வ பக்ஷ ஸித்தாந்தங்களை சுருக்கமாக எழுதி அவைகளின் ஸாதுவத்தைப்பற்றிச் சிறிது விசாரிப்போம். இது அடுத்த ஸஞ்சிகையில் காணப்படும்.

---

(1) ஸேநேச்வராசார்யருடைய ந்யாயகுலிச ஸம்க்ரஹத்தில்.
(2) ந்யாயஸுதர்சந க்ரந்தத்தில்.

# தாய்மொழி பேணல்

(பந்தல்குடி பாரத்வாஜ மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார், காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.)

அமிழ் தினுமினிய நம் தமிழ் மொழி வழங்கும் தமிழ் நாட்டின் சிறப்பு அளவிட்டுக் கூற இயலாது. தமிழின் தொன்மை கணக்கிட அரியது. தமிழின் புகழைப் பலர் பலபடியாகக் கூறுவார். "இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்"; "தமிழினு மினிய தீஞ் சொற்றையல்" என்பவற்றால் தமிழ் என்ற பதத்துக்கே இனிமை என்றேற்படுகிறது. "தன்னேரிலாத தமிழ்" "ஆயுந்தோறும் இன்பந் தருந் தமிழ்" என்று தமிழ்க் கவிகள் புகழ்ந்திருக்கின்றனர். "என்று முளதென்றமிழ்" என்று தமிழின் தொன்மையை நன்று உணர்த்துகிறார் கம்பர். தமிழர்கள் மட்டுமேயன்றிப் பல அந்நிய நாட்டுப் பாஷாவிற் பன்னர்களும் தமிழின் பெருமையை வியந்து கூறிப் போந்தனர். டாக்டர் கால்ட்வெல் பாதிரியார் "தமிழ்மொழி பண்டையது, நலம் சிறந்தது, உயர் நிலையில் நிற்பது" என்றும், டாக்டர் வின்ஸ்லோ "எகிப்திய மன்னன் சாலமோன் காலத்தில் தட்சணத்தில் வந்து போன கப்பல் வியாபார ஏற்றுமதிச் சாமான்களின் பெயர்களாகிய தந்தம், கபி, தோகை என்பவைகளை இங்கிருந்தவர்கள் கொண்டு போய் இன்னும் வழங்கி வருவதே தமிழ்மொழியின் தொன்மைக்குப் போதிய சான்றாகும்" என்றும், டெய்லர் "கிரேக்க, லத்தீன் பாஷைக் கவிகளே உலகிலுள்ள கவிகளுள் எல்லாம் சிறந்தனவெனக் கருதும் ஐரோப்பிய பாஷாபிமானிகள் தமிழ்க்கவிகளைக் கற்பரேல் தாம் கொண்டிருக்கும் கருத்தை மாற்றவேண்டிவரும்" என்றும், அவர் "உலகிலுள்ள மிகச் சிறந்த பாஷைகளில் தமிழும் ஒன்று" என்றும் வின்ஸ்லோ "சொற் பொருள் நயத்திலும், பரப்பிலும், தமிழ்மொழி கிரீக், லத்தீன் பாஷைகளினும் சிறந்ததொன்று" என்றும் பறை சாற்றுகின்றனர். "தொன்று நிகழ்ந்த தனைத்து முணர்ந்திடு சூழ்கலை வாணர்களும்—இவள், என்று பிறந்தவளென்றுணராத இயல்பினளாமெங்கள் தாய்" எனப் பெருமிதந் தோற்றப் பாடுவர் பாரதியார்.

தமிழ்மொழியின் தொன்மையைக் குறித்து ஆராய்ச்சியாளர் கூறும் முறையைச் சற்று உணர்த்துவாம். பண்டைத் தமிழ் நூல்களில் பிரதானமானது இறையனார் அகப்பொருள். இதன் உரையினால் தலைச் சங்கம் கி. மு. பதினாயிரம் வருடங்களுக்கு முன்னர் தோன்றி சுமார் ஐயாயிரம்

ஆண்டுகள் இருந்ததாகத் தெரிகிறது. எனவே இற்றைக்குச் சுமார் பனிரெண்டாயிரம் வருடங்களுக்கு முன் தலைச் சங்கம் தோன்றியிருந்தால் அதற்குப் பல்லாயிரவாண்டுகட்கு முன்னதாகவே தமிழ்மொழி தோன்றியிருத்தல் வேண்டும். தற்போது உயிரோடுள்ள பழந்தமிழ் நூல்களில் பழமையான தொல் காப்பிய ஆசிரியர் இற்றைக்குச் சுமார் இரண்டாயிரத்து முந்நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்திருக்கவேண்டும், இதர தேசத்தார் நூல்களிலும் சரித்திரக் குறிப்புகளிலும் தமிழர் நாகரீகமும், தமிழர் வியாபாரமும் விளக்கப்பட்டிருப்பதாலும், அங்ஙனம் விளக்கியுள்ளவைகளில் மிகப் பழமையானது சுமார் ஆறாயிரம் ஆண்டுகட்கு முன்னர் உள்ளது.

இத்தகைய சீரும் சிறப்பு முடைய நம் தாய் மொழியின் தற்கால நிலைமையை நோக்குமிடத்து மனம் பதைக்கிறது. தமிழ்ப் பாஷை மிகவும் புறக்கணிக்கப் பட்டு வருகிறது. தமிழ் நாட்டிற் பிறந்து வளர்ந்து வரும் நம்மவரில் எத்தனை பேர் தமிழிலே நினைக்கவும், பேசவும், எழுதவும் வல்லவர்கள்? தமிழிற் பேசுவது அகௌரவம் என நினைப்பாரும் அநேகர் உண்டு. பாஷாபிமானம் இல்லையாயின் தேசாபிமானம் உண்டாகாது. தேசாபிமானம், அற்றவன் மனிதனல்ல. தாய் மொழி பேணலே தமிழ்த் தனயர் கடனாகும். தாய்மொழியாகிய தமிழை ஆதரித்துப் போற்றி வளர்க்காமல் அந்நிய பாஷாபிவிருத்தி செய்தல் 'தாய் பசித்திருக்க ஊர் விருந்து செய்வது போலாம்' என்பதை நன்கு உணர்ந்து தாய்மொழி அபிவிருத்திக்கு அரும்பாடு படல்வேண்டும்.

தமிழ் நாட்டின் எல்லைகள் வடவேங்கடம் தென் குமரி. வேங்கட வெற்பனைப் பாடாத ஆழ்வாரிலர். குமரித்தலைவர் குருகையிற் கூட்டங் கொண்டு அந்நியர்களின் கொழுப் படக்கினர். மூப்பத்தாறாயிரப் பெருக்கர் என்ற பெயரை நோக்கின் அப் பெரியாரின் தமிழ்மொழி பேணல் நன்கு தெளியலாம். தெளியாத மறை நிலங்கள் தெளியவேண்டின் ஆழ்வார்கள் மகிழ்ந்து பாடும் செய்ய தமிழ்மாலைகள் நாம் தெளிய ஓதல் வேண்டுமெனக் கண்டு நாடறிய நன்குரைத்தவர் செந்தமிழ்ச் செல்வராய நம் தேசிகனார். தமிழ் நிறம் பெற்றதும், நீர்மையுற்றதும் ஆழ்வார்கள் அருளிச் செயல்களால். அந்தமிலா வாரணங்கள் நாலாய் நின்ற அதன் கருத்தை ஆழ்வார்கள் ஆய்ந்தெடுத்து செந்தமிழால் அருள் செய்தனர். அவ்வருளிச் செயல்களின் வகையுந்தொகையும் சிந்தாமல் உலகங்கள் வாழ்வதற்காக சந்த மிகு தமிழ்மறையோன் தூப்புல் தோன்றும் வேதாந்த குரு பிரபந்த சாரத்தை மொழிந்ததாகத் தம்மை அதி கம்பீரமாகக் குறித்துக் காட்டுகிறார் நம் தமிழ்ச் செல்வர். தென்மொழி வடமொழி நெகிழ்ந்த நிலையே என்பது ஆன்றோரது துணிபு. 'வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாத், தொடர் புடைய தென் மொழியை உலகமெலாந்தொழுதேத்தும் குடமுனிக்கு வலியுறுத்தார்' என்பர் சிவஞான முனிவர்.



தமிழ் மொழியின் பிறப்பையும் வளர்ச்சியையும் போற்றுகிறார் புலவர் பெருந்தகையரான வரந் தருவார். "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து சங்கத் திருப்பிலே, யிருந்து வையை யேட்டிலே தவழ்ந்த பேதை நெருப்பிலே நின்று கற்றோர் நினைவிலே நடந்தோர் என்பது அவரின் கவி.

தமிழைப் பேணல் எங்ஙனம்! தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும். இவ்வரிய உண்மையை உணர்ந்து நடைமுறையில் கொண்டுவர ஒவ்வொரு தமிழனும் உழைக்கவேண்டும். சம்பாஷணைகள் தமிழிலேயே நடைபெறல் முதற்படி. கடிதப் போக்குவரவு தாய் மொழியிலேயே இருத்தல் அவசியம். குழந்தைகட்கு சிறு வயதி லிருந்தே தமிழ் கற்றுக் கொடுக்க வசதிகள் செய்தல் அத்யாவசியகம். ஆங்காங்கு தகுந்த பண்டிதர்கள் மூலம் தமிழ் இலக்கிய இலக்கண வகுப்புகள் இலவசமாக நடத்தல் மிகவும் முக்கியம். கம்பராமாயணம், திருக்குறள், ஆழ்வார் அருளிச் செயல்களை உள்ளபடி போற்றல் முதன்மை. வகுளாபரணர், வள்ளுவர், கம்பர் இம் மூவரே அருந் தமிழ்த் தொண்டாட்டாற்றியவர். இவர் போன்ற தமிழ்ப் பெரியாரின் ஜன்ம குணங்களைத் தக்கமுறையில் சிறப்பாகக் கொண்டாடல் சீரிய தொண்டாகும். தமிழ் வாலிப உலகம் விழித்தெழல் வேண்டும். பிராசீன சம்ப்ரதாய முறைகளைக் காப்பாற்றிவர முயல வேண்டும். தமிழபிவிருத்திக்கு சகல விதத்திலும் அனைவரும் ஒத்து உழைத்தால் நம் நாடு க்ஷேமமடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தமிழ் மொழியினிடமுள்ள த்வேஷம் அழியவேண்டுமாயின் ஆழ்வார்கள் அருளிச் செயல்களையும் கம்பராமாயணம் திருக்குறள் போன்ற செந்தமிழ் நூல்களையும் ஐயந்திரி பறஜூதி உணரல் வேண்டும். எக்காரியமும் ஒற்றுமையாலேயே பெறல் வேண்டும். ஆதலால் ஆங்காங்கு தமிழன்பர்கள் தமிழ்ச் சங்கங்களை திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்துடன் இணைத்து அவை கிளைகளாக உழைப்பின் நனி நலம்.

பூதத்தாழ்வார் தமிழை 'ஞானத் தமிழெ'னவும் தம்மைப் 'பெருந் தமிழன்' எனவும் கூறி மகிழ்வர். இவர் பாடல்கள் விஷ்ணுவுக்குப் பாத்துவங் கற்பித்துப் பத்திச் சுவை மலிந்து சிறுசிறு சொற்களாலாகித் திட்ப

நுட்பஞ் செறிந்து வியங்கும். இவர் செய்யுள் நடை செந்தமிழ் வளம் தேக்கப் பெற்றது. பிறருக்குத் தான் சொல்லும் விஷயம் அருமையாக இருப்பினும் அதனை எளிதாகச் சொல்ல வேண்டும். கற்றலிற் கேட்டலே நன்று. தமிழ்ப் பேணல் என்பதில் ஒவ்வொரு தமிழனும் கற்பிப்பவனுயும் கேட்போனுயும் இருக்க முயல வேண்டும். கற்பதை கற்றபின் அதற்குத்தக நின்றலே கல்வியின் பயனுதலின் கற்றபடி நன்னெறியில் நின்றெழுகலே சாலச் சிறந்தது. அடிக்கடி தமிழில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிடல் வேண்டும். ஆண்டிற் கொருமுறையாயினும் தமிழன்பர் மஹாநாடு கூடி தாய் மொழி பேணலில் அக்கறையுடன் அரும் பாடு படல் வேண்டும். பேச்சளவில் நின்று விடாது செய்கை வரையிலும் நின்ற நடத்தினுல் நன்மை உண்டாகும்.

“தமிழர் பெருமை தமிழ்பபெருமை; யன்பார்
தமிழ்ப் பணியே யின்பத்தவம்”
குருகாபதி பூங்கழல் கும்பிட
வருவமோ வரு வல்வினை நம்மிடை
திருமாமகள் நோக்குற லன்றியும்
வருமாதவன் வானம் வழங்குமே.

---


## “ ஸ்ரீ வைஷ்ணவம் ”

(ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாய விஷயங்கள் அடங்கியது)

“சுவர்ண விலாஸ்”

13, பெரியதெரு, திருவல்லிக்கேணி.

விலை ரூ. 1 8 0

இப்பெயர்கொண்ட புத்தகமொன்றை வரப்பெற்றேம்.

இதன் விமர்சம் அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.




ஸர்வதா ப்ரமதி இந்த்ரிய ஹயைர் அபதேஷு நீத:
துஷ்பரதுஸ்ஸஹ நிரர்கல லாலஸோ(அ)யம் ।
வித்யாபிஜந ஜந்மாதிமதைஸ் ச காம-
க்ரோதாதிபிஸ் ச ஹததீர் ந ஶமம் ப்ரயாமி ॥ 94

ஸந்த்யேவ துர்லப தராணி பஹூநி ராஜ்யம்
ஜாதா ஸஹஸ்ரகுணத: ப்ரதிஸந்தி மே ஹி ।

---

94. [ப-ரை] [அஹம்-நான்] ஸர்வதா - [எப்பொழுதும்] சஞ்சலித்துக் கொண்டிருக்கும், இந்த்ரிய ஹயை: - இந்த்ரியங்களாகிற [அடங்காக்] குதிரைகளால், அபதேஷு - தவறுதலான வழிகளில், நீத: - செலுத்தப்பட்டவனுயும், துஷ்பர துஸ்ஸஹ நிரர்கல லாலஸ: - துர்லபங்களாயும் அதிமாத்ரம் நிந்த்யங்களாயு முள்ள ஆசைகளால் பீடிக்கப்பட்டவனுகவும், ஹததீ: - எவ்வித பயமும் [லஜ்ஜையும்] அற்றவனுகவுமிருந்து கொண்டு, வித்யாபிஜந ஜந்மாதி - வித்யை தநம் நற்குலத்தில் பிறப்பு இம்மாதிரியான ஸம்ருத்திகளடியாக ஜநிக்கும் கர்வத்தாலும், காமக்ரோதாதிபிஸ் - காமம் கோபம் முதலியவைகளாலும் [மிகவும் ஆக்ரமிக்கப்பட்டவனுய்], ஶமம் ந ப்ரயாமி - ஶாந்தியைப் பெருமல் [வருந்துகிறேன்]

“ ஜந்ம ரூபம் வயோ வித்யா தநம் ச உந்மாதயந்தி ॥ ”

[மேல்குலத்தில் பிறப்பு, நல்ல ரூபம், யௌவநம், உயர்ந்த படிப்பு, தந ஸம்ருத்தி இவை ஒவ்வொன்றும் மநுஷ்யனை உந்மத்தனுகச் செய்கின்றன] என்கிறபடி, ஸாமாந்ய ஜநங்களின் விஷயத்தில் இவை அத்யந்தம் மதகரங்களே. ஸ்ரீ ஆழ்வான் விஷயத்திலும் இவை அவ்விதம் ஆக்ரமித்து நின்றனவோ வென்றுல் ‘அது இல்லை; இவையெல்லாம் நம்முடைய அநுஸந்தாநத்தை உத்தேசித்து அநுக்ரஹித்தபடி’ என்று நாம் அறிதல் வேண்டும். ஆனுலும் ஸஹ்ருதயமாகச் சொல்லப்பட்டவைகளே.

95. ‘ஆசைக்கு அவதி இல்லை’ என்பதை உள்ளபடி ஸரஸமாக நிரூபிக்கிருர். இஷ்ட வஸ்துக்களுள் சில துர்லபங்களாக இருக்கலாம். அவைகள் அளவற்று பெறப்படினும், இன்னும் மேன்மேல் அவைகளை நாம் அபேக்ஷிக்கிறேம். மற்றும் சில நமக்கு எட்டாதவைகளாகவே இருக்கின்றன. அவைகளிலிருந்து நமது ஆசை ஒழியாமலே, எவ்வளவு விக்நங்கள் நேர்ந்தபோதிலும் அவை ஒன்றையும் ஆதரியாமலே நாம் திநம் அவைகளைப் பெற முயல்கின்றேம். இது என்ன ஆச்சர்யம் ?

[illegible]
[illegible] 95

[illegible]
[illegible]

---

[ப-ரை] [illegible] - ஸ்வல்பங்களான இஷ்ட வஸ்துக்கள் விஷயமாக ஜநிக்கும் ஆசை, [illegible] - [நாம் ஆசித்ததைக் காட்டிலும்] ஆயிரமடங்கு அதிகமாக அவை பெறப்படினும், [illegible] - மேன்மேல் [அதிக உக்ரமாக] வளர்கின்றதே தவிர்த்து சாந்தியைப் பெறுமலே நிற்கின்றது; [illegible] - அத்யந்தம் துர்லபங்களாயுள்ள இஷ்ட வஸ்துக்கள் விஷயமாக ஜநிக்கும் ஆசையும், [illegible] - அவை விக்நங்களால் வேற்படுங்கலாக நசிப்பிக்கப்படினும், [illegible] - இன்னும் உக்ரமாக வளர்கின்றதே தவிர்த்து ஒழிவை அடைகின்றதில்லை. [illegible] - கஷ்டம்.

" [illegible] ।
[illegible] ॥ "

[ஆசை யென்னும் இந்தப் பாழுங்கிணறு ஒன்றுக்கும் அண்டாததே; ஒன்றாலும் தூர்க்கக் கூடியதாகவும் இல்லை. அதைத் தூர்க்க வேண்டு மென்று அதில் போடப்படும் மலைபோன்ற வஸ்துக்களும் அதைத் தூர்ப்பதற்கு அசக்தங்களாக இருப்பது மாத்ரமின்றிக்கே, அதை இன்னும் பறித்து அதிக ஆழமாகவே செய்கின்றன.] என்று அதன் ஸ்வபாவத்தை அறிந்தவர்கள் அதைப்பற்றி பேசி இருக்கிறார்கள். யோக்யங்களான ஸ்வல்ப வஸ்துக்களால் ஒரு நாளும் நமக்கு 'போதும்' என்னும் புத்தி உண்டாகின்றதில்லை; அயோக்யங்களான துர்லப வஸ்துக்களில் நிவ்ருத்தியும் ஏற்படுகின்றதில்லை. இது என்ன ஆச்சர்யம் 95

96. 'ஸ்வாமிந்! என் பாபத்தைப்பற்றி நான் என் சொல்வேன்? நல்ல கார்ய மொன்றையும் செய்கிறேனில்லை. அப்படிச் செய்யவில்லையே என்று அநுதாபப் படவுமில்லை. இது மாத்ரமன்று; கெட்ட கார்யங்களைச் செய்வதில் அளவற்ற உத்ஸாஹ முள்ளவனாகவும் இருக்கிறேன். இதுஎன்ன கஷ்டம்?' என்று வருந்துகிறார்.



[illegible]
[illegible] 96

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 97

---

[ப-ரை] [illegible] - உன்னுடைய நாம ஸங்கீர்த்தநம் குணத்தைப் பேசுவது நமஸ்கரிப்பது த்யாநிப்பது இவைகளில், [illegible] - ச்ரத்தை இல்லை; [illegible] - பக்தியுமில்லை; [illegible] - சக்தியுமில்லை; [illegible] - ருசியுமில்லை. [illegible] - இவை ஒன்றுமில்லையே என்று ஒருவித வருத்தமுமில்லை. [illegible] - ஆனால் [இவை ஒன்றுமில்லை என்பது மாத்ரமின்றிக்கே] [illegible] - [இவைகளுக்கு] விருத்தமான கார்யங்களைச் செய்வதில், [illegible] - கணக்கற்ற ஸாமக்ரிகள் இருக்கின்றன. [illegible] - ஆச்சர்யம். 96

97. 'என்னுடைய பாபத்தின் அளவை விளக்குவதற்கு இது ஒன்றே போதும். உன்னுடைய கருணை ஸமுத்ரத்திலிருந்து நாலு பக்கங்களிலும் வீசும் காற்று என்மீது மாத்ரம் கொஞ்ச மேனும் ஸ்பர்சிக்கவில்லையே' என்கிறார். பகவானுடைய கருணை எல்லாருக்கும் ஸாதாரணம்; அப்படி இருக்கையிலும் அதற்கு நான் பாத்ரமாகவில்லை யென்றால், என்னுடைய பாபம் எவ்வளவு பெரிதென்பது நன்கு விளங்குகின்றதன்றோ?

[ப-ரை] [illegible] - ஹே பகவந்! [illegible] - அளவற்றதும் [illegible] - ஒன்றாலும் தீர்க்கக்கூடாததுமான; [illegible] - என்னுடைய துஷ்ட ஸ்வபாவமானது, [illegible] - இதனாலேயே நன்கு விளங்குகின்றது. [illegible] - கஷ்டம். [illegible] - ஏனென்றால், [illegible] - நாலு பக்கங்களிலும் வீசும், [illegible] - உன்னுடைய எல்லையற்ற பெரிய விஸ்தாரமான கருணையாகிற க்ஷீரஸமுத்ரத்தின் அலைக் காற்றுக்குக் கூட [illegible] - பாத்ரமாகாமல் இருக்கிறேனன்றோ? 97

ஐஶ்வர்யவீர்யகருணாமஹிமக்ஷமாத்யா-
ஸ்ஸ்ரீநிதாநகரணஸஹஜஸ்த்வயி விஶேஷாஸ் ।
ஸர்வே குணாஸ்ஸவிஷயாஸ்தவ ஸம்வராக-
வொராகவ வஹ்ணஶ்ம குகிம் நிஹதம் ஸமேத்ய ॥ 98

க்ஷ்வாதஸம்ஶ்ரயண ஹேதுஷு ஸாயிகாரா-
நுஷ்ட்டாஜஜ்ஞத்வரிதக்ருதஸ்த்வியம்ஶ்ச தாம்ஸ்தாந் ।

---

98. ‘ஆனல் ஒரு ஸமாதாநமுண்டு. என்னைப் போன்றவனை நீ ரக்ஷியா விடில், உன்னுடைய கல்யாண குணங்களெல்லாம் வீணே ஆகிவிடுமன்றோ? அந்தக் குணங்கள் சோபிக்க வேண்டுமானல் என் போன்றவர்களை அவை விஷயீகரித்தே தீரவேண்டும்’ என்று தைரியம் அடைகிறர்.

[ப - ரை] ஹே ஸ்ரீநிதே - ஹே பகவானே! தவ - உன்னுடைய, ஐஶ்வர்யவீர்யகருணாமஹிமக்ஷமாத்யா: - ஐச்வர்யம் வீர்யம் கருணை பெருந்தன்மை பொருமை இவை முதலிய, ஸர்வே குணா: - எல்லா குணங்களும், த்வயி விஶேஷாத்காரணஸஹஜா: - முக்கியமாக உன்னுடைய ஸஹஜ ஸௌஹார்த்தமும் [அதாவது, எவ்வித காரணத்தையும் எதிர்பாராமல் எல்லாரிடத்திலும் ப்ரவஹிக்கும் உன்னுடைய ஸௌஹார்த்தமும்] இவையெல்லாம், கவாரவொராகவவஹ்ணஶ்ம - கணக்கற்ற அஸஹ்யங்களான பாபங்களால் நிறைந்திருக்கும், [அத ஏவ] நிஹதம் மாம் - [அந்தக் காரணத்தாலேயே] மிகுந்த தைந்யத்தை அடைந்துமுள்ள என்னை, ஸமேத்ய [ஏவ] - அடைந்தே, ஸவிஷயா: [ஐவெயு:] - விஷய லாபத்தைப் பெற்றவையாகுமன்றோ? [என்னைப் போன்ற தீநர்களை ரக்ஷியாவிட்டால், உன்னுடைய கல்யாண குணங்கள் இருந்தென்ன? இராவிட்டாலென்ன? கைம் முதல் இருப்பவர்களை ரக்ஷிப்பதால் இந்தக் குணங்கள் நிறம் பெற்றவை யாகுமோ?] 98

99. ‘எவ்வித கைம் முதலுமிராத என்னைப் போன்றவரை ரக்ஷித்தாலொழிய உன்னுடைய மஹிமைக்கு ஸார்த்தகயமில்லை’ என்கிறர்.

[ப - ரை] க்ஷ்வாதஸம்ஶ்ரயண ஹேதுஷு ஸாயிகாராந் - உன்னுடைய பாதாரவிந்தத்தை அடைவதற்கு அபேக்ஷிதமான யோக்யதையை உடையவர்களாயும், அநுஷ்டாநஜ்ஞா: - [அதை அடைவதற்காகச் செய்யவேண்டும் கர்ம ஜ்ஞாந பக்திகளைச் செய்வதற்கு] ப்ரயத்நத்தைச் செய்பவர்களாயும், த்வரிதக்ருதஸ்த்வியீந் - அநுஷ்டிக்கப்பட்ட ஸாதநங்களை உடையவர்களாயுமிருக்கும், தாம்ஸ்தாந் - அந்தந்த ஜநங்களை, ரக்ஷஸீதி -



க்ஷம் ரக்ஷஸீதி மஹிமா ந தவாவஶேஷ
மாம் வெஷநீசஸ்ய மநந்யகதிம் ந ரக்ஷே: ॥ 99

யா கர்மணாமதிக்ருதிர் ய உஹோபாய்யமத்ய-
ஷ்வோஷ்டநாஷ்டிரஶேஷமித்ம் ஹி வாஞ்ஸாத் ।

---

காப்பாற்றுகிறாய் என்னும், ஏஷ மஹிமா - இந்தப் பெருமையானது, தவ நாலம் - உனக்குப் போதாது. அநீசஸ்ய - கீழ் கூறப்பட்டுள்ள அதிகாரம் அநுஷ்டானம் இவைகளால் சூந்யனையும், அநந்யகதிம் - வேறு புகலற்றவனையுமிருக்கும் மாம் - என்னை, ந ரக்ஷேஶ்சேத் - ரக்ஷியாவிட்டால் [உனக்கிப் பெருமை ஏது என்பது அந்வயம்].

100. ‘இது மாத்திரமன்று. கீழ் கூறப்பட்டுள்ள அதிகாரிகள் எவ்விதத்தில் என்னைக் காட்டிலும் உயர்ந்தவர்கள்? தம்முடைய ப்ரயத்ந விசேஷங்களால் அவர்கள் அந்த யோக்யதையைப் பெற்றார்களோ? நீ கொடுத்தே அந்த யோக்யதை அவர்களுக்குக் கிடைத்ததன்றோ? அப்படி இருக்கையில், அவர்களுக்கும் என்னைப் போன்றவர்களுக்கும் வாசி என்ன? அவர்கள் மாத்ரம் ரக்ஷணத்திற்கு அர்ஹர்கள், நாங்கள் அநர்ஹர்களென்று சொல்லுவது எப்படி?’ என்று ப்ரச்நம் செய்பவராய், ‘நீயே எனக்கும் அந்த யோக்யதையை அநுக்ரஹித்து என்னையும் ரக்ஷித்தருள வேண்டும்’ என்று ப்ரார்த்திக்கிறார்.

[ப—ரை] யா கர்மணாமதிக்ருதி: - கர்மங்களைச் செய்வதற்கு அதிகாரமென்று யாதொன்று உண்டோ அதுவும், ய உஹ உத்யம: - அந்தக் கரமங்களை அநுஷ்டிப்பதில் ப்ரயத்நம், தேஷ்வோஷ்டநாஷ்டி: - அவைகளை அநுஷ்டிப்பதும், அஶேஷமித்ம் - இதெல்லாம், க்வாமதரேண - உன்னுடைய ஸங்கல்பமிராமல், க்ருத்ம் - பெறுவது, வாஞ்ஸாம் கமந ந ஶக்யம் - மநுஷ்யர்களுக்கு அதிப்ராயாஸத்தாலும் சக்யமன்று. ஏவம் [ஸதி] - இவ்விதம் [வஸ்து ஸ்திதி] இருக்கையில் [அதாவது, ஸகலமும் உன்னுடைய ஸங்கல்பத்திற்கு அதீநமாக இருக்கும் பொழுது] தேஷு மயி ச - அவர்களிடத்திலும் என்னிடத்திலும், தே - உனக்கு [அதாவது, நீ ஸம்மந்தப்பட்ட வரையில்], விஶேஷோ நாஸ்தி - எவ்வித வாசியுமில்லை. [அவர்கள் உன்னுடைய ஸங்கல்பரூபமான ஸஹாயமிராமலே ஸ்வயமாக ஏதாவது செய்திருந்தார்களேயானல், அவர்களிடத்தில் நீ விசேஷித்த அநுக்ரஹத்தைச் செய்வது உபபந்நமாகும். அது இராமல் இருக்கையில், அவர்கள் அவ்வித அநுக்ரஹத்திற்குப் பாத்ரமாகிறார்கள் என்பதும் எவ்விதம் உபபந்நம்?]

[illegible]
[illegible] 100

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 101

[illegible]
[illegible]

---

101. 'அப்படிச் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டுள்ள ஸாதநங்களைச் செய்தவர்களை மாத்ரம் நாம் ரக்ஷிப்போம், மற்றவர்களை ரக்ஷியோம்' என்று ஏதாவது ஒரு நிர்பந்த மிருந்ததேயானால், அவர்களுக்கு அந்த ஸாதநங்களை நீ ஸங்கல்பித்தது போல், என் விஷயத்திலும் அநுக்ரஹித்து என்னையும் ரக்ஷித்தருள வேணுமென்று நிகமநம் செய்கிறார்.

[ப—ரை] [illegible] - ஹே புருஷார்த்தங்களை யெல்லாம் கொடுப்பவனே! [illegible] [illegible] - விதிக்கப்பட்டுள்ள ஸகல ஸாதநங்களை அநுஷ்டித்தவர்களை [மாத்ரம்,] [illegible] - நீ, [illegible] ரக்ஷிக்கிறாய், [illegible] - மற்றவர்களை ரக்ஷிப்பதில்லை, [illegible] - என்று யாதொன்று உண்டோ, [illegible] - அப்படிப்பட்ட நிர்பந்தம் உனக்கு உண்டேயானால், [illegible] - அப்பொழுது, [illegible] - நீயே, [illegible] - என்னிடத்தில், [illegible] - சக்தி அதிகாரம் வாஞ்சை இவைகளை [அதாவது அதிகாரம் ப்ரய்த்நம் அநுஷ்டாநம் இவை யெல்லாவற்றையும்], [illegible] - [இவைகளைச் செய்யவொட்டாமல் தடுக்கும்] ப்ரதிபந்தகங்களுடைய நிவ்ருத்தியையும், [illegible] - இன்னும் வேறு நான் செய்யவேண்டியவற்றையும், [illegible] - செய்தருள வேண்டும்.

ஸ்ரீ வைகுண்ட ஸ்தவ வ்யாக்யாநம்

முற்றிற்று.

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

---



நம்பிக்குச் சுண்ண பரிபாலன நன்கி ழைத்து
வெம்புற்ற வாழ்வான் தனைத்தேற்றிட வேண்டு மென்று
வும்பர்க் குயர்ந்த சிறியாண்டனை யோர்ந்து விட்டார்
செம்பொற் சிகரி யரங்கத்தவர் சென்று சேர்ந்தார். 13

சென்றங்க ளாழ்வான் தனைத்தேறிடச் செய்யும் வேலை
மின்றங்கு வேலைச் செனிகண்ட மிகப்பு ழுத்தே
பொன்றங்கொ ழிந்தா னெனப்போந்தவர் போற்ற லாண்டான்
கன்றுங்க லியிப் படிவிண்டது காண வென்று. 14

அம்மங்கி யம்மா ளுடனுடைமைத் தோளி னரின்
கம்மென் றலரைந் தருநீழலி னண்ட ராடும்
பொம்மன் முடியோங் கெதுமாவரைப் போந்து பூதூர்
செம்மன் மகிழ வபயன்படை செப்பி னரால். 15

ஒண்டார் தமக்கு முறுகண்சகி யாத வன்னூர்
கண்டாங் கவன்சா வுளம்பொங்கினர் காசி னிக்க
ளுண்டா மெவர்க்கு மினியோம்படை யென்று கோயி
லண்டா வரங்க னடிகாண விழைந்து மன்னே. 16

பொன்னன் மகன்முன் பொலியச்செயும் சிங்கன் தானு
மின்னுந் திருக்கா ருரநாரணன் மிக்க தானுங்
கொன்னென்று செல்வப் பிளையின்மலர் கொண்டதானு
மன்னும் படிதஞ் சிரநன்கு வணங்கி மற்றும். 17

தீர்த்தப் பிரசா தமுமேன்று மருங்கு சுற்று
மேத்தற் குரிய முதலித்திர ளோடு மேகிப்
பேர்த்துப் புகுது மெனவோதிய பின்ன ரன்பிற்
பார்த்துச் சிலரின் முகபங்கயம் பண்பி னன்றே. 18

திருநா ரணற்கிங் கருந்தொண்டுகள் செய்ம்மி னென்ன
வுருகா விதய மவர்நம்மடி யென்னு மொண்பூ
மருவா திறையு மகலேமென மற்றி றைஞ்சப்
பரிவாற் சிலையிற் றமைப்போலொரு பாவை யாற்றி. 19

தஞ்சத்தி தன்னை யதினூட்டி யவர்க்க ளித்து
முஞ்சிப் படிவத் தொழுகுமென வோதி யாற்றி
மஞ்சுற்ற கூட மலையன்ன தகன்று போகிக்
கஞ்சத் தனங்கள் படுநீர்வயற் கோயில் கண்டார். 20

அண்டர்க் கிடையி லெழுமாயிரங் கண்ண னாகத்
தொண்டர்க் கிடையிற் குருவந்தன ரென்று சொல்லப்
பண்டைப் பரிய பதியுற்றவர் பத்தி யோடுங்
கொண்டுற் றெதிர்ந்தார் நிறைபொற்குடங் கூர்ந்த யாவும். 21

அந்நா ளருங்கா னகம்போயவ யோத்தி மன்னன்
பின்னாள் வரவந் நகர்பொங்கிய பெற்றி யென்ன
வுன்னா வுவகை யொடுமன்னவ ரொன்றி யேத்தப்
பொன்னா ரரங்கம் புகுந்தார்புகழ் பூப்ப மன்னோ. 22

நானா மணியாழ் கருப்பக்கிர கத்து னாளும்
பானா றனந்த னறுமேனியிற் பள்ளி கொள்ளு
நீனா றுமைங்கொண் ட வினம்புய நேர்ந்த பர்தந்
தானா தரமா மென வீழ்ந்து பணிந்து மற்றும். 23

கோடாத கோலா ரொருபஞ்சவர்க் கொத்த தூதாய்க்
கோடாத வன் விண்குளிர்வெண்மதி யம்ப கந்தூ
வீடாத வாமா விரையார் மல ராரு மந்த
வீடாத வாவும் விரகுள்ளதற் கெங்கு மென்றும். 24

முற்றத் துறந்த முனிவர்க்கருண் மூர்த்தி நிற்பொன்
முற்றத் துறந்த முழுமாமணி யேனு மாவேன்
கற்றத் துறந்த ரரும் வீடருங் காத னன்க
கற்றத் துறந்தண் மலர்ச்சேவடி கண்ட வெற்கே. 25

கண்ணா றலங்க றுளபத்தொடைக் கார ரங்க
கண்ணா றலங்கு முனக் காங்கொலென் றைய காணெங்
கண்ணா றலங்கண் டுயில் வாயருட் காத லேழ்க்
கண்ணா றலங்கண் டிரும்புள்ளிறைக் கந்த ரத்தே. 26

வேதங்க ளாதி விரிநூல்பல கற்றும் மற்ற
வேதங்க ளாட றலையாயவை விண்டு நன்குய்
வேதங்க ளாவி னிறத்தைய நின்வெம் பதப்பூ
வேதங்க ளாவி யுயுமாறென வேண்டி டார்க்கே. 27

என்றின் னவாய வெணுதற்கருந் தன்மை யெல்லா
நன்றுன்னி யேத்தி யவனின்னரு ணண்ணி மற்றுங்
குன்றன்ன செய்ய குணங்கூர முதித்த வையன்
பொன்றங்கு மாளி கையினூடுற நொந்து புக்கார். 28



## வேறு

புக்கங் கன்னவர் பொன்னி னன்முகத்
துக்கங் கண்டிரு தோன்று கண்களு
முக்கங் கேயுக வொண்ணு மிப்புவி
யக்கங் குல்லென வென்று மாயதோ. 29

ஐயா வெற்குள மாழ்கி யங்கெழுந்
தெய்தா வின்னலு மெய்தி யெய்த்தனிர்
பொய்யா ரிக்கலி யென்றும் பொய்த்தலின்
மெய்யா ரேபட ரெய்தன் மெய்ம்மையே. 30

மண்ணெங் கும் முய மற்றெழுந்து நீர்
விண்ணெங் கும்புகழ் வெய்த:வென்றகக்
கண்ணெங் குந்தவிர் காண லாரையூன்
கண்ணெங் குஞ்சொல விண்டு கன்றினீர். 31

மின்னே ரிவ்வுடல் கொண்டு மெய்ந்நிறாஉம்
பொன்னேர் புந்தியர் நும்பி னோங்குவர்
மின்னே யுள்ள முவந்து மன்னுவீர்
முன்னே யென்று மொழிந்து தேற்றினார். 32

தேறா வன்னவ ரைய செய்வினை
வீறார் மூவர்க ளேனும் விள்வரோ
பேறா மென்றது பேணி யுண்பதே
யாறா மென்ப தறிந்து ளீர்களா. 33

எம்பே றாகிய நீவி ரேயினி
தம்பே ரம்புவி மேல லங்கிடி
னம்பேர் கண்டிரு வாளன் றொண்டரோ
பின்பே யெய்தி யிருத்து மென்றரோ. 34

ஆனந் தக்கணீர் வார வாரியர்
வானம் வாழ வணங்கு தாடொழ
மானந் தன்னொடு மற்று கந்தகன்
றானம் போமட முற்று றைந்தனர். 35

### வேறு

அங்கன.மரங்கந் தன்னி லத்திய பனமென் சாற்றிற்
கெங்களின் மாறனுரை யெழிற்றிரு நகரி நின்றும்
பொங்குடன் கொடுபோ தற்குப் பொருந்திடாப் புயல்கண் மின்னி
னெங்கணும் கலந்து பெய்ய வெம்பெரு மானு ரெண்ணி. 36

விபவமே போன்ற தாமோர் விக்கிர கமதை யாற்றுத்
தபுதலின் மறைநூ லிற்பி ரதிட்டையுந் தகவி னாற்றி
யுபயவே தாந்த நாத முனிகளி னுரையின் வண்ணஞ்
சுபமுற வெவரு மந்த விழவினைத் துலங்கச் செய்தார். 37

பின் பெருங் கூரத் தாழ்வா னடிகளிற் பெருகும் செய்ய
வன்புறுந் திருவ ரங்கத் தமுதனு ராழ்வார் மீதே
முன்புசெய் மதுர வாக்கார் முனிவரும் பனுவ லார்ந்த
வின்புசெய் பொருளுஞ் செய்யு ளொன்றதை யீரைந் தாக்கி. 38

ஈங்கதன் பொருளை யெல்லா முடையவர் விடய மெய்தப்
பாங்கினோர் நூற்றந் தாதி யென்றரும் பனுவ லாக்கி
யாங்கதை யவரந் தாளி லிட்டிறைஞ் சிடலு மன்னா
தாங்கடைக் கணிப்பு மின்றி வெறுப்பொடு தவிர்ப்ப மற்றும் 39

முதலிக ளவரின் பாத முளரியை முடியிற் சேர்த்தி
யிதமுற விறைஞ்சி யையன் மீரிதை யிகக்க லாமோ
முதமுற முன்பு நாத முனிகளுக் கிணையின் மாறன்
மதுமலி பிரபந் தத்தை மனமுறப் புகட்டுங் காலை. 40

இலக்குவ முனிக ளென்பா ரின்னினி யுதிப்ப ரன்னார்
புலக்குறும் படிவ மின்ன தன்மையாய்ப் பொலியு மென்னு
நலக்குறும் பொருளை யன்று நவின்றிடும் பொலிக வென்னும்
விலக்கரு மெவர்க்கும் பாவி னிலங்கிட விளக்கங் காட்டி. 41

அவர்திறத் துதிக்குஞ் செய்ய பனுவலுஞ் சிவணி யாரு
மிவர்தமிழ் மறையு நாலா யிரமெனக் குலவு மென்று
மவிர்தர வருளிச் செய்தா ரென்பது மடிகள் கேட்டு
மெவர்களு மிசைப்ப ரீதோர் மரமென விரந்தாரன்றே. 42

இன்னண நிகழும் வேலை யருச்சக முகமா யேழு
மன்னிய மதிள ரங்கன் மாறன்முன் னளித்த வண்ணந்
துன்னுக விதுவுமந்தத் தமிழ்மறை துலங்க வென்னப்
பன்னக பதியின் பங்கார் பரிவுட னகத்துட் கொள்ளா. 43



மற்றதை யியற்பா வீறு மணந்திட வியைத்து நான்கா
யுற்றவின் பிரபந் தங்க ளுபர்தரு கவிக ளாலுங்
கற்றவர் புகழ நாலா யிரமென க்கவின மாடி
யெற்றிக ழியற்பா வோதல முதனுர்க் கருளி யென்றும். 44

திருவிழ வதனை நன்கு நிறைவுறத் திகழ வாற்றி
யிருமையேய் பல்லாண் டென்று மங்களா சாச னஞ்செய்
தருளலுங் கண்டு பிள்ளா னுங்கெழுந் தருளி மற்றுஞ்
சருவதே சதசா காலே யெனுமதைச் சாற்றிப் பின்னும். 45

கண்டிரா மாநு சார்ய திவ்வியாஞ் ஞாவென் னுள்ளங்
கொண்டரு முதலி யாண்டான் கூறவெம் பெருமா னரும்
பண்டுசீ மன்சீ ரங்க ச்ரியமநு பத்ர வாமென்
றண்டர்நா யகனைப் போற்ற வங்குளா ரிறைஞ்சி நின்றே. 46

கற்புறும் பிரபந் தங்கண் முடிவிலிக் கவின்செய் மூன்றும்
பொற்புண்மங் களங்கள் போற்றப் புரிகரு ளெனவும் வாழ்த்த
வற்புட னவரு மாங்கே யருளிமற் றாழ்வா ரெல்லாஞ்
சொற்பெரு காங்கந் தன்னிற் சொலிப்புற நிறுவி னரால். 47

### வேறு

இவ்வண்ண மியற்றுபுநன் கிசைத்தங் குள்ளார்க்
கெழிறிருவத் தியயனமாச் சிறப்புஞ் செய்யச்
செவ்வண்ணத் திருமலர்மாக் களிறு மாய்க்குஞ்
செந்நெலினுள் வளருசெழும் பணைசூழ் போய
வெவ்வெண்ணத் தவர்களுநன் கெடுத்துப் போற்று
மெழிற்குருகைக் கெ தருளிப் பொலிந்து நின்ற
மைவண்ணத தண்ணலையும் வகுள மாலை
மாறனையு மறைமலர்த்தாள் வணங்கி மன்னோ. 48

முக்கனியின் சுவையிரியுந் தமிழ்வே தத்தை
முதலிகளி னிருந்தாரா யமையத் தன்னா
தொக்கமலர் முகநோக்கித் தூயோர் கேளீர்
தொலையிகந்த வாழ்வார்கட் டொகுதி தன்னுண்
மிக்கபராங் குசர்விடய மிளிறு மாதா
பிதாவென்னுஞ் சுலோகமதை மிழற்றி முன்னந்
தக்கபிர பந்தமதன் பிறகே யோதிற்
றகையறுமாழ் வாரையெலாம் வழுத்தற் கிடாம். 49

எனவருளப் பிள்ளானங் கெழுந்து கூம்பு
மிருகரத்தோ டாழ்வார்க ளொருகோ வைக்குண்
மினவுறுபூ தஞ்சரச்ச வெனுஞ்சுலோ கத்தின்
மிடைதரியோ நித்தியவென் பதையுஞ் சாற்ற
வினியருள வேண்டுமென வவரு மாகி
யிலக்குமிநா தமாதா பூத மென்னுந்
தனியனெலா முறையின்முனஞ் சாற்று கென்று
தாமருளி மீண்டரங்க மணந்தார் மற்றும். 50

ஈங்கொழுக மலைநம்பி திருநாடேன்று
றென்றுபிள்ளை மலைநம்பி யிசைப்பக்கேளா
வாங்கவர்க்குச் சுணப்பரிபா லனமுன் னாற்றி
யனந்தனுரு வாயொளிர்வேங் கடத்தே யெய்திப்
பாங்குபெறக் கலியுகத்திற் பரவுந் தூயோர்
பருப்பதத்தி னிடையிலகும் பரந்தா மன்றன்
றேங்கொலிநீர்த் திருவுருவைத் தெரிசித் தாயன்
றிருவுருவை மிடைந்தனரங் குறையுங் காலை. 51

திகழுதிருச் சித்திரகூ டத்தை யொன்னா
ரிதரசம யத்தவர்கள் சிதைத்தா ரென்னா
நிகழுமதைச் செவியுற்றங் கிலகுத் தில்லைந்
கோவிந்த ராசனெனு நெடிய மாலைப்
புகழுதிரு மலைபடிமுன் பொலியச் செய்து
புரையறுமாழ் வார்களெலாம் புகலற் கெட்டா
மகிழுதிரு வேங்கடமா மலையே கண்டு
மற்றிறைஞ்ச வமையுமென விழைந்த வாற்றால். 52

அண்டமெலா முயிர்த்தளிக்கு மன்னை யாகு
மழகுகுடி யிருந்துமகி ழாண்டா ளோடும்
பண்டைமறைப் பயன்விளக்கு மாழ்வா ரேனை
யாரியர்க ளனைவரையும் பொலிவித் தாங்கே
மண்டலமு முய்வணமத் தியயனச் சாறு
மாடுகென நியமித்தே மலைவா ழப்பன்
புண்டரிக நிகரடியைத் தொழுது மீளாப்
புண்ணியத்தி னுறையுளெனுங் கச்சி புக்கார். 53



## வேறு

வான நாட்டரும் விழைதரும் வளம்படு மதனுட்
போன மாதவர் புரைதபுங் கூரவா ரியனைத்
தேன வாங்குல்லைத் தெரியலான் வரதனை விழிவேட்
டான வன்னவன் றவம்வனை கெனவருள் செய்தார். 54

வரத ராசனின் றவமென வழங்கிடு மதனுள்
விரத சீலருண் ணயனமே யருள்கென வேண்டப்
பரர டுந்துயர் பார்க்கொணாப் பண்பெதிக் கிறைவர்
பாத வித்துள மலமர வருந்தினர் பரிவால். 55

இன்பு றக்கணை யியையுற வரிக்கென வென்றே
வன்பு றக்கணை விடுத்தகக் கண்ணையே வரித்தீர்
நன்பு றப்புவி நசைகிலீ ரிழந்தனி ரென்னாத்
துன்பு றத்திக ழறிஞருந் துணைக்கரங் குவித்தே. 56

நேர லார்களும் புகழ்திட நிலவுறு மடிகே
ளார லாமெனி லகவிழி புறக்கணு மாகும்
பாரெ லாம்பர வுமக்கிது பழுதறத் தெரிந்து
நீர லாதவென் னிலைகொள நிகழ்த்தினீ ரென்றே. 57

ஆனை மாமலைத் தலையொளி ரயன் மகத் தழகன்
மேனி யார்ந்ததின் மிக மிளிர் முழுமணிப் பணிக
ளான யாவையு மிதுவிது வெனக்கரஞ் சுட்டி
யேனை யாவரும் வியப்புற வெடுத்துரைத் தனரால். 58

கண்ட வெம்முடை யவர்பெருங் களிப்பெனுங் கடலுட்
கொண்டு ளைந்துநங் கூரநா யகர்தமைத் தழுவிக்
கொண்டல் வண்ணனின் கூர்தரு மருட்கிட நீரே
மண்ட லந்தனி லெனமனங் குளிர்ந்தனர் மற்றும். 59

அத்தி ரித்திரண் மேய்த்தெனு மழகுறுங் கச்சி
முத்தி யீன்பதி வதிகெனு முதுமொழிக் கிடனா
மத்த லத்தினும் பிருண்டினு மாழ்வராரியராம்
பத்தர் தங்களைப் பழமறை விதிப்படி நிறுவி. 60

மன்னு மத்திய யனவிழா விழைத்திடப் பணித்துக்
கன்ன லின்கணிற் கழன்றிடு மணிவளை யுயிர்க்கு
மின்னு நித்திலக் குவை யொடு நிலவுமிழ் வயல் சூழ்
செந்நெ லின்னிடைத் திருமது ராந்தகஞ் செறிந்தார். 61

செறிந் திருங்கடற் சிவணுறு நீர்நிலை யாடி
யறும்ப வந்திரு மட்குறி யாறிரண் டணியா
வெறிந்த வின்மணி யிழைத்தபொற் சினகரம் புக்கு
நறுந்தி ருத்துள பத்தொடை நாயகற் பணியா. 62

வேரி மாமலர்ப் பூங்குழல் விரைமலர்த் திருவின்
பாரை யாண்முடிப் பரதனைப் புனைந்தருங் கானஞ்
சீரி னாண்டனை யவணிவண் சிறப்புறப் புரத்தற்
கேரி னாளமற் றிகந்தனை நிசிசரன் பதியில். 63

குரக்கு நாயக ரிருவரி லொருவனிக் குதலம்
புரக்க மற்றவன் பொன்னால களித்திடப் புரிந்தாய்
தரைக்க ருங்கட லணைசெலத் திண்மையி னிழையா
வரக்க ரூரினை யெரித்திறைத் தசசிர மரிந்தாய். 64

பின்ன யோத்தியிற் சனகியை மருங்குறப் பிறங்க
மன்னி மாமணிமகுடமும் புனைந்து வாழ் வண்ண
மின்ன வெந்திருப் பதியினு மிலங்குதி யென்னாப்
பன்னி யன்னையின் பதமலர் தொழுது முற் பரவி. 65

ஏரி காத்தவ னருளொடும் பிரசாத மெய்திச்
சேரி காத்தபுன் பறையருக் கருளிய செய்யோர்
வேரி காத்தபூம் பொழில்செறி யரங்க மீண்டேகி
மாரி காத்தபாம் பணைப்பரன் மலர்ப்பதம் பணிந்தார். 66

வேறு

பின்பவ ணிருந்துமு தலித்திரள் பெருக்கத்
தன்பினரு பாடியமும் மந்தமிழ்மா மறையு
மின்புறவி சைத்திடனு நாறுநறும் பொழிலென்
பொன்புரையும் பாடல்களும் புகன்றொழிய வாங்கே. 67

கோதையது வேண்டுகைகு ணம்பெறமு டிப்பா
னாதரவி னங்ஙனமெ ழுந்தருளி யேகி
சீதகிர ணன்னகடு ரிஞ்சுசிக ரஞ்சே
ரேதமறு மாலிருஞ்சோ லைப்பதியை யெய்தி. 68

நாறுவெணை நாடரு மக்காரவடி சில்லு
நூறுதடா வீதமுற நோன்மையி னருத்தி
வீறுமழ கன்றனைவி ழுந்தடிப ணிந்தே
கூறரும வன்கிருபை கொண்டுநனி மீளா. 69



விண்ணவர்வி ழைந்ததிரு விண்டுசித்த ரூரா
நண்ணுவட நாடுபெருங் கோயிலுடை யானை
பெண்ணரசி யாயபெரி யாழ்வாரன்று பெற்ற
வொண்மணியை யும்பதமு வந்துதொழு தோறும். 70

செய்யவள ளித்தபிர சாதமது சேரா
வையகம ளித்தபுகழ் வருநகரி யேகித்
துய்யவகு ளாபரணன் தோமறுப தங்கண்
டையெனவெ ழுந்துபின டந்தனர ரங்கம். 71

வேறு

தந்தரிச னார்த்தமவ ணகலமுறச்
சிலகாலந் தகவிற் போற்றிப்
பிந்தியவ ரிணையடியைப் பெட்பினடை
முதலிகளின் பெரிய சங்க
மிந்தவள வெனவுணர்தற் கியலாமே
யிருந்ததினோ ரிதமே யெண்ணி
யந்தமுறும் வரையறையொன் றாற்றுகிற்பான்
றொடங்கினரென் றழியாவண்ணம். 72

நான்கிறுதி நண்ணுமெழு பானளவாந்
திருவாழி திருச்சங் கங்கள்
பான்மையுற வணைந்துதிருப் பாடியமோ
ரீரிருகோ சங்கள் பண்ணித்
தேன்சொரியத் தமதருளின் றிருக்குருகைப்
பிரான்பிள்ளான் றேறச் செய்த
வான்கமழுந் திருவாறா யிரப்படியா
மிவையடைய வகித்துப் போகி. 73

தந்திருவா ராதனமாய்த் தயங்குதிரு
வருளாளன் திருமுன் வைத்துக்
கந்தமலர்ப் பதம்பணிந்தீர் முப்பானே
ழாந்தமது முதலி கட்குப்
பந்தமறும் திகிரிவளை தமையுமவர்
தமிலொருநால் வர்களின் பாணிச்
சந்தமுறும் பாடியகோ சங்களையு
மவரிலொரு சதுரர்க் காங்கே. 74

திருவாரு யிரப்படியுந் தந்தருளி
யவ்வெழுபான்றேசி கர்க்கு
விரிவாருங் கடலுலகில் வேண்டுபவர்க்
கிலச்சினையே முதல நல்க
வருளாவச் சிங்காச னாதிபதி
யார்களினால் வர்க்கே கர்க்கு
நிரலேபா டியவுபய வேதாந்தா
திக்கியமு நேர்ந்தா ரன்றே. 75

இவ்விருதை யேன்றவர்க ளன்றியுமோ
ரெழுநூறு சீயர் மற்று
மெவ்வமறு மீராரு யிரம்பரமை
காந்திகளே யிருந்தொண் டாற்றும்
பௌவமெனும் கைங்கரிய பரர்பரம
பாகவதர் பதமே நாடிக்
கவ்வையறுந் தாசநம்பிக் கணங்கணக்கி
லம்மையர்கள் கருதுந் தூயோர். 76

இத்தகையோ ரவரவர்கட் கியன்றபணி
யிழைத்தொழுகக் கூர நாத
ரெத்திசையும் புகழெம்பா ராதியர்கண்
ஞானமக னெனவே யேய்ந்த
பத்திமிகும் பிள்ளானைப் பண்பினுயர்ந்
தாரென்றே மதித்துப் போதச்
சித்தமுவந் தெம்பெருமா னாரியின்
சிறப்புமிகச் சிறந்து நின்றார். 77

திருக்குருகைப் பிரான்பிள்ளான் கூரத்தாழ்
வானடாதூ ராழ்வான் நேர்ந்த
வுருக்கிளரு மெங்கடெற்கோ டினைகோம
டம்சேட்ட லூர்வே தாந்தி
திருக்கிளர னந்தநடு வின்மிளகு
நெய்யுண்ட னக்க றோடுந்
திருக்கோவ லூர்திருமோ கூர்கோயி
லருணபுரத் தாழ்வான் கண்மேல். 78



படியெங்கும் புகழ்கணிய னார்சிறியாழ்
வான்திருமா மலைநல் லானுந்
திடன்செறிகிடாம்பிவங்கி புரவீச்சம்
பாடிகொங்கி லாச்சான் மார்க
ணடுநிலையார் திருக்கண்ண புரத்தாச்சா
னண்ணுபுக ழெம்பா ரோடு
முடைசிறிய கோவிந்தக் கிடாம்பியம்மங்
கிப்பெருமாட் களும்மற் றோரும். 78

ஆசூரிப் பெருமாள்பிள் ளையப்பன்
பிள்ளை திரு மலையினம்பி
மாசோடும் வங்கிபுர சொட்டைமுடும்
பைநம்பி களுமே மற்றுந்
தேசார்ப ராங்குசதி ருக்குறுங்கு
டியினம்பிகளுமே தேர்ந்த
ஆசானு மருந்தொண்ட னார்குணபு
ரமருதூர் நம்பி யார்கள். 79

பின்னுமழை யூர்வடுக குரவிநம்பி
களும்புண்ட ரீககாத் தனும்
முன்முதலி கந்தாடை மாருதியி
யுண்ணிமது ரையாண் டான்கள்
பன்னுதிருச் சோமாசி சீயர்பெரி
சிறியீசான் டான்கள் பாடே
மன்னுமம்மங் கியாளவந்தா ராண்டான்கள்
சுந்தரத்தோ ளுடையார் மன்னோ. 80

உக்கல்பருத் திக்கொல்லை சொட்டைமுடும்
பையம்மாள் களுமே யோங்குந்
தக்கவைத்த மாநிதியார் பராசரசீ
ராமபிள்ளைப் பட்ட ரோடு
மிக்கசிறு பள்ளிதேவ ராசபட்டர்
பிள்ளையுறைந் தையுடையா
ரெக்கலையும் வல்லபிள்ளைத் திருவாய்மொ
ழியரைய ரென்ப மாதோ. 81

பிள்ளைதிரு நறையூர்பிள் ளைராச
மகேந்திரப்பெ ருமா ளரையர்
வள்ளலதி காரிதிரு நகரிகுமாண்
டூர்ப்பிள்ளை களுமே வையங்
கொள்ளனந்தக் காஞ்சிசோம யாசியர்கள்
கூடியிந்தக் குறையா ஞான
முள்ளமெழு பானல்வ ருயர்சிங்கா
சனதிபர்க ளுலகஞ் செய்வார். 82

வேறு

திருக்குருகைப் பிரான்பிள்ளான் திருநடா தூ ராழ்வானே
யுருக்கிளர்மு தலியாண்டா னெங்கிடாம்பி யாச்சானிப்
பெருக்கமுறு நால்வருமப் பெரியோரிற் பாடியத்திற்
குரைக்கலுறுஞ் சிங்காச னதிபரா யொளிர்பவரே. 83

இன்னோரிற் பிள்ளானே யிரண்டுசிங்கா சனத்திறைவர்
பொன்னுரு மருளாளப் பெருமாளெம் பெருமானர்
தென்னரும்சீரங்க நாராய ணச்சீயர்
முன்னரீச் சம்பாடிச் சீயர்முதன் முனியிறைவர். 84

ஆடினெழு நூற்றுவரா மலங்கார வேங்கடவர்
கூடுநம்பி குறுங்தேவர் முன்பரமை காந்திகளுங்
கேடிலொரா யிரத்திருநூற் றுவரென்றே கிளந்திடுவ
ரேடுதிருத் தூயமுனி வேழனெழு வாயார. 85

நற்கைங்க ரியபரர் நாமறைதற் காமளவோ
பொற்காவல் புரிந்தொழுகும் புனிதர்களெம் பெருமானர்க்
கற்கசத் திருவரங்க மாயோ னவர் முதலோ
ரொற்காநத் தத்துமுத லிகண்முதலோ ருரைக்கினின்னும். 86

அறிவன்ப கன்றவரே யவாவறச்சூழ் வாரவரே
பொறியின்வ ழிமனத்தைப் போகவிடாப் புனிதநலஞ்
செறியும்பிள்ளையுறங்காச் சீர்வல்லி தாசர்முத
லறையுஞ்சீ ரம்மைகளே யாயவிவ ரளப்பரியார். 87

இத்தகைய வெல்லோரு மெம்பெருமா னர் கழலிற்
பத்திமிகத் தொண்டிழையாப் பரம்பாக வதரென்ன
வெத்திசையு மேத்தெடுப்ப வீங்கொழுகப் பூதூரா
ரத்திகிரி யான்பகடே யாங்கிலகச் செய்தொளிர்ந்தார். 88



வேறு

பின்பெருகு கூரபதி பெரியபெரு மாளையடி
பெட்புட னிறைஞ்சி யடியே
னின்பெருப ரம்பதநி ரந்தரமி ருந்தொழுக
நின்மல வருள்பு ரிகென
வன்புடன வன்னுளமு வந்துதிரு மாலையடி
யாமவைய னைத்து முதவத்
துன்பறம ணந்தரிய தூயபிர சாதமவர்
மீண்டெதி மனைத்தொழு தரோ. 89

அந்தவிவ ரம்சொலிநு மம்புயம லர்ப்பத
மலம்புன லீந்த ருள்கென
நொந்திவரு மெற்குமுன நீரெழ்வ தோவெனவு
நோன்மைசெறி யவ்வ றினும்
முந்தவண டைந்தடியன் பிந்தியெழு காலடிகண்
முன்னெதிர்கொ ளும்ப ரிசினு
மெந்தநல முள்ளதென வாயிடைபி ருந்தவர்க
ளெய்தினரிரும்பு துமையே 90

சிட்டியர்த மக்குரிய செய்யகுண மேவையுஞ்
செறிந்துளவ ரிப்பெ ரியரே
மட்டவிழ்த ளத்துளவ மாலையன ருட்கிடனிம்
மாசகலு மாண்பின ரேயென்
றிட்டமுட னேபுகழ வேதமுறு பூதபுரி
யெம்பெருமா னரு மகிழா
விட்டவல மின்றிருவ டிப்புனல ளித்தனரும்
வேண்டுதுவ யத்தி னுடனே.

பெற்றதவ ருஞ்சனனென் மூட்டுணிவி னேயதிப
திக்கமலம் பேணு மடிகள்
சொற்றபடி யேபெரிய வீடுசெல வன்னவருஞ்
சொன்னவண நாதமுனி முன்
கொற்றமுறு சுண்ணபரி பாலனம தாதியொரு
பன்னிரு தினத்து மயரு
முற்றமறை யின்கிரியை யாவையுமு னுற்றியுயர்
பட்டரி னெழிற்கர மதின். 91

பிற்கவுத மாதியா யர்ந்தபடி பேணியயர்
சங்கிதா பாராயண மதிற்
கற்கவரு பொற்றதிரு வாய்மொழியு முக்கிய
மெனக்கொடு கலந்து பாவி
நற்கதிய ளித்திடு நூறந்தாதியி ஞனேயியல்
சேவையிழை தந்து நவிலற்
கொற்கமறு சீர்வகுள மாலேயினக் கோதசம்
பாவனே யுளுற்றுக வெனு. 92

வேறு

வழங்கிட முதலி வெள்ளம் வகையினத் தகவிற் செய்யாத்
தழங்கு தன் முரச மார்ப்ப த்தனிமையத் தியனச் சாற்றை
முழங்குநீர் வைய முய்ய முளைத்தவப் முனியீ சர்க்கும்
பழங்கணங் ககலச் சம்பா வனையது பரிந்து செய்தார். 93

செய்ததை யவரு முள்ளக் களிப்பொடு சிறப்பிற் கொள்ளா
மைதவழ் மணிவண் ணன்றன் மலர்ப்பத மடைவோர்க் கிங்கே
யுய்திட வுலகி னென்று முளுற்றுக வினியென் றேதி
மெய்திகழ்ந் துயர வெங்கு மேதினி புகழ நின்றார். 94

ஈங்கிவ ரிருள்சூழ் ஞாலத் தெழற்கரு மன்றா டாழ்ந்து
தேங்குழல் புருடர் தேர்ந்து தத்துவத் திரய நன்கு
பாங்குறு மரிய நூலின் படிநசைந் தமர்ந்து பாவம்
வாங்குமா ரியரி னுணே வருகடைப் பிடித்து வாழ்வான். 95

சாதியாச் சிரம தன்மந் தவிர்கிலா தவற்றிற் குற்ற
நீதிசா லொழுக்க நிட்டை நிறைவுறப் புரிய மாடிக்
கோதிலாத் திவியதம் பதிகளுங் குளிர வைய
மீதெலாம் புதுமை யெய்தத் திருத்தருண் மேன்மை யானே. 96

எம்பெரு மானு ரோங்குந் தரிசன மிதுவென் றன்று
நம்பெரு மாளு முள்ள நனிவிழைந் தருளிச் செய்தா
ரிம்பரி லிதனை நன்கு தலைப்பெய்துய்ந் திடுத றேற்று
ரும்பரு நயக்கு மிந்த வுடலெடுத் துறுவ தென்னே. 97

வேறு

ஆனியஞ் சிலபிற ககல வாரியர்
கோனுமெம் மரங்கனின் குணைக ழற்றெழு
தூனமின் றுயர்தரு முனது மேலக
நானினி நணுகுறற் கருளி னல்குவாய். 98



நின்பெருந் திருப்பணி நிகழ்த்தி யித்தலை
யென்பரங் கழிந்ததிங் கிணையில் வீடினி
யன்பொடு மடைந்தள வகன்ற காலெலா
மின்புறு மிரும்பணி யிழைத்தற் கெண்ணினேன். 99

மரையிதழ் புரைவிழி மாயகா வெனுக்
கரைமன தொடுமிரு கரங்கள் கூம்புநம்
புறையறு விழிவழி யொழுகு பூம்புனல்
விரையுறு மேனிமெய்ப் புளகில் விம்மவே. 100

பாவிடக் கண்டவப் பரமன் கூர்ந்தருள்
விராவிய மணத்தொடை முதல வேய்ந்தன
குராமலர்ப் பொதுவியர் குழலில் வேய்ந்தவன்
றாவவ ணெழுதாற் கிறையுந் தந்தனன். 101

தந்தவப் பொருள்கடந் தலையிற் றங்குற
வந்ததம் மடத்தகம் வனைந்த சீடர்க
ளிந்தவெஞ் செயலுணர்ந் தினைந்த சிந்தையர்
பந்தமற் றவருடன் படர்தற் குற்றனர் 102

நீளவந் தெரிந்தவந் நிமல னீவிரிவ்
வேளையி னெருங்குடல் வீடி னெந்தொடர்
பாளவந் தாரினே ரடியி னுணையே
தாளரிந் தனிரெனத் தழங்கச் செப்பினர். 105

செப்பலுஞ் செவிசுடச் சிதைந்த சிந்தையா
ரெப்படி யடிகடா ளிணையைக் காண்குறு
திப்படி யிருத்துமென் றினையத் தேற்றுவார்
முப்படி யினும்பிசை முதிர்ந்த தேசிகர். 106

வேறு

கேளிரிப் புவியி னுள்ளங் கிளர்தர விசயன் றேரின்
மாளவப் பற்றி ரண்டு மகவிளக் கேற்று மாயன்
றாளடை பிரபன் னர்க்குத் தயங்குமான் மாவின் காப்பக்
காளமா முகினேர் வண்ணன் கடமையாங் கலங்கல் செய்யீர். 107

தேகயாத் திரையுங் கன்மா தீனமா மிவற்றி லன்னோர்க்
காகவோ ருரிமையின்று முண்டென வருளி லன்னு
ரேகமுற் செய்த வான்ம சமர்ப்பண மிறையுந் தங்கா
தாகையி னுடலம் போற்ற வகமருண் டுழல்வ ராயின். 108

நாத்திக ரவரே யிந்த நானிலத் ததனு லந்த
யாத்திரை யிரண்டன் பானு மவர்க்கொரு கரும மின்றே
யேற்றதிங் கிதுவா மென்னி லேன்றமுக் கரணத் தானும்
பேர்த்துள மெழுந்த வண்ண மயர்தலும் பெறுமோ வென்னில். 109

அங்கன்ன் றுபாயத் தன்னு ரவற்றையன் வயிக்கா ரேனும்
பங்கய நயனன் பொற்கைங் கரியத்திற் படுதற் பண்பா
மிங்கிஃ துறையு நாளி லியற்றுதற் கியன்ற வைந்து
பங்கெனச் சிறந்த தம்மா பகருதும் பரிவிற் கோடிர். 110

பாடியம் படித்துப் பல்லோர் செவிகொளப் பரப்ப லின்றே
னுடிமற் றருளிச் செய்த னனிவிழைந் துகவிற் கேளா
நேடிய வெவர்க்குஞ் செப்ப னிலவுமைந் ததற்கு மின்றே
லாடுறு குடக்கூத் தன்ற னுலய மதனுட் சார்ந்தே. 111

அலகிடன் மெழுக னுறு மலருபூந் தொடைய லாற்ற
னிலவுமின் றமிழைத் தந்த குறுமுனி நெடிய வெற்பிற்
குலவுசெஞ் சாந்தந் தேய்த்தல் கொழுமணி விளக்க மேற்றல்
விலையறு மிவைக ளாதி விழுப்பணி புரித லின்றேல். 112

இரண்டையின் பொருளி னென்று மிடைவிடா தநுசந்தித்தற்
றெருண்டிவர் நமது செய்ய திருநெறிப்படர்வரென்னு
முரண்டபுங் கருணை செய்யு முனிவறும் வைண வர்க்கண்
ணரண்டரும் விழைவி னென்று மகல்கிலா தடுத்தி ருத்தல். 113

என்றிவை யரிய நூலி னிருந்தட மெனவங் கோதி
நன்றுறத் தெருட்ட வன்னுர் நனியுணர்ந் தையஞ் செற்றுத்
துன்றுறு கவலை போகித் துணையடி தொழுது நிற்பக்
கன்றிய கலியும் பூதூர்க் கலைஞர்முன் கலந்தா னுங்கே. 114

கலந்தவன் கரங்கள் கூப்பிக் கழலிணை பணிந்தெ ழுந்து
நலந்திக ழிருடி நாய்க நாடிதி னனுகா வண்ண
முலந்தியா னுருவி யோட வொதுக்கினீ ரினிநீ ரிந்த
நிலந்தனி லொருசா ரேனு நிலைத்திடற் கிடங்கொ டீரேல். 115

நுந்திருப் படிவ மெய்தி நுமதுசித் தாந்தந் தோய்ந்தே
சிந்தவம் பகடு தன்னைச் சிதைக்குவல் விரகி னென்னு
மைந்துறப் புகல வன்னுர் மறுமொழி பகரார் நிற்பப்
பிந்தியக் கலியு மொன்றும் வழங்கலன் பெயர்ந்தா னன்றே. 116

இளங்குழந்தை முதல் கிழவர்கள்
சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினுல்

# ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.
சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐய்ங்கார்,

ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப்பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கி, முஸலீகந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழ்ப்பெற்றது. தவறுமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனுல் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானுல் அனுப்பப்படும்.
வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது

**வைர நகையே.**

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் சீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசநங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारितरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥



“ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்.”



உத்தம குணம் பொருந்திய வைரங்களை அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்ருகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் **கம்பெனியாரே.**

SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by
Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

485

# SRI VEDANTA DIPIKA

[ Special Number ]

Vol. 25] MAY 1937 [Part 11

17 JUL 1937

# ஸ்ரீ
# வேதாந்த தீபிகை

## ஸ்ரீ பகவத் ராமாநுஜ
## மஹோத்ஸவ மலர்

ஈசுவர ௵  சித்திரை ௴

பத்ராதிபர் :

**வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்**

CONDUCTED BY
Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,
VANI VILAS 4—5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.



॥ श्रीभगवद्रामानुजः ॥

उपवीतिन मूर्ध्वपुण्ड्रवन्तं त्रिजगत्पुण्यफलं त्रिदण्डहस्तम् ।
शरणागतसार्थवाहमीडे शिखया शेखरिणं पतिं यतीनाम ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

பகவதே பாஷ்யக்ருதே நம:

# இராமானுச முனிவேழம்

[ஸ்ரீ நியமனப்படி அம்மணம்பாக்கம் வ. நரஸிம்ஹாசார்யர்,
அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான்]

ஜயதி யதீஶ்வர ஸூக்தி: ஶரணஶரணாகதோ யதீஶ்வரோ ஜயதி ।
ஜயதி விஶிஷ்டாத்வைதம் த்ராதம் தேநைவ ஶாஸநம் ஹ்ருத்யம் ॥

"ஆரணநூல் வழிச்செவ்வை யழித்திடும் ஐதுகர்க்கோர்
வாரணமாயவர் வாதக் கதலிகள்மாய்த்த பிரான்
ஏரணி கீர்த்தி இராமானுச முனி இன்னுரைசேர்
சீரணிசிந்தையினோம் சிந்தியோமினித் தீவினையே"

உலகத்தில் மனிதனாகப் பிறந்தவன் ஏதாகிலும் ஒரு மதத்தைச் சேர்ந்தே இருக்கவேண்டும். ஒன்றையுமே நான் ஒப்புக்கொள்வதில்லை, எனக்கு எதிலும் நம்பிக்கையும் கிடையாது என்று ஒருவன் சொல்லில் அப்போதும் அவன் ஸர்வ சூன்யவாதியான மாத்யமிகன் மதத்தைச் சார்ந்தவனாகிறான் என்பது திண்ணம். ஆதலால் மதத்தைத் தழுவுவது ஓர் ஸித்தாந்தத்தைத் தழுவுவது என்றதாயிற்று. அப்படி மனிதர்களால் தழுவப்படும் ஸித்தாந்தங்கள் பல உள. அவைகளை சுருங்கப்பிரிக்கில் வைதிக ஸித்தாந்தமென்றும் அவைதிக ஸித்தாந்தமென்றும் இரு வகைப்படும். அதில் அவைதிக ஸித்தாந்தமென்றால் வேதத்தை பிரமாணமாகக் கருதாதவர்களின் மதம். வைதிக ஸித்தாந்தமென்றால் வேதத்தை ஸித்தாந்தமாகக் கருதுமவர்களின் மதம். ஒரு மதத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்றால் ஏதாவது ஓர் பிரமாணத்தை அவலம்பித்தே ஸ்தாபிக்க முயல வேண்டும். இல்லாவிடில் மதம் ஸ்தாபிதமாக மாட்டாது.

அதில் பிராமணங்களை பல மதஸ்தாகள் பலவிதமாக ஒன்று முதல் எட்டு வரையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பிரமாணம் முதலியது ஒன்றும் கிடையாது என்கிற மதஸ்தர்களும் தன்னால் சொல்லப்படும் விஷயத்தை ஸ்தாபிப்பதற்கு ஏதோ ஓர் பிரமாணத்தை அவலம்பித்தாலொழிய வேறுபடி ஸ்தாபிக்க ஒண்ணாது.

இதில் ப்ரத்யக்ஷம் எனப்படும் ஓர் பிரமாணம் ஸகல ப்ரமாணங்களுக்கும் மூலமானதால் பல மதஸ்தர்களாலும் ஒருமிக்க ஒப்புக்கொள்ளப்பட்டது.

சார்வாக மதத்தில் இந்த ஓரே பிரமாணம் 'ப்ரத்யக்ஷமேகம் சார்வாகா:' என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. இன்னும் பௌத்த மதம் முதலிய மதங்களில் இரண்டு மூன்று பிரமாணங்கள்—அதாவது—அநுமானம், சப்தம், என்று இவ்வாறாக ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது.

சப்தம் எனப்படும் பிரமாணத்தைத் தழுவும்போது அவரவர் மதப்ரவர்த்தகர்களால் எழுதப்பட்ட ஆகமங்களை பிரமாணமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வைதிகர்களோ அநாதி ஸித்தமாய், அபௌருஷேயமாய், அநுக்ராத ப்ரம விப்ரலம்பாதி தோஷகந்தமாயுள்ள வேதத்தை அதீந்திரியார்த்த ஸாதன விஷயத்தில் பிரமாணமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

இத்தகைய பெருமை வாய்ந்த வேதத்தை பிரமாணமாகப் பாராட்டு மது, ந்யாய, வைசேஷிக, கர்ம மீமாம்ஸா, ப்ரம்ம மீமாம்ஸா முதலிய மதங்களில் அந்த ப்ரம்ம மீமாம்ஸா மதம் என்பதே வேதாந்த மதமெனப்படுவது. இந்த வேதாந்த மதம் வ்யாஸ மஹரிஷியால் அருளிச் செய்யப்பட்ட ப்ரம்ம ஸூத்ரங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு த்வைதம், அத்வைதம், சுத்தாத்வைதம், விசிஷ்டாத்வைதம் என இப்படிப் பலவாறாக அந்தந்த தீர்த்தகரர்களால் வகுக்கப்பட்டிருக்கிறது.

மேல் சொல்லப்பட்டிருக்கிற இவ்வளவு மதங்களைக் காட்டிலும் ஸ்ரீமத் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே மேல்பட்டது, என நமது ஸ்ரீ பாஷ்யகாரர் தனது ப்ரதிபா விசேஷத்தால் ச்ருதி முதலிய பிரமாணங்களைக் கொண்டு நிலை நாட்டியருளினார் என்று இவ்விஷயங்களைத் திருவுள்ளம் பற்றி நம் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் இப் பாசுரத்தில் அடைவே பதங்களை அணியாகக் கோர்த்து அநுஸந்தித்தருளினார்—'ஆரண நூல்,' இத்யாதியால் :

இப்பாசுரத்திலிருக்கும் 'அழித்திடும்', எனப்படும் பதத்தை மூன்று இடத்தில் சேர்த்து அந்வயித்தால் அப்போது அந்வய பேதத்தால் சிலர் ஆரண நூலை அழித்தவர், மற்றும் சிலர் ஆரண நூல் வழியை அழித்தவர், பின்னும் சிலர் ஆரண நூல் வழிச் செவ்வையை அழித்தவர் என்ற பொருளுடையதாகுமாகையால் முன் உபபாதிக்கப்பட்ட மதங்கள் பூராகவும் கழிக்கப்பட்டு நம் ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் மேன்மை தோற்ற விளக்கப்பட்டது என்று ஏற்படுகிறது.



அதாவது—ஆரண நூல்—வேதசாஸ்திரம், அதை அழித்தவர்கள் வேத பாஹ்யமதஸ்தர்கள் ஆகிறார். ஜைன, பௌத்த, சார்வாகாதிகளான வேத பாஹ்ய மதஸ்தர்கள் அனைவரும் இப்பதத்தினால் நிரஸிக்கப் பட்டனர்.

'தஸ்மாச்சாஸ்த்ரம் ப்ரமாணம் தே' என்றும் அதிலும் 'வேதசாஸ்த்ராத் பரம் நாஸ்தி' என்றும், 'வேதோऽகிலோ தர்மமூலம்' என்றும் 'ச்ருதி ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா' என்றும் புகழப்பட்ட வேதங்கள் அபௌருஷேயமானதால் அநுக்ராத ப்ரம விப்ரலம்பாதி தோஷகந்தமானதாலும் மனு, வ்யாஸப்ரப்ருதிகளான மஹர்ஷி பரிக்ருஹீதமானதாலும் இதர ஸித்தாந்திகளால் தழுவப்பட்ட கபிலாத்யாகமரூப சப்தப்ரமாணங்களை காட்டிலும் அதீந்திரியார்த்த ஸாதன விஷயத்தில் மிகவும் பிரமாணதமத்வேந அவச்யம் ஒப்புக்கொள்ள வேண்டியவைகள்.

இதர ஸித்தாந்திகளால் எடுக்கப்பட்ட சப்தப்ரமாணங்களுக்கு மேற்கூறிய மேன்மைக்கு எதிராக பௌருஷேயத்வமும் அத ஏவ ப்ரமவிப்ரலம்பாதி ஸம்பாவனையும் மஹாதபரிக்ரஹம் முதலிய தோஷங்களும் இருப்பதால் வேத பாஹ்யாகமங்கள் ப்ரமாணத்வேந எடுத்துக்கொள்ள அர்ஹமாக மாட்டா என்று அவைதிக மதங்கள் நிரஸிக்கப்பட்டன.

இது நிற்க வைசேஷிகர், கர்ம மீமாம்ஸகர் முதலிய மதஸ்தர்கள் ஆரண நூல் வழியை அழித்தவர்களாகிறார்கள். வைசேஷிகர்கள் ஈச்வரன் அநுமான ஸித்தனென்றும், ஈச்வரனால் சொல்லப்பட்டதாகையால் வேதம் ப்ரமாணமென்றும் சொல்லுகிறார்கள். ஈச்வரனுக்கு உபாதான காரணத்வம் கிடையாதென்றும் ஈச்வரன் நிமித்தகாரணம் மட்டில் ஆகிறான் என்றும் உபபாதிக்கிறார்கள். வேதாந்த பாகங்கள் அநுமான ஸித்தனான ஈச்வரனை அநுவதிப்பதால் போதகங்களென்றும் நிரூபிக்கிறார்கள். அம்மதத்தில் இம்மாதிரி பல மாறுபாடுகள் காணப்படுகின்றன.

ஸாங்க்யர்களும் கபிலாகமத்திற்கு அநுகுணமாக வேதங்கள் காணப்படுகின்றன என்று உபபாதிப்பதுடன் அவர்கள் ஈச்வரனையே ஒப்புக்கொள்ளாதவர்கள்.

ஆதலால் இஸ் ஸித்தாந்தங்கள் தாறுமாறாக இருப்பதால் ஆரண நூல்வழியை அழித்திடுமவர்களின் ஸித்தாந்தங்களென்று நிரஸிக்கப்பட்டன. இது விஷயங்களைக் கணிசித்து—

"ஸாங்க்யா வைசேஷிகாஸ் ச்ருதி பரிபதிதம் யத்ர சைஷாம் நதத்வம்॥" என்று ஸாராவளியில் ஸ்ரீ தேசிகனால் பரக்கப் பேசப்பட்டது.

இக்கர்ம மீமாம்ஸகர்களும் பரமாத்மனை ஒப்புக்கொள்ளுகிறதில்லை. ஸித்தபர வாக்யங்களில் வித்பத்தி இல்லை என்றும் வேதாந்த பாகங்கள் ஸித்தபர வாக்ய ஜடிலமாகையால் ஸித்த ப்ரம்மபோதமாகமாட்டா என்கிறார்கள். இப்படிக்கு பூர்வ காண்டத்திலும் வ்யதிரிக்தங்களான அர்த்தவாதாதி வாக்யங்களும் ஸ்வார்த்தே ப்ரமாணங்களாகமாட்டாவென்றும் நிரூபிக்கிறார்கள். ஆகையால் இவர்கள் வேதாந்தங்களில் ப்ரம்மத்தை ப்ரதிபாதிக்கிற வழியையும் அர்த்த வாதாதிகளில் அபாதித ஸ்வார்த்த பிரதிபாதன மார்க்கத்தையும் அழித்தவர்க ளாகிறார்கள். இப்படி வேதாந்தங்கள் ப்ரம்மத்தை ஸ்வதந்த்ரமாக பிரதிபாதிப்பதில்லை என்கையாலும் அத ஏவ ப்ரதக்காக பிரம்மவிசாரம் கர்த்தவ்யமல்ல என்று சொல்வதாலும் இவர்கள் கபந்த மீமாம்ஸகர்கள் என்று ப்ராமாணிகர்களால் வ்யவஹரிக்கப் படுகிறார்கள். இங்கு அத்வைதிகளும் ஆரண நூல் வழியை அழித்தவர்களில் ஒருவராகக் கோர்க்கப்பட்டார்கள். அத்வைதிகள் அபேதவாதிகளாகையால் ஜீவப்ரம்மா பேத ப்ரதிபாதக வாக்யங்களே ப்ரமாணங்கள் என்றும் பேத போதகங்களான பூர்வ காண்டஸ்த வாக்யங்கள் அபச்சேதாதிகரணந்யாயத்தால் பாத்யங்கள் என்றும் அப்படியே நிர்குண ச்ருதிகள் உத்தரத்வேன பலிஷ்டங்களாகையால் அவைகளால் பூர்வோக்தந்யாயத்தால் ஸகுண ச்ருதிகள் பாதிதங்கள் ஆகின்றன என்றும் சொல்லுகிறார்கள். ஆதலால் இவ் வத்வைதிகளும் ஸ்வதப்ரமாணங்களான வேதங்களின் சிற்சில பாகத்தை பாதிதங்களாக சொல்லுகிறவர்களாதலால் ‘ஆரண நூல் வழியை அழித்தவர்களாகிறார்கள். இவ்வருமையான வேதாந்த ப்ரதிபாத்ய ஜீவப்ரம்மாபேத ஞானத்தைக் குறித்து பேதாவலம்பியான கர்மத்துக்கு ஒரு ப்ரகாரத்தாலும் உபகாரகத்வம் இல்லையாகையாலும், ப்ரத்யுத விரோத முள்ளதாகையாலும் அக் கர்ம விசாரரூபமான பூர்வ மீமாம்ஸை உத்திரமீமாம்ஸைக்கு பூர்வ வ்ருத்தமன்றென்றும் அதோடு இதற்கு ஐக சாஸ்த்ர்ய மில்லை என்று சொல்வதாலும் இவர்களை ராகு மீமாம்ஸகர்கள் என்று வ்யவஹரிக்கிறார்கள்.

ஆகவே இவ்விருவர்களையும் சேர்த்து நம் ஸ்வாமி தேசிகன்—

“ஜீராம்ஸாயா: கபாலம் கதிவந ஜஹ்ருஹு ராஹு கஷ்டம் ஸிஷேவே)”
என்று ஸாராவளியில் சாதித்தருளினார்.

நம் ஸித்தாந்தத்திலோ—‘மறையுறைக்கும் பொருளெல்லாம் மெய்யென்றோர்வார்’—என்றபடி ஸகல வேதபாகங்களும் ப்ரமாணமென்றும்—

“ஸம்ஹித மேதச்சாரீரகம் ஜைமிநீயேந ஷோடஸ லக்ஷணேந”
என்று சொல்லப்பட்டபடி பூர்வோத்ர மீமாம்ஸைகள் வ்யாக்யேய வேத



சாஸ்த்ரானு குண்யேன ஏக சாஸத்ரம் என்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் நாம் பூர்ண மீமாம்ஸகர்களாகின்றோம்.

த்வைதமதஸ்தர்களோ ஆரண நூல் வழிச் செவ்வையை அழித்தவர்களாகிறார்கள்—இந்த த்வைத மதஸ்தர்களை ஜீவேச்வரபேதம் முதலிய பஞ்ச பேதங்களையும், ஜகத் ஸத்யதை முதலானவைகளையும் ஒப்புக்கொண்டவர்களென்று சததூஷணியில் நம் ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன்

“ தஷ்ஷிக்ஷுஷ்டவி வா உதஸா்யஷ: ”

என்று அனுமோதித்தருளினார்.

ஆகிலும் த்வைதிகளும் பேதச்ருதியை ப்ரதானமாக வைத்துக்கொண்டு அபேத ச்ருதிகளுக்கு கௌணார்த்த வர்ணனம் செய்கிறார்கள். பேதாபேத ச்ருதிகளுக்கு ஐககண்ட்யத்தை நிர்வகிக்கும் ‘யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்’ இத்யாதியான கடக ச்ருத்யர்த்த ஸ்வாரஸ்யத்தை இழந்துவிட்டார்கள். ஆதலால் ‘ஆரண நூல்’ வழியின் செவ்வையை அழித்தவர்கள் என்று அவர்களையும் நிரஸநீய கோடியில் சேர்த்தருளினார்.

அல்லது—(ஆரண நூல்—ப்ரம்ம ஸூத்ரம்) வேத சாஸ்த்ரத்திற்காக ஏற்பட்ட க்ரந்தம் என்றதாயிற்று. அதின்வழிச் செவ்வையான வழியை யதாச்ருதார்த்தத்தை என்றபடி அழித்தவர்கள் இவர்களாகிறார்கள் என்றும் கொள்ளலாம். ஆகவே வேதபாஹ்ய மதஸ்தர்களாலும் பிரதிபாதிக்கப்படும் வாதங்களாகிற வாழைகளை மாய்க்க கம்பீர வேதி என்றகி அத்விதீயமான கஜேந்திரமாக ஸ்ரீ பாஷ்யகாரரை ரூபணம் செய்தருளினார். இதனால் அவர்கள் வாதங்களை தன் ஸூக்திகளால் அனாயாஸேன கண்டித்தருளினார் என்று கருத்து.

இவ்வளவு மதங்களினால் வஞ்சிக்கப்பட்டிருக்கும் உலகத்தை நம் பாஷ்யகாரர் தமது ஸூக்திகளால் காப்பாற்றியருளினார் என்று திருவுள்ளம் பற்றி

“ கணாத பரிபாடிபி: கபில கல்பனா நாடகை:
காமாரிபுகாஹாஸிகை: ஶபர சிவாஸந ஶ்ரமிபி: ।
ததா ஶத கயாஸகை: தத நவாநி ஜல்லேபி
ஸுதாரிதமிதம் ஜகத் ஸுஶாணிதம் யதீந்த்ரோக்திபி: ॥ ”

என்று யதிராஜ ஸப்ததியில் ஒரு ப்ரகாரமாக அநுஸந்தித்தருளினர் மேலும்—

"பண்டருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய் மதமாய் மெய்ம்மை
விண்டிட எங்களி ராமாநுச முனிவேழம்,
கொண்ட நல்வேதக் கொழுந்தண்ட மேந்தி குவலயத்தே
மண்டி வந்தேன்றது வாதியர்காள் உங்கள் வாழ்வற்றதே"

என்று ஸ்ரீ அமுதனர் ஸ்ரீ பாஷ்யகாரரை வேழம் என்று நிரூபித்து வாதியர்கள் வாழ்வற்றதே என்று கம்பீரமாய் சாதித்ததை இங்கு யானையால் அழிக்கக்கூடிய வாழைகளாக வாதிகளின் வாதங்களை நிரூபித்து பூர்ணோபமையாகக் காட்டியருளினர்.

இப்படிக்கு நம் பாஷ்யகாரர் அந்தந்த மதங்களை தமது ஸூக்திகளால் நிரஸித்து ஸ்ரீ விசிஷ்டாத்வைதம் எனப்படும் ஸத்தர்சனத்தை பூர்வோக்த குண விசிஷ்ட வேதங்களின் ருஜு மார்க்கத்தையும் ஸ்வாரஸ்யத்தையும் அவலம்பித்து நிலை நாட்டியருளினர்.

இம்மாதிரியாக "ஹிதம் ஸதாம் ப்ரபூதாயை" இத்யாதிகளால் ப்ரதிபாதிக்கப்பட்டபடி ஆசார்யகத்துக்கு அநுகுணமான குணங்களை உடையது மூலமாய் ஏற்பட்ட கீர்த்தியோடு கூடிய பகவத் பாஷ்யகாரரின் திவ்ய ஸூக்திகளால் அலங்கரிக்கப்பட்ட மனதையுடைய நாம் இனித் தீவினையைச் சிந்தியோம்; இவ்வளவு மதங்களைக் காட்டிலும் மேம்பட்ட ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தை அவலம்பித்த நாம்

"யஸ்ய ப்ரஸ்தா பதிவதி ஸூக்திஃ தஸ்ய கரஸ்தா விலஸதி முக்திஃ"

என்றபடி கரஸ்தமுக்திகர்களாக ஆகிவிட்டோமாதலால் பரமபதத்தில் உபய விபூதி விசிஷ்டனை ஸ்ரீமந் நாராயணனுடைய சரணாரவிந்த சஞ்சரீகாயமாண மானஸர்களாய் கைங்கர்ய ஸாம்ராஜ்யம் பெறுவதற்கு அர்ஹர்களாகி விட்டோமென்று இனி ஸம்ஸாரபதவியில் அழுத்தும் தீவினையை சிந்திக்கவும் மாட்டோம் என்னும் கருத்து. இதை திருவுள்ளம்பற்றி 'அவிது தஃ ஶமநம் ஶமநம் நஃ' என்று ஸ்ரீ தேசிகன் தத்வமுக்தாகலாபத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸித்தாந்தத்தை அழகாக ப்ரதிபாதித்தருளினர்.

---

ஸ்ரீ:

# பகவத் ராமாநுஜாசார்யர்

[ஸ்ரீ. உப. வங்கீபுரம் வாஸுதேவாசார்யர், மாம்பலம்.]

பஞ்சாயுதாவதார மென்றும் கண்ணனுடைய அவதாரமென்றும் ஸ்துதிக்கப்படும்படி ஸ்ரீ பாஷ்யகாரர் ஜகத்திற்கு என்ன உபகாரம் செய்திருக்கிறார் என்பதை விசாரிக்குங் காலத்தில், ச்ருதி வாக்யங்களுக்கு உள்ளபடி அர்த்தஞ்சொல்லி அவைகளை நிலைநிறுத்தினர் என்பதொன்றே மிக ப்ரதாநமான உபகாரமாகத் தென்படுகின்றது. ஸ்வாமி தேசிகனும்,

ஸ்வாது ஶ்ருத்யந்த ஸம்ஶய ஶ்ருதீநாம்
ஜடதீநா பஞ்ஜரஸ்த்யோ யதாஹ்ய ।
விததே ஶுகாநாம் யதீஶ்வரோ க்ரஹதி
விஶ்ரம்ய தாஸ்ய நீதிபஞ்ஜரஸ்தாஃ ॥

[மதுரமான சொற்களைச் சொல்லும் கிளி முதலிய பக்ஷிகளை, அவைகளின் அருமையை அறியாத சிறுவர்கள் பஹுப்ரகாரமாக க்லேசப்படுத்த, அதைப் பார்த்த ஒரு காருணிக ஸமர்த்தன் எவ்விதம் அச்சிறுவர்களிடமிருந்து அந்தப் பக்ஷிகளை ஸம்ரக்ஷிக்கும் பொருட்டு த்ருடதரமான கூடு ஒன்றைக் கட்டி அவைகளை அந்தக் கூட்டினுள் ஸுகமாக வர்த்திக்கும்படி செய்வானே, அவ்விதமே ஸ்ரீ பாஷ்யகாரர் அல்பஜ்ஞர்களால் க்லிஷ்டமாக அர்த்தம் செய்யப்படும் ச்ருதி வாக்யங்களை ஒருவராலும் பேதிக்கக்கூடாத ந்யாயங்களால் ஸரஸமாக விவரித்து அவைகளை உள்ளபடி ப்ரகாசிக்குமாறு நிலை நிறுத்தினர்] என்று அநுக்ரஹித்திருக்கிறார். இதற்கு நிதர்சநங்களாகக் கணக்கற்ற ப்ரகரணங்கள் உள. அவைகளுள் இரண்டொன்றை மாத்திரம் நாம் இவ்விடத்தில் ப்ரதர்சநமாக உதாஹரிக்க ப்ரயத்நப்படுகின்றோம்.

ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை விசாரிக்க ப்ரவர்த்தித்த ச்ருதி,

"ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம"

[ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம்] என்று சொல்லிற்று. இதில் 'ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் ஜ்ஞாநம்' என்னும் அம்சத்தை விவரிக்க ப்ரயத்நப்பட்ட சிலர், 'ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் கேவலம் ஜ்ஞாநமே; அது ஜ்ஞாதாவன்று ஜ்ஞேயமுமன்று [அதாவது கேவலம் அறிவு மாத்ரமே; அதற்கு அறியும் குணமுமில்லை, அது அறியப்படத் தகுந்த பொருளுமன்று]' என்று உரை எழுதி இருக்கிறார்கள். இவ்விதம்

அவர்கள் உரைப்பதற்குக் காரணம், ‘ப்ரஹ்மத்தைத் தவிர்த்து வேறு ஒரு வஸ்துவும் இல்லை, என்று அவர்கள், வேறு சில ச்ருதி வாக்யங்களை ஆதாரமாகக் கொண்டு, நிர்ணயித்திருப்பதே. ஜ்ஞாந மென்று ஸ்வரூபத்தைக் காட்டிலும் பிந்நமான தர்மமொன்று உண்டு என்று ஒத்துக்கொண்டால், அவர்கள் மதத்திற்கு பங்கம் வருமன்றோ? இது மாத்ரமன்று. வேறு ஒரு பொருள் இருந்தாலன்றோ ‘ப்ரஹ்மம் அதை அறிகின்றது’ என்று சொல்லக்கூடும்? அப்படி ஒன்று மில்லை என்பது அவர்கள் கொள்கை யாதலால், அவர்கள் அம்மாதிரி தாத்பர்யம் கல்பித்தார்கள். நிற்க, ‘ஒரு ஜ்ஞாநம் மற்றொரு ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாக இருக்கமாட்டாது’ என்பதும் அவர்களுடைய கொள்கைகளுள் ஒன்று. மற்ற வஸ்துக்களை அறியும் குணமாகிற ஜ்ஞாநமொன்று ப்ரஹ்மத்திற்கு உண்டு என்று ஒத்துக்கொண்டால், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமும் ஜ்ஞாநமானதால், அந்த ஸ்வரூப ஜ்ஞாநத்தை இந்தத் தர்ம ஜ்ஞாநம் ஆச்ரயித்து நிற்கின்றது என்று சொல்ல ப்ரஸங்கிக்கும். அது அநிஷ்டமானதால், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமும் ஜ்ஞாநமென்று ஒத்துக்கொள்ளும் பொழுது அதற்கு ஜ்ஞாநமென்று ஒரு குணமு முண்டு என்பது நிஷேதிக்கப் பட்டதாகின்றது என்பது அவர்களுடைய வாதம். ஆகையால், ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாத்ருத்வம் (அதாவது அறியும் யோக்யதை) இல்லை என்று அவர்கள் நிர்ணயித்திருக்கிறார்கள்.

‘இப்படி அர்த்தம் சொல்வது உபபந்நமாக மாட்டாது; இந்த அர்த்தம் ச்ருதியின் ஹ்ருதயமன்று. ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாத்ருத்வம் உண்டு என்பதே ச்ருதியின் தாத்பர்யம்.’ என்பது பகவத் ராமாநுஜாசார்யருடைய ஸித்தாந்தம். ‘ப்ரஹ்மம் ஒன்றையும் அறியமாட்டாது; அதற்கு ஜ்ஞாத்ருத்வம் இல்லை’ என்று சொல்வது ‘ப்ரஹ்மம் அசேதநம் என்று சொல்வதாகின்றதன்றோ! அது இஷ்டமாகுமோ? ச்ருதிகள், ப்ரஹ்மத்தை ‘அறிகிற வஸ்து’ [‘ப்ராஜ்ஞ:’, ‘விபஶ்சித்’, ‘ஸர்வஜ்ஞ: ஸர்வவித்’] என்று வ்யக்தமாகச் சொல்லுகிற படியால் ப்ரஹ்மத்திற்கு ஜ்ஞாநமென்னும் தர்மமும் உண்டு என்பதே ச்ருதியின் தாத்பர்யம் என்பது நன்கு விளங்குகிறதன்றோ? நிற்க, ப்ரஹமத்தின் ஸ்வரூபத்தை ஜ்ஞாநம் [அறிவு] என்று ஒத்துக்கொண்டால், அந்த ‘அறிவு’ என்பது, அறியும் ஒரு சேதநனையும் அறியப்படும் ஒரு பொருளையும் த்யோதிப்பிக்கவில்லையோ? அறிகிறவனும் அறியப்படும் பொருளும் இன்றி அறிவு மாத்ரம் இருக்கக்கூடுமோ? அப்படி ஒரு அறிவு இருக்கக் கூடுமென்றால், அதை ஆக்ரஹமற்ற பெரியோர்கள் அங்கீகரிப்பார்களோ? ஆகையால், ப்ரஹ்மத்தின் ஸ்வரூபமாகிற ஜ்ஞாநத்திற்கு ஜ்ஞாநம் என்று ஒரு விசேஷணமும் உண்டு என்று அங்கீகரித்தல் வேண்டும்.



ஆனால் ‘ஒரு ஜ்ஞாநம் மற்றொரு ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாக இருக்கக் கூடுமோ? அது அஸங்கதமன்றோ?’ என்பதற்கு ஸமாதாநமென்னவென்று கேட்கலாம். ஒரு ஜ்ஞாநம் மற்றொரு ஜ்ஞாநத்திற்கு ஆச்ரயமாக இருப்பது ச்ருதிக்கு ஸம்மதமே என்பது கீழ் விளக்கப்பட்டிருக்கின்றது. யுக்திக்கும் விருத்தமன்று. ஏனென்றால் ஜ்ஞாநமென்பது ஒரு வஸ்துவின் தர்மமென்பது ப்ரஸித்தம். அது கேவலம் தர்மமாக மாத்ரம் நின்றால், அது ஒரு வஸ்துவையும் குறிக்க மாட்டாதாகையால், அந்தத் தர்மம் மாத்ரம் இருக்கின்றது, என்று சொல்வது ஒரு வஸ்துவும் இல்லையென்று சொல்வதற்குத் துல்யமாகும். அது அநிஷ்டம். ஆகையால் அந்தத் தர்மம் மற்றொன்றை ஆச்ரயித்து நிற்கவேண்டுமென்றே அங்கீகரித்தல் வேண்டும். அந்த ஆச்ரயமும் ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தைத் தவிர்த்து மற்றை எதுவும் இருக்கக் கூடாதாதலால் ப்ரஹ்மம் ஜ்ஞாநஸ்வரூபமாக இருப்பதுடன் ஜ்ஞாந குணக மாகவும் இருக்கின்றது என்பது ஸித்தம்.

‘ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம் ஜ்ஞாநமே’ என்னும் வாக்ய பலத்தைக் கொண்டு, தர்மமாகிற ஜ்ஞாநம் ஒரு வஸ்துவையும் ஆச்ரயிக்காமல் நிற்கின்றது என்று சொல்லக்கூடாதோ’? என்னில், ‘ப்ரஹ்மம் அறியும் வஸ்து’ [ப்ராஜ்ஞ:, ஸர்வஜ்ஞ: இத்யாதி] என்று சொல்லும் ச்ருதி பலத்தைக் கொண்டு, அந்த ஜ்ஞாநம் ஜ்ஞாந ஸ்வரூபமாகிற ப்ரஹ்மத்தை ஆச்ரயித்தே நிற்கின்றது என்று ஏன் சொல்லக்கூடாது? என்று பதில் கேட்கலாம். நிற்க, ஜ்ஞாத்ருத்வத்தைச் சொல்லும் ச்ருதி வாக்யங்கள் பஹுவாக இருக்கிறபடியால், ‘பூயஸாம் ஸ்யாத் ஸதர்மகத்வம்’ [எவை அதிகமாகக் காணப்படுகின்றனவோ அவைகளுக்கே பலாதிக்யம்.] என்னும் ந்யாய ப்ரகாரம், ஜ்ஞாத்ருத்வத்தைச் சொல்லும் ச்ருதி வாக்யங்களுக்கு அநுகுணமாகவே ஜ்ஞாந ஸ்வரூபத்தைச் சொல்லும் வாக்யங்களை நயிப்பிக்க வேண்டுமென்று ஏற்படுகிறது. இவை யெல்லாவற்றையும் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு, ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்தில் பின் வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார்.

“ந சாஜ்ஞாநத்வம் ப்ரஹ்மண: ச்ருதிவாக்யைர் நிஷேத்ஸ்யதே ஜ்ஞாநத்வம் ப்ரஹ்மணோ நிஷித்யதே । நைவம் । ஸ்வரூபேண யதேஶேஷா யதேவேந ஹி ஸ்வரூபேணைவ ப்ரதிபாதயந்தி, ஸர்வஜ்ஞ: ஸர்வவித்”

“ஜ்ஞாநேந யத்ஸ்வரூபேண ஸ்வரூபநிரூபிதம், ந தத்ஜ்ஞாநாத்ருத்வம் ப்ரஹ்ம । கஸ்மாத் வக்ஷ்யத இதி சேத் ‘ய: ஸர்வஜ்ஞ: ஸர்வவித்’ இத்யாதிஶ்ருதிஶதஸமதிகதம் । ஜ்ஞாநஸ்ய ஸ்வாஶ்ரயத்வாஶ்ரயத்வ

ஸ்வரூபஸ்ய வஸ்து ஸ்வரூப ப்ரதிபாதநாநுபபத்தே: । அதஸ் ஸத்யஜ்ஞாநாதி பதாநி ஸ்வார்த்தபூத ஜ்ஞாநாதி விசிஷ்டமேவ ப்ரஹ்ம ப்ரதிபாதயந்தி" [ப்ரஹ்மம் ஜ்ஞாந மாத்ரமே என்று ப்ரதிபாதிக்கப்படுவதால், அது நிர்விசேஷ ஜ்ஞாநமே என்று நிச்சயிக்கப்பட வேண்டாவோ? என்னில், அப்படி நிச்சயிக்க வேண்டுவதில்லை. ஒரு வஸ்துவின் ஸ்வரூபத்தை நிரூபித்துக் காண்பிக்கும் தர்மத்தைச் சொல்லும் சப்தங்களெல்லாம் அந்தத் தர்மத்தை ப்ரதிபாதித்துக் கொண்டே ஸ்வரூபத்தையும் ப்ரதிபாதிக்கின்றன வன்றோ? 'கௌ:' [பசு] முதலிய சப்தங்கள் அவ்விதமே ஸ்வரூபத்தை ப்ரதிபாதிக்கின்றன.]

['ப்ரஹ்மம் ஜ்ஞாநம்' என்று சொல்லுமிடத்தில் ஜ்ஞாநம் என்னும் சப்தம் ஜ்ஞாந மாகிற தர்மத்தை நிரூபித்துக் கொண்டே ஸ்வரூபத்தை நிரூபிக்கின்றதே தவிர, கேவலம் ஜ்ஞாநமாகிற ப்ரஹ்ம ஸ்வரூபத்தை மாத்ரம் நிரூபிக்கின்றது என்பது இல்லை. இது எப்படி அறியப்படுகின்றதென்றால், ஜீவனுக்கு ஜ்ஞாத்ருத்வத்தைச் சொல்லும் 'யஸ் ஸர்வஜ்ஞஸ் ஸர்வவித்' இத்யாதிகளான ச்ருதிகளிலிருந்தே வ்யக்தமாகத் தெரிகின்றது. நிற்க, ஜ்ஞாந மென்பது கேவலம் தர்மம். அப்படி கேவலம் தர்மமாக இருக்கும் அது, ஒரு தர்மியையும் ஆச்ரயிக்காமல் ஒரு வஸ்துவை ப்ரதிபாதிக்கின்றது என்பது அநுபபந்நமன்றோ? ஆகையால் 'ஸத்யம், ஜ்ஞாநம்' இவை முதலிய பதங்கள் தம் தமக்கு அர்த்தமாயுள்ள ஜ்ஞாநம் முதலியவைகளுடன் கூடிய ப்ரஹ்மத்தையே ப்ரதிபாதிக்கின்றன].

இந்த ந்யாயத்தை ப்ரஹ்ம ஸூத்ரக்காரரும் ஜீவனைப் பற்றி பேசுமிடத்தில் விளக்கி யிருக்கிறார்.

(1) "தத்குணஸாரத்வாத் து தத்வ்யபதேச: ப்ராஜ்ஞவத்" [II. 3. 29. இதன் பொருள் :— ஜீவே விஜ்ஞாநகுணஸ்யைவ ஸாரபூதகுணத்வாத் விஜ்ஞாநமிதி ஜீவோ வ்யபதிச்யதே [ஜீவனிடத்தில் விஜ்ஞாந மென்னும் குணமே ஸாரமான குணமாக இருக்கிறபடியால், அந்த ஜீவன் விஜ்ஞாந மென்று பேசப்படுகிறான்]. ப்ராஜ்ஞவத் - ப்ராஜ்ஞன்போல என்பது த்ருஷ்டாந்தம். அதாவது—'ப்ராஜ்ஞமாகிற ப்ரஹ்மம், ஆநந்த குணத்தை ஸாரமான குணமாக உடைத்தா யிருக்கிறபடியால் எப்படி ஆநந்த மென்று வ்யபதேசிக்கப்படுகின்றதோ அப்படியே' என்று சொன்னதாயிற்று.

(2) "யாவதாத்மபாவித்வாச்ச ந தோஷ:" [II. 3. 30. இதன்பொருள் யதா கோத்வாதீநாம் யாவத்த்ரவ்யபாவித்வாத் கோத்வாதிபி: கவாதி வ்யபதேசோ த்ருச்யதே, ஏவமேவ ஜ்ஞாநஸ்யாபி யாவதாத்மபாவித்வாத் தத்பாவகஸ்யைவ ந யதீநோ வ்யபதேசோ ந



தோஷாய" [பசுவினிடத்தில் 'பசுத்தன்மை' என்பது பசு இருக்கும் வரை இருக்கின்றது. அந்தக் காரணத்தைக் கொண்டே பசுவை பசு என்னும் சப்தத்தால் நிர்த்தேசிக்கிறோம். அம் மாதிரியே ஜீவனிடத்தில் ஜ்ஞாநம் என்னும் தர்மம் ஜீவன் இருக்கும்வரை இருக்கிறபடியால் ஜீவனை ஜ்ஞாநம் என்னும் சப்தத்தால் நிர்த்தேசிக்கக் கூடும்.] இந்த இரண்டாவது ஸூத்ரம் எதற்காக வென்றால் :—முதல் ஸூத்ரத்தில், 'தர்மத்தைச் சொல்லும் சப்தங்கள் அந்தத் தர்மத்தை உடைய தர்மி பர்யந்தம் ப்ரஸரிக்கின்றன என்று சொல்லப்பட்டது. இது லக்ஷணையால் ஏற்படக்கூடியதாகையால் இது அவ்வளவு பலத்ததாகுமோ?' என்று சங்கித்து, 'இது லக்ஷணை இல்லை, இதைச் சக்யார்த்தமாகவே உபபாதிக்கக்கூடும்' என்று நிரூபிப்பதற்காக என்பதற்காகவே.

இப்படி 'ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம' என்னும் வாக்யத்தை விவரித்திருப்பது போல வேறு பல வாக்யங்களையும் பகவத் ராமாநுஜாசார்யர் விவரித்திருக்கிறார். பர ப்ரஹ்மத்திற்கு பரிச்சேதிக்கக் கூடாத பெருமையை உடைய ஜ்ஞாநம் ஆநந்தம் முதலிய தர்மங்கள் இருப்பன போல, அதற்கு, ஒரு திவ்ய மங்கள விக்ரஹம் அந்த விக்ரஹத்திற்குத் தகுந்த பூஷணங்கள் ஆயுதங்கள் இன்னும் பலவித பரிஜந பரிச்சதங்கள் இருக்கின்றனவென்றும் அந்த ப்ரஹ்மம் லக்ஷ்மியுடன் ஒரு தேச விசேஷத்தில் முக்தர்களுக்கும் நித்யர்களுக்கும் அநுபாவ்யமாய் ஸ்ரீமந் நாராயணன் என்னும் ப்ரஸித்த சப்த வாச்யமாய் நிற்கின்றதென்றும் விசிஷ்டாத்வைத வேதாந்திகள் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் தேச விசேஷம் இந்த ப்ரக்ருதி மண்டலத்திற்கு வெளிப்பட்டு இருக்கின்றதென்பதும் அவர்களுடைய கொள்கை. இம்மாதிரி கொள்கைகளை அவர்கள் அநேக ச்ருதி வாக்யங்களின் பலத்தைக் கொண்டே அங்கீகரித்திருக்கிறார்கள். அந்த வாக்யங்களுள்

"தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:"

என்பது ஒன்று: இதன் பொருள் 'அந்த ஸ்தாநமானது விஷ்ணுவின் பரமமான ஸ்தாநம்; அவ்விடத்தில் சில சேதநர்கள் நித்யர்களாக இருக்கிறார்கள்; அவர்கள் அந்தப் பரம பதத்தை எப்பொழுதும் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்' என்பது தான். 'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்' [ப்ரளய காலத்தில் இதெல்லாம் ஸத் ஒன்றாகவே இருந்தது] இத்யாதியான வாக்யங்கள், அக் காலத்தில் ப்ரஹ்மமொன்றே இருந்தது என்று சொல்ல, அந்த வாக்யங்களுக்கு விருத்தமாக அப்பொழுதும் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் விலக்ஷணர்களான நித்ய ஸூரிகளும் அந்த ப்ரஹ்மம் வஸிக்கும் ஒரு தேச விசேஷமும் இருந்தன வென்று எப்படி ஒத்துக் கொள்ளக்கூடும் என்று சங்கித்து, மற்றை வேதாந்திகள் இந்த வாக்யத்

திற்கும் இன்னும் இது போன்ற மற்றை வாக்யங்களுக்கும் வேறு அர்த்தங் கல்பித்து வேறு விதமாக அவைகளை நயிப்பிக்கிறார்கள். அப்படி நயிப்பிக்கவேண்டுவதில்லை யென்றும் உள்ளபடி அர்த்தம் செய்வதில் எவ்வித பாதகமும் இல்லை யென்றும் பகவத் ராமாநுஜாசார்யர் ஸித்தாந்தம் செய்திருக்கிறார். ப்ரளயகாலத்தில் பகவானுடைய ஜ்ஞாநபலைச்வர்யங்கள் முதலிய கல்யாண குணங்கள் எப்படி ப்ரஹ்ம ஸ்வரூபத்தில் அந்தர்க்கதங்களாக நிற்கின்றனவோ அப்படியே நித்ய விபூதி யென்று சொல்லப்படும் இந்தத் தேச விசேஷமும் அந்த ஸ்வரூபத்தில் அந்தர்க்கதமாக நிற்கின்றது. ஆகையால் அப்பொழுது 'ஸதேவ' [ப்ரஹ்மமொன்றே] இருந்தது என்று சொல்வதற்கு இது விருத்தமன்று. இதுதான் ஸமாதாநம். ஆனால், ஜ்ஞாநம் பலம் முதலியவை குணங்களாகிறபடியால், அவைகள் அவ்விதம் அந்தர்க்கதங்களாக இருக்கக் கூடும்; நித்ய விபூதி என்பது த்ரவ்யமாகிறபடியால் அதன் வைசிஷ்ட்யம் எவ்விதத்தில் சொல்லப்படக்கூடும்? என்று ஒரு ஆக்ஷேபம் ஜநிக்கலாம். 'விசேஷணங்களெல்லாம் குணங்களாகவே இருத்தல் வேண்டும் என்று ஒரு நியமமும் இல்லை. த்ரவ்யங்களையும் விசேஷணங்களாகக் காண்கிறோமன்றோ?

"ஜாதிர்வா குணோ வா த்ரவ்யம் வா ந தத்ராக்ரஹ: । கேவலம் த்ரவ்ய விசேஷம் ப்ரதி விசேஷணதயைவ யஸ்ய ஸம்பவ:, தஸ்ய தத³ப்ருத²க்ஸித்தே: ஸ்வசப்தாபிதேயதயா தச்சப்த ஸாமாநாதிகரண்யேந ப்ரதிபாதநம் யுக்தம்"

[ஸமாநாதிகரணமாக ப்ரதிபாதிக்கப்படும் பொருட்டு, விசேஷணங்கள், ஜாதி குணம் இவைகளுக்குள் ஒன்றாகவே இருத்தல் வேண்டும் என்னும் நியம மொன்றுமில்லை. ஒரு த்ரவ்யத்தைக் குறித்து ஒரு பதார்த்தம், அந்த த்ரவ்யத்தின் ஜாதியாகவோ குணமாகவோ அல்லது மற்றொரு த்ரவ்யமாகவோ எப்படி இருந்தபோதிலும், அது அந்த த்ரவ்யத்தை விட்டு தனித்து நிற்கக் கூடாததாய் இருக்குமளவு விசேஷணமாக இருக்கும் பக்ஷத்தில் [அதாவது, அப்ருதக்ஸித்த விசேஷணமாக இருக்கும் பக்ஷத்தில்], அவைகளுக்கு அந்த த்ரவ்யத்துடன் ஸாமாநாதி கரண்யம் ப்ரதிபாதிக்கக்கூடும். ஸ்ரீ. வே. ஸங்]

இப்படி ஸமாதாநம் சொல்லும் பக்ஷத்தில் லீலா விபூதியாகிற இந்த ப்ரபஞ்சமும் பகவானுக்கு விசேஷண மாகிறபடியால் அதையும் நித்ய விபூதியைப்போல க்ரஹிக்கக்கூடாதோ என்று கேட்கலாம். அப்படி அது க்ரஹிக்கப்படமாட்டாது. ஏனென்றால், கர்மவச்யராயுள்ள போக்த்ருவர்க்கத்துடன் கலந்து நிற்கும் போக்ய பூதமான ப்ரபஞ்ச விஷயமன்றோ அது? பத்த ஜீவன்களுடைய க்ர்மத்திற்குத் தக்கபடி அந்தப் போக்ய வஸ்துக்கள் விகாரமடைய வேண்டிவையாதலால் அவைகளுக்கு அப்படிப்பட்ட அந்தர்ப்பாவம் சொல்லக்கூடாது. 'கல்யாண குணங்கள்போல' என்று த்ருஷ்டாந்தம் சொல்லப்பட்டிருப்பதால் இந்த அர்த்தம் வ்யக்தமாகின்றது. 'கல்யாண' என்பதற்கு 'விகாரமடையும் ப்ராக்ருத வஸ்துவைக் காட்டிலும் விலக்ஷணமான' என்பது பொருள்.



'தத் விஷ்ணோ: பரமம் பதம்' என்னும் வாக்யத்திற் சொல்லப்படும் 'பரமபதம்' என்பது பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தையே குறிக்கின்றது என்று சொல்லக்கூடாதோ? "ஸஹஸ்ரஹயாஹிதம் வைஷ்ணவ்யம் பரமம் பதம்" என்னும் வாக்யத்தில் 'விஷ்ணுவாகிற பரமபதம்' என்று விஷ்ணுவும் பரமபதமும் இரண்டும் ஒன்றாகவே பேசப்படவில்லையா? அந்த விடத்திற்போல் இவ்விடத்திலும் நாம் ஏன் அர்த்தம் செய்யக்கூடாது? என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். இந்த ஆக்ஷேபமும் நிற்கமாட்டாது. ஏனென்றால்,

"க்ஷயந்தமஸ்ய ரஜஸ: பராகே" [ப்ரக்ருதி மண்டலத்திற்கு வெளிப்பட்டுள்ள ஓர் தேச விசேஷத்தில் வஸித்துக் கொண்டிருக்கிற] என்றும்,

"தத³க்ஷரே பரமே வ்யோமந்" [க்ஷயமற்ற பரம ஆகாசத்தில் இருக்கிற] என்றும்,

"யோ வேத³ நிஹிதம் கு³ஹாயாம் பரமே வ்யோமந்" [பரம ஆகாசமாகிற குகையில் வஸிக்கும் அவனை] என்றும் இவ்வாறு பரமமான ஸ்தாந விசேஷ மொன்று உண்டு என்பது வ்யக்தமாகச் சொல்லப்பட்டிருக்கின்றதன்றோ? இது மாத்ரமன்று. ப்ராக்ருத வாக்யத்திலேயே "விஷ்ணோ: பரமம் பதம்" [விஷ்ணுவினுடைய பரம பதம்] என்று விஷ்ணு வேறாகவும் அவனுடைய பரம பதம் வேறாகவும் பேசப் பட்டிருக்கின்றன. உண்மை என்ன வென்றால், 'பரம பதம்' என்னும் சப்தம் சில விடங்களில் பரமமான ஒரு ஸ்தாந விசேஷத்தையும், மற்றும் சில விடங்களில் சுத்த ஆத்ம ஸ்வரூபத்தையும் வேறு சில விடங்களில் பகவத் ஸ்வரூபத்தையும் குறிக்கும். இவ்விடத்திலோ வென்றால், அது ஸ்தாநத்தையே குறிக்கின்றது என்பதுதான். இந்த அர்த்தத்தை ஸ்வாமி தேசிகனும் பரிபூர்ணப்ரஹ்மாநுபவாதிகாரத்தில் பின் வருமாறு விவரித்திருக்கிறார்.

"இவற்றில் நிரதிசயாநுகூல்யத்தாலே பரம ப்ராப்யமாகையாலே பகவத் ஸ்வரூபத்தைப் பரமபதமென்கிறது, இப்பகவத் ஸ்வரூபத்தினுடைய பரிபூர்ணாநுபவம் பெறுவது போக்யதமமாய் ஸர்வோத்தரமாயிருப்பது ஒரு ஸ்தாநவிசேஷத்திற் சென்றாலாகையாலே அந்த ஸ்தாந விசேஷத்தையும் பரமபத மென்கிறது. இவ்வநுபவத்துக்கு ஆச்ரயமாய்க் கொண்டு

அநுபாவ்யமாகையாலே பகவத் விபூதி பூதமாய் ஜ்ஞாநாநந்த லக்ஷணமான தன் ஸ்வரூபத்தையும் பரம பதமென்கிறது."

ஸ்ரீ வேதார்த்த ஸங்கக்ரஹத்திலும்,

"கதம் த்ரயாணாம் பரப்ராப்யத்வமிதி சேத், பகவத்ஸ்வரூபம் பரப்ராப்யம்; இதரயோரபி பகவத்ப்ராப்திகர்பத்வாதேவ பரப்ராப்யத்வம்"

[மூன்றும் எப்படி பரம ப்ராப்யங்களாகும்? என்று கேட்டால், பகவத் ஸ்வரூபம் பரம ப்ராப்யமென்பது நிர்விவாதம். மற்றை இரண்டும், பகவான் அடையப்படுகையில் இவைகளும் பகவானுடன் கூடவே அடையப்படுகின்றபடியால் பரம ப்ராப்யங்களே] என்று அநுக்ரஹிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் "தத்விஷ்ணோ: பரமம் பதம்" என்னுமிடத்தில் விஷ்ணுவின் ஸர்வோத்தர ஸ்தாநமாகிற தேசவிசேஷம் சொல்லப்படுகின்றது என்பதில் எவ்வித அநுபபத்தியுமில்லை.

இப்படிப்பட்ட தேச விசேஷமொன்று ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டதாகவே இருக்கின்றது என்று வைத்துக்கொண்டு ப்ரக்ருத வாக்யங்களை நிர்வஹிக்கக் கூடாதோ? அப்பொழுது ப்ரளயகாலத்தில் இந்தத் தேச விசேஷம் ப்ரஹ்மத்தினுள் அந்தர்க்கதமாக நிற்கின்றது என்று சொல்லும் க்லேசம் ஸம்பவிக்கமாட்டாதே! என்று கேட்கலாம். ப்ரஹ்மத்தினுள் கல்யாண குணங்கள் அந்தர்க்கதங்களாக நிற்கின்றனவென்று சொல்வதில் எவ்விதம் ஒருவித க்லேசமுமில்லையோ, அவ்விதமே இதிலும் ஒரு வித க்லேசமுமில்லை. நிற்க, "ஸதா பச்யந்தி ஸூரய:" [எப்பொழுதும்] என்னும் சப்தம், ப்ரளய காலத்திலும் அந்த ஸ்தாந விசேஷம் இருக்கின்றது என்பதைக் காட்டுகின்றது. "ரஜஸ: பராகே" "தமஸ: பரஸ்தாத்" என்னும் வாக்யங்களும் அந்த ஸ்தாந விசேஷம் ப்ரக்ருதி மண்டலத்திற்கு வெளிப்பட்டே இருக்கின்றது என்பதை விளக்குகின்றன. இந்த வாக்யங்களிற் சொல்லப்பட்டுள்ள 'ரஜஸ:' 'தமஸ:' என்னும் சப்தங்கள் ஸத்வம் ரஜஸ் தமஸ் இவைகளுடன் கூடிய ப்ராக்ருதி மண்டலத்தையே குறிக்கின்றன.

"ரஜஸ: பராகே" இத்யத்ர ரஜச்சப்தேந த்ரிகுணாத்மிகா
ப்ரக்ருதிருச்யதே, கேவலஸ்ய ரஜஸோऽநவஸ்தாநாத் ।"
"தமஸ: பரஸ்தாத்" இத்யத்ராபி தமச்சப்தேந ஸைவ
ப்ரக்ருதிருச்யதே, கேவலஸ்ய தமஸோऽநவஸ்தாநாத் ॥"

[ஸ்ரீ. வே. ஸம்.]

[கேவலம் ரஜஸ்ஸும் தமஸ்ஸும் தனித்து நிற்கமாட்டாவாகையால், இந்த வாக்யங்களில் ரஜஸ் தமஸ் சப்தங்கள் முக்குணங்களையுமுடைய ப்ரக்ருதியையே குறிக்கின்றன என்று ஒத்துக்கொள்ளுதல் வேண்டும்.]

இன்னும் இவ்வாறு ச்ருதி வாக்யங்களின் உள்ளபடியான அர்த்த விவரணத்தைப் பலவிடங்களில் நமது பாஷ்யகாரர் அநுக்ரஹித்திருக்கிறார். அவைகளை யதோசிதம் அறிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ:

# ஸ்ரீ பாஷ்யகாரர் பெருமை

[ஸ்ரீ. உ. வே. எ. வி. கோபாலாசார்யர், M. A., B. L., அட்வொகேட், திருச்சி]

ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு பாஷ்யம் செய்த பெரியோரை 'பாஷ்யகார' ரென்று வேறு குறிப்பில்லாமலே அஸாதாரணமாகப் பேசுவர். மற்ற ஸூத்ரங்களுக்கு பாஷ்யங்களியற்றியவரை 'பாஷ்யகாரர்' என்று சொன்ன போதிலும் 'ஸூத்ரம்' என்று தனிமையாகச் சொல்வது ப்ரஹ்ம ஸூத்ரத்தையேயாதலால் வ்யாகரண பாஷ்யகாரர் ந்யாய ஸூத்ர பாஷ்யகாரர் என்பது போல் குறிப்பிட்டுப் பேசாமல் பாஷ்யகாரர் என்று மட்டும் பேசுவது ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யகாரர்களைக் குறிக்குமென்பர். ஸ்ரீ மத்வ பாஷ்யத்துக்கு ஹநூமத் பாஷ்யமென்று பெயர். ஸ்ரீ ராமதாஸர்கள் லக்ஷ்மணனும் ஹநூமாரும். 'ராமகுணங்களால் அவருக்கு தாஸனானே' னென்றார் லக்ஷ்மணன். 'தாஸனடியேன் கோஸலேந்த்ரருக்கு' என்றார் ஹநூமார். இவ்விருவரும் பகவத் தாஸ்யமே நமக்கு ஸ்வரூபமென்றும் நிரதிசய போக்யமென்றும் நிரந்தரமான பக்தி உபாயமென்றுங் காட்டி ப்ரஹ்ம ஸூத்ரத்துக்கு இரண்டு பாஷ்யகாரர்களானார்கள். ஸ்ரீ சங்கர பாஷ்யமென்று அத்வைத பாஷ்யத்துக்குப் பெயர். நம் பாஷ்யத்துக்கு ஸ்ரீபாஷ்யமென்று அஸாதாரணமாகத் திருநாமம். ஸ்ரீபாஷ்யகாரரென்று எல்லோரும் நம் ஸ்ரீராமாநுசனைப் பேசுவர். ஸ்ரீநிவாஸனே பரப்ரஹ்மமென்றும், அதனிடம் நிரந்தரமான பக்தி மோக்ஷோபாயமென்றும் அறுதியிட்டுத் தொடங்கிய பாஷ்யம் ஸ்ரீ பாஷ்யம். ஸ்ரீ பாஷ்யம் விஸ்தாரமாயிருப்பதால் எல்லோருக்கும் ஸேவிக்க வரிதென்ற திருவுள்ளத்தால் சுருக்கமாக தீபம் செய்தருளினார். ஸ்ரீ பாஷ்யம் முந்தி ஸாதித்ததென்று தீபத்திலேயே ஸ்பஷ்டம். 'ச்ரிய: காந்த: அநந்த:' என்று தீபம் தொடங்கப்பட்டது. "ஜநகாத்மஜையின் நாயகனானதால் ராமனெனும் ஜ்யோதிஸ் அப்ரமேயமாயிற்று" என்றதை யநுஸரித்து ஸ்ரீ காந்தனானதால் அநந்தனானென்று திருவுள்ளம். தீபத்தைக் காட்டிலுஞ் சுருக்கமாக சில ஸாரதம விஷயங்களை ஸாதித்திருக்கும் ஸாரமும் 'ஸ்ரீமானான விஷ்ணுவுக்கு நமஸ்காரம்' என்று தொடங்கப்பட்டது. ஸ்ரீ மத்வ பாஷ்யம் தத்வ பாகங்களில் அநேகமாக நம் தர்சனத்தை யொத்தது. நமக்கு ஸந்நிக்ருஷ்டமான மதமென்று ஸ்ரீ தேசிகனும் சததூஷணியில் ஸாதித்தார். பரமத பங்கத்தில் ஸ்ரீ மத்வ மதம் ஓர் புறச் சமயமாக வில்லை. ஸ்ரீ ரகூத்தமஸ்வாமி ஈசாவாஸ்ய வ்யாக்

யாநத்தில் ச்ருத ப்ரகாசிகையையும் பாவ ப்ரகாசிகையையும் அபியுக்தர்கள் ஸாதித்தாக உதாஹரித்தார். ஸூத்ரங்களின் யோஜனையிலும் விஷய வாக்யங்களிலும் அங்கங்கு வேற்றுமையிருந்தாலும் பகவானுடைய பரத்வத்திலும் நமக்கு தாஸ்யமே ஸ்வரூபமென்பதிலும் பக்தி மோக்ஷ ஸாதனமென்பதிலும் இன்னும் ப்ரதானமான அநேகவிஷயங்களிலும் பேதமில்லை. அத்வைத ஸித்தி க்ரந்தத்தில் 'சரீர சரீரிபாவத்தைக் கொண்டு ஸாமாநாதிகரண்யத்தை நிர்வஹிக்க ஸாத்யமாகாது' என்று நம்முடைய மதத்தை கண்டித்திருப்பதற்கு 'தரங்கிணீ' என்னும் ஸ்ரீ மத்வமத க்ரந்தத்தில் ஸமாதாநம் கூறப்பட்டுளது. ப்ரக்ருத்யதிகரணத்தில் ப்ரஹ்மத்திற்கு உபாதானகாரணத்வம் சொல்வது அத்வைத மதப்படி கூடாதென்று தூஷித்து விட்டு முடிவில் 'ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதித்தபடி உபாதான காரணத்வத்தை நிர்வஹிப்பது விரோதமில்லை அதில் எமக்கு ப்ரத்வேஷமில்லை' என்று ஸுதையில் கூறப்பட்டது.

ஸ்ரீ பாஷ்யகாரருக்கு முன் ப்ரஹ்ம ஸூத்ரங்களின் பொருள்கள் எப்படிக் கொள்ளப்பட்டு வந்தன? அதற்கு முன் ப்ராசீன ஸம்ப்ரதாயமென்னவென்பதை ஆராயவேணும். ஸ்ரீ பாஷ்யகாரரவதரிக்கு முன் ஸ்ரீ சங்கர பாஷ்யமே தேசமெங்கும் அதிகமாக ப்ரசாரமாயிருந்தது திண்ணம். பாஸ்கர யாதவ பாஷ்யங்கள் ப்ராயேண ப்ரசாரத்தையடையவில்லை. நம் தர்சநம் ஏதோ க்வசித் க்வசித் இந்த தமிழ் நாட்டில் ஸ்வல்ப வ்யக்திகள் திருமாளிகைகளோடு நின்றது. ஆளவந்தார் ப்ரபந்தங்களையும் வேதாந்தங்களையும் சிலருக்கு கோஷ்டிகளில் காலக்ஷேபம் ஸாதித்து வந்தார். ராஜஸதஸுகளில் பூர்வாச்ரமத்தில் வேதாந்த மீமாம்ஸையில் வாதங்கள் செய்தார்; எட்டுப்ரபந்தங்களும் செய்தருளினார். பவிஷ்யதாசார்யராக எம்பெருமானாரவதரிக்கப்போவது முன்பே நாதமுனிகள் காலத்திலேயே தெரிந்த விஷயம். எம்பெருமானார் அவதரித்து வித்யா ஸம்பந்நரானது தெரிந்து, நேரில் உபதேசித்து அவரைக்கொண்டு ஸூத்ர பாஷ்யாதிகளை நம் தர்சனத்திற்கு ஏற்படுத்திவைக்க வேண்டுமென்று ஆளவந்தார் ஆசைப்பட்டது நிறைவேறவில்லை. ஏகலவ்யரைப்போல் ஆளவந்தார் திருவடிகளில் த்யாநம் செய்து கொண்டும், அவர் க்ரந்தங்களை ஸர்வகாலமும் மநநம் செய்து கொண்டும், அவர் சிஷ்யர்களை உபாஸித்து அவர்களிடம் ஸம்ப்ரதாயங்களையெல்லாம் கேட்டும் ப்ராசீனமாக ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு ஏற்பட்டிருந்த வ்ருத்தி, வாக்யம், பாஷ்யம் முதலிய க்ரந்தங்களை ஸேவித்தும், திருவாய்மொழியை நிரந்தரம் அநுஸந்தாநம் ப்ரசாரம் முதலியது செய்தும், ப்ரஹ்ம ஸூத்ரம், உபநிஷத்துக்கள், கீதை முதலியவற்றின் ப்ராசீந ஸாம்ப்ரதாயிகமான அர்த்தங்களை ஸ்ரீ பாஷ்யகாரர் தெரிந்து



கொண்டு ஸ்ரீ பாஷ்யாதி க்ரந்தங்களைச் செய்தருளினார். 'பூர்வாசார்யர்கள் அதைச் சுருக்கினார்கள். அவர்களெல்லோருடைய திருவுள்ளத்தை யநுஸரித்து ஸூத்ரங்களின் அக்ஷரங்களின் பொருள் உரைக்கப்படும்' என்று பாஷ்யத்துடக்கம். 'பகவத் போதாயநர், டங்கர், த்ரமிடர், குஹதேவர், கபர்தி, பாருசி முதலிய பெரியோர்கள் ஏகரூபமாகப் புராதனமாக உரைத்துள்ள வ்யாக்யாநங்களில் காட்டியுள்ள மறை பொருளுரை மார்க்கமிது' என்று வேதார்த்த ஸங்க்ரஹத்தில் ஸாதிக்கப்பட்டது.

ஸ்ரீ மத்வபாஷ்யத்துக்கு முன்பு அந்த ஸம்ப்ரதாய க்ரந்தங்களிருக்கவில்லை. ஸ்ரீ வ்யாஸரிடமே நேரில் ஸ்ரீ மத்வாசார்யர் உபதேசம் பெற்றதாக அவர்கள் ஸம்ப்ரதாயம். வ்யாஸருக்கும் ஸ்ரீ மத்வாசார்யருக்கும் நடுவில் குருபரம்பரையிருக்கவில்லை. ஸூத்ரங்களியற்றிய வ்யாஸர் ஸாக்ஷாத் நாராயணனே. வ்யாஸர் ஸாக்ஷாத்தாகவே பகவதவதாரம். ஸூத்ரகாரரிடமிருந்தே நேரே ஸூத்ரங்களின் பொருள்களையறிந்ததாக சொல்லுவர். ஸ்ரீசங்கரபாஷ்யத்தில் ஸூத்ரகீதாதிகளின் பொருள்களை முன்பு விளக்கிய அத்வைத ஸம்ப்ரதாய க்ரந்தங்கள் இருந்ததாகச் சொல்லக் காணவில்லை. ஸ்ரீ கோவிந்தருடைய சிஷ்யரென்றும் ஸ்ரீகௌடபாதருடைய ப்ரசிஷ்யரென்றும் பேசப்படுகிறது. ஸ்ரீகௌடபாதருடைய சில காரிகைகள் மட்டும் ஸ்ரீ சங்கரரால் வ்யாக்யாநம் செய்யப்பட்டுள. ஸமந்வயாதிகரணத்தின் முடிவிலுள்ள ச்லோகங்கள் ப்ராசீந ஸம்ப்ரதாய ச்லோகமென்பர். ஸ்ரீசங்கர பாஷ்யத்திற்கு ப்ராசீநமாக இரண்டு மீமாம்ஸைகளுக்கும் ஒரு வ்ருத்தி க்ரந்தமிருந்ததென்பதும், அந்த வ்ருத்தி க்ரந்தம் அநேக விடங்களில் நம்முடைய தர்சந வ்யாக்யாநத்தை அநுஸரித்ததென்றும் ப்ராசீன வ்யாக்யாநத்திற்கு விரோதமாக அதை மாற்றி வேறு விதமாகப் பொருளுரைக்கப் பட்டதாக ஸ்ரீ சங்கர பாஷ்யாதி க்ரந்தங்களில் ஸ்பஷ்டமாகக் காணலாம். முதலில் ப்ராசீன வ்ருத்தி க்ரந்தத்தை யநுஸரித்து வ்யாக்யாநம் செய்துவிட்டு பின்பு அதில் த்ருப்தியில்லாமல் தமதபிப்ராயமிப்படியென்று வேறு விதமாக வ்யாக்யாநம் செய்யப்படுகிறது. ப்ராசீன வ்ருத்தியின் பொருள்கள் மறுதளிக்கப்படுகின்றன. உபவர்ஷரென்பவர் இரண்டு மீமாம்ஸைகளுக்கும் வ்ருத்தி க்ரந்தம் செய்தாரென்று சாபர சங்கர பாஷ்யங்களிலிருந்து தெரிகிறது. 'உபவர்ஷர் என்று போதாயநருக்கு மற்றோர் திருநாமம்' என்று தத்வடீகையில் ஸாதிக்கப்பட்டது. திருவாங்கூர் ராஜாங்கத்தாரால் ப்ரசுரம் செய்யப்பட்ட ப்ரபஞ்ச ஹ்ருதயம் என்னும் க்ரந்தம் 31-ம் பக்கத்தில் 'இருபது அத்யாயங்களடங்கிய மீமாம்ஸா சாஸ்த்ரத்திற்கு போதாயனரால் க்ருதகோடியென்றும் பாஷ்யம் செய்யப்பட்டது' என்று கூறப்

பட்டுளது. ‘ப்ரபஞ்ச ஹ்ருதயம்’ என்பது ஓர் ப்ராசீனமான அத்வைத க்ரந்தம். ப்ராசீனமான மணிமேகலையில் க்ருதகோடி க்ரந்தத்தைப்பற்றி பேசப்படுகிறது. ‘உபவர்ஷர், க்ருதகோடி, பவபூதி, அயாசிதர்’ என்று ஒரு வ்யக்தியின் பெயர்கள் என்று கேசவநிகண்டு. ‘க்ருதகோடி, உபவர்ஷர் போதாயனர்’ இவையெல்லாம் ப்ராசீனரான வ்ருத்திகாரருடைய திருநாமங்கள். இவை யெல்லாம் ‘தர்சனோதயம்’ என்னும் க்ரந்தத்தில் அழகாக்காட்டப் பட்டுள்ளது. ‘உபவர்ஷரென்னும் போதாயனருடைய ப்ராசீனமான வ்ருத்தி க்ரந்தத்தை யநுஸரித்து அந்த ப்ராசீனமான மார்க்கத்திலேயே ஸூத்ரங்களின் பொருள்கள் ஸாதிக்கப்படுகின்றன’ என்று ஸ்ரீபாஷ்யத்தில் ஸாதித்திருப்பது ஸத்யம் என்று பிறர் க்ரந்தங்களிலிருந்தே தெரிகிறது. பிறச் சமயத்தார் அங்கீகரிக்கும் ப்ராசீன வ்ருத்தி க்ரந்தத்தின் பொருள்கள் நம் பாஷ்யத்திற்கு அநுகூலமென்பதும் ஸ்ரீ சங்கர பாஷ்யப் பொருள்களுக்கு ப்ரதிகூலமென்பதும் அவர்கள் க்ரந்தங்களிலிருந்தே ஸ்பஷ்டம்.

ஸ்ரீ சங்கர பாஷ்யத்திற்கு முன்பு ப்ராசீனமாக ஸூத்ரங்களுக்கு ‘த்ரமிட பாஷ்ய’ மென்றோர் பாஷ்யமும் ‘ப்ரஹ்ம நந்தி’ யென்ற ஒரு வாக்ய காரராலி யற்றப்பட்ட மிகச் சுருக்கமாக ஒரு வாக்யக்ரந்தமும் இருந்ததென்றும், அந்த த்ரமிட பாஷ்யத்தையும் ப்ரஹ்மநந்தி வாக்ய க்ரந்தத்தையும் அத்வைதிகள் ப்ராசீன ப்ரமாண க்ரந்தங்களென ஒப்புவதாயும் அத்வைத க்ரந்தங்களிலிருந்தே தெரிந்து கொள்கிறோம். த்ரமிடாசார்யருடைய ஸம்மதியையும் தம் வ்யாக்யாநத்திற்கு ஆதாரமாகக் காட்டுவதாக ஆநந்தகிரி சங்கர பாஷ்ய வ்யாக்யாநத்தில் பேசுகிறார். ஸங்க்ஷேப சாரீரகமென்னும் ப்ராசீனமான அத்வைத க்ரந்தத்திலும் எம்பெருமானாரால் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் உதாஹரிக்கப் பட்ட வாக்ய காரருடைய வாக்யத்தையும் த்ரமிட பாஷ்யகாரருடைய ஸூக்திகளையும் உதாஹரித்து அவை ப்ராசீனபாஷ்ய ப்ரமாணமென்றும் கூறப்பட்டுள்ளதை முன்பே தீபிகையில் 25-வது ஸம்புடம் 74,75,76 பக்கங்களில் விஸ்தாரமாகக் காட்டி யுள்ளோம். இப்படிக்கு அத்வைத மதத்தோராலும் ஒப்புக்கொள்ளப் படுவதும் ப்ராசீன ஸம்ப்ரதாயமுமான ‘போதாயன வ்ருத்தி’ ‘ப்ரஹ்ம நந்தி வாக்யம்’ ‘த்ரமிட பாஷ்யம்’ ஆகிய ப்ரமாணநூல்கள் நம்தர்சனத்தையே அநுக்ரஹிப்பன வென்றும் நம் பாஷ்யகாரர் ஓர் நூலிழையேனும் தவராமல் ப்ராசீன ஸம்ப்ரதாய நூற்களை யநுஸரித்தே ஸ்ரீ பாஷ்யாதிகளை ஸாதித்தருளினாரென்பதும் ஸ்பஷ்டம். ஸித்தித்ரயத்திலிருந்து சில வாக்யங்களப்படியே ஸ்ரீ பாஷ்யம் ஜிஜ்ஞாஸாதிகரணத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகம ப்ராமாண்யத்திலிருந்து சில ஸூக்திகள்சாஸ்த்ர யோநித்வாதிகரணத்தில் அப்படியே சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீ பாஷ்யம் முழுவதுமே ஸ்ரீ யாமுநருடைய அருளால் ப்ரவஹித்ததாகத் திருவுள்ளமானதால் அது வேறு, தம்ஸூக்தி வேறு என்று காட்டப்படவேயில்லை. மேலும் ஸ்ரீ போதாயநருடைய ஸ்ரீ ஸூக்திகளின் நிஷ்யந்தத்தால் ஸ்ரீ பாஷ்யம் ஸுஸ்ஸமமாகவும் நிராபாதமாகவுமிருப்பதாக ஸ்ரீதேசிகன் வர்ணநம். இதிலோர் ஸ்வாரஸ்யம் கவனிக்கத்தக்கது. ‘போதாயநரை நீங்கள் வீணே பாதிக்கிறீர்கள். அவர் எங்கள் போதத்தின் பொருட்டேயாகிறார்’ என்று ஸாதித்ததை கவனிக்க வேணும். உங்கள் பாஷ்யத்தில் போதாயநவ்ருத்தியின் வ்யாக்யாநங்களை முதலில் காட்டிவிட்டு பிறகு அதை யெல்லாம் நீங்கள் வீணாக பாதிக்க முயற்சிக்கிறீர்கள். எங்கள் பாஷ்யத்திலோ வ்ருத்தி வாக்யங்களை ப்ரமாணமாக உதாஹரித்து அதை யநுஸரித்தே வ்யாக்யாநம் செய்யப்பட்டிருக்கிறது. “ஸ வ [illegible] வா யாய ஸௌயாயநர்” ‘போதாயனர் உங்களுக்கு ஸாயாய; எங்களுக்கு ஸௌயாய’ என்று ரஸம். போதாயந ஸூக்திகளை யநுஸரிப்பதால் எங்கள் பாஷ்யம் நிராபாயம். ப்ராசீன ஸம்ப்ரதாயத்தைத் தழுவியது.



ஸ்ரீபாஷ்யகாரர் மாறனடி பணிந்துய்ந்து திருவாய் மொழியை யநுஸரித்து ஸூத்ரங்களின் பொருள்களைத் தெளிந்ததை நாம் வகுள மாலையில் காட்டத்துடங்கி யிருக்கிறோம். எம்பெருமானார் ஸாதித்த காலக்ஷேபங்களைக் கொண்டு எம்பெருமானார் கடாக்ஷங்களாலே ப்ரவஹித்த ஆறாயிரப்படியால் அது ஸ்பஷ்டமென்றும் காட்டுவோம். ஸ்ரீபாஷ்யம் ஏற்பட்ட பிறகு அத்வைத ஸம்ப்ரதாயத்தில் பின் வந்த பெரியோரான க்ரந்தகர்த்தாக்கள் ஸ்ரீசங்கரர் வ்யாக்யானரீதியை யனுஸரிப்பதையும் எம்முடைய ஸூத்ராநு குண்யவிமர்சம் பூமிகாவிமர்சம் முதலிய க்ரந்தங்களில் காட்டியிருக்கிறோம். பாமதி நம் பாஷ்யத்திற்கு முந்தியது. கல்பதரு நம் பாஷ்யத்திற்குப் பிந்தியது. ஸ்ரீசங்கர பாஷ்யத்திலும் பாமதியிலும், பாஞ்சராத்ரத்தில் ஜீவோத்பத்தியைப் பேசுவது போலுள்ள ஸ்வல்ப பாகத்தைத் தவிர மற்றதெல்லாம் ப்ரமாணமென்று கூறப்பட்டது. கல்பதருவில் நம் பாஷ்யத்தில் ஸாதித்ததுபோலவே ‘ஜீவோத்பத்தியைப் பற்றிய பேச்சு கேவலம் கௌணமே; அதில் தாத்பர்யமில்லை’ என்று நிர்வஹித்து பரமாத்மாவினாலேயே ப்ரோக்தமான பாஞ்சராத்ரத்தில் அப்ராமாண்ய சங்கையை செய்யக்கூடாதென்றும் அறுதியிடப்பட்டது. அப்படியே ஸ்ரீ மதுஸூதந ஸரஸ்வதியும் அறுதியிட்டு ஸ்ரீபாஷ்ய வ்யாக்யாநத்தை யநுஸரித்தே பாஞ்சராத்ராதிகரண ஸூத்ரங்களுக்கு வ்யாக்யாநம் செய்தார். நம் பாஷ்யம் விளக்கிய பொருள்களில் அவர்கள் ஈடுபாடு இதனால் விளக்கமாகிறது. ஸ்ரீ அப்பய தீக்ஷிதர் ஓர் பண்டித ஸார்வபௌமர். வைதிக

ஸார்வபௌமர். சில விடங்களில் அவர் நம் பாஷ்ய வ்யாக்யாந ரீதியையே யநுஸரிப்பதை ந்யாய ரக்ஷாமணியில் காண்கிறோம். ஸூத்ரார்த்தண்ய ஸித்தியில் சில விடங்களை முன்பே எடுத்துக்காட்டியிருக்கிறோம். அச்சிடப்படாத மேல் பாகத்திலுள்ள ஓர் விஷயத்தை மட்டும் இங்கு குறிப்பிடுவோம். மத்வதிகரணத்தில் மதுவித்யையில் ஆதித்யருக்கும் வஸுக்களுக்கும் உபாஸகத்வத்தைப் பேசுவதால் அந்த வித்யையில் அவர்களுக்கு உபாஸகத்வமென்றும் அதிகாரமில்லையென்றும் ஸ்ரீ சங்கர பாஷ்யத்திலுரைத்தபொருள். அவர்களும் தங்களுக்கு ஆத்மாவான ப்ரஹ்மத்தை தங்களுக்கு உயிராக உபாஸிக்கலாமென்றும் மது வித்யையிலும் அவர்களுக்கு அதிகாரமுண்டென்றும் ஸூத்ரங்களுக்கு ஸ்ரீ பாஷ்யத்தில் வ்யாக்யாநம் செய்யப்பட்டு அதை விஸ்தாரமாக ச்ருத ப்ரகாசிகையில் விவரித்து ஸ்ரீ சங்கர வ்யாக்யாநம் அடியோடு பொருந்ாது என்று நிரூபிக்கப்பட்டது. இதிலீடுபட்ட ஸ்ரீ தீக்ஷிதர் ந்யாயரக்ஷாமணியில் ஸ்ரீசாங்கர வ்யாக்யாநம் யுக்தமல்லவென்று அநாதரித்து நம் பாஷ்ய வ்யாக்யாநத்தையே யுக்தமென்று ஸ்தாபித்தார்.

சில விடங்களில் ஸ்ரீ தீக்ஷிதர் முதலியவரால் நம் வ்யாக்யான ரீதி அநுசரிக்கப்பட்டது மாத்ரமல்ல. "எல்லா ஆத்மாக்களும் முக்தராகும் வரையில் (ஸர்வமுக்தி பர்யந்தம்) பரமபதத்தில் ஈச்வரன் ஈச்வரனே. ஜகத் ஸ்ருஷ்டியாதி வ்யாபாரம் ஈச்வரனுக்கு மட்டுமே யுள்ளது. முக்தரான ஜீவருக்கும் ஈச்வரனுக்கும் ஆநந்தம் மட்டும் ஸமம். ஸர்வ முக்தி பர்யந்தம் பேதமுள்ளதே" என்பு தீக்ஷிதரின் தீர்மானம். அத்வைத பரிபாஷையின் வ்யாக்யாநத்தில் ஸ்ரீ மகாமஹோபாத்யாய அநந்த க்ருஷ்ண சாஸ்த்ரிகளும் அப்படியே எழுதியிருக்கிறார். ஸர்வ முக்தி என்பது எப்பொழுது கூடுமோ நாமறியோம். அது பர்யந்தம் இரண்டு மதங்களின் கொள்கைகளும் ஒன்று. ப்ராணிகள் முக்தி பெறத்தான் ஜகத் ஸ்ருஷ்டியாதி வ்யாபாரங்களேற்படுகின்றன. எல்லோரும் முக்தரான பிறகு ஜகத் வ்யாபாரத்திற்கு ப்ரஸக்தி ஏது ?

நம் பாஷ்யமவதரித்து வெகுகாலங் கழித்து ஸ்ரீகண்ட பாஷ்ய மேற்பட்டது. அதில் ப்ராயேண நம் பாஷ்ய ரீதியை யநுஸரித்தே ஸூத்ரங்களுக்கு பொருளுரைக்கப்பட்டன. இவ்விரண்டு பாஷ்யங்களில் நம் பாஷ்யம் முந்தியதென்பது நிச்சயம். ஸர்வ தர்சந ஸங்க்ரஹத்தில் நம் தர்சநம் ராமாநுஜ தர்சநம் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. சைவ தர்சநங்களில் நான்கு தர்சநங்கள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீகண்ட தர்சநம் அந்நான்குக்கும் வெளிப்பட்டது. ஸ்ரீகண்ட தர்சநம் அக்காலத்திலிருந்தால் அவச்யம் காட்டப்பட்டிருக்கும். ஸாயந மாதவாசார்யருக்கு பிந்தியது



அத் தர்சநம். அப்படியே பரமபதபங்கத்திற்கும் பிந்தியது. சந்திரிகையில் அந்த தர்சநத்தின் ப்ரஸ்தாவத்தில் ஸூத்ர வ்யாக்யாநமான அத்தர்சநம் அக்காலத்திலிருந்தால் அவச்யமதையுமெடுத்திருப்பார். சந்த்ரிகையின் வ்யாக்யாந ப்ரகாசத்தில் ஸ்ரீ ராகவேந்த்ர ஸ்வாமியால் அது அநுவாதம் செய்து நிரஸிக்கப்பட்டிருக்கிறது. சந்த்ரிகைக்குப் பின்பும் அதன் வ்யாக்யாநத்திற்கு முன்பும் (மத்தியில்) ஸ்ரீகண்ட பாஷ்ய மேற்பட்டது திண்ணம். அந்த பாஷ்யத்திற்கு வ்யாக்யாநம் செய்த தீக்ஷிதரும் நம் தர்சநம் அந்த பாஷ்யத்திற்கு முன்பட்டதென்றும் ஸ்பஷ்டமாகக் கூறியிருக்கிறார். 'ஸ்ரீ ராமாநுஜ மததஸ்கரரென்று அந்த பாஷ்யகர்த்தா நம் பாஷ்யத்திலிருந்து அர்த்தங்களை யெடுத்துக்கொண்டதாக ஓர் ப்ராசீன பிற க்ரந்தத்திலுள்ளது' என்று ஸ்ரீ மகாமஹோபத்யாய வித்யா வாசஸ்பதி சாஸ்த்ரிகளால் காட்டப்பட்டுள்ளது. தீபிகையில் ஸ்ரீ புத்தங் கோட்டம் ஸ்வாமியாலும் ஸ்ரீ தோட்டாலம் ஸ்வாமியாலும் இது விஷயத்தில் முன்பே சர்ச்சைகள் விஸ்தாரமாகச் செய்யப்பட்டுள்ளன. புறச் சமயத்தரான இப்பெரியார் மற்ற பாஷ்ய வ்யாக்யாநாதிகளை விட்டு விட்டு நம் பாஷ்ய ரீதியை அநேகமாக அநுஸரித்ததும் எம்பெருமானாருடைய அர்த்த ஸ்வாரஸ்யத்தைக் காட்டும்.

எம்பெருமானாருக்கு எண்ணிறந்த சிஷ்ய ஜநங்களிருந்தார்களென்றும், அநேக ஸந்யாஸிகளும் வித்வான்களும் அவர் திருவடிகளி லாச்ரயித்தார்களென்றும், அவர் திருவடிகளே தமக்குத் தஞ்சமெனப் பற்றியிருந்தார்களென்றும், அவருடைய நிரதிசயமான பக்தியும் திவ்ய சரித்ரங்களும் அவர்கள் மனதை லயிக்கச் செய்தனவென்றும், அதே காலத்திலிருந்த அமுதனாருளிய அந்தாதியாலும் கூரத்தாழ்வான் க்ரந்தங்கள் முதலிய வற்றாலும் அறிகிறோம். ஸுந்தர பாகு ஸ்தவத்தில் தொடக்கத்திலேயே ராமாநுஜன் திருவடிகளை யடைந்தநுபவிக்க ஆசையினால் அழகரைத் துதிக்கிறேனென்கிறார். முடிவிலும் ராமாநுஜனைப் பணிந்துகொண்டு அவரோடு மவர் பரிவாரங்களோடுங் கூட பெரிய பெருமாள் திருவடி வாரத்தில் வாஸத்தை யநுக்ரஹிக்க வேணுமென்று ப்ரார்த்தித்தார். அக்காலத்தில் சோழராஜாவின் நிர்ப்பந்தத்தால் ஆழ்வான் பாண்டிய நாட்டில் அழகர் மலையிலும், எம்பெருமானார் கர்ணாடக தேசத்தில் நாராயணகிரியிலும் வஸிக்க வேண்டியிருந்தது. எம்பெருமானார் திருவடிகளில் ஸம்ச்லேஷம் கிடைக்க அழகரைத் துதித்ததன் அழகையும் தத்வத்தையும் கவனிக்கவேணும். 'அமுது' எனப் பெயர் வழங்கும் அமுதனாருக்குஎம்பெருமானார் 'அமுது'. அமுதுக்கு அமுது. "செய்த்தலைச் சங்கம் செழுமுத்த மீனும் திருவரங்கர், கைத்தலத்தாழியுஞ் சங்கமு

மேந்தி நங்கண் முகப்பே, மொய்த்தலைத்துன்னை விடேனென்றிருக்கிலுமு நின்புகழே, மொய்த்தலைக்கும் வந்தி ராமாநுசா! வென்னை முற்றும் நின்றே" என்றும் 'கையில் கனியென்னக் கண்ணனைக் காட்டித் தரினு முன்றன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்யான் 'என்று திருவரங்கத்தமுது ஓங்கு மன்பாலியம் பியதையும் கவனிக்க. எம்பார் தாசரதி முதலிய சிறு மாமனிசரின் அற்புதமான ஈடுபாடுகளும் கவனிக்கத்தக்கவை.

யதிராஜ ஸப்ததியின் வ்யாக்யாநத்தில் விஸ்தாரமாகக் காட்டப் போவதால் இரண்டு விஷயங்களைமட்டும் காட்டிவிட்டு நிறுத்துவோம். எம்பெருமானார் ஸ்ரீ அமுதனாரை, ஸ்ரீ ஆழ்வானை யாச்ரயித்து உஜ்ஜீவிக்கும் படி செய்தார். தம் சிஷ்யர்களைக் கொண்டு பிறருக்குப் ப்ரவசனம் செய்ய நியமனம் செய்து உஜ்ஜீவிக்கச் செய்வது ஓர் மஹா குணம். அடியார்க்கு என்னை யாட்படுத்த விமலன் என்பதுபோல். இன்னுமொரு விசேஷ முண்டு. அதை வெளியிடுவது எம்பெருமானார் பெருமையையே ப்ரகாசப் படுத்து மென்ற நம்பிக்கையின் பேரில் வெளியிடுவோம். "ஆழ்வானைக் காட்டிலும் ஆசார்ய பக்தியில் சிறந்தவரில்லை. சிஷ்ய குணங்கள் கூரநாத னிடமிருந்தது போல் ஸ்ரீ தேசிகனுக்கு அமைந்தன" என்றார் ஸ்ரீ அண் ணன் ஸப்ததியில். ஆசார்ய பக்தி பரிபூர்ணமாயிருப்பதற்கும் ஆசிரியரு ரைத்த யோஜனையைத் தவிர்த்து வேறு சிஷ்யர் புத்தியில் அதிக ஸ்வ ரஸமென்று படும் யோஜனையைக் கூசாமலுரைப்பதற்கும் யாதொரு விரோதமுமில்லையென்றும் நாம் காட்டப் போகும் ஸ்ரீ ஸூக்திகளால் ஸ்பஷ்டமாகும். ஆசிரியர் திருவடிகளில் பக்தி யென்பது வேறு. தம் புத்தியின் ப்ரதிபை யென்பது வேறு. ஆத்மாவை அடிமைப் படுத்தி னாலும் தத்வ விரோதமில்லாத பாகங்களில் யோஜநா பேதங்களை பின் வருபவர் தங்கள் புத்தி கௌசலத்தால் காட்டுவது அபசாரமாகாது. யமகரத்நாகரத்திற்கு ஆழ்வானே அருளிச் செய்த அத்யத்புதமான வ்யாக்யாநத்தில் இரண்டாவது ஆச்வாஸம் 15-வது ச்லோகத்தில் 'அஷ்டகுண யுதம் தஹராகாசே சமாத் இதயம்' என்பதற்குப் பொருளுரைக்கையில் சாந்தோக்யதஹரவாக்யத்தில் தஹராகாச மென்பது ஸூக்ஷ்மமான ஜீவனென்றும் அதற்குள் (அந்த:) இருப் பது ப்ரஹ்மமென்றும் பொருளுரைப்பது ஸ்வரஸமென்றும், பாஷ்யகாரர் தஹராகாசம் ப்ரஹ்மமென்றும் அவருக்குள் உள்ளது அபஹத பாப்மத் வம் முதலிய எண் குணங்கள் என்றும் ஸாதித்ததைத் தாம் 'சாரீர' மென்னும் க்ரந்தத்தில் மறுதளித்திருப்பதாயும் ஸாதிக்கிறார். 'தஹர உத்தரேப்ய:' என்கிற ஸூத்ரத்தில் ஸ்ரீமத்வ மதத்தில்போல் 'தஹரோ உத்தரேப்ய:' என்று யோஜனை திருவுள்ளமாயிருந்தால் தான் இப்படி



ச்ருதிக்குப் பொருள் உரைக்கக் கூடும். தஹரத்திற்குள் இருப்பவர் ப்ரஹ்மம் என்று மத்வ மதத்தில் ஸூத்ரப் பொருள். 'தஹரோऽஸ்மிந்' என்கிற ச்ருதியின் ரீதியை சாந்தோக்யதஹர வாக்யமுமநுஸரித்ததாகும். எம்பெருமானாரும் ஆழ்வான் க்ரந்தத்தைக் கடாக்ஷித்திருக்கவேண்டும். ஆழ்வான் யதிராஜருக்கு முன்பே திருநாட்டை யலங்கரித்தவர். அத்யந்தம் ப்ரஹ்வரான சிஷ்யராயிருப்பினும் அவர்கள் புத்திக்கு ஸ்வரஸமென்று பட்டபடி வேறொரு யோஜனையை யுரைப்பதை ஆசிரியர் தடுப்பதில்லை யென்பது ஒரு மஹாகுணம். தத்வ நிஷ்டைக்கு விரோதமில்லாமல் ப்ரமாண வாக்யங்களுக்கு யோஜநாந்தரங்களை தைரியத்துடன் சிஷ்யர் பேசுவதும் குணமே. வ்யாஸாதிகள் இருந்த ஆசார்ய நிலையை எம்பெருமானாரநுஷ்டித்ததாக நினைக்கலாம்.

எம்பெருமானாருடைய எல்லையற்ற கருணை ஸர்வலோக ப்ரஸித்தம். தத்வடீகையின் மங்களச்லோகத்திலும் "சாலைக் கிணற்றிலிருந்து எம்பெருமானார் ஸமர்ப்பித்த நீர்த்தத்தை பானம் செய்து பேருளாளனென்று கரிகிரிமலைக் கருமேகம் அருள் பெருகி கோறினதற்கு மேல் அபீஷ்டங்களை வர்ஷிக்கிறதென்று" ஸாதித்ததைக் கவனிக்கவேண்டும். யதிபதி யாமுனர் முதலிய சரணாகதி ஸமய ப்ரகாசகரான பூர்வாசார்யர்களுடைய சுபதமமான கருணாமயமான புத்திகளை தயையே தயாமயமான தூலிகைகளால் எழுதி யமைத்ததென்று தயாசதகத்தில் ஸாதித்ததையும் கவனிக்கவேண்டும். 'காரேய் கருணை யிராமாநுசா' வென்று கூப்பிட்டது நம் மமுது.

3L
311,112 N32.25
ஸ்ரீவேதாந்த தீபிகை
15 தொகுதி ௩௨ 10-12
ஏப்ரல் — ஜூன், 1937

ஸ்ரீ:

# பெரும்பூதூர் வந்த வள்ளல்

[பந்தல்குடி, பாரத்வாஜ, மாடபூசி ரெ. திருமலை ஐயங்கார்.
காரியதரிசி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.]

வந்த வள்ளலும் வகுள மாலையான்
தந்த தமிழினைத் தானுமோதியே
முந்தை நான்மறை முடிபுமீதெனச்
சிந்தை தேர்வுறச் சிட்டர்க் கருளுவார்.

## பூதபுரி மான்மியம்.

அங்கணெடு மதிள் புடைசூழ் அயோத்தியென்னும் அணி நகரத்தைத் தலை நகராகக் கொண்டு ஆண்ட அரசர்களில் ஒருவரான யுவனாசுவசுவனின் புத்திரன் மாந்தாதா. இம்மாந்தாதாவின் புதல்வன் அம்பரீஷன். இவரது குமாரன் யுவனாசுவன். இவர் செய்த புத்திர காமேஷ்டி யாகப் பயனாக ஒரு மைந்தனை அடைந்தார். வசிட்டர் அம்மகவுக்கு ஹரிதன் எனத் திருநாமம் சாத்தினார். ஒரு சமயம் இந்த ஹரிதன் தன் சேனையுடன் புறப்பட்டு வேட்டையாடச் சென்றான். வழியில் ஒரு மலைப் பொந்தில் ஒரு புலி ஒரு பசுவைப் பிடித்துத் தின்புறத்த அது தீன ஸ்வரத்துடன் அரற்றிக் கொண்டிருந்தது. அதனைக் கண்ணுற்ற அயோத்யாதிபதி ஒரு வெங்கணை விடுக்க, அதனைத் தாங்க முடியாத அப்புலி தன் கூறிய நகங்களால் பசுவையும் கொன்று தானும் இறந்தது. அதைக்கண்ட அரசன் கலக்கமுற்று, தான் கோஹத்தி செய்து விட்டதாகத் தீர்மானித்து, எங்குற்று அம்மா பாதகம் தீரும் என்று ஆலோசித்துக் கொண்டிருந்தான். அவ்வமயம் அசரீரியானது "புரவலனே! நீ சோகந்தவிர். இக்கணமே ஸத்ய விரத க்ஷேத்திரத்தில் பூதபுரி என்னும் பட்டணத்திலுள்ள அநந்த சரஸில் நீராடினால் சகல பாபங்களும் போம். மேன்மையுறலாம்" என்றது. அதை அநுசரித்து நூறு வருடம் அங்கு கடுந்தவம் செய்ய, பகவான் பிரத்யக்ஷமாகி "அரசே! ஆவைப் பிடித்துக்கொண்டிருந்த புலியைக் கொல்வதற்காக உனது பாணத்தின் உபத்திரவம் பொறுக்க முடியாது அத்துஷ்டமிருகம் பசுவைக் கொன்றது. அது விஷயத்தில் உனக்குப் பாபம் இல்லை. உன் தவத்தை உகந்த நாம் உனக்கு பிரஹ்மதேஜஸ்ஸைக் கொடுக்கிறோம்" என்றார். பூதபுரி ஆலயாதிகளை சத்கரித்து வீடு பெற்றான் ஹரிதன்.



பூதபுரி என்பதே ஸ்ரீ பெரும்பூதூர். பூதகணங்களால் நிருமிக்கப் பட்டமையால் பூதபுரி என்று சொல்லப்படுகிறது. அநந்த ஸரஸ்ஸில் ஸ்நானம் செய்தால் அபூர்வ பலனை அடையலாம். பிராஹ்மணன் பிரஹ்ம வித்யையும், க்ஷத்திரியன் விஜயத்தையும், வைசியன் தனத்தையும், சூத்திரன் வெகுமானத்தையும் அடைகுவன். அநந்த ஸரஸில் ஸ்நாநமும், ஆதிகேசவனுடைய தர்சனமும், பூதபுரியில் வாசமும் செய்தால் மனிதனுக்கு ஜன்ம சாபல்யமுண்டு.

## எம்பெருமானார் அவதாரம்

இத்தகைய பெருமைவாய்ந்த இத் திருப்பதியில் ஆசூரி வமிசத்தில் ஹரிதகோத்திரத்தில் வந்த கேசவ ஸோமயாஜி என்ற பிராஹ்மணோத்தமர் வசித்துவந்தார். இவர் நன்னெஞ்சர். ஸ்ரீ சைல பூர்ணரின் சகோதரியான காந்திமதி யென்ற பூமிப் பிராட்டியாரே இவரது கரும பத்தினி. இவ்விருவர் செய்த தவப்பயனாக கலி 1108க்குமேல் பிங்கல வருஷம் சித்திரை மாச சுக்கில பக்ஷ பஞ்சமி திதியோடு கூடிய திருவாதிரை நக்ஷத்திரத்தில் ஒரு புத்திரர் அவதரித்தார்.

இவ்வவதார தின வைபவத்தைச் சற்றுப்புகர்வாம்:—எதிராசர் தம் பிறப்பால் நாற்றிசையும் கொண்டாடும் நாள் சித்திரையில் ஏய்ந்த திருவாதிரைநாள். எல்லா தினங்களினும் ஏற்ற முடையது இத் திருநாள். ஆழ்வார்கள் அவதரித்த நாட்களிலும் நமக்கு வாழ்வான நாள் ஏழ்பாரும் உய்ய எதிராசர் உதித்தருளும் சித்திரையில் செய்ய திருவாதிரை. இந்தத் திருவாதிரையின் சீர்மைதனை ஒருவாமல் எப்பொழுதும் ஓர்தலே நெஞ்சின் காரியமாகக் கடவது. ஸ்ரீமானான பெருமாள் சக்ரவர்த்தி திருக்குமாரனாக அவதரித்து ஸ்ரீமானான மாசம் சித்திரைத் திங்கள். ஜகத்திலே ஆதித்யோதயத்துக்கு அருணோதயம் போலே, ஸ்ரீ வகுளபூஷண பாஸ்கரோதயத்துக்கு 'முன்னே ஏர் ஆர் மதுரகவி இவ்வுலகில் வந்து உதித்தது சீராரும் சித்திரையில் சித்திரை நாள். ஆதித்யனானவன் ஆர்த்ரா ப்ரவேசம் பண்ணினாற்போலே யாய்த்து நம் எதிகட்கிறைவர் ஆர்த்ரையிலே உதித்தருளினபடி. திருவாதிரை தான் சிவந்திறே யிருப்பது. செய்ய வடிவையுடைய ஸ்ரீமாந் அவதரிக்கையாலே அதுவும் அப்படியே யிருக்கை. ராமராமாநுஜர்கள் இருவருக்கும் முன்னாளும் பின்னாளுமான திருவாதிரையும் புனர் பூச முகமாகப் பெற்றது உய்த்துணரற்பாலது. மற்றையோர் கீர்த்திபோலல்லாமல் எம்பெருமானாரது கீர்த்தி ஏழுலகத்தவரும் படித்து ஈடேறும்படியான பெருமைவாய்ந்த தென்பதை விளக்க 'ஏழ்பாரும் உய்ய எதிராசர் உதித்தருளும்' என்று முற்கூறிய நயங்காண்க. 'அனைத்துலகும்,' வாழப் பிறந்தவனிறே.

## பஞ்சாசாரியரும் அவர் சாற்றிய திருநாமங்களும்

தமக்கு நன் மருகன் அவதரித்தமை கேட்ட நல்லம்மானாகிய பெரிய திருமலை நம்பிகள் ஓடோடியும் வந்து குளிரக் கடாக்ஷித்து 'இளையாழ்வார்' என்ற திருநாமஞ் சாத்தியருளினார். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் இப் புதல்வர் வளர்ந்து, காலக்ரமத்தில் சாஸ்திர விதிப்படி உபநயநம் முதலிய வைதிக கர்மாக்கள் செய்யப் பெற்று, வேதாத்யயனம் முதலியவை சாங்கோபாங்மாய் கற்றுத் தெளியலாயினர். திருமாலை யாண்டான், திருக்கோட்டியூர் நம்பி, திருவரங்கப் பெருமாளரையர், திருமலை நம்பி, பெரிய நம்பி என்பவர் இளையாழ்வாருக்கு ஆசாரியரெனப்படுவர். அவர்களில் திருமாலை யாண்டான் இவருக்குத் திவ்யப்ரபந்த வியாக்கியானம் அருளிச்செய்து 'சடகோபன் பொன்னடி' என்கிற திருநாமத்தைச் சாத்தியருளினார். திருமந்த்ரார்த்தத்தையும் சரம ச்லோகார்த்தத்தையும் திருக்கோட்டியூர் நம்பி அருளிச்செய்து 'எம்பெருமானார்' என்கிற திருநாமத்தைச் சாத்தியருளினார். 'லக்ஷ்மண முனி'; 'கோயிலண்ணன்'; 'ராமாநுஜன்' என்ற திருநாமங்களைச் சாத்தியருளியவர் முறையே திருவரங்கப் பெருமாளரையரும், பெரிய திருமலை நம்பியும் பெரிய நம்பியும், இவர்கள் அருளிச் செய்தன: பெரிய திருமொழி, திருவாய்மொழி மூலம், கண்ணிநுண் சிறுத்தாம்பு வியாக்கியானம், த்வயார்த்தமும்; ஸ்ரீ ராமாயண வியாக்யானமும்; திருமந்த்ரமும் த்வயசரமச் லோகங்களுள்பட பஞ்ச சம்ஸ்காரமுமாம். இதனைத் தேசிகனார், "எம்பெருமானார், திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீ பாதத்திலே ரஹஸ்யார்த்தங்களை சிக்ஷித்தார். திருமாலை யாண்டான் ஸ்ரீ பாதத்திலே திருவாய் மொழி கேட்டார். ஆளவந்தாராழ்வார் ஸ்ரீ பாதத்திலே திருவாய் மொழியுமோதி ஸ்தோத்ராதிகளும் அருளிச் செய்யும் நல்வார்த்தைகளும் கேட்டருளினார். திருமலை நம்பி ஸ்ரீ பாதத்திலே ஸ்ரீமத் ராமாயணம் கேட்டருளினார்" என்பர்.

## கிரந்தங்கள்

இவர் அருளிச் செய்த கிரந்தங்கள் ஒன்பது. அவையாவன, ஸ்ரீ பாஷியம், வேதாந்த தீபம், வேதாந்த ஸாரம், வேதார்த்த ஸங்க்ரஹம், ஸ்ரீ பகவத்கீதாபாஷியம், சிறிய கத்யம், பெரிய கத்யம், ஸ்ரீ வைகுண்ட கத்யம், நித்யம் என்பன.

## ஆச்ரம ஸ்வீகாரம்

இவர் ஸந்யாஸம் பெற்ற போது திருக்கச்சி அத்திகிரிப் பேரருளாளப் பெருமாள் "ராமாநுஜ முனி" என்று இவருக்குத் திருநாமம் சாற்றி



யருளினார். இவர் சாரதாபீடத்துக்கு எழுந்தருளும் போது பிரமன் மஹிஷியாகிய சரசுவதி இவர் பக்கல் தனது ஐயங்களை யெல்லாம் தீர்த்துக் கொண்டதன்றி இவர் செய்தருளின ஸ்ரீ பாஷ்யத்தைச் சிரசினால் வஹித்து இவருக்கு 'ஸ்ரீ பாஷ்யகாரர்' என்கிற திருநாமத்தைச் சாற்றியருளினாள். இவரை நோக்கி எம்பெருமான் 'உம்முடை யார்க்கும் உமக்கும் உபய விபூதி ஐசுவரியமும் தந்தோம்' என்று அருளிச் செய்தமை பற்றி இவருக்கு 'உடையவர்' என்ற திரு நாமமும் வழங்கி வருகின்றது.

## அவதார விசேடம்

இவர் பெரும் பூதூர் வந்தவர் என்பதனால் ஒரு அவதார விசேஷம் என்னத் தட்டில்லை.

> " அடையார் கமலத்து அலர்மகள் கேள்வன் கை யாழி யென்னும்
> படையொடு நாந்தகமும் படர்தண்டும் ஒண் சார்ங்க வில்லும்
> புடையார் புரிசங்கமும் இந்தப் பூதலங் காப்பதற் கென்று
> இடையே இராமாநுச முனியாயின இந்நிலத்தே "

என்ற பாசுரத்தால் பஞ்சாயுதாழ்வார்களும் ஒன்று சேர்ந்து எம்பெருமானாராகத் திருவவதரித்தபடியோ என்னலாம்படி இருக்கிறது. அல்லது அவையெல்லாம் லோகரக்ஷணார்த்தமாக எம்பெருமானார் பக்கலிலே யாயின வென்பதும் ஒன்று.

எம்பெருமானாருக்கு ராமாநுஜன் என்ற திருநாமம் மாதுலரான திருமலை நம்பியால் இடப்பட்டதென்று முன்னமே சொன்னோம். அஃது இளைய பெருமாளுக்கு நன்கு வழங்கிவரும் திருநாமம். கைங்கர்ய ஸாம்ராஜ்யமே பேறு என்றிருந்த லக்ஷ்மணன்போலே கோயில் முதலிய திவ்ய திருப்பதிகளில் நித்ய கைங்கர்ய துரந்தரராக எழுந்தருளி யிருக்கப் போகிறார் என்பதை அகக்கண்ணால் அறிந்துணர்ந்த ஸ்ரீ சைலர் எம்பெருமானாருக்கு அதே திருநாமமிட்டருளினர் என்று கூறுவது மிகையாகாது. லக்ஷ்மணமுனி என்கிற திருநாமம் ராமாநுஜ நாமபர்யாயமாக வழங்கிவருதலுங் காண்க. எனவே இளையாழ்வார் இளைய பெருமாளின் அபராவதாரம் என்னத்தட்டில்லை.

## அருஞ் செயல்கள்

தேசம் எல்லாம் உகந்திடவே பெரும்பூதூரில் சித்திரையில் ஆதிரை நாள் வந்து தோன்றிக் காசினிமேல் வாதியரை வென்று அரங்கர் கதியாக வாழ்ந்தருளும் எதிராசர் என்பர் செந்தமிழ்ச் செல்வராய வேதாந்த குரு. ஸ்ரீ பாஷ்யத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த மேல் நாட்டார் ஸ்ரீ

பாஷ்யகாரருடைய முரணற்ற நன்னெறியான சித்தாந்தத்தை மிகவும் கொண்டாடுகிறார்கள்.

"தர்க்கச்சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன் சொற் கற்ற சோம்பரும் சூனிய வாதரும் நான்மறையும் நிற்கக் குறும்புசெய் நீச ரும் மாண்டனர் நீள் நிலத்தே, பொற் கற்பகம் எம் இராமாநுச முனி போந்தபின்னே" என்றும்,

"சாருவாக மத நீறு செய்து சமணச் செடிக்கனல் கொளுத்தியே
சாக்கியக் கடலை வற்றுவித்து மிகு சாங்கியக் கிரி முறித்திட
மாறு செய்திடு கணாதவாதியர்கள் வாய்த்த கர்த்தற மிகுத்துமேல்
வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாது செய்த வெதிராசனார்
கூறுமா குருமதத்தொ டோங்கியகு மாரிலன் மத மவற்றின்மேல்
கொடிய தர்க்க சரம்விட்டபின் குறுகி மாய வாதியரைவென்றிட
மீறிவாதில் வருபாற்கரன் மதவிலக்கடிக் கொடி யெறிந்துபோய்
மிக்க யாதவ மதத்தை மாய்த்த பெருவீரர் நாளுமிக வாழியே"

என்றும் "பார்த்தான் அறுசமயங்கள் பதைப்ப" "வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு" என்றும் வருவனவற்றால் இதன் உண்மை நன்கு விளங்கும்.

இவரை புகழுமிடத்து தேசிகனார்,

"ஆரண நூல் வழிச் செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர்
வாரணமாய வர்வாதக் கதலிகள் மாய்த்தபிரான்
ஏரணி கீர்த்தி யிராமாநுசமுனி" என்கிறார்.

இதன் கருத்து சற்று விளக்குவாம். வேதமாகிய சாஸ்திரத்தினுடைய வழியின் செம்மையைக் கெடுத்தவர்களான ஹைதுகர்களுக்கு ஒரு யானை யாக அவர்களுடைய வாதங்களாகிய வாழைகளை நாசஞ் செய்த உபகாரக னும் உலகத்துக்குந் தகுந்த அலங்காரமான கீர்த்தியை யுடையவருமான இராமாநுசமுனி என்பது இதன் திரண்ட பொருள். ஆரண நூல் என்பது வேதாந்த சாஸ்திரத்தினுடைய வேதாந்த மீமாம்சையான சாரீர சூத்ரம். வழியாவது மார்க்கத்தினுடைய நியாய பிரதிபாதன ப்ரகாரம். செவ்வை யாவது ருஜுத்வம். அதாவது ஸூத்ராக்ஷரஸ்வாரஸ்யாநுகுணமாக ப்ரவிரு த்திக்கை. அழித்திடுதல் கெடுக்கிறவர்கள். ஐதுகர்-ஹைதுகர். அதாவது பிரமாணமாக ஒன்றையும் கொள்ளாமல் வெறும் யுக்திகளைக் கொண்டு ஸாதிக்கிறவர்கள். எம்பெருமானார் அவதாரத்துக்கு முன்பு வேதாந்த சாஸ்திரமான பிரம்ம சூத்திர நியாயங்களை ருஜுவாகக் காட்டுவதை தவிர்த்து ஐதுகர் தங்களுக்குத் தோன்றின மதத்திற்கு ஒத்து அந்த ஸூத்



திரங்களுக்கு உரை எழுதி அதை நாசஞ் செய்தனர். ஒரு யானையானது ஒரு வாழைத் தோட்டத்தின் உள் புகுந்து வாழைகளை நாசம் செய்வது போல் எம்பெருமானார் அவர்களுடைய வாதங்களை நாசஞ் செய்து ஸூத் திரங்களுக்கு அவைகளின் அக்ஷரங்களுக்கு ஒத்த முறையில் வியாக்யானம் எழுதிய மஹோபகாரர் அலங்காரமான கீர்த்தியையுடைய ராமாநுஜமுனி. எம்பெருமானாரை யானையாகச் சொன்னதில் இவர் ஆரம்பித்ததை முடிக்க வல்லவரென்றும், இவரை ஒருவரும் கலக்க முடியாதென்றும் ஏற் படுவதுடன் ஐதுகரின் வாதங்களை வாழையாகக் கூறியதால் அவைகளில் ஸாரமில்லையென்றும், அவற்றை வருத்தமில்லாமல் நாசம் செய்யக்கூடு மென்றும் அறியக் கிடக்கின்றது.

"இராமாநுசமுனி வேழம் மெய்ம்மை கொண்ட நல்வேதக்
கொழுந்தண்ட மேந்திக் குவலயத்தே, மண்டி வந்தேன்றது
வாதியர்காள் உங்கள் வாழ்வற்றதே"

என்ற திருவரங்கத் தமுதனார் பாசுரம் இவண் அநுஸந்தேயம். எம்பெரு மானாரென்னும் ஒரு மதயானையானது குத்ஸித வாதங்களைப் பண்ணுகிற துர்வாதிகளைப் புடைப்பதாகப் பெரிய தடியை எடுத்துக்கொண்டு வருகின் றது. இதற்கு தப்பிப் பிழைக்க அவர்களாலாகாது. திருவாய் மொழியின் அநுபவத்தா லுண்டான ஆநந்த ரஸமே ஸ்ரீ ராமாநுஜ கஜராஜனுக்கு மத நீர்ப் பெருக்காம். யதார்த்தவாதியான வேதத்தைக் கொண்டே துர்வாதி களைப் புடைக்குமவராதலால் நல்ல வேதமாகிற தடியைத் தூக்கிக்கொண்டு வந்தார். முன்னொரு வேழத்தால் பரத்துவ நிர்ணயம் செய்யப்பட்டது. வேதத்தின் உட்பொருளை உள்ளபடி உணர்ந்து உலகிற்கு உண்மையை விளக்கியவராதலால் இராமாநுசமுனி வேழம் என்றும், வாரணமாய் அவர் மாய கதலிகளை மாய்த்ததாகவும் கூறப்படுகின்றது. பிரான் என்றது எம்பெருமானார் வள்ளற்றன்மையை நோக்கி.

## கண்ணனும் ஸ்ரீ பாஷ்யகாரரும்

"கார்த்திகையானும் கரிமுகத்தானும்கனலும் முக்கண் மூர்த்தியும் மோ டியும் வெப்பம் முதுகு இட்டு' என்றபடி சுப்ரமணியனும், கணபதியும் அக் நியும், சிவனும், துர்க்கையும், ஜ்வரதேவதையும் முதுகிடும்படி அத்தெய்வங்க ளின்செருக்கை யடக்கியவன் கண்ணபிரான். எம்பெருமானாரோ வென்னில் தேஹாத்ம வாதி, தேஹபரிணாமாத்மாவாதி, விஜ்ஞாநாத்ம வாதி, சூந்ய வாதி, அத்வைத வாதி, சிவபரத்வவாதி என்று கூறுஞ் சமயங்களாறும் குலைய அப் புறமதத்தவர்களின் துர்வாதச் செருக்கை அறவே அடக்கினார். கண் ணன் அஷ்டம கர்ப்பமாக அவதரித்தான். ஸ்ரீ பாஷ்யகாரரும் ஆசார்ய

பரம்பரையில் எட்டாவது ஆசார்யராக அவதரித்தார். எம்பெருமானையும் இன்னமுதத் திருமகளையும் வஸுதேவ தேவகிகளின் ஸ்தானத்தே வைத்து விட்டுக் கணக்கிட்டால் சேனைநாதன், சடகோபன், நாதமுனி, உய்யக்கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரிய நம்பி, பெரும்பூதூர் வந்த வள்ளல் என எண்மராய் நிற்றல் காண்க. கண்ணன் கஞ்சனைக் காய அவதரித்தான். இராமாநுசன் கலி புருஷ வதத்திற்காகவே அவதரித்தார். எம்பெருமானார் இத்தலத்தே திருவவதரித்ததனால் செம்மை அறம், நெறி, ஸத்தை பெற்றது. பொய்ம்மை, அறுசமயம் நாசமடைந்தன. கொடிய கலியுகமும் மாண்டது என்பர் திருவரங்கத்தமுதனார். கம்சவதமானது கண்ணனவதாரத்துக்கு நெடுங்காலத்துக்கு முன்னரே ஆகாசவாணியால் கூறப்பட்டு உலகிற் பரவியிருந்தது. லக்ஷ்மண முனியால் கலி புருஷவதம் விளையப் போகிறதென்பதை அனேக வருடங்கட்கு முன்னமே தென்குருகைப் பிரான் பாட்டென்னும் வேதப் பசுந்தமிழில் ஆகாசவாக்குப்போல் "பொலிக பொலிக" என்ற பதத்தில் "கலியுங் கெடுங் கண்டு கொண்மின்" என்பதாகக் காண்கிறோம். கண்ணன் கம்ச வதத்துக்கு உறுப்பாக பேய்ச்சி முதலான தருமத் துரோகிகளை நிரஸித்தருளினார். சடகோபன் பொன்னடியும் கலிபுருஷ வதத்துக்கு அங்கமாக வேதபாஹ்யங்களான சாக்யர், உலூக்யர், பௌத்தர், சார்வாகர், பாசுபதர், காணாதர் என்ற ஆறு தர்சநர்களை எல்லாம் பதைக்கச் செய்தார். கண்ணன் ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஒருத்தி மகனாய் ஒளித்து வளர்ந்தான். இளையாழ்வாரும் ஸ்ரீ வைஷ்ணவ குலத்தில் பிறந்து அத்வைதி ஸந்யாசி கோஷ்டியிலே ஒளித்து வளர்ந்தார். யயாதி சாபத்தாலே மங்கிக் கிடந்த யாதவர்களைப் பிரகாசிப்பித்தான் யசோதை இளஞ்சிங்கம். பூமிப் பிராட்டியின் புதல்வர் தமக்கு குருவாக இருந்த யாதவப்ரகாசரையும் தமக்கு அடிமைப்படுத்தி அவரை வாழ்வித்தருளினார். பார்த்தசாரதி பாண்டவ சகாயனாய் நின்று நூற்றுவரை யழித்தான். இராமாநுச முனி இதரர் வேதங்களுக்குச் செய்த அபராதங்களை நிரசித்து செவ்வியான அர்த்தங்களை ஸ்தாபித்தருளினார். அடல்கொண்ட நேமியன் ஆர் உயிர் நாதன் அன்று அர்ஜுனனுக்கு ஸாரதியாயிருந்து ஆரணச் சொல்கடல் கொண்ட ஒண்பொருளைக் கீதா மூலமாக உபதேசித்தான். அதற்குப் பின்னும் காசினியோர் சம்சார இடரின் கண் வீழ்ந்துக் கிடந்தனர். எம்பெருமானார் அவ்வொண்பொருள் கொண்டு அச் சம்சாரிகளைப் பின் தொடரும் சில முடையராய் எழுந்தருளி யிருந்தார். தொல்லுலகில் மன்பல் உயிர்கட்கு இறையவன் மாயோன். தூய் நெறி சேர் எதிகட்கிறைவன் இராமாநுசன். அடியைத் தொடர்ந்து எழும் ஐவர்கட்காய் அன்று பாரதப் போர் முடிய பரிநெடுந்தேர் விட்டான் கண்ணன். முழு



துணர்ந்த அடியார்க்கு அமுதம் இராமாநுசன் இப்படியில் வந்து பிறந்தது ஏனெனில் அமுதனார் போன்றோரை ஆட்கொள்ளுகைக்காகவேயாம். கண்ணன் சங்க நாதம் செய்ய அநுகூலர் மனம் ஆனந்தித்தது; பிரதி கூலர் மனம் பிளந்தது. எதித்தலைநாதன் இணையடிகள் வடுக நம்பி போல்வாரான உத்தமாதிகாரிகளாலே இடைவிடாது சிந்திக்கப்படுவன; பிரதி பக்ஷிகளுடைய நெஞ்சிலே பரிதாபத்தை உண்டு பண்ணுவன. ஞானம் கனிந்த நலங்கொண்டு நாள்தோறும் நைபவர்க்கு வானங் கொடுப்பது மாதவன். இராமாநுசன் தன்னை எய்தினர்க்கு அத்தானத்தைத் தன் தகவு எனும் சரண் கொடுத்து அளிப்பன். இவை போன்ற பல ஒற்றுமை நயங்களால் யுகராமாநுஜனை கண்ண பிரான் மீண்டும் ஸ்ரீ ராமாநுஜராகத் திருவவதரித்தான் என்றும் கூறுப.

## ஆழ்வார்களிடம் ஈடுபாடு

"சொல் ஆர் தமிழ் ஒரு மூன்றும் தெரிந்தவன்;" "கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக் கண்டமை காட்டும் தமிழ்த் தலைவன் பொன்னடி போற்றும் இராமாநுசன்;" "கலை பரவும் தனியானையைத் தண் தமிழ் செய்த நீலன் தனக்கு இனியான்;" "வேதப் பசுந்தமிழ் தன்னை தன் பத்தி யென்னும் வீட்டின் கண் வைத்த இராமாநுசன்;" "மாறன் பணித்த மறை யுணர்ந்தோன்"; "இராமாநுசன் தன் இயல்வு கண்டே தென் குருகை வள்ளல் வாட்டமிலா வண் தமிழ் மறை வாழ்ந்தது"; பண் தருமாறன் பசுந்தமிழ் ஆனந்தம் பாய்மதமாய் விண்டிட இராமாநுச முனி வேழம்"; "கலைப் பெருமான் ஒலிமிக்க பாடலை யுண்டு தன் உள்ளம் தடித்து அதனால் வலிமிக்க சீயம் இராமாநுசன்"; என்பனவற்றால் பெரும்பூதூர் வந்த வள்ளலின் சிறந்த தமிழபிமானமும், ஆழ்வார்களருளிச் செயல்களில் ஈடுபாடும் நன்கு விளங்கும். இதனாலன்றோ 'ஆய்ந்த பெருஞ்சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற ஏய்ந்த பெருங்கீர்த்தி யிராமாநுச முனிவன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்கினார்' அநந்தாழ்வான். "வான் திகழும் சோலை மதிளரங்கர்வண் புகழ்மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்" என்று விபாகித்தவர் பட்டர். ஆழ்வார்களில் நம்மாழ்வார் அதிகரானாற்போலே எம்பெருமான்களில் நம்பெருமாள் அதிகராயிறே இருப்பர். பெரிய பெருமாள் விஷயமாகவே பிரதிபாதிக்கிறது திருவாய்மொழி. நெடுங்காலமும் நோற்றுப் பெற்ற முந்தின மாதா ஆழ்வார். வருந்திப் பெற்ற பிள்ளையை வளர்த்தெடுக்கும் மாதாவைப் போலே திருவாய்மொழியை வர்த்திப்பித்த மாதா எம்பெருமானார். ஞானக் கலையான திருவாய் மொழிக்கு ஜந்ம

பூமி நம்மாழ்வார்; தத்வர்த்தகர் எம்பெருமானார். ஈன்ற தாய் பெற்றுப் போகட்டுப் போனால் வளர்க்குந் தாய் தன் மிடுக்காலே காத்து நோக்குமா போலே இராமாநுசனும் அத்தைக் காத்து வளர்த்தபடி. ப்ரமேய சாரத்தை யசோதை வளர்த்தாற்போலே ப்ரமாண ஸாரத்தை வர்த்திப்பித்தார் சடகோபன் பொன்னடி. ஆழ்வார் அவதரிப்பித்து அவாவற்று வீடு பெற்று எழுந்தருளின பின்பு பாஹ்ய குத்ருஷ்டிகளாலே பாஷாகாநமான திருவாய்மொழி அபிபூதமாய் வருகிறபடியைக் கண்டு, பாஷ்ய ஸூக்திகளாலே அத்தை நிரோதித்து அத்தை இதுக்குக் காவலான வேலியாகக் கற்பித்து, திருவாய் மொழியைத் தம் கைவசமாக்கி, திருக் குருகைப் பிரான் பிள்ளானைக்கொண்டு இதின் அர்த்தத்தை வெளியிடுவித்து வர்த்திப்பித்துக் கொண்டு போந்தார் எம்பெருமானார் என்ப. “திலத முலகுக்கான திருவேங்கடத்தானை, அலகில் புகழந்தாதி யாயிரமும்—உலகில், உரைத்தான் சடகோபன் உத்தமர்கள் நெஞ்சில் விரித்தான் பெரும் பூதூர் வேந்து “என்பதும் இதனை வலியுறுத்தும்.

மேலும் நம்பிள்ளை திருவாய் மலர்ந்தருளின ஈடு முப்பத்தாறாயிரப் படியில் “எம்பெருமானார் நிர்வாஹம்” என்று ஸ்பஷ்டமாக சில பங்க்திகள் காணப்படுகின்றன. இவற்றில் ஒன்றிரண்டு ஈண்டு தருதும். 1-1-1. (துயரறு)—‘துயரறுக்கும்’ என்று முன்புள்ள முதலிகள் அருளிச் செய்யும்படி; ஸமஸ்தது: காபநோதக ஸ்வபாவமான திருவடிகள்; ஸகலாத்மாக்களுடையவும் துக்கத்தைப் போக்குகையே ஸ்வபாவமான திருவடிகள். ‘துயரறு சுடரடி’ என்று எம்பெருமானார் அருளிச் செய்யும்படி:—“வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி து:கித:” என்றால் து:கி வ்ருத்தியும் அவனதாயிருக்குமிறே; இவர் துயரறத்தான் துயர் தீர்ந்தானாயிருக்கை. இத்தால், இவர் மயர்வற அவன் துயரற்றபடி.” “(வீடுமின் முற்றவும்)-(ப்ரவேசம்)-இத் திருவாய்மொழி தன்னை ஆளவந்தார் அருளிச் செய்தாராகத் திருமாலையாண்டான் ப்ரபத்தி விஷயமாக்கி நிர்வஹித்துக்கொண்டு போந்து, எம்பெருமானாரும் அப்படியே அருளிச் செய்துகொண்டு போந்து, பாஷ்யம் தலைக் கட்டின பின்பு பக்தி விஷயமாக அருளிச் செய்து கொண்டு போருவர். பின்பு எம்பாரும் அப்படியே அருளிச் செய்தார்.” 1-2-9-“ஓரயநத்தினன்று குன்றத்துச் சீயர் எம்பெருமானார் ஸ்ரீ பாதத்திலே புக, அவருடைய சிறு பேரைச் சொல்லி “சிங்கப் பிரான்! இன்று அயநங்கிடாய்” என்ன, திருவுள்ளத்திலோடுகிறது இன்னதென்று அறியாமையால் அவர் பேசாதிருக்க, “இத் தேஹ ஸமநந்தரத்திலே ப்ராப்தி கண்ணழிவற்ற பின்பு நடுவு விரோதியாய்ச் செல்லுகிற நாளிலே ஓராண்டு கழியப் பெற்ற இது உனக்கு ஒன்றாயிருந்ததில்லையோ?” என்று அருளிச் செய்தார்.” “(பத்துடையடியவர்.)—(ப்ரவேசம்.)—ஸர்வேச்வான் அரியனென்றால் ஸம்ஸாரத்தில் ஆள் பற்றாதென்று அவனெளிமையை உபபாதித்துக்கொண்டு போந்தோம்’; அது தானே இவர்களுக்கு ‘இத்தனையெளியனோ!’ என்று விடுகைக்கு உடலாயிற்று; அவ்வெளிமை தானே ஆதரிக்கைக்கு உடலாயிற்று உமக்கொருவருக்குமேயிறே” என்று எம்பாரைப் பார்த்து உடையவர் அருளிச் செய்தருளினாராம்.”



“திருப்பாவை ஜீயர்” என்கிற அஸாதாரணப் பெயர் எம்பெருமானாருக்கு உண்டு, “உந்துமதகளிற்றன்” என்ற பாசுரம் எம்பெருமானார் விசேஷித்து உகந்தருளினதென்று நம் முதலிகள் மிகவும் ஆதரித்துப் போருவர் என்பதை இவண் நினைக்க.

“இன்னமுத மூட்டுகேன்”; “வாழிபரகாலன்”; “முந்துற்ற நெஞ்சே” என்ற தனியன்கள் எம்பெருமானார் அருளிச் செய்தார் என்ப.

## திருமேனித் தோற்றம்

எம்பெருமானாருடைய திருமேனித் தோற்றமே நெஞ்சைக் கவர்வதாயிருக்கும். “பெரும்பூதூர் முக்கோல் பிடித்த முனி” என்பது இயல் சாத்து, “அறம் மூன்று கால் குன்றுங்கால் முக்கோல் பிடித்து உலகில் ஊன்றும் காலாக்கு மூதாம் நகர்” என்கிறபடியே, அவைதிகரான ஏகதண்டிகளை நிரஸிக்கைக்காக வைதிகோத்தமரென்னுமது தோற்ற த்ரிதண்டதாரணம் பண்ணி இராமாநுச முனியென்னும் திருநாமத்தையுடையவரானவர். “ஐங்கோலுமொருகோலு நீர்க்கோலம் போல் அழிய முனிந் தறு சமய மகற்றி எங்கள், செங்கோலே யுலகனைத்துஞ் செல்ல முக்கோல் திருக் கையில் கொள் எதிராசன்” என்பது சீரங்க நாயகருசல். உடையவர் மன்மத பாணங்கட்கு இலக்காகாது விரக்தராய் அத்வைத நிரஸநஞ் செய்து வேத பாஹ்ய மதங்களின் கொண்டாட்டத்தையும் ஒழித்து, உலகமெங்கும் ஸ்ரீ வைஷ்ணவ மதத்தைப் பரவச் செய்து தமது ஜயஸ்தம்பத்தை நாட்டினார் என்பது இதன் தாத்பர்யம்.

## அருங்குணங்கள்

எம்பெருமானார் கருணை மூர்த்தி என்றால் எள்ளளவும் மிகையாகாது. அவருடைய அடியார் ஜ்ஞான பக்திகள் அவர் திருவடிகளில் ஊன்றி நிற்கும்; கரணங்கள் அவரது திருக் குணங்களில் ஈடுபட்டுக் கைங்கரியம் பண்ணத் தொடங்கும்; அவரது கடாக்ஷமாத்ரத்தாலே பூர்வ ஸஞ்சித பாபங்கள் எல்லாம் பறந்துபோம். அஸத்துக்களோடே பழகிக் கிடந்

தாலும் அவர் சம்பந்தம் பெறின் நிறைபுகழோருடனே ஒருவனாக எண்ணலாம்படி ஒரு பொருளாக்கி வைப்பர். மேலும் அவரிடத்து அநேக உத்தம குணங்கள் நிறைந்திருந்தன. வண்மை, மாதகவு, மதிபுரையும் தண்மை, விலக்ஷணமான ஞானத்தை உபதேசிக்கும் வன்மை, முதலிய ஆத்ம குணங்கள் அனைவரையும் அவரிடம் ஈடுபடும்படி செய்ய வல்லனவாயிருந்தன. பிறர் மனத்துள் புகுந்து மறைந்து நின்று அஹங்காரம், மமகாரம் முதலிய மனக் குற்றங்களை அடங்கலும் அகற்றி இவ்வகையாலே மெதுவாகத் திருத்தி பகவத் விஷயத்திலே ஆட்படுத்தி விடுவார். தெரிவற்ற ஞானம் செறியப்பெறாது வெந்தீவினையால் உருவற்ற ஞானத்துழல்கின்றவரையும் ஒருக்ஷணப் பொழுதில் ஒப்பற்ற பஹுச்ருதனாக ஆக்கி விடுவார், ஐயன் இராமாநுசனின் வண்மை மிக வலியது. அவரை ஆச்ரயித்தோர் மனம் உருகிவிடும்; நா அவர் திருநாம சங்கீர்த்தனத்தில் ஆழ்ந்து விடும்; கைகள் அவருக்கு அஞ்சலி பண்ணுவதில் ஆழும்; கண்கள் இன்று போல் என்றும் ஸேவிக்க ஆவல் கொள்ளும்.

## எம்பெருமானார் தரிசனம்

யதிராஜர் தமது திருவடி சம்பந்தந்தான் பின்புள்ளோரும் தமது திருமுடி ஸம்பந்தத்தால் முன்புள்ளோரும் ஈடேறுமாறு குரு பரம்பரையில் நடுநாயக மணியாய்ச் சிறந்து நிற்கின்றார். இவரது சம்பந்தம் பெற்ற காரணத்தால் ஸ்ரீ வைஷ்ணவ சமயம் ‘எம்பெருமானார் தரிசனம்’ என்று சிறப்பித்துக் கூறப்படுகிறது. ‘ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம்’ என்றும் வழங்கப்பட்டு வருகின்றது. “எம்பெருமானார் தரிசனமென்றே யிதுக்கு, நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார் அம்புவியோர் இந்தத் தரிசனத்தை எம்பெருமானார் வளர்த்த அந்தச் செயலறிகைக்கா” என்ற பாசுரத்தால் ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களை இயற்றி ஸ்ரீராமாநுஜரால் பரிபாலனம் செய்யப்பட்ட ஸித்தாந்தம் என்பதும், அவரால் புதிதாக ஏற்படுத்தப்பட்டமதம் என்று சிலர் கூறுவது பொருத்தமற்றதென்றும் தெளிக. போதாயந மஹர்ஷியினால் அருளப்பட்ட விரிவான ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்தி க்ரந்தத்தைப் பூருவர்கள் ஸங்க்ரஹித்தருளினர்; அவர்களது கொள்கையைப் பின் பற்றி ப்ரஹ்ம ஸூத்ர வியாக்யானம் செய்யப் புகுவோம் என்று இவர் தாமே ஸ்ரீ பாஷ்யத்தின் உபக்ரமத்திலே அருளிச் செய்திருப்பதால் இது அநாதி மதம் என்பது கையிலங்கு நெல்லிக் கனி.

## எம்பெருமானார் திருவடிகளே சரணம்

எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்று இருப்பவர்க்குத் தான் மோக்ஷலோகம் ஸித்திக்கும் என ஆன்றோர் கூறுப. “எம்பெருமானார் திருவடிகளைத் தொழவே, திவ்ய தேசங்களெல்லாம் திருவடி தொழுதானாகக் கடவன்; உடையவரை ஆராதித்து அமுது செய்யப் பண்ணவே, எல்லாத் திவ்ய தேசங்களி லெம்பெருமான்களையும் ஆராதித்து அமுது செய்யப் பண்ணினானாகக் கடவன்;”

“நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும் நிறை வேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்த நாடும் குலவிய பாற்கடலும்
உன்றனக் கெத்தனை யின்பந்தரு முன்னிணை மலர்த்தாள்
என்றனக்குமது இராமாநுசா இவை ஈந்தருளே”

என்று அமுதனார் பிரார்த்தித்தபடி எம்பெருமானார் திருவடிகளே நமக்குச் சரணாவன.

## முடிவுரை

“ஏற்றி மனத்தெழில் ஞான விளக்கை யிருளனைத்தும் மாற்றினவர்க் கொரு கைம்மாறு மாயனுங்காணகில்லான், போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ், சாற்றி வளர்ப்பதுஞ் சற்றல்லவோ முன்னம் பெற்றதற்கே” என்றபடி பெரும்பூதூர் வந்த வள்ளலாய நம் எம்பெருமானார் செய்துள்ள நன்மைகட்கு நம்மால் செய்யக் கூடிய கைம்மாறு ஒன்றுமே இல்லை என்னலாம். அப்பெரியார் அரும்பாடு பட்டு போற்றி வளர்த்த தர்சனத்தை நாள்தோறும் நன்கு பரிபாலிப்பதே நம்மவர் முதற் கடமையாகும். ஸ்ரீ பாஷ்ய ப்ரவசனம் அத்யாவசியகம். இக்காலத்து ஸ்ரீ பாஷ்யாதிகாரிகள் குறைந்து கொண்டே வருகின்றனர். அஃது அப்படிக்கில்லாதவாறு செய்தலே நமது முதற் பணியாம். பல துறைகளிலும் பயின்று நம்மவர் அனைவரும் சம்ப்ரதாயத்தை நன்குணருமாறு செய்வித்தலே அறிஞர் கடன். நாளுக்கு நாள் க்ஷீண மடைவதில் பயனில்லை. பிறர் மனம் நோவடையுமாறு செய்யாமல் நெற்செய்யப் புற்றேயுங்கணக்கிலே அனவரதம் எம்பெருமானார் தரிசன முன்னேற்றத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்து கைங்கர்யம் இயற்றுவதே நம்மிராமாநுஜனுக்குச் செய்யும் சீரிய தொண்டாகும்.

துறவிகட் கிறையவன் றூயதாளிணை
பிறவி யறுத்திடு மென்ற பெட்பினால்
அறவழி நின்ற அம் மா முனிவனும்
பிறவழி யகற்றியே பீடு பெற்றனே.

---

# ஸ்ரீ ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா

[ஸ்ரீ உப. T. D. ஸ்ரீநிவாஸாசார்யார், M. A., M. L.,
அட்வொகேட், சென்னை.]

उपवीतिनमूर्ध्वपुण्ड्रवन्तं त्रिजगत्पुण्यफलं त्रिदण्डहस्तं ।
शरणागतसार्थवाहमीडे शिखया शेखरिणं पतिं यतीनां ॥

## (1) அவதார வைபவம்

'जगतिविततं मोहनमिदं' என்று வேதத்துக்கும் நியாயத்துக்கும் நேர் விருத்தமாய் உலகெங்கும் பரவியும் மோஹத்தையும் விளைவிப்பதுமான ப்ரபஞ்சம் முழுதும் பொய் என்பதாகிற அபஸித்தாந்தமான அந்த காரத்தை போக்கடிப்பதன் பொருட்டே, மூவுலகும் செய்த புண்யத்தின் ஹேமாய்வையமெலாமிருள் நீக்க மணிவிளக்காய் தேசமெலாம் உகந்திடவே பெரும்பூதூரில் சித்திரைதன் ஆதிரைநாள் வந்துதித்தார்; பகவத் பாஷ்ய காரர். பூர்வம் த்ரிதண்டதாரியான தத்தாத்ரேயர் त्रयी தர்மத்தை ரக்ஷித்தாப் போல, இவரும் त्रिदण्डं वैष्णवं लिङ्गं என்கிறபடியே முக்தி ஸாதனமான த்ரி தண்டத்தை தரித்து யதிஸார்வபௌமராய் அவதரித்து வேதபாஹ்ய குதிருஷ்டிகளை நிரஸனம் செய்தார். ஸ்ரீ பகவான் தன்னுடைய லீலா ரஸ விருத்திக்கு உறுப்பாய் இக்கலியில் அநுப்ரவேசாவதாரம் செய்து மோஹன சாஸ்திரங்களை செய்விப்பித்து அபார்த்தங்களையும் பரவச் செய்தபோது இதை சகியாமல் சேனை முதலியார் (விஷ்வக்ஸேனர்) ஜகத்ரக்ஷணார்த்தம் यतीन्द्रवेषेण அவதரித்தார் போலும். அப்போது அவருடைய வேத்ர தண்டம் உடையவருடைய த்ரிதண்டமாகவே ஆவிர் பவித்தது. அன்றிக்கே, ஆபரண கோடியிலும் ஆயுத கோடியிலும் சேர்ந்த பஞ்சாயுத ஆழ்வார்களே பகவானிடத்தில் பக்தியை அபிவிருத்தி செய்வதற்கும், பரமத நிரஸம் செய்வதற்கும் எம்பெருமானாராகவே அவதரித்தார்களாம். ववृधे पञ्चभिः आयुधैः मुरारेः என்று ஸ்ரீ தேசிகனும், "அடையார் கமலத்து........புடை ஆர்புரி சங்கமும் இந்தப் பூதலம் காப்பதற்கு என்று இந்நிலத்து இடையே இராமாநுஜ முனியாயின" என்று அமுதனாரும் உத்ப்ரேக்ஷித்தார்கள். சிலர் இவரை அனந்தாழ் வானுடைய (ஆதிசேஷன்) அவதாரமென்றும் நிர்வஹிப்பதுண்டு. கீதா சார்யனை ஸ்ரிய: பதியே இப்படி ஒரு விலக்ஷணமான அவதாரம் பண்ணி னார் என்பது உபபந்நம். यदुपति ராமாநுஜனாய், கீதாசார்யனாய் தேர்தட் டிலே நின்று அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும் வியாஜத்தால் தன்னு



னுடைய பாரதந்திரியத்தை सर्वलोकसाक्षिक மாய் செய்து பக்தியோகத்தை அவதரிப்பித்தது போல், இப்பவும், யதிபதி ராமாநுஜனாய் ஜகதாசார்யனாய், ஆசார்யகம் வஹித்து, 700 யதிகள், 74 ஸிம்ஹாஸனாதிபதிகள் நடுவில் ஸ்ரிய: பதியின் பாசுரங்களுக்கு உண்மையான அர்த்தங்களை வெளி யிட்டருளினார். இந்த அவதார ரஹஸ்யத்தை ஒரு சமத்கார ஸூக்தி யாலே அநுபவித்தார் நிகமாந்த தேசிகன்

शमितोदय शंकरादि गर्वः स्वबलादुद्धृत यादवप्रकाशः ।
अवरोपितवान् श्रुतेः अपार्थान् ननु रामावरजः स एव भूयः ॥

ராமாவரஜ: [பலராமனுடைய திருத்தம்பியான கண்ணன்: பக்திலக்ஷ்மி யோடு கூடின லக்ஷ்மண முனியாகிற உடையவர்], ஶமிதோதய ஶங்கராதி கர்வ: [ருத்ராதிகளுடைய கர்வத்தை அடக்கினவர்: சங்கராசார்ய பிரபிருதி களின் மதங்களை பங்கம் பண்ணினவர்], உத்ருத யாதவ ப்ரகாஶ: [யாதவர் களுடைய பிரகாசத்தை உத்தாரணம் செய்தவர்: யாதவப் பிரகாசர் என் கிற புறச்சமய ஆசிரியரை திருத்தி வைஷ்ணவ ஸ்ரீயால் பிரகாசிக்கும்படி செய்தவர்], அவரோபிதவான் ஶ்ருதே: அபார்த்தான் [பார்த்த விரோதி களான துர்யோதநாதிகளின் வார்த்தையே காதில் விழாமல்படி செய்த வர், வேதத்துக்கு விபரீதார்த்தங்களை நிரஸித்தவர்]—किं बहुना-समस्त कल्याणगुण महोदधि யான ஸ்ரிய: பதியின் குணங்களுக்குள் ஆச்ரிதரை ரக்ஷிப்பதற்கு முக்கியமான கருணை என்கிற குணமே உருவம்கொண்டு உடையவராக அவதரித்தது எனச் சொல்வது சாலவும் பொருந்தும். स जयति यतिराजमुनिः करुणाजलधिः क्षमापरिष्कारः என்று ஸ்ரீ உடை யவருடைய கல்யாண குணங்களை அநுபவித்தவாறே பேசுகிற ஸ்ரீ தேசி கன் மங்களா சாஸனம் செய்தருளினார்.

## பகவத் ராமாநுஜ தர்சனத்தில் சில முக்கியாம்சங்கள்

தத்வங்கள் மூன்று. சித், அசித், ஈச்வரன்: இவை மூன்றும் ஸத்யம். சித்தையும், அசித்தையும் சரீரமாகவுடைய ஈச்வர தத்வம் ஒன்றே. பக்தி, பிரபத்தி இவைகளால் ஸ்ரிய: பதியான ஶரண்யன் திருப்தியடைந்து, தன்னை அடைவிப்பதற்கு தானே உபாயமாகிறான். ஆயுள் உள்ள வரையில் சாஸ்திரத்தில் விதித்தபடி வர்ணாச்ரமங்களுக்கு அநுகுணமாய் கர்மாநுஷ்டானங்களை பகவத் கைங்கரிய ரூபமாய் செய்து அப்ராக்ருதஸ்தானவிசேஷமான பரம பதத்திலே ஸ்ரிய: பதியின் சரணா ரவிந்தங்களில் நித்ய கைங்கரியம் செய்வதே பரம ப்ராப்யம். இதுதான் ச்ருதி சிரஸ்ஸான உபநிஷத்துக்களின் நிர்த்தாரணம். இதுவே வையா ஸிக ஸித்தாந்தம். இதற்கு அநேக குதிருஷ்டிகளாலே பல கலக்கங்கள்

ஏற்படவே, பகவத் போதாயந, டங்க, த்ரமிட, குஹதேவ, கபர்தி பாருசி முதலியோரின் கிரந்தங்களை அநுசரித்து, உபநிஷத் விஷய வாக்யங்களுக்கு வ்ருத்தி ரூபமாய் வேதார்த்தஸங்க்ரஹத்தையும், வ்யாஸ ஸூத்ரங்களுக்கு ஸ்ரீ பாஷ்யம், ஸாரம், தீபம் இவைகளையும் அருளிச் செய்தார். இவைகளில் அநேகமாய் பரமதங்கள் கண்டிக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாய் பிரபஞ்ச மித்யாத்வ வாதம் நிரஸனம் செய்யப்பட்டுள்ளது. நிரதிசய பக்தி செய்யவேண்டுமானால் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாக்களுக்கும் ஐக்யாநுஸந்தானம் செய்வது பொருந்தாது. ஐக்யபக்ஷத்திற்கு, ஜீவாத்மாக்கள், கண்ணாடியில் பிரதி பிம்பம்போல் ப்ரதீய மானங்கள் என்பது ஒரு முக்கிய கொள்கை. ஐக்யபக்ஷிகள் பிரம்மத்துக்கு ஸ்வரூப திரோதாந விவித விக்ஷேபங்களை செய்கிறதும் ஸதஸதநிர்வசநீயமாயுமிருக்கிற அநாதியான அவித்யா மூலமாய் அஜ்ஞாந கல்பநம் செய்கிறார்கள். இதனால்தான் ஸர்வஜகத்தும் ப்ரம்மத்தினிடத்தில் பரிகல்பிதமாயிருக்கிறது என்கிறார்கள். இப்படியாகில் பரமாத்மா சாஸ்திரங்களை உபதேசிப்பதெல்லாம் அவருடைய பிரதி பிம்பங்களுக்கா? சிக்ஷை செய்வதும் அநுக்ரஹம் செய்வதும், பிரதி பிம்பங்களையா? प्रियो हि ज्ञानिनोऽत्यर्थं अहं स च मम प्रियः என்று ஈசுவரன் மோஹத்தை அடைவது பிரதி பிம்பத்தின் பொருட்டா? கிரீக் (Greek) கால்பனிக கதையில்தான் Narcissus என்று ஒரு யுவா தன் பிரதி பிம்பை பார்த்து மோஹித்து அதே சிந்தையுடையவனாய் உயிர் துறந்தான் என்று படித்திருக்கிறோம். இது தவிர்த்து இந்த மிருஷா வாதிகள் பக்கலில்தான் கேவலம் பிரதி பிம்பத்தின் வைபவத்தைக் காண்கிறோம்: இச்சமயத்தோர் ஸ்வகோஷ்டியில் ரமணீயமாய் இந்த அநிர்வசநீய பாவத்தை உபந்யஸிக்கலாமே ஒழிய, அநுஷ்டானத்தில் இவர்கள் பேதத்தை ஒப்புக்கொள்பவர்களே. ஆனால் இக்கொள்கையை தழுவினவர்கள் அதிகமாக யிருக்கிறார்கள். சில பாச்சாத்தியர்களும் வேதாந்த தர்சனமென்றால் அத்வைத மதம் தான் என்று கருதுகிறார்கள். அது தான் சித்தாகர்ஷகமாயும், அளவிட முடியாத புத்தியின் வ்யவஸாரணத்துக்கு விஷயமாயும், அதி கம்பீரமாயும், யுக்தி யுக்தமாயும், அதிக கூர்மையான புத்தியுள்ளவர்களுக்கு திருப்தியை உண்டுபண்ணக் கூடியதாயும் இருப்பதாக நினைக்கின்றனர்.

இராமாநுஜ ஸித்தாந்தம், ஜீவனுடைய दासत्व पारतन्त्र्य किंकरत्वादिகளாலே கொஞ்சம் குறைவு பட்டது தான் என்று அவர்களின் அபிப்பிராயம். இதற்கு ஒருவகையான சமாதானம், இவ்வியாஸத்தில் கீழ்ஸூசிக்கப் பட்டிருக்கிறது. (வேறு அவஸரத்தில் இதைப்பற்றி விசாரிப்பது உசிதமாகும்). இந்த நிர்குண பிரம்மாத்மைக வாதத்திற்கு பக்க பலமான இதர



பக்ஷங்களையும் முக்கியமாகவே ஸ்ரீ பாஷ்யத்தில் உடையவர் நிராகரணம் செய்திருக்கிறார். இம்மதத்தை, பக்ஷபாதமன்றியில் ருஜுமார்க்கமாய் அதி கம்பீர शब्द ஸந்தர்ப்பத்துடனும் அநேக உபபத்தியுடனும், பல ப்ரமாண பலத்தாலேயும் மஹா பூர்வ பக்ஷத்தில் அநுவதித்திருப்பது அந்யாத்ருசம். இம்மாதிரி புறச்சமயத்தோர் எதிரியின் மதத்தை அநுவதித்திருப்பது நாம் எங்கேயும் கண்டிலோம். அத்வைதிகளுக்குமே இது மிகவும் அபிநந்தநீயமென்பது நிஸ்ஸந்தேஹம். மஹா பூர்வ பக்ஷம் முடியும் இடத்தில், ஸ்ரீமத் ராமாயணத்தில் ராம வாலி ஸம்வாதத்தில், வாலி தன்னைக் கொன்றது நியாய விரோதமென்று பஹு பிரமாண புரஸ்ஸரமாய்ச் சொல்லி ஸ்ரீராமனை அதிக்ஷேபித்து வார்த்தையை முடித்து "உம்மால் முடியுமாகில் உத்தரம் அளிக்கலாம்" (उत्तरं साधु चिन्त्यतां) என்று ஸ்ரீராமனுக்கு சொன்ன பிரகரணம் நினைவு மூட்டப்பட்டிருக்கிறது. இதற்கு ஸ்ரீராமன் என்ன பதில் சொல்லப்போகிறார் என்று மந்தமதிகளான நமக்கு சங்கை உதிப்பதுபோல், மஹா பூர்வ பக்ஷத்திற்கு பாஷ்யகாரர் எவ்வித சமாதானம் அருளிச் செய்யப்போகிறார் என்று சிறிது ப்ரமித்தே நிற்கிறோம். பிறகு மஹா ஸித்தாந்தத்தை ஆரம்பித்து பரமதங்களின் ஒவ்வொரு அம்சத்தையும் நிரஸித்து தம்முடைய பக்ஷத்தை உபந்யஸித்திருப்பதின் அழகை நாம் என்னவென்று சொல்லுவோம். அது ஸஹ்ருதயைகவேத்யமே.

ஸர்வ பிரமாணங்களும் ஸவிசேஷ விஷயங்கள். யதார்த்தம் ஸர்வவிஜ்ஞாநம் என்கிற நியாயங்களைக்கொண்டு, ஜீவ பரமாத்மாக்களுக்கு சரீராத்ம பாவேன तादात्म्यं என்றும், பிரம்மத்துக்கு ஜீவாத்மா சரீரமாயும் ப்ரகாரமாயுமிருப்பதால், பிரம்மத்தை ஆத்மாவாக உடையவன் என்றும், निरस्त समस्तदोषனாயும் अनवधिकातिशयासङ्ख्येय कल्याण गुणனாயும் जगदुदय विभव लयलीलனாயுமுள்ள ஸ்ரீமந் நாராயணனே परंतत्वं என்றும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

பலர் பல பாஷ்யங்கள் செய்திருக்க, பதஞ்சலி மஹர்ஷி செய்த பாஷ்யத்திற்கு மஹா பாஷ்யமென்று பெயர் வாய்ந்ததுபோல் இவருடைய பாஷ்யத்துக்கு அஸாதாரணமாய் ஸ்ரீ பாஷ்யம் என்று பெயர் சூட்டப்பட்டது. क्षरन्ति अमृतं अक्षरं यतिपुरन्दरस्य उक्तयः (உடையவர் ஸ்ரீ ஸூக்திகள் அமிருதத்தை பொழிகின்றன.) अव्याज विदग्ध मुग्धमधुरं सारस्वतं शाश्वतं (யாதொரு காரணமுமின்றிக் கம்பீரமாயும் அழகாயும் இனிப்பாயும் சாச்வதமாயும் இருக்கிறது) என்று பரவசமாக இதில் ஸ்ரீ தேசிகன் ஈடுபட்டார். कपर्थि विदुषां एषा प्रौढी श्रियः प्रभुणा शपे (ஸத்யமாய்

சொல்லுகிறேன். இம்மாதிரியான நிரதிசய போக்யத்வம் வேறு எந்த வித்வத் சிகாமணிநடையிலும் கிடையாது) என்று நடாதூர் அம்மாளும் தன் மனோரதத்தைக் காட்டியுள்ளார்.

இந்த பகவத் ராமாநுஜ தர்சனத்துக்கு மற்றொரு விசேஷாகாரம் உண்டு. ஸகல ஜீவன்களும் ஸகல வஸ்துக்களும் பகவானுக்கு சரீரமாய் இருந்து அவனையே ஆத்மாவாக உடைத்தா யிருக்கின்றனபோல், உலகத்தில் எல்லா சப்தங்களும்அந்த சப்தங்களால் வழக்கமாய் அறியப்படுகிற வஸ்துக்களையும் அவை வழியாக அவைகளுக்கு அபிமானியாயுள்ள ஜீவாத்மாக்களையும் அந்த ஜீவாத்மாக்களுக்கு அந்தர்யாமியான பகவானையும் சொல்லும். இதுதான் **सर्वेषां शब्दानां परमात्मपर्यन्तत्वं ; सर्वशब्द वाच्यत्वं** என்பது. **वचसां वाच्यमुत्तमं** என்றல்லவோ பகவான் நிர்த்தேசிக்கப்பட்டிருக்கிறார். இப்படியானால் பசு, பக்ஷி என்று லோகத்தில் வியவஹரிக்கும் போது வ்யுத்பத்தி கிரமத்தால் அம்சங்களால் பிரஸித்தமான பசு பக்ஷி இவைகளைத்தானே குறிக்கிறோம். பகவத் பர்யந்தமான ஒருவித அர்த்தமும் கிரஹிக்கப்படவில்லையே எனில், வாஸ்தவமே. லோகானுபவத்தில் வருகிற இந்த ஏகதேச வ்யுத்பத்தியானது பூர்ணமாகிறபோது ப்ரம்ம பர்யந்தம் கிரஹிக்கும். **वेदान्त श्रवणेन च व्युत्पत्तिःपूर्यते** (வேதாந்த சிரவணத்தால் வ்யுத்பத்தியானது பூரணம் செய்யப்படுகிறது.) **व्युत्पत्तेः प्रणं हि श्रुति शिरसिकृतं नापरोधः कथंचित्** (இதனால் ஒவ்வொரு சப்தத்துக்கும் லோகாநுஸாரம் வழக்கமான பொருளைச் சொல்வதான வ்யுத்பத்தியானது பாதிக்கப்படவில்லை) என்று தேசிகனும் அருளிச் செய்திருக்கிறார். இந்த ரீதியில் அசேதன வஸ்துக்களில் கூட ஜீவன் இருப்பதாகவே கொள்ள வேண்டும். ஆனால் அவைகளில் சைதன்யம் மிகவும் ஸ்வல்பமாகவே யிருக்கும். இவ்வபிப்பிராயத்தை **ब्रह्मात्मकजीवानुप्रवेशादेव कृत्स्नस्य अचित् वस्तुनः पदार्थत्वं** என்று உடையவர் அருளிச் செய்தார். (ஒருவிதமான ஆகாரத்தோடு கூடியதாகவே இருக்கிற வஸ்துக்களெல்லாம் பிரம்மாத்மக ஜீவாநுப்ரவேசத்தாலேதான் பதார்த்தமா யிருக்கும் தன்மையை அடைகிறது.) இந்த ஸர்வசப்தவாச்யத்வம் அக்ஷபாத தர்சனம் முதலிய சில வேறு தர்சனங்களில் ஒப்புக்கொள்ளப்பட்டாலும், அதற்கு ஸாத்ய ஸாதக பாவத்தாலே ரொம்பவும் அநுகுணமானதும் அதிஸ்வாரஸ்யமாயுமுள்ள ச்ரீராத்ம பாவம் நம் தர்சனத்துக்கு அஸாதாரணமான பிரதி தந்திரம். இம்மாதிரி, இவர் ஸர்வயோக ஹிதைஷிணியான தர்சனத்தை ஸ்தாபித்தவராகையாலே இந்த தர்சனத்துக்கு இராமாநுஜ தர்சனமென்று பெயர் வந்தது. இதற்கு முக்யாம்சமான பிரபத்திவித்யை அநாதியாகயிருந்தபோதிலும், இவர் இதை விசேஷேண ப்ரவர்த்தனம் செய்தார். தவிரவும் இவர் பாமன்னு மாறனடி



பணிந்துய்ந்தவர். பனுவற்கு எல்லாம் தாய் என விருக்கிற த்ராவிடவேத ஸம்ஹிதையான திருவாய் மொழியின் உட்கருத்தைக் கொண்டிருப்பதால் இத்தர்சனத்திற்கு அநிதர சாதாரண மேன்மை ஏற்பட்டிருக்கிறது. தாம் இப்படியே தர்சனப் பிரவர்த்தகராக ஆனது மன்னியில் பின்புள்ளோரும் உஜ்ஜீவிக்கவேண்டுமென்று தம்மாலே அநுஷ்டிக்கப்பட்ட நியாஸ வித்யையையும், தாம் செய்த ப்ரபதனத்தாலே பிரஸன்னரான ஸ்ரிய: பதி செய்த அபயப்ரதானத்தையும் சேர்ந்து **गद्यत्रय** மாய் அருளிச் செய்தார். தம்முடைய அடங்காப் பத்திப் பெருங்காதலுக்கு போக்கு வீடாய், **अमृताब्धि परीवाह शुभैर्वचोभिः** என்கிற கணக்கிலே இது அவதரித்தது என்றே சொல்ல வேண்டும். இதை **लक्ष्मीपतेः यतिपतेश्च संवाद एष शरणागति मंत्रसारः** (சரணாகதி மந்த்ரத்தின் ஸாரபூதமாய் பகவானுக்கும் உடையவருக்கும் நேரில் ஏற்பட்ட ஸ்வயம் பிரயோஜனமான ஸம்வாத விசேஷம்) என்று நிகமாந்த மஹாதேசிகனும் ஸாதித்தருளினார்.

## பாஷ்யகாரருடைய திவ்யாஜ்ஞை

இப்படி ஆபாதசூடமநபாயியான தர்சனத்தைப் பெற்று நம் பாரதநாடு, வேறு எத்தேசத்தாருக்கும் கிடைக்காத பெரும்பாக்யத்தையும் ஏற்றத்தையும் அடைந்திருந்தும், சில **पाश्चात्य निपुण**ர்கள் வேதாந்தமதம் தான் நம் தேசத்தின் தாழ்மை நிலைமைக்கு காரணம், அம்மதத்தை அநுஸரிப்பதால் பௌருஷமே குறைந்து விடுகிறது. பிரபஞ்சம் மித்யை என்கிற கொள்கையினால் லோகஹித கார்யாநுபந்தங்களில், நிரந்தரமாய் ப்ரவிருத்தி உண்டாகிறதில்லை. வேதாந்திகள் ப்ராயேண ஸ்வப்ந தர்சிப்பிராயர்கள் (dreamers). அதிலும் ராமாநுஜ மதஸ்தர்கள் பரபத்தி சாஸ்திரத்தை அவலம்பித்துக் கொண்டும், **उपदेशात् हरिं बुद्ध्वा विरमेत् सर्वकर्मसु** என்று சொல்லிக் கொண்டு வ்யவஸாய பராங்முகர்களாயும் **उत्साह विमुख**ர்களாயும் இருக்கிறார்களென்றும், இப்புடைகளில் மேலெழுந்தவாரியாய் நம் தேசத்து வித்யாப்ரகாரங்களை கண்டித்து தமது இஷ்டம்போல், குணதோஷ விவேசனம் செய்கிறார்கள். மற்றும் நம் தேசத்திலேயே சிலர் பகவத் ராமாநுஜர் உதார சித்தர், ஜாதி பேதமில்லாமல் மந்த்ரார்த்தங்களை உபதேசித்து, த்வயத்தை ஸர்வாதிகாரமாக செய்தார். அவ்வளவு **चित्तौदार्य** மில்லாத பின்புள்ளோர்கள் அநேக பேதங்களையும், ஜாதி வித்தியாசங்களையும், ஆசாரங்களையும் கல்பித்து இம்மதத்தைக் கெடுத்து விட்டார்கள் என்றும் சொல்லப் புறப்படுகிறார்கள். இதற்கெல்லாம் ராமாநுஜ தர்சனத்தின் உட்கருத்தை உய்த்துணர்ந்தவர்களால் எளிதில் சமாதானம் அளிக்கக்கூடும். சர்வசேதனவஸ்துவும் பகவத் சரீரமாகையால் இவைகளுக்குள் உத்கர்ஷமும் அபகர்ஷமும் வைஷம்யமும் இருக்க பிரஸக்தியே யில்லை. பக

வத் ஸங்கல்பத்தாலே உபாதியடியாக வந்த வர்ணாச்ரமங்களுக்கு உசிதமான கர்மங்களை த்யஜிக்க வொண்ணாது இவைகளை ஸ்வயம் பிரயோஜனமாய் பகவதாராதனரூபமாய் ஹாநிஸங்கதியில்லாமல் செய்ய வேண்டும். ஆனால் பிரயோஜனத்தை உத்தேசிக்காமல் செய்யச்சொல்லவில்லை. **प्रयोजनं अनुद्दिश्य न मन्दोऽपि प्रवर्तते.** காரியத்தைச் செய்துவிட்டால் பலன் தருவது ஸரண்யன் பொருப்பு. இக்கர்மாநுஷ்டானத்தை எப்போதும் விடக்கூடாதென்பதை உடையவரும் அந்திம தசையில் வருந்தி எழுந்திருந்து ஜலாஞ்ஜலி ப்ரக்ஷேபம் செய்து அநுஷ்டித்துக் காட்டியருளினார்.

“சேம நல்வீடும் பொருளும், தருமமும் சீரிய நற்காமமும் என்றிவை நான்கு என்பர். நான்கிலும் கண்ணனுக்கே ஆமது காமம்: அறம், பொருள், வீடு, இதற்கே” என்றபடியே தர்ம, அர்த்த, மோக்ஷ புருஷார்த்தங்கள் மூன்றும் பெரும் காதலுக்கு சேஷ பூதங்களே. இந்த நற்காமத்தையும் பரமபதத்திலே நித்ய கைங்கரிய ஸாம்ராஜ்ய பர்யந்தமாக அறியவேண்டும். பகவத் கிருபையினால் சேதநன் வரணீயனாகிறான். அதனால் பகவானுக்கு அவன் ப்ரியதமன், பகவானை வசீகரணம் செய்வதற்கு உபாயம் அவனிடம் சரணாகதி பண்ணுவதே. இதுதான் பத்திவெள்ளம் குடிகொண்ட கோயில் இராமாநுஜனுடைய திவ்யாஜ்ஞை. லௌகிக தர்மத்தில் பிரவர்த்திக்கும்போது எவருக்கும் எவ்வித விரோத மன்றியில் நடந்துகொண்டு, லோக ஹிதத்தையே முக்கியமாகக்கொண்டு வர்த்திக்கக் கடவன் ஸ்ரீவைஷ்ணவன். பகவத் கீதையிலும் **यस्मान्नोद्विजते लोकः लोकान्नोद्विजते च यः स च मे प्रियः** என்கிற விடத்தில் **यस्मात्=संन्यासिनः** என்று இதர்களால் வ்யாக்கியானித்ததை அங்கீகரியாது **यस्मात्=कर्मनिष्ठात्** என்று இந்த ச்லோகத்தை உடையவர் கர்ம நிஷ்ட பரமாக:உபபாதனம் செய்திருப்பது அதிக ஸ்வாரஸ்யம். (கர்மங்களைச் செய்யுங்கால், எவனிடமிருந்து ஜனங்கள் பயத்தை அடைவதில்லையோ, எவன் ஜனங்களிடமிருந்து எவ்வித பயத்தையும் அடைகிறதில்லையோ, லோகத்தாரால் க்ஷிரோயிசேவன எவன் நிச்சயிக்கப்படுகிறானோ அவன்தான் எனக்குப் பிரியன்) என்பது ஸ்ரீ தேசிக வ்யாக்யான சைலீ.

எல்லா பிரயத்தினங்களையும் கர்மாக்களையும் ப்ரேமபுரஸ்ஸரமாய் **अनादिनिधन**ரான ஸர்வேச்வரனுக்கு கைங்கர்ய ரூபமாய் செய்தால் அவைகள் தாமாகவே லோகஹிதாபிவிருத்தியை உண்டுபண்ணுவது மல்லாமல் நமக்கும் ஆநந்தத்தை அளிக்குமென்பதில் சந்தேகமில்லை. இது விஷயமாய் **प्राचीन पाश्चात्य तत्त्वज्ञानि** யொருவர் சொல்லியிருப்பது நினைக்கத்தக்கது. Says Spinoza, “Happiness or unhappiness depends on the quality



of the object which we love. Love towards a thing eternal and infinite feeds the mind wholly with Joy and is unmingled with any sadness.”

இப்படி பகவத் பாஷ்யகார ஸம்பிரதாயத்தில் அந்வயம் பெற்ற மஹா பாக்யத்தை அடைந்த ஸ்ரீ வைஷ்ணவர்களான நாம் எத்தவம்தான் புரிந்தோமோ. உடையவர் திருவடி சம்பந்த மகிமையை “**तदनुबन्ध मदावलिप्त**” என்று பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண **धूर्व**ஹரான நிகமாந்த மஹாதேசிகனும் அதிகம்பீரமாய்ப் பேசினார்.

பகவத் திவ்ய குணங்களில் ஈடுபடும் ஸமயங்களிலெல்லாம் உடையவர் **अनालोचित विशेषाशेष लोक शरण्य** என்று துதிக்கிறார் : [ஜாதி, வர்ணம், வித்யை, அநுஷ்டானம், குணம், ஸம்ஸ்காரம், செய்த உபகாரம், செய்யப்போகிற உபகாரம், இப்படிப்பட்ட எவ்வித வேற்றுமையையும் பாராட்டாமல், இடம் பாராமல், தரம் பாராமல், ஸர்வ லோகத்தாருக்கும் சரண்யனாகிறான்.] இப்படி ஸ்வரூபத்திலே யாதொரு வித்தியாசம் அன்றியில் ஸர்வ ஜகத்துக்கும் மோக்ஷம் அளிக்க ஸித்தமாய் இருக்கிறார் என்கிற தத்வார்த்தத்தை, ஸ்ரிய:பதி முன் ஒருகால் **लक्ष्मणपूर्वज**ராக அவதரித்து **साकेत चराचरजन्तुजात**ங்களுக்கு வாசியற திவ்யகதி கொடுத்து அநுஷ்டித்துக் காட்டினதை இப்போது **रामानुज**ராக அவதரித்து அவ்வர்த்தத்தையே இதனால் வெளியிட்டார் என்னத் தட்டில்லை. இம்மஹிமைவாய்ந்த ஸ்ரீ பாஷ்யகாரருடைய ஸம்பிரதாயஸ்தர்கள் அனைவரும் **बोधयन्तः परस्परं** என்கிற கணக்கிலே ரொம்பவும் ஐகமத்யமாய் வர்த்திக்கப் பிராப்தமாயிருக்க இப்போது இவர்களில் சில அல்ப பேதங்களை முன்னிட்டு ஆலயங்களிலும் இதர விடங்களிலும் வைஷம்யம் பாராட்டுவது மிகவும் சோசநீயம். “ஸ்ரீ பாஷ்யகாரருடைய சிஷ்ய ஸம்ப்ரதாயங்களில் ஒன்றிலும் க்ஷுத்விரோயமில்லை. யோஜனாபேதமே யுள்ளது” என்று ஸ்ரீ தேசிகன் அறுதியிட்டதை மறந்தார்கள்.

இவ்வுலகில் பரஸ்பர த்ரோஹ சிந்தையாலும், வைரத்தாலும், நாநா பூதேசு, ஜாதி, வர்க்க, வர்ண குலாதி ப்ரயுக்த த்வேஷங்களால் வைஷம்யம் அதிகரித்து நிராலம்பமாய் ஜனங்கள் தத்தளித்துக்கொண்டிருக்கும் இக்காலத்தில் ஆபாதசூடமைநவாயியானதும் **अखिल तमः कर्शन** மாயுமுள்ள தர்சனத்தை நமக்கு கொடுத்த பகவத் ராமாநுஜருடைய திவ்யாக்ஞையானது **सर्वलोकहितैषिणि** யாகையால் வஹதாம் க்ஷிவஹதாம் என்று ஸர்வதோமுகமாய், திகந்தவ்யாபிநியாய், உஜ்வலமாய் உலகெங்கும் பரவி எல்லோரையும் **कृतार्थ**ர்களாக ஆக்கவேண்டுமென்றுதான் ஸ்ரீ வைஷ்ண ஸ்ரீயை அநவரதம் பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ பகவத் ராமானுஜனும் ஸ்ரீ தேசிகனும்

[ஸ்ரீ. உப. பரவஸ்து. ஸ்ரீநிவாஸாசார்யர்]

(ஶ்ரீ) ப்ரணாமம் லக்ஷ்மணமுநி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம் ।
ப்ரஸாதயதி யத்ஸூக்தி: ஸ்வாதீநபதிகாம் ஶ்ருதிம் ॥

இது ஸ்ரீ பகவத் ராமானுஜனென்னும் எம்பெருமானார் திருவடிகளில் நிர்வ்யாஜமான அன்புள்ள ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன், எம்பெருமானாரிடமுள்ள உள்ளன்பின் வெள்ளத்தின் பரீவாகமாக அருளிச் செய்யப்பட்ட ஸ்ரீ யதிராஜ ஸப்ததியில், பிரதமாசார்யனை ஸ்ரிய:பதி முதலாக ஸ்ரீமத் ராமானுஜனின் பிரதமாசார்யரான பெரிய நம்பிகள் வரையுள்ள ஆசார்யவர்க்கத்தை வணங்கி பின் பாஷ்யகாரரைப்பற்றி அருளிச் செய்யும் நிரவத்யமும் ஹ்ருத்யமுமான பத்யம். இத்துடன் பத்யங்கள் பத்திலும் ஸ்ரீ பாஷ்யகாரரைச் சேர்த்து ஆசாரியர்கள் பதின்மரை அனுஸந்திப்பதைப் பார்த்தால் குருபரம்பரா ஸாரத்தில் "பராங்குச பரகாலாதிரூபத்தாலே அபிநவமாக ஒரு தசாவதாரம் பண்ணி" என்றது போல் அச்சுதனுக்கு இப்படியும் ஒரு தசாவதாரம் உண்டென்று திருவுள்ளமெனத் தெரிகிறது. ஸ்ரீமல் லக்ஷ்மண முனியின் ஸ்ரீ ஸூக்தியென்னும் பெண் செய்யும் அலங்காரத்தால், உபநிஷத்தென்னும் தலைவிக்குத் தலைவன் ஸ்வாதீனமாகிறான் என்றழகாக அருளிச் செய்கிறார். அதாவது பிற மதத்தினர்கள் பரமாத்மாவை சுருதி என்னும் சப்தபிரமாணத்திற்கு கோசரன் அல்லனென்று சொல்வதைத் தவறென பல பிரமாணங்களாலும் அவைகளுக்கு விரோதமில்லாத பிரபல யுக்திகளாலும் ஸ்தாபிக்கும் ஸ்ரீ பாஷ்யாதி ஸ்ரீ ஸூக்திகள் 'வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:' என்று வேதங்களுக்கும் வேத்யனான தமக்குமே முக்யமான (வாச்யவாசக) ஸம்பந்தமுண்டென்று சொல்லும் சரண்ய ஸாரதியையும் ஸத்யவாதியாகச் செய்கின்றன என்று திருவுள்ளம். இயற்கை அழகு பெற்றிருந்தும் சுருதி என்னும் நாயிகை (அங்கராகேண திவ்யேந லிப்தாங்கீ ஜநகாத்மஜே ஶோபயிஷ்யஸி பர்த்தாரம்) அங்கராகம். (சந்தனம்) பூசிய சரீரத்துடன் கணவன் அருகில் சேர்ந்து (அநுராகத்தை) காம சாபல்யத்தை விருத்தி செய்வாய் (மயா த்வம் அநுஜ்ஞாதா ராகவஸ்யாநு வர்த்ஸ்ய ஹ); (ஸ்ரீ ராகவனோடு பின் செல்வாய் அநுமதிக்கிறேன்) என்று அநஸூயையினால்



பிராட்டி அலங்கரிக்கப் பெற்றதுபோல் (அநஸூயாதத்தம்) (பொறாமையற்றவரின் அன்பு) பெற்ற ஸ்ரீ ஸூக்தியால் அனைத்துலகமுடைய அரவிந்தலோசனனைத் தினைத்தனையும் விடாது சொல்லவும் பின் செல்லவும் பெற்றாள். இதனை 36வது சுலோகத்தில்—

விரக்தநவஸாஸ்வாதீ ஜாரவாக்யஶிகா ஸ்ருதி:

(பழங்கிழமான வேதமென்னும் பெண்ணின் முடியைச் சிக்கெடுத்து கோதி முடிந்து அழகு செய்யும் தோழிகள் ஸ்ரீ யதிராஜன் ஸ்ரீ ஸூக்திகள்) என்கிறார். வயது சென்ற பெண்ணையும் அழகு செய்து அவளுக்கு உரிய நாயகன் அணையும்படி இணைக்கும் சாதுர்யம் வாய்ந்த தோழிகளான ஸ்ரீ ஸூக்திகள் வாழி என்று திருவுள்ளம். ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரத்தில் மரதக பத்ததியில்—

தாராலக்ஷம் தவவிதரணம் வீக்ஷணயந்தே ஜரத்யோ
நித்யஶ்யாமாஸ்ஸ்வ மாத தைநந்தி நீநாயவாக:

தாரை என்னும் பெண்ணிடம் ஆசைகொண்ட (ச்லேடை). (பிரணவத்தினால் சொல்லப்படும் அந்த யுவ புருஷனையும் வேத வாக்குக்களென்னும் கிழவிகள் உன்னுடைய (பாதுகையினுடைய) மரகதப் பச்சைக் கற்களால், (நித்யஶ்யாமா:) எப்பொழுதும் மாறாத யௌவன முள்ளவர்களாக எப்பொழுதும் கருத்திருப்பவர்களாக ஆகி ஸந்தோஷப்படுத்துகிறார்கள். ஆழ்வாருடைய திருவாய்மொழிகளால் வேதவாக்குகளாகிய தாய்மொழிகள் நித்யயுவாவான ஸ்ரிய:பதியினிடம் கருத்திருப்பவைகளாய் தழுவுகின்றன என்பது உட்கருத்து. அப்படியே இங்கும் எம்பெருமானாருடைய ஸூக்திகளால் தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோம் என்று திருவுள்ளம். . . . சப்ததியில் 62-வது ச்லோகம். (வந்தே தம் யதிநாம் பதிம் ஶமநாந்தகார ஹராவலோகநம் வாரிவஹாநாம் நிஜஸ்ய பரா மாயா நதீம்யா நயா, ஈத்ரும் யேந தயா ஸம்யாம் ப்ரதிபிநாவ ஈக்ஷா விஶங்கம் வய: காலேந: கரிஶைலக்ருஷ்ணஜலத: காங்க்ஷாயிகம் வர்ஷதி) அஹங்காரமென்னும் இருளழிக்கும் அருள் நிறைந்த கடாக்ஷத்தினால் விரோதிகளின் வழியைத் தடுக்கும் யதிராஜனை வணங்குகிறேன். தயாமிருத ஸமுத்திரமான இவர் தந்த நன்னீரை உட்கொண்டு காலத்தில் கரிசைலத்தில் கறுத்திருக்கும் கார்மேகம் வேண்டுவதற் கதிகமாக பெய்கிறதென்றார். அருளமுதக் கடலான இவர் தந்த அமிருதத்தை (நீரை) உண்டபின்புதான் இவருக்கும் இவரடியாருக்கும் (க்ருதே ச ப்ரதிகர்தவ்யம் ஏஷ (தர்மஸ்ஸநாதந:) (உதவிக்குப் பதில் உதவுவது ஸநாதன தர்மம்.)

என்றபடி அமிருதத்தை (மோக்ஷத்தை) அவனளிக்கிறுன்போலும். இவ் வமுதக்கடல் நீரை உண்டபின்பே அருளாளப் பெருமாள் என்ற திரு நாமம் அவனுக்கு நிரூபகமாயிற்றென்று திருவுள்ளம்.

ஸ்ரீஹஸ்திஶைல ஶிகரோஜ்ஜ்வல பாரிஜாதம்

நம்மிராமானுசன் சாலேக்கிணற்று நீரை வார்த்து வளர்த்த கரிமலேச் சோலே பாரிஜாத மென்றபடி. எம்பெருமானர் யாதவப் பிரகாசரிடத்தில் பூர்வ பக்ஷம் வாசிக்கும் காலத்தில் ஓர் சுருதிக்கு அவர் அபார்த்தம் சொல் லப் பார்த்த இவர் ஆர்த்தபந்துவான பார்த்தஸாரதியின் கண்களேபழிக்கிறு ரென்று பரிதாபப்படுவதை அறிந்த பிறமதத்தினர் பாகீரதியின் வெள்ளத் தில் தள்ளவேண்டுமென்று உள்ளங்கொண்டதை அறிந்து அவர்களே விட் டுப் பிறிந்து அரண்யத்தில் சரண்யதம்பதிகளான வரதனும் பெருந்தேவி யும் வில்லிகளேப் போல் வந்து வழி காட்டி விடியும் ஸமயத்தில் பாலாற்றங் கரையிலுள்ள சாலா கூபத்தினருகில் இக் கிணற்று நீரை எடுத்துக் கொடுத்து உதவ வேண்டுமென வேண்ட இவரும் அம்பும் வில்லுமாய் நிற்குமவர்க்கு அக்கிணற்று அம்புவில், (தீர்த்தத்தில்) அன்புடன் சிறிது சமர்ப்பிக்க மச்சணி மாடங்கள் சூழ்ந்த கச்சி என்னும் புரத்தின் கோபு ரத்தைக் காட்டி விட்டு இறைவரும் மறைய இம்மறையவர் முறையே இக் கிணற்றிலிருந்து தீர்த்த கைங்கரியம் செய்து வந்து உலகுக்கெல்லாம் தீர்த்தரானுர் என்று ஐதிஹ்யம். பிறர் க்ஷேமத்தையே பெரிதாகக்கொண்ட இவருடைய பவித்ர சரித்திரத்தில் சிலர் சாஸ்த்ரங்களுக்கும் அனுஷ் டானங்களுக்கும் பொருத்தமில்லாத சில விருத்தமான ஐதிஹ்யங்களேச் சேர்த்து இருக்கிருர்கள். அவைகள் அனைத்தும் ஸ்ரீ தேசிக ஸ்ரீஸூக்தி களின் ஆழ்ந்த கருத்துகளே அறிபவருக்கு அபத்தங்களாகு மென்பது சித்தம். ஸ்ரீ திருக்கோட்டியூர் நம்பிகளிடம் பல தடவை சென்று கிடைத்த ரஹஸ்யங்களே அவர் நியமனத்துக்கும் சாஸ்த்ர நியமனத்துக்கும் தாம் செய்த உறுதிக்கும் மாருக கோபுரத்திலேறி பெருங் கூட்டத்தில் கூறினுர் என்றும், வீரசைவனை சோழன் நிர்பந்தத்துச்குப் பயந்து கிரஹஸ் தர் போல் வெள்ளை சாத்திக்கொண்டு வேறு இடம் சென்ருர் என்றும், டில்லியிலிருந்து ஸ்ரீராமப் பிரியரை மீட்டு வரும்போது பஞ்சமர் செய்த உதவிக்கு ஆலயப்ரவேசத்தை அவர்களுக் கனுமதித்தார் என்றும், வாதப் போரில் ஜைனர்களே வாட்டி கல்காணத்தில் அரசனேக் கொண்டு ஆட்டி வைத்தார் என்றும் இவைபோல்வன சில கட்டுக் கதைகளே சொல்லி வருகிருர்கள். இவைகள் முற்றிலும் முன்னேர் பற்றி வந்த முறைகளுக் கும் ஸ்வத: ப்ராமாண்ய முள்ள மறைகளுக்கும் முறண்படுவதால் அர வணேயான் ஆணேயை அழிக்கப் பார்ப்பது.



மநீஷீ வைதிகாசாரம் மநஸாபி ந லங்கயேத் ।
ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தா முல்லங்க்ய வர்த்ததே ॥

ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹீ,

வர்ணாஶ்ரமாசாரவதா புருஷேண பர: புமாந் ।
விஷ்ணுராராத்யதே பந்தா நாந்யஸ்தத்தோஷகாரக: ॥

புத்திமான் வைதிகா சாரத்தை மனதாலும் மீறலாகாது. என் கட்டளையை மீறுபவன் எனக்கு த்ரோகி. வர்ணுச்ரமாசாரமுள்ளவனுல் பரமபுருடன் ஆராதிக்கப்படுகிறுன். அவன் உகப்புக்கு வேறுவழி இல்லே என்றுப்போல் உள்ள பல பிரமாணங்களுக்குச் சேராது. இதறியாத சில பார்ப்பனரும் பிரமுகர்களும் கொற்றவரும் மற்றவரும் இவர்களேச் சீர்திருத்த மெனப் பார்ப்பார்கள்.

இவைகள் திருத்திப் பணிகொள்ளும் திருமால் திருவுள்ளத்திற்கும் நம் ராமாநுஜன் திருவுள்ளத்திற்கும் விருத்தமானதால் முன்னேர் வழியை பின்பற்றுவதே பிராப்தம். நம் பாஷ்யகாரர் அருளிச்செய்த கிரந்தங்கள் 9. இந்த நவக் கிரந்தங்களில் ஒவ்வொன்றுமே பலதடவை பரிசயம் பண்ணும வருக்கும் நவ (புது) கிரந்தமென்றே தோன்றும்படி அமைந்திருக்கு மென்பதை ஸ்ரீ ஸப்ததியில், லக்ஷ்யாலக்ஷ்யை: ஸ்ப்ருதஜநயிவஹாதிதாந் ந்யாயஸூக்தை: என்று 35-வது ச்லோகத்தில் அருளிச் செய்யப்பட்டது. எம்பெருமானர் ஸ்ரீ ஸூக்தியாகிற அரண்மனேயில் வீற்றிருந் தேழுலகும் தனிக்கோல் செல்ல, பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங் காதும் சோராமே ஆள்கிறுன் எம்பெருமான். இதற்கு விரோதிகள் உட் புகுந்து தீங்கிழைக்காவண்ணம் ஸ்ரீ தேசிகன் பல ப்ரப்ரபந்தங்ளான சத தூஷணிபோல் உள்ள வாதக் கிரந்தங்களாகிற அகழ்களேயும், ஸர்வார்த்த ஸித்திபோல் உள்ள திடமான கோட்டைகளேயும் அரணுக அருளிச் செய்து இருக்கிருர். ஸ்ரீ பாஷ்யகாரர் ஸ்ரீ ஸூக்திகளே அடியொத்தியே சுருக்கமாகவும் விரிவாகவும் அதிகரண ஸாரவளி, அதிகரண தர்பணம் தத்வடீகை, தத்வமுக்தாகலாபம் ஸச்சரித்திரரக்ஷா, ஸ்ரீ பாஞ்ச ராத்ரரக்ஷா முதலான ஸமஸ்கிருத கிரந்தங்களும் ஸாரசாஸ்த்ரம் முத லான மணிப்ரவாள கிரந்தங்களும் அருளிச் செய்யப்பட்டன. யதிஸார்வ பௌமர் அருளிச் செய்த, மருளாகிற இருள் விலக்கும் விடியற் காலமான சரீராத்ம பாவமென்னும் பொருளே அறிந்த ஒருவனிடம் அவ்வோமதங் களே ஸ்தாபிப்பதில் அவாவினுல் விருத்தி அடைந்த வாதிகளின் வாத சமுத்திரத்தின் மலேபோன்ற அலேகளின் கோலாஹலங்கள் அடங்கிவிடுகின் றன' என்று ஸ்ரீ ஸார சாஸ்தர ப்ராதன ப்ரதிதந்த்ரத்தில் "யத்ருதம்

யதிஸாவஹௌளகுயிதம் விஜ்ஞாத விஜ்ஞாதகஃ ப்ரத்யூஷம் ப்ரதிதம் த்ர ஷியாமெ கஷ்சிச்விஷ்சிதஃ । தவைத்ரகத்ர ஙயிதாவெதி விஷயம் தத்தந்தஸ்யாவநாஹெவாக ப்ரயஸாநஹெதா ககயாகஞெரயகொஸா ஹஷஃ” என்னும் நிகமன ச்லோகத்தில் ஸ்ரீ தேசிகன் அருளிச்செய்தார். திருவரங்கர் கதியாக வாழ்ந்தருளிய இவ்வாசாரிய ரத்னத்தின் அவதார காலத்தையும் இவர் செய்தருளிய லோகோபகாரத்தையும்; இவர் விஷயத்தில் அமுதனார் அருளிச் செய்த நூற்றந்தாதியின் பெருமையையும் புகழ்ந்து ஸ்ரீ தேசிகன் பிரபந்தசாரமென்னும் பிரபந்தத்தில் அருளிச் செய்த ஸாரமான பாசுரம்.

“தேசமெலாமு கந்திடவே பெரும் பூதூரில்
சித்திரையில் ஆதிரைநாள் வந்து தோன்றி
காசினிமேல் வாதியரை வென்று அரங்கர் கதியாக
வாழ்ந்தருளும் யதிராசர் முன்
பூசுரர் கோன் திருவரங்கத்த முதனாருன்
பொன்னடி மேலந்தாதியாகப் போற்றிப்
பேசிய நற்கலித்துறை நூற்றெட்டுப் பாட்டும்
பிழையறவே யெனக்கருள் செய் பேணி நீயே.”

ஸ்ரீ பாஷ்யகாரரின் பெருமைக் கேற்ப அவரிடத்தில் பேரன்பு பூண்ட திருவரங்கத்த முதனார் அருளியநூற்றந் தாதியும் நாலாயிர திவ்ய ப்ரபந்தத்தில் சேர்ந்த தெனவும்

முத்திதரு மெதிராசர் பொன்னடிக்கே
மொழிந்தவமுதர் பாடல் நூறு மெட்டும்
எத்திசையும் வாழவிவை பாடி வைத்த
வென்பவை நாலாயிர முமெங்கள் வாழ்வே.

என்றும் முடித்தார் மறை முடித் தேசிகனார்.

---

ஸ்ரீ:

# எம்பெருமானாருடையவும் தத்ஸித்தாந்தத்தினுடையவும் ஏற்றம்.

[ஸ்ரீ காஞ்சி. ப்ரதிவாதி பயங்கரம் உ. வே. அண்ணங்கராசாரியர்.]

“ परिवर्तिनि संसारे मृतः को वा न जायते ।
स जातो येन जातेन याति वंशस्समुन्नतिम् ॥ ”

என்றார் ஒரு மஹாகவி. “தோன்றில் புகழொடு தோன்றுக, அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று” என்றார் திருவள்ளுவர். மேற்காட்டிய ச்லோகத்திற் கூறியபடி ஒரு மஹா குலத்திற்கு அணிவிளக்காயும், குறளில் கூறியபடி நிகரில் பெரும்புகழ்வாய்ந்தவராயும் இவ்வுலகில் கொண்டாடப்படும் மஹாசார்யர் ஸ்ரீபாஷ்யகாரர் ஒருவரே யாவர்.

இவ்வெதிராசர் ஏழ்பாருமுய்ய உதித்தருளும் சித்திரையில் செய்ய திருவாதிரையின் சிறப்பை நம் பரமாசாரியர் ஒரு சீரிய செய்யுளினால் வெளியிட்டருளியுள்ளார். அதாவது—

1. “ சங்கர பாக்கரயாதவ பாட்ட ப்ரபாகரர்தங்கள் மதம்
   சாய்வுறவாதியர் மாய்குவரென்று சதுமறை வாழ்ந்திடு நாள்
2. வெங்கலி யிங்கினி வீறு நமக்கிலை யென்று மிகத்தளர் நாள்
3. மேதினி நஞ்சுமை யாறுமெனத்துயர் விட்டு விளங்கிய நாள்
4. மங்கையராளி பராங்குச முன்னவர் வாழ்வு முளைத்திடு நாள்
5. மன்னிய தென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடு நாள்
   செங்கயல் வாவிகள் சூழ்வயல் நாளுஞ்சிறந்த பெரும்பூதூர்ச்
   சீமானிளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே ”

என்பதாம்.

இதன் கருத்தைச் சுருங்கவுரைப்போ மிங்கு. 1. எம்பெருமானார் திருவவதரிப்பதற்கு முன்னே பல பல மாய மதத்தவர்கள் இவ்வுலகில் மலிந்து வேதங்களுக்கு ஏலாத பொருள்களை ஏறிட்டுரைத்துத் தத்வார்த்தங்களுக்கு ஹாநியை விளைத்திருந்தார்கள். அதனால் வேதங்கள் ‘நமது கதி இங்ஙனேயாயிற்றே’ என்று சாலவும் வருந்திக் கிடந்தன. எம்பெருமானார் திருவவ

தரித்தவன்றே அவற்றின் வருத்தம் தொலைந்து அவை வாழ்ச்சி பெறத் தொடங்கி விட்டன.

2. அன்றியும் இந்நிலத்தில் கலிபுருஷன் நெடுநாளாகச் செங்கோல் செலுத்திக் கொண்டு தன்னுடைய பராக்கிரமமே எங்கும் ஓங்கி வருமாறு அரசாட்சி புரிந்து வந்தான் ; அன்னவனும் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே “கலியுங் கெடுங் கண்டு கொண்மின்” என்ற மூதுவர் மொழி பலிக்குங்காலம் வாய்ந்தது போலுமென்று துணிந்து இனி நாம் மாள்வதன்றி வாழ்வதற்கில்லையென்று தளர்ச்சியடையத் தொடங்கிவிட்டான்.

3. அன்றியும், பூமிப்பிராட்டியானவள் ‘ஸர்வம்ஸஹா’ என்று பெயர் பெற்றிருந்தாலும் நல்லார்கள் பலபல கோடிக் கணக்காகத் தன் மீது வாழப் பெற்றாலும் அவர்களைப் பஞ்சுச் சுருள்போல் சிறிதும் ஆயாஸமின்றித் தாங்கி நிற்பவளாய், தீயவர் ஒருவரிருவர் இருப்பினும் இரும்பு மூட்டை தாங்குவதனால் போல் மிகமெலிந்து நிற்பவளாதலால், உடையவர் திருவவதாரத்திற்கு முன்னே நல்லார்கள் மிகவும் குறைந்து தீயார்களே மிக நிறைந்திருக்கப் பெற்றதனால் (நிலமகள்) பொறுக்கொணாச் சுமையினால் மிகவும் துயருற்றுக்கிடந்தாள் ; அன்னவள் எம்பெருமானார் திருவவதரித்தவன்றே இனி இவ்வுலகில் தீயார் ஒருவருமின்றிக்கே அனைவரும் நல்லாராகவே வாழ்ச்சி பெறுவர்களென்று சிக்கெனத் துணிந்து இனி நமக்குப் பொறுக்கவொண்ணாத பாரம் சிறிதுமிராதென்று தேறித் துயர் விடத் தொடங்கினள்.

4. அன்றியும், பல ஆழ்வார்களும் ஆசாரியர்களும் ஏற்கனவே திருவவதரித்து அருமருந்தன்ன ஸ்ரீ ஸூக்திகளை உதவியருளியிருந்தாலும் அவற்றுக்கு ஸர்வதோமுகமான ப்ரசாரம் ஏற்படாமலும் அழகிய வியாக்கியானங்கள் அமையாமலுமிருந்ததனால் ‘நம்முடைய அரிய பெரிய காரியங்கள் உலகுக்குப் பெரிதும் பயன்படவில்லையே’ என்று அவர்களெல்லாரும் களிப்பின்றியே குன்றியிருந்தனர்; எம்பெருமானார் திருவவதரித்தவன்றே ‘இனி ஸ்ரீ பாஷ்ய பகவத் விஷயாதி திவ்ய க்ரந்தங்கள் ஓங்கப்பெறுமாதலால் நமக்கொரு குறையில்லை ; நாம் செய்திருந்த காரியங்களெல்லாம் சதசாகமாகப் பணைக்கும்படியான பாக்கியம் வாய்க்க நற் சமயம் விளைந்திட்டது’ என்று தேறி அன்னவர்கள் அளவிலாத ஆனந்தம் எய்தத் தொடங்கினர்.

5. அன்றியும், எம்பெருமான் தான் பரமபதத்தில் பரவாஸுதேவனாக வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செலுத்தியிருக்கு மிருப்பிலும் திருப்பாற்கடலில் அடியார்களின் கூக்குரல் செவிப்படுமாறு வெள்ளை



வெள்ளத்தின் மேலொரு பாம்பை மெத்தையாக விரித்து அதன்மேலே கள்ள நித்திரை கொண்டு உறங்குவான்போல் யோகு செய்திருக்கு மிருப்பிலும், ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபு ராவண கம்ஸ சிசு பாலாதிகளைத் தொலைத்திட்டு உலகை வாழ்விக்க ஸ்ரீராம கிருஷ்ணாதி விபவாவதாரங்கள் செய்தவற்றிலும், கருதரிய வுயிர்க்கு உயிராய்க் கரந்து எங்கும் பரந்துறையு மிருப்பிலும் த்ருப்திபெறாதே கோயில் திருமலை பெருமாள்கோயில் திருநாராயணபுரம் முதலான திருப்பதிகளிலே பின்னானார் வணங்குஞ் சோதியாய் நித்ய ஸந்நிதிபண்ணியிருந்தும் அந்தத் திருப்பதிகளைத் திருத்திப் பணி கொள்வாரில்லாமையாலே ‘அர்ச்சாவதாரமும் அப்ரயோஜநமாக ஆய்விட்டதே!’ என்று எம்பெருமானார் திருவவதாரத்திற்கு முன்னே வருந்த வேண்டியிருந்தது. இப்பெரியார் இவ்வுலகினிற் போந்தவன்றே

“सर्वदेशदशाकाले ष्वव्याहतपराक्रमा ।
रामानुजार्यदिव्याज्ञा वर्धतामभिवर्धताम् ॥”

என்று நீடூழியூழி நாடெங்கும் போற்றும்படியாக ஸகல திவ்ய தேசங்களிலும் அற்புதமான சீர்திருத்தங்களும் கைங்கரிய அபிவிருத்தியும் இனி ஒளிமல்குமென்று துணிந்து அர்ச்சாவதார எம்பெருமான்கள் குறை தீர்ந்து மகிழத் தொடங்கினர்.

ஆக இங்ஙனம் வேத வேதாந்தங்கள் களிப்புறவும் கலிபுருஷன் தேய்வுறவும், மண்மாது மகிழ்வுறவும், பூருவர்கள் யாவரும் பொலிவுறவும், எம்பெருமான்கள் இன்புறவும் அமைந்த நன்னாள் சித்திரையில் செய்ய திருவாதிரையேயாம்.

இப் பரமாசாரியர் வளர்த்தருளின ஸித்தாந்தத்தை ஸம்ரக்ஷித்தருளின ஆசாரியர்களில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் நடுநாயகமாக அமைந்து பகவத் ராமாநுஜ பாஷ்யத்தைப் பலகாலும் ப்ரவசநம் செய்தருளினார். இவர் முப்பது தடவை ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் செய்தருளினவர் என்பது ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் இவர் தாமே பணித்த “त्रिशद्वारं श्रावित शारीरकभाष्यः” என்ற ஸ்ரீஸூக்தியால் விளங்கும். அந்த நாடக க்ரந்தம் அருளிச் செய்கிறவரையில் முப்பதுதரம் ஸ்ரீபாஷ்ய ப்ரவசநம் செய்தருளினவரென்றால் அதற்குப் பிறகும் தத்ப்ரவசநம் பல தடவை ஆயிருக்கவேணும். இருபத்தெட்டாவது தடவையாக ப்ரவசநம் செய்தருளும்போது தத்வடீகை என்கிற க்ரந்தம் அருளிச் செய்யப்பட்டதென்று அது தன்னிலுள்ள “यतिपति भुवो भाष्यस्यासौ यथाश्रुतचिन्तित प्रवचनविधा वर्षाविंशे जयध्वज-पट्टिका” என்னும் ஸ்ரீஸூக்தியினால் விளங்காநின்றது. निर्विष्टं यति सार्वभौमवचसामावृत्तिभिर्यौवनम्” என்றும்,

"**यति प्रवर भारतीरसभरेण नीतं वयः**" என்றும், "ஏரணி கீர்த்தியிராமானுச முனி யின்னுரைசேர் சீரணி சிந்தையினோம் சிந்தியோமினித் தீவினையே" என்றும் இவர்தாம் அருளிச்செய்த ஸ்ரீஸூக்திகளினால் ஸ்ரீ பாஷ்ய கீதாபாஷ்யாதிகளையே இவர் ஓவாத ஆணுக வுண்டவர் என்பது விளங்குகின்றது. இப்படிப்பட்ட தேசிகன் எம்பெருமானாரைத் துதித்த அமுதமொழிகள் விடுதி விடுதியாகப் பலபல இருந்தாலும் யதிராஜ ஸப்ததி என்கிற இதம்பரமான ஸ்தோத்ரம் வெகு அமைதியுடன் அமைந்ததாகும். உடையவர் ஸம்பந்த முடையவர்களுக்குத்தான் நேரே எம்பெருமான் வரையில் இடையறாத தொடர்பு உண்டு என்பதைத் தெரிவித்தருள்வதற்காக "**कमल्याद्यं गुरुं वन्दे**" என்று தொடங்கி, 'பெருமாள், பிராட்டி, ஸேனை முதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி—இவர்களை ஒவ்வொரு ச்லோகத்தில் எத்தியிறைஞ்சி வழியடைவில் எம்பெருமானார் துதியில் இழிந்திருக்கிறார்.

அதுதன்னில் முதன் முதலாக எம்பெருமானாரை வணங்கும் ச்லோகம் "**प्रणामं लक्ष्मण मुनिः प्रतिगृह्णातु मामकम्**—ப்ரணாமம் லக்ஷ்மண முநி: ப்ரதிக்ருஹ்ணாது மாமகம்" என்பது. இதில் உடையவர்க்கு தேசிகன் தாம் நமஸ்காரத்தை தானங் கொடுப்பதாகக் கூறினவிது மிக்க சுவையுடைத்து. காரேய் கருணை யிராமானுசன் தமது பரம ஔதார்யத்தினால் நமக்குச் செய்தருளி யிருக்கும் மஹோபகாரங்களுக்கு ஒரு கைம்மாறு செய்யவேண்டும் ;—அவர் நமக்குச் செய்தருளின தானத்திற்கு ப்ரதிதானம் செய்யவேண்டும் : அது என்ன ? நம் தலையைக் கொடுப்பதுதான்— என்று காட்டி யருளுகிறார். இத்தால், தலையல்லால் கைம்மாறிலாத பெருநன்றிகளைச் செய்தருளின மஹாநுபாவர் எம்பெருமானார் என்பது பெறுவிக்கப்பட்டது. இது வொரு சிறந்த உக்தி சமத்காரம்.

இதற்கு அடுத்த ச்லோகம்—

"**उपवीतिनमूर्ध्वपुण्ड्रवन्तं त्रिजगत्पुण्यफलं त्रिदण्ड हस्तम् ।**
**शरणागतसार्थवाहमीडे शिखया शेखरिणं पतिं यतीनाम् ॥**"

என்பது. முந்துற முன்னம் உடையவரை இங்ஙனம் அநுபவித்துப் பேசினது பரமரஸம். புற மதங்களிலுள்ள யதிகளைப் போலன்றியே எம்பெருமானாருடைய திருமேனித் தோற்றமே நெஞ்சைக் கவர்வது என்றீடுபடுகின்றார். யஜ்ஞோபவீதத்தையும் சிகாபந்தத்தையும் துறந்தும், நேரான புண்ட்ரமின்றியும், ஒற்றைத்தண்ட மேந்தியும் "காணிலு முருப்பொலார்' என்னும்படி யிராநின்ற யதிகளின்படி யன்றியே பரம விலக்ஷணமாக திவ்ய



மங்கள விக்ரஹ ஸந்நிவேசங்களையுடையவர் என்றநுபவிக்கு மழகு சொலப்புகில் வாயமுதம் பரக்கும்.

இதற்குமேல் சுலோகத்தில், இராமாநுச நூற்றந்தாதியில் அடையார் கமலப் பாசுரத்தைத் தழுவி, பஞ்சாயுதாழ்வார்களும் ஒன்று சேர்ந்து எம்பெருமானாராகத் திருவவதரித்தபடியோ! என்று பெரியோர்கள் உல்லேகித்துக்கொண் டிருந்தபடியை எடுத்துரைத் தருளினார்.

அதற்கடுத்த சுலோகத்தில் ராமாநுஜன் என்கிற திருநாமத்திற்கு விலக்ஷணமான ஒரு விசேஷார்த்தத்தை நிர்வஹித் தருளா நின்று கொண்டு தம்முடைய பாண்டித்ய ப்ரகர்ஷம்விளங்குமாறு ஸூக்தி விந்யாஸம் செய்தருளி யிருக்கிறார். இது இன்சுவையே வடிவெடுத்த சுலோகமாதலால் ரஸிகர்களின் உள்ளம் உகக்குமாறு ஈண்டு ஸங்க்ரஹேண விவரிக்கப்படுகிறது.

"**शमितोदयशङ्करादिगर्वः स्वबलादुद्धृत यादव प्रकाशः ।**
**अवरोपितवान् श्रुतेरपार्थान् ननु रामावरजस्स एष भूयः ॥**"

[சமிதோதய சங்கராதிகர்வ: ஸ்வபலாத் உத்ருதயாதவப்ரகாச:, அவரோபிதவாந் ச்ருதேரபார்த்தாந் நநு ராமாவரஜஸ் ஸ ஏஷ பூய:] என்பது அந்த ச்லோகம். இதில் உல்லேகத்திற்கு உறுப்பாக அற்புதமான சிலேடை அமைந்திருக்கிறது. எம்பெருமானார்க்கு ராமாநுஜன் என்ற திருநாமம் மாதுலரான திருமலை நம்பியால் சாத்தப்பட்டதென்பர் பெரியோர். இது இளைய பெருமாளுக்கு ப்ரஸித்தமாக வழங்கிவரும் திருநாமம். லக்ஷ்மணன் கைங்கர்ய ஸாம்ராஜ்யமே நிரூபகமாக இருந்ததுபோலே இவரும் கோயில் திருமலை பெருமாள் கோயில் திருநாராயணபுரம் முதலிய திவ்ய தேசங்களில் நித்ய கைங்கர்ய துரந்தரராக எழுந்தருளி யிருக்கப் போகிறாரென்பதை உட்கண்ணாலுணர்ந்து நம்பிகள் இவர்க்கு இந்தத் திருநாமமிட்டருளினரென்று ஸம்ப்ரதாயம் வல்ல பெரியோர்கள் ஸாதிப்பது. ராமாநுஜ நாமபர்யாயமாகவே லக்ஷ்மணமுநி யென்னும் திருநாமமும் வழங்கி வருகின்றது.

கண்ணபிரான் பலராமனுக்குத் தம்பியாக அவதரித்ததனால் ராமாநுஜனென்று கண்ணனையும் சொல்லுவதுண்டு; "ஹே ராமாநுஜ! ஹே ஜகத்த்ரய குரோ ஹே புண்டரீகாக்ஷ" என்று முகுந்தமாலையிலு முள்ளது. உடையவரை இளைய பெருமாளுடைய அபராவதார மென்று சொல்லுவதுபோலவே கண்ணபிரானுடைய அபராவதாரமென்றும் சொல்லத் தகுதியுண்டு: கண்ணன் அஷ்டமகர்ப்பமாக அவதரித்ததுபோல

உடையவரும் ஆசார்ய பரம்பரையில் எட்டாவது ஆசார்யராக அவதரித்துள்ளார். உலகுக்கெல்லாம் மாதா பிதாக்களாகிய பெருமாளையும் பிராட்டியையும் ஸ்ரீ க்ருஷ்ண மாதா பிதாக்களான வஸுதேவ தேவகிகளின் ஸ்தானத்தில் வைத்துவிட்டு ஸேனை முதலியார் முதலாகக் கணக்கிட்டால் ஆசார்ய பரம்பரையில் எட்டாவது ஸ்தானம் உடையவருடையதேயாம். [ஸேனைமுதலியார், நம்மாழ்வார், நாதமுனிகள், உய்யக் கொண்டார், மணக்கால் நம்பி, ஆளவந்தார், பெரியநம்பி, எம்பெருமானார் என அடைவு காண்க.]

கண்ணன் "சாது சனத்தை நலியுங் கஞ்சனைச் சாதிப்பதற்கு, ஆதியஞ் சோதியுருவை அங்கு வைத்திங்குப் பிறந்த" என்கிறபடியே கம்ஸனை வதைப்பதற்காக அவதரித்தாப்போலே உடையவரும் "இராமானுச னித்தலத்துதித்து இறந்தது வெங்கலி" என்று அமுதனார் அருளிச் செய்தபடியே கலிபுருஷனுடைய வதத்திற்காகவே அவதரித்தார். அந்தக் கம்ஸனுடைய வதமானது கிருஷ்ணவதாரத்திற்கு நெடுநாள் முன்னமே ஆகாசவாணியினால் உலகிற் பரவினாப்போல் உடையவரால் விளையக்கூடிய கலிபுருஷ வதமும் இவருடைய திருவவதாரத்திற்கு நெடுநாள் முன்னமே ஆகாச வாக்குப் போன்றதான [அசரீரமான] கலியுங் கெடுங் கண்டு கோண்மின் என்ற நம்மாழ்வாரருளிச் செயலினால் உலகிற் பரவியது. கண்ணபிரான் கம்ஸவதத்திற்கு அங்கமாகப் பூதநா சகடயமலார்ஜுநாதிகளான பல பல தீப்பப்பூடுகளடங்க வுழக்கினாப்போலே உடையவரும் கலிபுருஷ த்வம்ஸத்திற்கு அங்கமாக "சாறுவாகமத நீறு செய்து சமணச் செடிக்கனல் கொளுத்தியே சாக்கியக் கடலை வற்றுவித்து மிகு சாங்கியக்கிரி முறித்திட, மாறு செய்திடு கணாத வாதியர்கள் வாய் தகர்த்தற மிகுத்து மேல் வந்த பாசுபதர் சிந்தியோடும் வகை வாது செய்த வெதிராசனார், கூறுமாகுரு மதத்தொடோங்கிய குமாரிலன்மத மவற்றின் மேல் கொடிய தர்க்கசரம் விட்டபின் குறுகி மாயவாதியரை வென்றிட, மீறி வாதில் வரு பாற்கரன் மதவிலக்கடிக் கொடி யெறிந்து போய் மிக்க யாதவமதத்தை மாய்த்த பெருவீரர் நாளுமிக வாழியே" என்றும் "தற்கச் சமணரும் சாக்கியப் பேய்களும் தாழ்சடையோன் சொற்கற்ற சோம்பரும் சூனிய வாதரும்—நான்மறையும், நிற்கக் குறும்பு செய் நீசரும் மாண்டனர் நீணிலத்தே, பொற்கற்பகம் எம்மிராமானுச முனி போந்தபின்னே" என்றும் சொல்லுகிறபடியே பலபல தீய வாதிகளை நிரஸித்தருளினார். கண்ணபிரான் யாதவ குலத்திற் பிறந்து ஆயர் குலத்தில் ஒளித்து வளர்ந்து மீண்டும் யாதவ குலத்துப் புக்கதுபோல, உடையவரும் ஸ்ரீ வைஷ்ணவ குலத்திலே பிறந்து அத்வைதி ஸந்யாஸி கோஷ்டியிலே ஒளித்து வளர்ந்து மீண்டும் ஸ்ரீ வைஷ்ணவ குலத்தே பெருவிளக்



காய் நின்றனர். இங்ஙனே அனேக வகைகளால் கண்ணபிரானுக்கும் எம்பெருமானார்க்கும் ஒற்றுமைநயம் நிர்வஹிக்கக் கூடியதாயிருக்கின்றது.

பிரக்ருதத்தில் மேலே உதாஹரித்த சமிதோதயேத்யாதி ச்லோகத்தில் தேசிகன் உடையவர்க்கும் கண்ணனுக்கும் ச்லேஷ சமத்காரம் பொலிய ஒரு ஒற்றுமை நயம் கூறியருளுகிறார். எங்ஙனே யென்னில்; [**शमितोदय शङ्करादिगर्वः**—சமிதோதய சங்கராதி கர்வ:] கண்ணனுக்கும் உடையவர்க்கும் பொதுவான விசேஷணம் இது. பாணாஸுரயுத்தம் முதலான பிரகரணங்களில் "கார்த்திகையானும் கரிமுகத்தானும் கனலும் முக்கண் மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு" என்கிறபடியே சங்கரனாகிய சிவபெருமான் முதலான தெய்வங்களின் செருக்கை யடக்கியவன் கண்ணபிரான். உடையவரோ வென்னில், சங்கராசாரியர் முதலான புறமதத்தவர்களின் துர்வாதச் செருக்கையடக்கினவர். "**का शङ्का शङ्करादे र्भजति यतिपतौ भद्रवेदीं त्रिवेदीम्**" என்றதும் காண்க.

[**स्वबलादुद्धृतयादव प्रकाशः**— ஸ்வபலாத் உத்த்ருதயாதவப்ரகாச:] "ஸ்வபலாத் யாதவம் வம்சம் உத்தரிஷ்யதி" என்கிறபடியே யயாதி சாபத்தாலே மங்கிக்கிடந்த யாதவர்களின் பிரகாசத்தைத் தனது வலிமையினால் விளக்கியவன் கண்ணபிரான். உடையவரோ வென்னில், முதலில் தமக்கு உபாத்யாயராயிருந்த யாதவப்ரகாசரையும் தமக்கு அடிமைப்படுத்திக் கொண்டு அவரை வாழ்வித்தருளினவர்.

[**अपार्थान् श्रुतेः अवरोपितवान्**—அபார்த்தாந் ச்ருதே: அவரோபிதவாந்.] இதில் முதற்பதம் "அ-பார்த்தாந்" என்றும் "அப அர்த்தாந்" என்றும் பிரியும். ச்ருதி என்று வேதத்திற்கும் பெயர், கீர்த்திக்கும் பெயர். பார்த்தன் என்று அர்ஜுநனைச் சொல்லி அவனுடைய விரோதிகளான துர்யோதநாதிகளை அபார்த்தர்களென்கிறது. அவர்களைக் கண்ணபிரான் [ச்ருதே: அவரோபிதவாந்] கீர்த்தியிலிருந்து கீழே யிறக்கி விட்டான்; பாண்டவ பக்ஷபாதியாயிருந்து நூற்றுவரைத் தொலைத்தானென்றபடி. எம்பெருமானாரோ வென்னில் [ச்ருதே: அபார்த்தாந் அவரோபிதவாந்] இதர மதஸ்தர்கள் வேதங்களுக்குச் செய்த அபார்த்தங்களை நிரஸித்து ருஜுவான அர்த்தங்களை ஸ்தாபித்தருளினாரென்றபடி. ஆக இப்படிகளாகவே கண்ணபிரானுடைய காரியங்களும் எம்பெருமானாருடைய காரியங்களும் ஒற்றுமை கொண்டிருக்கையாலே, ஸ்ரீராமாநுஜனான கண்ணபிரானே ராமாநுஜராக ஒரு திருவவதாரம் செய்தருளினான் என்னலாம் என்று ச்லேஷ மர்யாதையிலே பரமரஸமாகப் பேசியருளினாராயிற்று.

இப்போராசிரியர் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநம் செய்தருளின பெருமையையும் சிறிது பேசுவோம்;—உபநிஷத்துக்களில் சில வாக்கியங்கள், ஒரு தத்துவமே உள்ளதாகவும், பலதத்துவங்கள் கிடையாவென்பதாகவும் பேசுகின்றன. “**नेह नानास्ति किञ्चन**” என்றிது முதலான வாக்கியங்களினால் பல தத்துவங்கள் கிடையாவென்பது ஸ்பஷ்டமாகச் சொல்லப்படுகிறது. “**एक मेवाद्वितीयं ब्रह्म**” “**सर्वं खल्विदं ब्रह्म**” “**ऐतदात्म्यमिदं सर्वम्**” என்றிவை முதலான வாக்கியங்களினால் ஒரே தத்துவமுள்ளதாகக் காட்டப்படுகிறது.

இத்தகைய வாக்கியங்களுள்ள உபநிஷத்திலேயே பல தத்துவங்களுண்டென்பதைக் காட்டுகின்ற வாக்கியங்களும் ஓதப் பட்டிருக்கின்றன. “**क्षरं प्रधान ममृताक्षरं हरः क्षरात्मानावीशते देव एकः**” “**ज्ञाज्ञौ द्वावजावीशनीशौ**” “**द्वा सुपर्णा सयुजा सखाया समानं वृक्षं परिषस्वजाते । तयोरन्यः पिप्पलं स्वाद्वत्ति अनश्नन्नन्यो अभि चा कशीति.**” என்றிவை முதலான வாக்கியங்களால்—சித்து, அசித்து, ஈச்வரன் என்கிற மூன்று தத்துவங்கள் தனித்தனியே உள்ளனவாக ஸ்பஷ்டமாய்த் தெரிவிக்கப்படுகிறது.

இவை ஒன்றோடொன்று முரண்படுகிற வார்த்தைகளாக இருக்கின்றன. ஒன்றுதான் தத்துவம் என்று சொல்லி விட்டால் பல தத்துவங்களுள்ளனவாகச் சொல்வது கூடாது. பல தத்துவங்களுண்டென்றால் ஒன்றே தத்துவமென்பது பொருந்தாது. யதார்த்தவாதிகளான உபநிஷத்துக்கள் அஸங்கதமாகச் சொல்லமாட்டாவாகையால் இவற்றை முரண்பாடு சிறிது மின்றியே ஸங்கதமாகப் பொருந்த விடுகிறவழி என்ன? என்பது ஆராயப்படவேண்டும்.

ஒரு தத்துவமே உள்ளதென்று ஓதுகின்ற உபநிஷத் வாக்யங்கள் அத்வைத ச்ருதி (அல்லது) அபேத ச்ருதி என வழங்கப்படும். பல தத்துவங்களுண்டென்று ஓதுகின்ற உபநிஷத் வாக்யங்கள் த்வைத ச்ருதி (அல்லது) பேத ச்ருதி என்று வழங்கப்படும்.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் மேற் குறித்த அத்வைத ச்ருதிகளை முக்கியமாகக் கொண்டு ஒன்றே தான் தத்துவமென்று நிர்வஹித்தார்கள். த்வைத ச்ருதிகளான பேத ச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்றும் கருதினார்கள். சேதனப் பொருள்களும் அசேதனப் பொருள்களும் உள்ளனவாகத் தோற்றுவது மாயையின் தோற்றமே யாதலால் அப்படிப்பட்ட தோற்றத்தை நோக்காகக் கொண்டு பேதச்ருதிகளை நிர்வஹித்து விடலாமென்பது இவர்களின் கருத்து. ஆகவே, அத்வைத ச்ருதிகளையே முக்கியமாகக் கொண்டபடியால் இவர்கள் அத்வைதிகளென்று வழங்கப்படுகின்றார்கள்.



ஸ்ரீமத் ஆனந்த தீர்த்த ஸ்வாமிகள் த்வைத ச்ருதிகளான பேத ச்ருதிகளை முக்கியமாகக் கொண்டு அத்வைத ச்ருதிகளை ஔபசாரிகமாக நிர்வஹிக்கலாமென்று கருதுகின்றார்களாதலால் அவர்கள் [மத்வாசார்ய ஸம்ப்ரதாயஸ்தர்கள்] த்வைதிகள் என்று வழங்கப்படுகின்றார்கள்.

ஆக மேற்கூறிய இரண்டு ஸம்பிரதாயங்களிலும் ஒருவகையான ச்ருதி வாக்யங்கள் ஒதுக்கப்பட்டு ஒருவகையான ச்ருதி வாக்யங்களே முக்கியமாகக் கொள்ளப்படுகின்றன என்பது தேறுகின்றது. உபநிஷத் வாக்யங்களெல்லாவற்றையுமே ஸமரஸப் படுத்தி ஒன்றையும் ஒதுக்காமல் மிகவும் பொருத்தமாகவே நிர்வஹித்தருளினர் நம் ஆசார்ய சிகாமணிகள். எங்ஙனே யென்னில்; உலகத்தில் ஒரு வஸ்துவைப் பல வென்றும் ஒன்றே யென்றும் சொல்லுவதற்குப் பொருத்தமுண்டு. உதாஹரணமாக ஒரு கடியாரத்தை எடுத்துக் கொள்வோம். அது ஒன்றா? பலவா? என்று கேட்டால் ஒன்று என்றே சொல்வோம். ஆனால் அதை நாம் ஊன்றிப் பார்க்குங்கால் அதில் பலபல வஸ்துக்கள் அவயவங் [உறுப்பு]களாகச் சேர்ந்திருப்பது புலப்படாமற் போகாது. பல அவயவங்களோடு கூடிய அவயவியான வஸ்து ஒன்றே என்று ஏற்படுமே யல்லது வேறு விதமாக ஏற்படாது. இங்ஙனமே பல பல வஸ்துக்களையும் நாம் உதாஹரணமாகக் கொண்டு பார்க்கலாம். படுக்கை, தலையணை, வண்டி, வீடு முதலான ஒவ்வொரு வஸ்துவும் ஒருவிதத்தில் ஒரே வஸ்துவாகவும் மற்றொரு விதத்தில் பல வஸ்துக்களாகவும் கொள்ளப்படுவது அநுபவ ஸித்தம்.

நம்மையே எடுத்துக் கொள்வோம்; ராமாநுஜன் என்பவன் ஒருவன் என்று சொல்லுகிறோம். பல உறுப்புகளோடு கூடின ஆத்மாவாகிய அந்த வ்யக்தி ஒருவன் என்றதாகுமே யன்றி, அவனிடத்தில் பல வஸ்துக்கள் இல்லை யென்றதாக ஸித்திக்க மாட்டாதன்றோ. “ராமாநுஜன் சிவப்பாயிருக்கிறான்” என்று சொல்லும்போது அவனுடைய தேஹம் அர்த்தமாகிறது. ‘ராமாநுஜன் புத்திமான்’ என்று சொல்லும்போது ஆத்மா அர்த்தமாகிறது. ஏன்? சிவப்பு நிறம் தேஹத்திற்கு ஏற்குமே யல்லாது ஆத்மாவுக்கு ஏலாது. புத்திமத்வம் ஆத்மாவுக்கு ஏற்குமே யல்லாது தேஹத்திற்கு ஏலாது. ஆகவே ஒரே பதம் சில ஸமயங்களில் ஆத்மாவைக் குறிப்பதாயும் சில ஸமயங்களில் உறுப்பைக் குறிப்பதாயும் தேறுகின்றதென்பது மறைக்கமுடியாது.

இனி முற்காட்டிய பேத ச்ருதிகளையும் அபேத ச்ருதிகளையும் எடுத்துக் கொள்வோம். சித்து, அசித்து, ஈச்வரன் என மூன்று தத்துவங்களுள்ளனவாகச் சொல்லுகிற வேத வாக்கியங்கள் வாஸ்தவமாக அப்படிப்பட்ட மூன்று பொருள்கள் இருப்பதைச் சொல்லுகின்றன வாதலால்

பொருந்தும். ஒன்றே என்று சொல்லுகிற வாக்கியங்கள் —'சேதனப் பொருள்களையும் அசேதனப் பொருள்களையும் சரீரமாகக் கொண்ட பரம் பொருள் ஒன்றே' என்கிற உண்மையைக் காட்டுகின்றனவாதலால் இவையும் பொருந்தும். இப்படி ஸமந்வயப்படுத்திக் காட்டுவதே நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் முழுமுதற் கொள்கை. இதை நம்மாழ்வார் திருவாய்மொழியில் முதற் பதிகத்தில் "உடன் மிசை உயிரென" என்ற அருமருந்தன்ன ஸ்ரீ ஸூக்தியினால் காட்டியருளினர். அதை நிதியாகக் கொண்டு ஆளவந்தார் எம்பெருமானார் முதலிய ஆசார்ய சிகாமணிகள் வேதாந்தார்த்த நிர்வாஹத்தில் வெற்றி பெற்றார்கள்.

இந்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம், எம்பெருமானார் தர்சனமென்று வழங்கி வருவதால் 'ஸ்ரீ ராமாநுஜரால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட மதம்' என்று சிலர் சொல்லத் துணிகிறார்கள். உண்மையில் அங்ஙனமன்று: 'ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களை இயற்றி ஸ்ரீராமாநுஜரால் பரிபாலனம் செய்யப்பட்ட ஸித்தாந்தம்' என்பதே பொருள். இதனை மணவாள மாமுனிகள்

"எம்பெருமானார் தரிசனமென்றே யிதற்கு
நம்பெருமாள் பேரிட்டு நாட்டி வைத்தார்—அம்புவியோர்
இந்தத் தரிசனத்தை யெம்பெருமானார் வளர்த்த
அந்தச் செய லறிகைக்கா."

என்ற பாசுரத்தினால் வெளியிட்டருளினர். 'ஸ்ரீராமாநுஜ மதம் நவீனம்' என்கிற வாதம் தேசிகனுடைய காலத்திலேயே தோன்றியதாகத் தெரிகின்றது. யதிராஜஸப்ததியில் "यतिक्ष्माभृद्दृष्टं मतमिह नवीनं तदपि किम्" என்கிற ச்லோகத்தில் அந்த வாதத்தை அநுவதித்துப் பூர்வார்த்தத்தால் அதை அங்கீகரித்து ஸமாதானமும், உத்தரார்த்தத்தால் வஸ்து ஸ்திதி ஸமாதானமும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

காளிதாஸர் "புராணமித்யேவ ந ஸாது ஸர்வம் ந சாபி காவ்யம் நவமித்யவத்யம்" என்று தமது நாடக மொன்றில் கூறியுள்ளார். ப்ராசீனமென்பது பற்றியே ஒன்றுக்கு ஏற்றமும், நவீன மென்பது பற்றியே ஒன்றுக்குத் தாழ்வும் சொல்லப்போகாது. குணபுஷ்கலமாக இராவிடில் ப்ராசீனமாயினும் ஹேயமாகும். குண ஸம்பந்நமாகில் நவீனமாயினும் உபாதேயமேயாகும். ஆகவே, குணமுடைமை பரிக்ராஹ்யதைக்கு ஹேதுவாகவும் குணமின்மை பரித்யாஜ்யதைக்கு ஹேதுவாகவும் தேறுமத்தனை என்பது மேற் குறித்த காளிதாஸ ச்லோகத்தின் தாத்பரியம். இந்த ரீதியைத் திருவுள்ளம் பற்றியே தேசிகன் முந்துற ஒரு ஸமாதான மருளிச் செய்தார்.



மீமாம்ஸா பாதுகையிலும் "கிம் விஜ்ஞ கேநாபி ந்யஷேதி" என்கிற எட்டாவது சுலோகத்தில் "ஸ்புரதி த்ருதவ்யம் தத்யத்ர்யம் வ்யத்யாதரஸந்தி: ப்ராக்தநம் நூதநம்வா" என்ற நான்காவது பாதத்தினால் இந்தத் திருவுள்ளத்தைக் காட்டி யருளினர்.

யாதவாப்யுதய மஹா காவ்யத்திலும்

"ததாகமே நூதநம் ஸர்வஸாயத்யம் வ வர்ணாதநீ ।
நவோஷாயை தத்ஸ்ஹயா நமஸ்ஸ்மாபவ கஷ்டிதே ॥"

என்ற ச்லோகத்தில் இத்திருவுள்ளமே பொலியும். இது ஸாமாந்ய ந்யாய சிக்ஷணமாதலால் இந்த நியாயத்தைத் தழுவி 'ஸ்ரீராமாநுஜ மதம் நவீனமாயின் ஆகுக: அதனாலென்ன குறை? என்று அஹ்ருதவசந்வாது ப்ராணளியிலே முந்துற அருளிச் செய்து, உடனே "நிரபாயம் யதா நிஜம் ஸ்திதிர ஸ்காரவிமர்சா நிராதங்கா: ப்ரக்ருதிம் மஹதைவ ப்ருஹத்யய:"
(யதிராஜ ஸப்ததி—57·)

என்று வஸ்துஸ்திதி ஸமாதானத்தையும் அருளிச் செய்தார். இந்த ஸ்ரீ ராமாநுஜ மதத்தை ப்ரவர்த்தநம் செய்தவர்கள் இதர மத ப்ரவர்த்தகர்களிற் காட்டிலும் மிக முற்பட்டவர்கள் என்று இதனால் காட்டப்பட்டது.

ஸம்ப்ரதாய பரிசுத்தி என்னும் ரஹஸ்யத்தின் உபக்ரமத்திலும்— "ஸர்வலோக ஹிதமான அத்யாத்ம சாஸ்த்ர ஸம்ப்ரதாயத்திற்கு ப்ரதம ப்ரவர்த்தகன் ஸர்வேச்வரன். மற்றுள்ளாரெல்லாரும் அவன் தன்னாலேயாதல் சேதநாந்தர முகத்தாலே யாதல் மயர்வற மதிநல மருளப் பெற்று ப்ரவர்த்திப்பிக்கிறவர்கள். இந்த யுகாரம்பத்திலே ப்ரஹ்ம நந்த்யாதிகளுக்குப் பின்பு நம்மாழ்வார் ப்ரவர்த்தகரானார்" என்று ஸ்வாமி அருளிச் செய்தவை இங்கு ஸ்மரிக்கத்தக்கன.

எம்பெருமானார் தாமும் ஸ்ரீ பாஷ்யத்தின் உபக்ரமத்திலே "பகவத்போதாயநக்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யா: ஸம்சிக்ஷிபு: ; தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே" [போதாயந மஹர்ஷியினால் இயற்றப்பட்ட விரிவான ப்ரஹ்ம ஸூத்ர வ்ருத்தி க்ரந்தத்தைப் பூருவர்கள் சுருக்கியருளினார்கள் ; அவர்களது கொள்கையைப் பின்பற்றி ப்ராஹ்மஸூத்ரவியாக்யானம் செய்யப் புகுவோம்.] என்று ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கையாலும் இது அநாதி மதமேயன்றி நவீன மதமன்று என்பது தெற்றென விளங்கும்.

72

ஸ்ரீ ராமாநுஜ பாஷ்யத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த மேற்றிசையாரும் ஸ்ரீ ராமாநுஜருடைய கொள்கையே மிகவும் ஏற்புடையது என்பதைப் பரக்க நிரூபித்துள்ளாரென்று கேள்விப்பட் டிருக்கிறோம். அத்வைதம், த்வைதம் என்கிற மற்ற இரண்டு தரிசனங்களிற் காட்டிலும் நமது விசிஷ்டாத்வைத தர்சனத்தின் வைலக்ஷண்யத்தை அறிந்து கொண்டால் இதுவே புராதனமாக இருக்கக் கூடியதென்றும், இதுவே உலக அனுபவத்திற்கு இணங்கியதென்றும் யாவரு மிசையத் தக்கதாகும்.

தேசிகன் தத்வ முக்தாகலாபத்தின் முடிவில்

"दृष्टेपह्नुत्यभावादनुमिति विषये लाघवस्यानुरोधात्
शास्त्रेणैवावसेये विहतिविरहिते नास्तिकत्वप्रहाणात् ।
नाथोपज्ञं प्रवृत्तं बहुभिरुपचितं यामुनेयप्रबन्धैः
त्रातं सम्यग्यतीन्द्रै रिदमखिलतमः कर्शनं दर्शनं नः ॥"

என்றருளிச் செய்துள்ள ச்லோக ரத்னத்தின் சீரிய பொருளை வல்லார் வாய்க் கேட்டுணர்ந்து,

"நாட்டிய நீசச்சமயங்கள் மாண்டன, நாரணனைக்
காட்டிய வேதம் களிப்புற்றது, தென்குருகைவள்ளல்
வாட்டமிலா வண்டமிழ்மறை வாழ்ந்தது மண்ணுலகில்
ஈட்டிய சீலத்திராமானுசன்றன் இயல்வுகண்டே."

என்ற நூற்றந்தாதிப் பாசுரத்தை நித்யாநுஸந்தானமாகக் கொண்டு வாழ்வதே ஸ்ரீ வைஷ்ணவ உலகுக்குற்ற வாழ்ச்சியாகும்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

---

ஸ்ரீ.

# யதிபதி மஹிமை

[சிரோமணி தர்க்கார்ணவ பண்டிதரத்ந உத்தமூர்
ஸ்ரீ. உப. வீரராகவாசார்யர்]

उपवीतिन मूर्ध्वपुण्ड्रवन्तं त्रिजगत्पुण्यफलं त्रिदण्डहस्तम् ।
शरणागत सार्थवाहमीडे शिखया शेखरिणं पतिं यतीनाम् ॥

பரம புருஷார்த்தமான மோக்ஷத்தைப் பெற விரும்புவோரை அதிகரித்து ப்ரவர்த்திக்கப்பட்ட பலவகை ஸித்தாந்தங்களில், நம் தக்ஷிண தேசத்தில் விசேஷித்து ப்ரஸித்தமாயுள்ளவை த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைத மென மூன்று மதங்களே. வடதேசத்தில் இம்மூன்று மதங்களோடொக்க த்வைதாத்வைதம், சுத்தா த்வைத மென்றிரண்டு மதங்களும் ப்ரசாரத்திலிருக்கின்றன. த்வைதாத்வைதத்திற்கு நிம்பார்க்க மதமென்றும், சுத்தாத்வைதத்திற்கு வல்லப மதமென்றும் ப்ரவர்த்தக புருஷரை யிட்டுப் பெயர். ஆச்மரத்ய மதமென்று சொல்லி ப்ரஹ்மஸூத்ரத்தில் பாதராயணராலும் ஸ்ரீ பாஷ்யத்தில் எம்பெருமானாராலும் எடுத்துக் கழிக்கப்பட்ட யாதவப்ராகாச மதத்தில் போலும், 4—4—6 ஸூத்ரத்தை கவனித்தபோது கொஞ்சம் வேற்றுமை தோற்றுகிறதாயினும், வாக்யாந்வயாதிகரணத்திற் சொல்லியபடி ஜீவனுக்கு முக்திதசையில் ப்ரஹ்மபாவத்தைச் சொல்லுவதால் அவ்வம்சத்தில் ஔடுலோமி மதமாக நின்றதும் ஸூத்ரகார பாஷ்யகாரர்களாலே தூஷிக்கப்பட்டதுமான பாஸ்கரமதத்தில் போலும் இந்த த்வைதாத்வைத சுத்தாத்வைத மதங்களிலும் பேதாபேதம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டு மதங்களிலும் ஜீவன் அணு; ப்ரஹ்மத்தின் அம்சம். வைகுண்டத்திற்கு மேல் கோலோக மென்று ஓர் நித்ய லோகமிருக்கிறதென்றும், அங்கே ஸ்ரீ க்ருஷ்ணனோடு விஹாரம் பரம புருஷார்த்தமென்றும் வல்லபாசார்யரின் கொள்கை. ப்ரஹ்மத்தை கேவலம் சாஸ்திரத்தைக் கொண்டே அறிய வேண்டியிருப்பதால் அதனிடம் யாதொரு விரோதமின்றியே ஸர்வ தர்மங்களு மிருக்கக்கூடும். ஆகவே அணுத்வம், மஹத்வம், ஸகுணத்வம் நிர்குணத்வம், ஸவிகாரத்வம், நிர்விகாரத்வம், என்றிப்படி எல்லாம் அவ்விடத்திலிருக்கிறதென்றும் இவர் மதம். பேதா பேதத்தை ஆதாரமாகக் கொண்ட பாஸ்கர யாதவ மதங்களை எம்பெருமானார் நிராஸம் செய்ததாலே '[illegible]' என்கிறபடியே

இவ்விரண்டு மதங்களும் நிரஸிக்கப்பட்டன வென்பதில் ஸம்சயமில்லை. ப்ரஹ்மமே ஸாக்ஷாத் ஜகத் ரூபமாக பரிணமிக்கிறதென்று கொண்டே இவ்விரண்டு மதங்களிலும் ப்ரஹ்மாதிரிக்த வஸ்து வில்லையாகையாலே இவையும் அத்வைத மதமேயென்று கொள்ளலாம். ஆயினும் சாங்கராத்வைத மதத்திற்போலே ஜகத்து மித்யை யென்கிற கொள்கை எம்மதத்திலும் கிடையாது.

கீழ்ச் சொன்ன இரண்டு மதங்களும் வைஷ்ணவ மதங்களே யென்பது நடவடிக்கையிலிருந்தே நன்கு விளங்கும். சாங்கர மதத்தைத் தழுவினவர் வைஷ்ணவர்களா அல்லது சைவர்களா அல்லது ஸர்வ விலக்ஷணர்களா என்று விசாரிக்குமளவில், அவர்கள் உலகை மித்யை யென்று சொல்லிவிட்டதாலே, ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் செய்வதென்றும், அதற்காக ஸர்வஜ்ஞத்வம், ஸர்வசக்தித்வம் முதலியவற்றை அடைந்திருப்பதென்று கொள்ளவேண்டியதவசியமில்லையாகையாலேப்ரஹ்மம் நிர்குணமாய் விட்டபடியால் அந்த நிர்குண ப்ரஹ்ம நிஷ்டர்கள் ஸர்வ விலக்ஷணரே யல்லாது சைவரோ வைஷ்ணவரோ ஆகமாட்டார்கள் என்றே சொல்லவேண்டியிருக்கிறது. ஆயினும், சாஸ்திரப்படிக்கு அந்நிஷ்டை யொன்றிருப்பதாகப் பேசினாலும், வ்யவஹாரத்தில் ஸகுண ப்ரஹ்மத்திலே நிற்கும் அத்வைதிகள் வைஷ்ணவர்களா அல்லவா என்று கேட்கும் போது, ஸகுணமான தேவதைகளில் விஷ்ணுவே பரதேவதையென்று ஸ்ரீ சங்கராசார்ய தச்சிஷ்ய க்ரந்தங்களில் ஏற்படுவதால் அப்பய்ய தீக்ஷிதர்க்கு முன் வரையில் வைஷ்ணவர்களென்றும், அவர் சைவ மதத்தை ஆதரித்தபடியாலே பிறகு அப்படி வைஷ்ணவர்களாக இல்லை யென்றும் ப்ராஜ்ஞர்கள் கூறுகிறார்கள். ருத்ராதிகளைக் காட்டிலும் விஷ்ணுவுக்கு ஏற்றத்தைக் கொண்டாலும் விஷ்ணுவுக்கும் மேற்பட நிர்குண ப்ரஹ்ம மிருப்பதாக அவர்கள் சொல்லுவதால் '[illegible]' இத்யாதி ச்ருதிகளிற் கூறிபபடி யதாவஸ்தித விஷ்ணுவை யறிந்து தத் பக்தர்களாக இராததனால் இவர்களுக்கு வாஸ்தவ வைஷ்ணவத்வம் வாராது என்றும் விவேசனம் செய்கிறார்கள். ஆக் சில விசிஷ்டாத்வைத மதத்தைப் போல இதையும் நாம் அவைஷ்ணவமாகக் கொண்டாலும், மற்ற ஸ்ரீ ராமானுஜ, மத்வ, நிம்பார்க்க, வல்லப மதங்களை வைஷ்ணவ மதங்களென்றே ஔசித்யத்தையும் ப்ரஸித்தியையும் கொண்டு அங்கீகரிக்க வேண்டும்.

இந்த நான்கு ஸம்ப்ரதாயங்களுக்கும் மூலப்ரவர்த்தகர்கள் யார் என்று விமர்சிக்கப் புகுந்தால், ஸர்வ ப்ரதம குருவான நாராயணன் ஸர்வ ப்ரவர்த்தகனாயிருப்பது ஸர்வமத ஸாதாரணமாகையாலே, அதற்கு மேற்பட ப்ரவர்த்தகர்களில், ஸ்ரீ பகவத் ராமாநுஜ மதத்திற்கு இலக்ஷ்மீதேவி ஸ்ரீ மாத்வ மதத்திற்கு ப்ரஹ்மா, ஸ்ரீ நிம்பார்க்க மதத்திற்கு ஸநகாதி யோகிகள், ஸ்ரீ வல்லப மதத்திற்கு ருத்ரன்—என்று ப்ரஸித்தமாயிருப்பதை யாரும் மறுக்க முடியாது. அவ்வோமத ப்ரவர்த்தகரான ஸ்ரீமத் ராமானுஜ ப்ரப்ருதிகளை கீழ்ச் சொன்ன மஹநீயரின் அவதார விசேஷமாகவும் சிலர் கருதுகிறார்கள். இந் நால்வரில் ப்ரஹ்மாதிகள் பத்தசேதனரென்பதும் நிர்விவாதம். ஆக இவர்களை விட உத்க்ருஷ்டரான முக்தர்களுக்கும் மேற்பட்ட நித்ய ஸூரிகளுக்கும் நிருபாதிகசேஷியாய், '[illegible]' என்கிறபடியே பகவானுடைய தேவத்வத்திற்கும் பரம ஹேதுவாய், அஜ்ஞாத நிக்ரஹையாய் அநுக்ரஹமயியாய் ப்ரஸித்தமான பெரிய பிராட்டி யாராலே ப்ரவர்த்திக்கப்பட்டதாகையாலே நம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே மிகச் சிறந்ததென்றும் அவளுடைய அவதார விசேஷமான எம்பெருமானாரே ச்ரேஷ்டாசார்யர் என்றும் நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. இப்படி ச்ரேஷ்டத்வம், பிராட்டி ஸம்பந்தம் முதலியதைத் தெரிவிக்கவே நம்மை அஸாதாரணமாக ஸ்ரீ வைஷ்ணவரென்றும், நம்மாசார்யர் அருளிச் செய்த பாஷ்யத்தை ஸ்ரீ பாஷ்யமென்றும் நாமும் பிறரும் நிர்விவாதமாகச் சொல்வது போலும்.

பராசர—பாதராயண—போதாயநாதி ப்ரமர்ஷிகளாலும், டங்க—த்ரமிட—குஹதேவ—கபர்தி—பாருசி முதலிய பல சிஷ்டர்களாலும் பரிக்ரஹிக்கப்பட்ட இந்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை, பெரிய பிராட்டியார், விஷ்வக்ஸேனர், நம்மாழ்வார், மூலமாக நாதமுனிகள் பெற்று, தாமும், தம் பேரனான ஆளவந்தாரைக் கொண்டும் பரிஷ்கரித்தருளினார். ஆனாலும் யோகாப்யாஸத்திலிருந்ததோர் அத்புத சாமர்த்யத்தாலே பகவதனுபவரஸாஸ்வாதத்திலும் பஜன பத்ததியிலும் மூழ்கியிருந்தபடியாலே பலவகையில் ப்ரசாரப் படுத்த சமயம் வாய்க்காமலிருந்தது. ஆகவே எம்பெருமானார் இக்குறையை நீக்கக்கோலி மத ப்ரசாரத்திலே மிக்க ஊக்கங்கொண்டு தம் ஒப்பற்ற செய்கைகளாலே இதனை ப்ரபலப் படுத்தியருளினார். அச் செயல்களில் முக்யமானவை மூன்று. (1) பிறர் தம் மதத்திற்கு அனுகுணமாக இழுத்து வைத்த மூல க்ரந்தங்கள் அவர்கள் மதங்களுக்கு முரண்பாடாயிருப்பதை எடுத்துரைத்து வாஸ்தவார்த்தத்தை வெளியிட அறிய பெரிய க்ரந்த ரத்னங்களை அருளிச் செய்தது. (2) அவரவர்கள் தாங்கள் தழுவின மதத்தை விட்டு மிகுந்த ச்ரத்தையோடு இம்மதத்தில் புகுமாறு அவர்கள் வாதக்கதலிகளை மாய்க்க வாரணமாய் நின்று, அவர்களைத் திருத்தி அம்முகத்தாலே ஸ்ரீ வைஷ்ணவ மதத்தை ப்ரபஞ்சம் முழுக்கப் பரப்பியருளினது, (3) ஆங்காங்கு அனுதி

யாக ஆராதிக்கப் பட்டு வந்த ஆலயங்களில் அயலாருடைய ஆக்ரமணத் தினுலேற்பட்ட அநீதிகளை அழிய வைத்து ஸாஹிதா ஸம்ப்ரதாயங் களுக்கு அநுகுணமாக நீடித்து நடக்கும்படி வ்யவஸ்தை செய்தருளினது. இப்படி “ஸர்வாத்மநா ஸ்வநிஷ்டாநாம் ஸந்ந்யாஸாநாம் ஸேவாயாம் । ஸர்வதா தாஸ ஸேவாம்” என்று ப்ரபன்ன கர்த்தவ்ய கார்யாநுஷ்டானத்தில் பரம காஷ்டையிலே நின்று “ஸர்வதேச தசாகாலேஷ்வவ்யாஹத பராக்ரமா । ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாம் அபிவர்த்ததாம்” என்று ஆகல்பம் அநுஸந்திக்கும்படி செய்து வைத்து, குருபங்க்திஹாரயஷ்டிக்கு நாயகமணியாய் முன்னோர் பின்னோர் எல்லோர்க்கும் உத்கர்ஷத்தை உண்டாக்கின இவருடைய பெருமை வாசாமகோசரமன்றோ!

இப்படிப்பட்ட இம்மஹா புருஷனுடைய மஹிமையை ‘விஶ்ராணித விஜ்ஞாநாதி விஶிஷ்டநவரிஶிஷ்ட:’ என்கிற கணக்கிலே பரிபூர்ணமாக அறிந்து அதனநுபவத்திலீடுபட்டு ஸ்ரீ தேசிகன் யதிராஜஸப்ததி யருளிச் செய்தது. இவருடைய நிரவதிகமான மஹிமையை யிப்படி அநுஸந்திக்க இந்த ச்லோகம் (உபவீதிநம்.........யதீநாம்) பிறந்தது.

மதாந்தரஸ்தரான யதிகளுக்கு உபவீதம் முதலியதில்லை. இவர் ஸர்வ சாஸ்த்ர விமர்சம் செய்து தத்தாத்ரேயாதிகளைப் போல ஸதாசாரத்திலே நின்றருளினர்.

உபவீதிநம்—நான்காவது ஆச்ரமத்தை அலங்கரிக்கும் போது இம்மஹானுக்கு உப வீத ஸூத்ரங்கள் நாலு. அதில் ‘ஸுயஜ்ஞோபவீதா யஜ்ஞம் நாராயணபரா வயம் । நாஸ்திகம் த்ரைவர்கிகம் பாஷ்கரகம் ச வாரணம்’ என்கிறபடியே தர்மார்த்த காமரூப த்ரிவர்க, தத்பரர்களுக்கும்; அபவர்க—தத் பரர்களுக்கு மிருக்கும் வாசியை யறிவிப்பதற்குப் போல மூன்று ஸூத்ரங் களிலிருந்து பிரிந்து நான்காவது ஸூத்ரமிருப்பது.

ஊர்த்வபுண்ட்ரவந்தம்—காம காமர்களுக்கேற்பட்ட கதாகத—திர்யக் கதிகளை யடையவிடாமல் ‘உத்தாரயிஷ்யதி ஜநாநிதி’ என்கிறபடியே ஆச்ரயித்தவர்களை உயரத் தூக்குவதற்காக ஊர்த்வ கதியை யடைந்த புண்டாமிவர் தரித்தருளியது. மதுப்பாலே அதற்கு அதிசயம் சொல்லப்படுகிறது. அவ்வதிசயம், ஹரிபாதாக்ருதியாய், ச்வேதமிருத்திகாமயமாய், மத்தியில் ஸ்ரீ. ரேகையோடு கூடியிருப்பது முதலியது. இதனுல் நிம்பார்க்காதி வைலக்ஷண்யம் வ்யக்தம்.

த்ரிஜகத்புண்யபலம்—மூன்று ரேகையுள்ள ஊர்த்வ புண்ட்ரத்தையும் த்ரிதண்டத்தையும் தரிக்குமிவர் மூன்று ஜகத்தின் புண்ய பலம்



என்று அறிவிக்க இப்பதத்தை இங்கே ப்ரயோகித்தது. ‘ஸப்தர்ஷிநாஷ்ட்ய: ஸாக்ஷிணோ’ என்கிறபடி த்ரைலோக்யநாஷ்ட்ய ஸத்வ ரூபமான மூன்று ஜகத்துக்கும் இவராலே உஜ்ஜீவனம். ‘தஸ்மை தேவா பலிமாவஹந்தி’ என்கிறபடி தேவாதிகளுக்கும் ஆராத்யனுமாம். ப்ருந்தம் ப்ருந்தமாக ப்ரபன்னரை ஸாத்விக-ராஜஸ-தாமஸ ஜனங்களுக்கும் அவருடைய தர்சனமாத்ரத்தாலே ஸத்கதியுண்டு. ஸ்வர்காதிகளுச்கும் பதிலாக ஸகல புண்ய பலமாக இவரை உலகுக்கு எம்பெருமான் ஏற்படுத்தினுன். புண்யங்களெல்லாம் இம்முகத்திலே பலித்தபடி, கோபஸ்திரீக்கு புண்யங்களெல்லாம் பகவதனுபவமாகப் பலித்ததன்றே! இனி புண்யபந்தங்கூட இராமல் மோக்ஷம் ஸித்தம். பக்த புத்தியால் எது புண்யமோ அதற்கு மிவரே பலம். ‘ஸுக்ருதம் வா நித்யம் யதீயசரணௌ ஶரணம்’ என்கிறபடி இவரே புண்யமும் பலமும்; உபாயமும் உபேயமும். இவருடைய அவதாரத்தா லன்றே மூன்று லோகமும் தத்வஹித புருஷார்த்தங்களைத் தெளிந்தது. தேவாதிகளும் இவருடைய சிஷ்யத்வத்தை விரும்பினுர்கள்.

த்ரிதண்டஹஸ்தம்—

ஜ்ஞாநதண்டோ ஹவேத் தண்ட: க்ருதண்டஸ்து உச்யதே ।
விஷ்ணுதண்டஸ்து நீயதே ஸ்வயம் த்ரிதண்டயாஸ்யே யதி: ॥

ப்ராபகம்-ப்ராப்தா-ப்ராப்யம்-இம் மூன்றையும் அறிவிக்க மூன்று தண்டங்கள். விஷ்ணுவுக்கு ஆத்மா சேஷம். ஆத்மாவுக்கு ஜ்ஞானம். ஆகவே க்ரமமாக தண்டங்களுக்கு ஏற்றக் குறைவு. ஏகதத்வ வாதிக்கு ஏகதண்டம் உசிதமாகலாம். தத்வத்ரயவாதிகையாலே த்ரிதண்ட மென்றேகவசனம்.

“காணாதஶாக்ய பாஷண்டைஸ் த்ரயீதர்மோ விலோபித: ।
த்ரிதண்டதாரிணா பூர்வம் விஷ்ணுநா ரக்ஷிதா த்ரயீ ॥”

ருக்-யஜுஸ்-ஸாமமென்கிற மூன்று வேதங்களை யழித்த மூன்று மதஸ்தரை மாளவைக்க மூன்று தண்டங்களை யல்லவோ விஷ்ணு ஏந்துகிருர். இந்த ஸ்ரீ வைஷ்ணவ மதத்தாலே இதர மூன்று மதங்களுக்கும் நிராஸம். வாக்கு-மனஸ்-சரீரம் என்கிற மூன்று காணங்களை யடக்குவதற்குச் சின்னம் மூன்று தண்டங்க ளென்பதும் ப்ரஸித்தம்.

ஶரணாகதஸார்த்தவாஹம்— ஸர்வஸாதாரண தர்மாசார ரக்ஷணம் முன் சொல்லியாயிற்று. அகிஞ்சனுதிகாரிகளுக்குத் தக்கபடி சாஸ்திர ஸித்தமான சரணுகதி தர்மத்தின் ப்ரகாசம் இவருக்கு அதீனம். ஒன்றிரண்டு சரணுகதர் ஏற்பட்டது முன்னேர்களாலுமுண்டு. இம்மஹநீயர் ஒருவரே கூட்டங்கூட்டமாக சரணுகதரை ப்ரவஹிக்கச் செய்

தது. யாத்ரைகளிலும் 'ஸம்ஸேவித ஸம்யமிஸப்த ஶதீ' என்கிறபடியன்றோ இவர் தேசங்களுக்கு விஜயம் செய்தருளியது. சரணாகதரைச் சேர்ந்த கூட்டத்திற்கும் இவரே நேதா—ப்ரபன்னஜன ஸந்தான கூட்டஸ்தர்.

ஶிவயா ஶே஖ரிணம்—இப்படி வர்ணாச்ரம தர்ம ரக்ஷணபரராய் பிறர்களை ஜயித்து முழுஉலகத்தையும் வசப்படுத்தி ப்ரபன்ன ஸாம்ராஜ்யத்தைப் பெற்று த்ரிவேதீ பத்ரவேதியில் வீற்றிருக்கும் யதிராஜனுக்கு சிகையே கிரீடம்.

யதீநாம் பதிம்— ஆச்ரமதர்மத்தை ரக்ஷியாதவர்கள் அயதிகள். ஸ்வயம் தர்மாநுஷ்டானத்திலே நின்றமாத்திரத்திலே யதிகள்- ஸகலரையும் ஸத்தர்மத்திலே நிறுத்திவைக்கும் நூற்றுக்கணக்கான யதிகளைப் பரிவாரமாகப்பெற்றிருக்கு மிவர் யதிராஜர்.

ஏவம்—இவருடைய யதாவஸ்தித கல்யாண குணங்களில் இம்மாதிரி சிலவற்றைச் சொல்லி ஆத்மதாரணம் செய்துகொள்ளுகிறேன்.

இங்கே 'பதிம்' என்றதாலே ஸார்வபௌமஸாம்யம் விவக்ஷிதம், வீதம் என்றால் யானை, குதிரை முதலிய ஸைன்யம். ஸைன்யம் யுத்தஸமர்த்தமென்றும் விஹாரோபயுக்த மென்று மிருவகைப்படும். ஆக கொஞ்சம் தூரத்தில் யுத்தஸைந்யத்தையும் ஸமீபத்தில் விஹாரோபயுக்த ஸைன்யமுமுள்ளவராய், புண்ட்ரேக்ஷு முதலியன ஓங்கிவளரும்படி பூமண்டல ஸம்ருத்தியுடையவனாய், ஸமஸ்த உலகங்களையும் பெறும்படி புண்யசீலனாய், செங்கோல் விளங்கும் கையனாய், அரசர் அனைவரும் தன்னைச் சரணாகதி செய்ய ஸாம்ராஜ்ய கிரீடமணிந்து ஸிம்மாஸனத்திலே வீற்றிருக்கும் ஸார்வபௌமன் என்று அர்த்தம் சொல்வது யுக்தம். 'ஸாம்வாஹம்' என்றிருப்பதாலே ஓர் வ்யாபாரி விவக்ஷிதமென்று பெரியோர் சொல்வதுண்டு. அதாவது புண்ட்ரேக்ஷு, பலம் முதலிய பல சாமான்களைக் குதிரை மேலெடுத்துச் சென்றும் அவர்களோடு சேர்ந்து ஆங்காங்கு வ்யாபாரம் செய்ய கூடாரத்திற்கு வேண்டிய தண்டங்கள் முதலியவற்றுடன் புறப்படும் ஓர் வ்யாபாரி என்று அபிப்ராயம். 'வ்ருஷ்டௌ ஶௌ க்ருஷீவலம் யிநோதி' என்கிறபடி ஸர்வேச்வரன் குடியானவனாகும்போது எம்பெருமானார் வ்யாபாரத்தொழிலில் நின்று அவருக்கு உபகரிப்பதும் பொருத்த முள்ளதாகலாம்.

---

# ஸ்ரீ பகவத் ராமாநுஜனுடைய கவிதை

[ஸ்ரீ. உ.ப. அநந்தாசார்யர், பச்சையப்பன் காலேஜ், சென்னை.]

வேதங்களை அத்யயநம் செய்தவர்களுக்கும் கவிதைக்கும் வெகுதூரம் என்பது ஸாதாரணமான கொள்கை. "छान्दसाः श्लोकशात्रवः" என்று பழமொழியும் உண்டு. மற்றோரிடத்திலும், மீமாம்ஸா நிபுணனை, கவிதை என்னும் பெண் நபும்ஸகன் எனக் கருதி தள்ளி விடுகிறாள் என்றும் கூறப்பட்டது. ஆனால் மேற்சொன்ன மேற்கோள்கள் அனைத்தும் நமது உடையவருடைய கவிதையை விலக்கியே நிற்கின்றன. நமது ஆசார்யன், செய்யுளாகவோ வாசகமாகவோ ஒரு காவ்யம் இயற்றி இருப்பாராகில், இப்போது காணப்படும் காவ்யங்களைக் காட்டிலும் மேம்பாடு பெற்றிருக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. மிகவும் நுட்பமான சாஸ்திர விஷயங்களை உபந்யஸிக்கும் போது கூட ஸ்ரீ ராமபிரானுக்கு, அஸ்திரங்கள், "शाधि किंकरवाम ते" என்று எதிரில் கை கூப்பி நின்றதுபோல் சப்த ஜாலங்கள் அனைத்தும் தானே வந்து இவருடைய ஸ்ரீ ஸூக்தியில் படிந்து நின்றன என்று கொள்வது தகும். வடமொழியில் பத்ய-ரசனையைக் காட்டிலும் கத்ய ரசனையில் ப்ரயாஸம் அதிகம் என்று சொல்லுவதுண்டு. கத்ய காவ்யம் இயற்றி பேர் பெற்றவர் சிலரே. அதில் காதம்பரீ மிகச் சிறந்தது. பட்டபாணன் காதம்பரியில், இரத்நமும் தங்கமும் சேர்வது போலே மிகவும் அழகிய சொல்கோர்வையை மிகவும் ப்ரயாசப்பட்டு ஸம்பாதித்தான். அப்படிப்பட்ட சொல் கோர்வை ஸ்ரீ பாஷ்யத்தில் ஸ்ரீ பாஷ்யகாரருடைய ப்ரயத்நமின்றி தோன்றியிருப்பதை ரஸிக சிகாமணிகள் கண்டு தலையாட்டி மகிழ்கின்றனர். ஸ்ரீ பாஷ்யத்தில் அர்த்த காம்பீர்யம் ஒரு புறம் இருக்க சப்த காம்பீர்யம் ஒப்பிலாச் சிறப்பு வாய்ந்தது. ஸ்ரீ பாஷ்யத்தை சில பெரியோர் ஸ்ரீ பாஷ்ய காதம்பரீஎன்று பெயரிட்டு அழைப்பதுண்டு. சாஸ்திர விஷயங்களைச் சொல்லும்போது காவ்ய குணங்கள் நிறைந்த வாக்கு புறப்படுவதென்றால் இதைக் காட்டிலும் என்ன ஆச்சரியம் உண்டு? ஸம்ஸ்கிருதத்தில் வசநம் எழுதுவதில் இரண்டு ப்ரகாரங்கள் உண்டு. ஒன்று மிகச் சிறிய பதங்கள் அடங்கிய சிறிய வாக்யங்களைக் கொண்டு விஷயங்களை போதித்தல். இதை வேதங்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் மஹா பாஷ்யம் முதலான ரிஷிகள் அருளிய க்ரந்தங்களிலும் காணலாம். மற்றொன்று, மிகவும் சுலபமான நடையை விட்டு, ஸம்ஸ்கிருத பாஷையில் அதிக பரிசயம் வாய்ந்தவருக்கு மாத்திரம் எளிதாயிருக்கும்படி, செவிக்கினிய செஞ்சொல் எனக் கூடியதாய் ஒலியில் ஒற்றுமை வாய்ந்த

சொற்களைச் சேர்த்துப் பொருளை உரைத்தல். ஸ்ரீ சங்காசார்யர் தனது பாஷ்யத்தில் முதலில் சொன்ன ரீதியையே பெரும்பாலும் பின்பற்றினார். நமது ஸ்ரீ பாஷ்யகாரர் இரண்டாவது சொன்ன ரீதியில் ஆதரம் வைத்தார். இவ்விருவரும் வெவ்வேறு ரீதியில் ஊக்கம் வைத்தற்குக் காரணம் என்ன? என்ற கேள்விக்கு அடியேனுக்கு ஒருவிதமாய்த் தோன்றியதை விஜ்ஞாபநம் செய்கிறேன். கிரந்தங்களை இயற்றுவதில் அநேக ரீதிகள் உண்டு. வைதர்பீ, கௌடீ, பாஞ்சாலீ, என்று; இவை சப்தங்களை மாத்திரம் பற்றி நிற்கும் குணமாகும். சப்தங்களுக்கு ஏற்றபடி பொருளை விளக்கிக் காட்டும் திறமைக்கு பாகம் எனப் பெயர். அது திராக்ஷா பாகம், நாரிகேளபாகம், மதுபாகம், க்ஷீரபாகம் எனப் பலவகை படும். ரீதி, பாகம் இவற்றில் ஒரொன்றே ஒவ்வொரு கவியினிடத்தில் திறம் பெற்று நிற்கும். ஒரே கவியினிடத்தில் காலபேதத்தால் பலவற்றை காணலாம். ஒரே கவியினிடத்தில் சிறுமையில் ஒரு ரீதியும் முதுமையில் வேறு ரீதியும் காண்பது கூடும். ஒரு கவியின் வாக்கில் சிறந்த ரீதி பாகம் இவை தோன்றுவதற்கு மநுஷ்ய ப்ரயத்நத்தைக் காரணமாகச் சொல்ல இயலாது. அவர் எம்மாதிரி கிரந்தங்களில் அதிக பரிசயம் செய்தாரோ அந்த கிரந்தங்களின் ரீதி முதலிய குணங்கள் அவர் மனதில் திடமாகப் பற்றி நின்று, அவர் நாவிலிருந்து பரவசமாகப் புறப்படுகின்றன. வேதங்களுடைய சொல் நடையும் ஸ்மிருதீதிஹாஸ புராணாதிகளின் சொல் நடையும், ஏறக்குறைய ஏக ரூபமாயினும், அவை தம்மில் ஸ்வல்ப வித்தியாசத்தை ஒளிக்க முடியாது. வேதத்தில் அதிக பரிசயம் செய்த கவிகளுடைய வாக்கில் அவ்வேதத்திற்குரிய ரீதி முதலான குணங்களே தோன்றும். வேதாந்தங்களிலும், உபப்ரும்மண ரூபங்களான கிரந்தங்களிலும் அதிக பரிசயம் செய்தவருடைய வாக்கில் அதற்குரிய குணங்களே தோன்றும். நமது மதாசார்யர்கள் அனைவரும் ஸகல வித்யா ஸ்தாநங்களிலும் தட்டுத்தடையின்றி ப்ரவேசமுள்ளவர். ஆயினும் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு கிளையில் அதிக பயிற்சி இருப்பது இயல்பு. நமது ஸ்ரீ சங்கராசாரியர் வேதங்களில் இடைவிடாது பயிற்சி செய்து அதன் பயனாக வேதங்களின் சொல் நடை தனது வாக்கில் தோன்றும்படி பெருமை வாய்ந்தார். நமது உடையவர் வேதார்த்தங்களை உபப்ரும்மணங்களால் நிர்ணயிக்கவேணும் எனக் கருதி ஸ்மிருதீதிஹாஸ புராணாதிகளில் அதிகபரிச்ரமம் செய்து அதன் பயனாக வேதத்திற்காட்டிலும் விலக்ஷணமாய் காவ்யத்திற்குரியதான பாஞ்சாலீ என்னும் அநாயஸமாய் நாவிலிருந்து புறப்படும்படி பெருமையைப் பெற்றார். तदिदमौपनिषदपरमपुरुषवरणीयता हेतुभूत विशेषविरहिणाम् இது முதலிய வாக்யங்களின் காம்பீர்யத்தைப் பார்க்கும்போது ஸ்வாமியினுடைய பாஷாஜ்ஞாநம் எப்படிப்பட்டது என்பது நன்கு விளங்கும். ஸ்ரீ



உடையவர் அருளிச்செய்த 9 கிரந்தங்களில் ஸ்ரீ பாஷ்ய கிரந்தத்தின் ரீதி இதர விலக்ஷணமாகவே தென்படுகிறது. உடையவர் ஸ்ரீ பாஷ்யத்தை அருளிச் செய்யும்போது, தன்னை மறந்து ஸ்ரீ ஆளவந்தார் நாதமுனி இவர்களிடத்தில் தந்மயத்வம் வாய்ந்து இந்த கிரந்தத்தை அருளிச் செய்தார் என்று சொல்வது பொருந்தும். ஆகையால் சாஸ்த்ர கிரந்தங்களில் உயர்ந்த சொல் நடையை வாசித்து ஆநந்திக்க விருப்பமுள்ளோர் அனைவரும் ஸ்ரீ பாஷ்யத்தை ஸேவிக்காவிட்டால் ஏமாந்துபோவர்.

---

# ஸ்ரீ ராமாநுஜர் செய்த வேததாத்பர்ய நிர்ணயம்.

[ஸ்ரீ. ஸ்ரீ.]

"ஸ்ரிய:பதியே ஸர்வ ஜகத்காரணமான பரதத்வம். அவன் ஒருவித தோஷமற்றவனுயும் ஸகல கல்யாண குணங்களுக்கு இருப்பிடமாயும் இருக்கிறான். அவனிடம் பக்தி அல்லது ப்ரபத்தியே மோக்ஷத்தை விரும்புகிற ஜீவனால் அநுஷ்டிக்கப்படவேண்டிய உபாயம். ஸர்வ தேசங்களிலும் ஸர்வ காலங்களிலும் பகவானை அனுபவித்து, அவனுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டிருப்பதே மோக்ஷம்' என்ற இதுவே ஸர்வ வேதங்களின் தாத்பர்யமாக ஸ்ரீ பாஷ்யகாரர் என்கிற ராமாநுஜரால் நிர்ணயிக்கப்பட்டது. இந்த நிர்ணயமும் ஸ்ரீ ப்ராஷ்யகாரரால் பல ஸ்ருதி ஸ்மிருதி இதிஹாஸம், புராணம் முதலியவைகளைக் கொண்டே செய்யப்பட்டது.

நம் நாட்டிலுள்ள ஆஸ்திக மதங்கள் தெய்வத்தையும் அதன் குணங்களையும் மோக்ஷத்தையும் அதன் உபாயத்தையும் பற்றிப் பலவாறாகக் கூறினாலும், அவை யெல்லாம் வேதத்தையே ப்ரமாணமாகக் கொண்டிருக்கின்றன. இப்படி பர்ஸ்பரவிருத்தமான பல வேறு சமயங்களும் ஒரே வேதத்தை ப்ரமாணமாகக் காட்டினால், வேதத்தின் உண்மையான ஸித்தாந்தம் என்ன என்பதைப்பற்றி அறிய வேண்டியது அவச்யமாகிறது. இந் நிலையில் ஸ்ரீ பாஷ்யகாரர், மற்ற ஸித்தாந்திகள் ஒருவிதமான வாக்யங்களுக்கு முக்யார்த்தமும் மற்றவைகளுக்கு கௌணார்த்தமும் கொடுப்பது போல் செய்யாமல், ஸகல வாக்யங்களையும் ஒரு முகப்படுத்தி, எல்லா வாக்யங்களுக்கும் முக்யார்த்தமே வரும்படி செய்தருளினார். இதுதான் வேதங்களுக்கு இவர் செய்த பெரிய உபகாரம்.

அதில் வேதத்தை ப்ரமாணமாக ஒப்புக்கொள்ளாத பௌத்தர்கள் முதலானோரைப் போலில்லாமல், பூர்வ மீமாம்ஸகர்கள் என்ற வகுப்பார் கூறுவதாவது—'வேதங்களில் பூர்வபாகமான கர்ம காண்டமே மிகவும் ச்ரேஷ்டம், அவற்றில் கூறியுள்ள யாகஹோமாதிகளே உபாயம்' 'யாகம் செய், ஹோமம் செய்' என்று இம்மாதிரி ஒரு கார்யத்தை விதிக்கும் வாக்யங்களே ப்ரமாணம், 'ப்ரஹ்மம் இருக்கிறது; அது ஆநந்த ரூபமானது' முதலான எற்கனவே ஸித்தமாயுள்ள ஒன்றைச் சொல்லும் வாக்யங்களுக்குத் தனியாக அர்த்தமில்லை, அவ்வாறாக வேதத்தில் தேவதைகளையும் ப்ரஹ்மத்தையும் பற்றிக் கூறும் வாக்யங்கள் வீண் என்று தோன்றும்படி செய்து விட்டார்கள்.

வேறு சிலர் 'வைதிக கர்மங்களே கீழ்ப்பட்ட ஒரு நிலைமைக்குத் தான்; ப்ரஹ்மம் ஒன்றுதான் ஸத்யம் என்ற ஞானத்தினால்தான் மோக்ஷம்' என்று நிச்சயித்தார்கள். இவர்களுக்கு ஈச்வரனையும், அவன் குணங்களையும், ப்ரபஞ்சத்தையும் உண்மையாகக் கூறும் வாக்யங்கள் விரோதிக்கின்றன. இவ்விதம் ஒரு சாரார் ப்ரஹ்ம காண்டத்தையும் மற்றொரு சாரார் பூர்வகாண்டத்தையும் அப்ரமாணம் போல் தள்ளி, வேண்டா வெறுப்பாய் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

நம் பாஷ்யகாரரோ பரஸ்பர விரோதம் போல் தோன்றும் வாக்யங்களுக்கும் அழகாக அர்த்தம் செய்து எல்லாவற்றையும் ஸ்ரிய:பதியினிடம் பொருத்தி விட்டிருக்கிறார். கர்ம காண்டத்தில் கூறப்பட்டுள்ள ஸகல யாகஹோமங்களும் பகவதாராதனங்களாகையாலும், அவற்றால் முமுக்ஷுவுக்கு அந்தக்கரண சுத்தியும் பகவானுக்கு இவன் விஷயத்தில் ப்ரஸாதமும் ஏற்படுகிறபடியால் அவை இவனுக்கு மோக்ஷத்திற்கு பரம்பரயா உபாயங்கள் என்று காட்டினார். இவ்வாறு கர்ம காண்டத்தையும் ப்ரஹ்ம காண்டத்தையும் ஒன்று படுத்தினார்.

இனி ப்ரஹ்ம காண்டம் என்கிற உபநிஷத்துகளின் வாக்யங்களிலும் அதேமாதிரியான ஒற்றுமையை உண்டு பண்ணினார். சில வாக்யங்கள் 'இரண்டாவதாக ஒன்றுமில்லாமல் தனியே ஸத் இருந்தது' என்று கூறுகின்றன. வேறு சில வாக்யங்கள் அனுபவிக்கிறவன் (போக்தா), அனுபவிக்கப்படுவது (போக்யம்) இது இரண்டையும் ஏவுகிற ஈச்வரன் என்று தத்வங்களை மூன்றாகப் பிரித்துக் கூறுகின்றன. சில வாக்கியங்கள் ஒரே ஆத்மா உளதென்றும் சில ஆத்மா பலவென்றும் கூறும். ஒரு வஸ்துவைத் தவிர வேறு கிடையாது என்று ஒத்துக்கொள்ளும் சமயிகள் ஸச்சிதாநந்தமான ப்ரஹ்மம் தவிர மற்றவையெல்லாம் ஸ்வப்நத்தில் காணப்படும் வஸ்துக்கள் போல் மித்யை என்றும், இந்த உண்மை ப்ரஹ்மம் ஸத்யம் என்கிற ஞானத்தினால் ஏற்படும் என்றும் கூறுவார்கள். இப்படிக் கூறுவதால் ப்ரபஞ்சம் ஸத்யம், ஆத்மாக்கள் பல உண்டு என்று கூறும் வாக்யங்கள் கைவிடப்பட்டனவாகும். அப்படியன்றிக்கே சேதனமும் அசேதனமும் ஸர்வேச்வரனுக்கு சரீரம் என்று கூறும் வாக்யங்களை எடுத்துக்கொண்டு, 'ஒன்றுதான் உளது' என்னும் வாக்யங்கள் சேதனாசேதனங்களோடு கூடின பரம்பொருள் ஒன்றுதான் என்பதைக் கூறும், சித், அசித், ஈச்வர தத்வங்கள் உண்டு என்பவை அவற்றைப் பிரித்துக் கூறும் என்று பாஷ்யகாரர் நிர்வஹித்தார். லோகத்திலும் 'சக்ரவர்த்தி ஒருவன்தான் உளன்' என்றால், அவனைப்போன்ற மற்றொரு சக்ரவர்த்தி இல்லையென்று கிடைக்குமே யொழிய, அவன் ராஜ்யமும் மந்திரிகளும் ப்ரஜைகளும் இல்லை என்று சொன்னதாகாது. அதே போல ஸகல சேதனாசேதன விசிஷ்டமான ஸர்வேச்வரன் ஒருவன் தான் உளன் என்பது தாத்பர்யார்த்தம்.



அவ்விதமே பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை ஆராயப் புகுந்து, சில வாக்யங்கள் ப்ரஹ்மம் ஸத்யமாயும், ஞானமாயும், ஆநந்தமாயும் இருக்கிறது என்று பல குணங்களோடு கூடினதாக ப்ரஹ்மத்தை உபதேசிக்கும். வேறு சில, ஒருவித குணமும் கிடையாது என்று அதை நிர்க்குணமாக உபதேசிக்கும். மற்ற சமயிகளோ ஸகுணமாகக் கூறப்பட்டது அவரமான (அதாவது கீழ்ப்பட்ட) ப்ரஹ்மம் என்றும் நிர்க்குண ப்ரஹ்மமே பரம் என்றும் கூறுவார்கள். ஒரு வஸ்துவை இல்லை என்று சொல்ல வேண்டுமானால், முதலில் அவ்வஸ்துவைக் கூறியே பிறகு அதை நிஷேதிக்க வேண்டும். ஆகையால் ஸகுண ச்ருதி பூர்வம், அதை நிஷேதித்துக் கொண்டு வரும் நிர்க்குண ச்ருதியே ப்ரபலம் என்று யுக்தியும் சொல்லுவார்கள். ஆனால் இது ஸரியாகாது. வேறொரு ப்ரமாணத்தால் அறியப்படாத ப்ரஹ்மத்தின் குணங்களைச் சொல்லி, வேதம் தானே அதை நிஷேதிக்கிறது என்பது உசிதமல்ல; தவிரவும் வேதமே ஓரிடத்தில் நிஷேதித்தது எதை என்றும் விதித்தது எதை என்றும் விஷயவ்யவஸ்தை செய்து கொடுத்திருக்கிறது. அதாவது இல்லை என்பது ஒருவித தோஷமும் இல்லை என்றும் உண்டு என்பது. ஸகல கல்யாண குணங்களும் உண்டு என்றும் ப்ரஹ்மத்தை அகிலஹேயப்ரத்யநீக கல்யாணகுண நிதியாகக் காட்டிற்று.

இப்படி தத்வத்தைப்பற்றி வேதத்தில் ஏற்பட்ட கலக்கங்களையெல்லாம் தீர்த்து, சேதனம், அசேதனம், ஈச்வரன் என்ற மூன்றும் ஸத்யம் என்றும், அசேதனம் சேதனத்திற்கும், இரண்டும் ஈச்வரனுக்கும் சரீர

மாக இருக்கும் என்று கூறியது போல உபாஸன விஷயத்திலும் ச்ருதி வாக்யங்களை ஸமந்வயப்படுத்தினார். கர்மாநுஷ்டானமே புருஷார்த்த ஹேது என்றும் ஞானமே ஹேதுவென்றும், கர்மங்களோடு கூடிய ஞானம் தான் ஹேது என்றும் பலவாறாகக் கூறுவார்கள். ஸ்ரீ பாஷ்யகாரரோ வென்னில் ஸகல ச்ருதி வாக்யங்களையும் பராமர்சம் செய்து பக்தியோகம், ப்ரஹ்ம வித்யை என்று சொல்லப்படுகிற உபாஸநமே ஸாக்ஷாதுபாயம். கர்மாநுஷ்டாந ரூப கர்மயோகம் அதற்கு அங்கம்; பக்தியாவது இடைவிடாமல் ப்ரதிதினமும் வர்ணாச்ரம தர்மாநுஷ்டாநங்களையும் செய்து கொண்டு, ப்ரீதி பூர்வகமாக பகவானைத் த்யானம் செய்வது என்றும் நிர்ணயித்தார். இதனால் வேதங்களில் சொல்லப்பட்ட ஒருவித கர்மாவும் வ்யர்த்தோபதேசமாகாதிருக்கிறது.

இவ்விதமாக ஸ்ரீ பாஷ்யகாரர் வேதவாக்யங்கள் எல்லாவற்றையும் ஒருவித விரோதமில்லாமல் நிர்வஹித்தார். சிலவற்றைத் தள்ளுவது, சிலவற்றை வேறு அர்த்தமுள்ளதாகக் கூறுவது முதலான ஒருவித க்லேசமுமில்லாமல், எல்லா வாக்யங்களுக்கும் முக்யார்த்தமே வரும்படி நிர்வாஹம் செய்தார். அதனால் ஸகுண ச்ருதியும் நிர்க்குண ச்ருதியும் ப்ரஹ்மைகத்வத்தைச் சொல்லும் ச்ருதியும் ப்ரபஞ்ச ஸத்யவத்த்தை சொல்லும் ச்ருதியும் ஆத்மபஹுத்வத்தைச் சொல்லும் ச்ருதியும் தங்களுள் பரஸ்பர விரோதத்தை விட்டு அகிலஹேயப்ரத்யநீக கல்யாண குணாகரனை ஸகல சேதனாசேதன விசிஷ்ட ஸ்ரீமந் நாராயணனையே ஜகத்காரணமான பரதத்வம் என்றும், தத்பாதபக்தியே பரமோபாயம் என்றும் ததநுபவபூர்வக கைங்கர்யமே மோக்ஷம் என்றும் பகவத் ராமாநுஜஸித்தாந்தஸாரபூதமான அர்த்தத்தைக் காட்டுகின்றன. இத்தை அநுஸந்தித்து **अखिलश्रुतिहितं रामानुजार्यं मतं** என்றார்கள்.

இப்படி ச்ருதிதாத்பர்ய நிர்ணயம் பண்ணி ச்ருதிஸித்தமானதும் லோகோபகாரகமானதுமான ந்யாஸ வித்யையையும் உபதேசித்துக் கொடுத்தார் ஸாங்க்யம், யோகம், ந்யாயம், மீமாம்ஸை முதலியவற்றில் மோக்ஷத்திற்கு ஒன்றொன்றை உபாயமாக விதித்தது. ஒருவர் ப்ரக்ருதி வேறு புருஷன் வேறு என்று அதன் பேதங்களை அறிய வேண்டும் என்றார். ஒருவர் ப்ரணவம் கொண்டு ஈச்வரனை யோகத்தில் அடையவேண்டும் என்றார். மற்றொருவர் பதினாறு பதார்த்தங்களின் யதார்த்த ஞானமே மோக்ஷஹேது என்றார். வேறொருவர் வேதத்தில் கூறப்பட்ட வைதிக யாகாத்யனுஷ்டானம் தான் என்றார். இவற்றில் ஒன்றை பிறவியினால் யோக்யதை யுள்ளவர்களே அநுஷ்டிக்கலாம்; வேறொன்று ஞானமுடையவர்களாலும், மற்றொன்று சக்தியுடையவர்களாலுமே அநுஷ்டிக்கலாம். ஒரு



சாரார் ஸந்யாஸாச்ரமத்தை அடைந்தேதான் மோக்ஷம் பெற வேண்டும் என்றார்கள். அவரவர்களுடைய மதப்பிரகாரம் ஜந்மம், ஞானம், சக்தி முதலியவற்றால் ஏற்றமில்லாதவர்களுக்கு மோக்ஷத்திற்கு வழியே இராமலிருந்தது. ஸ்ரீராமாநுஜரோ தன் அபாரகாருண்யத்தினால் ப்ரஜைகளிடத்தில் இரங்கி, தன் ஞானத்தால் வேதமாகிற ஸமுத்ரத்தைக் கடைந்து, அதில் ஸாரபூதமாய் மறைந்திருந்த ப்ரபத்தி என்னும் உபாயத்தை வெளிப்படுத்தினார். இதனால் ஒருவித யோக்யதை யற்றவர்களும் ஸர்வேச்வரனிடத்தில் மஹாவிச்வாஸம் வைத்து தன் எளிமையைக் கூறி சரணாகதி செய்தால் மோக்ஷத்தை யடையலாம். வேதத்தின் ஹ்ருதய குஹையில் மறைந்திருந்த இந்த ஸர்வஜநோபகாரமான உபாயத்தை வெளிப்படுத்தவே, ஆயிரம் மாதாபிதாக்களைக் காட்டிலும் வாத்ஸல்ய மதிகமுடைய வேதத்திற்கும் உபகாரம் செய்ததாயிற்று. நான்முகனார் பெற்ற நாட்டுளே வாழும் புல்லெறும்பாதி சராசரம் யாவற்றிற்கும் உபகாரம் செய்ததாகவும் ஆயிற்று. ஆக ராமாநுஜரின் உபகாரம் வேதத்தோடு நில்லாமல் ஸர்வஜனங்களுக்கும் ஆயிற்று.

**रामानुजार्य दिव्याज्ञा प्रतिवासरमुज्वला ।**
**दिगन्तव्यापिनी भूयात् सा हि लोकहितैषिणी ॥**

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய

### ஸ்ரீபகவத் ராமாநுஜரின் ஜாதகம்

அன்பில். ஸே. ஸௌம்ய நாராயணாசார்யன், ஸ்ரீரங்கம்

ஸ்ரீ பகவத்ராமாநுஜர் சென்னைப் பட்டணத்திற்கு ஸமீபத்திலுள்ள ஸ்ரீ பெரும்பூதூர் என்னும் ஸ்ரீ க்ராமத்தில் ஸ்ரீ கேசவ ஸோமயாஜி என்னும் மஹாநுக்குப் புத்திரராக, கலி 4119, (சாலிவாஹன சகாப்தம் 939), இங்கிலீஷ் கி. பி. 1017, பிங்கள வருஷ சித்திரை மீ ஸப்தமி திதி குருவாரங் கூடின திருவாதிரை நக்ஷத்திரத்தில் கடக லக்னத்தில் திருவவதாரஞ் செய்தருளினார். இவர் தாயாரின் பெயர் காந்திமதி. இவர் ஸந்யாஸம் பெற்றது 32-வது திருநக்ஷத்திரமான கி. பி. 1049. நித்ய விபூதிக்கு எழுந்தருளியது 120-வது திருநக்ஷத்திரமான கி. பி. 1137.

| | | | |
|---|---|---|---|
| | சூர்<br>புதன்<br>சுக் | ராகு | குரு<br>சந் |
| | ராசி<br>சக்கரம் | | ல |
| | | | செவ் |
| சனி | கேது | | |

ஸ்ரீ:

# ஸித்தாந்த ஸம்பந்த விருத்தாந்தங்கள்

## (1)

## ஸ்ரீ மதுராந்தகத்தில் தோன்றின ஸுதர்சந பாஞ்சஜந்யம்

ராவண விஜயம் செய்து புஷ்பக விமானத்தோடு ஸீதா ஸமேதராய் திருவயோத்யைக்கு எழுந்தருளுகிறபோது, முன் விபண்டகருக்கு ப்ரதிக்ஞை செய்தபடி அவருக்கு ஸேவை ஸாதிக்கும்பொருட்டு புஷ்பக விமானத்தை நிறுத்தி தான் இறங்கி தன் திருக்கையால் பிராட்டியின் திருக்கையைப் பற்றி இறக்கிவிடும் அவஸரத்தில் ஸேவைஸாதித் தருளுகிறார் ஸ்ரீ மதுராந்தகத்தில் கருணாகரனான சக்ரவர்த்தித் திருமகன். இப்படிப் புராண ப்ரஸித்தமாயிருப்பது தவிர, பல காரணங்களால் யாதவப்ரகாசியர்களுக்கும் விசிஷ்டாத்வைதிகளுக்கும் இந்த க்ஷேத்ரம்மிகவும் ஆதரிக்கத் தக்கதாயிருக்கிறது. இவ்வூர் ஸந்நிதியின் பின் ப்ராகாரத்திலுள்ள மகிழ மரத்தடியில் வேதாந்த ப்ரவசநம் செய்ய வேண்டும் என்றும் வேதாந்த க்ரஹணம் செய்ய வேண்டும் என்றும் விரும்பி அவ்விதமே செய்த ஆசார்யர்கள் பலர். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்குள் இவ்வூருக்கு "மூலமந்திரம் விளைந்த திருப்பதி" என்றும், "விசிஷ்டாத்வைதத்திற்கு நாற்றங்கால்" என்றும் ப்ரஸித்திப் பெயர் உண்டு.

இதன் ஐதிஹ்யம் பின்வருமாறு:—ஸ்ரீ ராமாநுஜர் காஞ்சியில் யாதவப்ரகாசரிடம் சாஸ்திராப்யாஸம் செய்து வரும்போது, பல இடங்களில் அவர் செய்த அர்த்தங்கள் மனதிற்கு அதிருப்தியாகவே தோன்றின. இப்படி நெடுநாள் செல்ல, கடைசியில் ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ஆளவந்தார் என்கிறவரிடம் ஸரியான ஸம்பிரதாயார்த்தம் பரம்பரையாக வந்து அவர் ப்ரவசநம் செய்துகொண்டிருப்பதாகக் கேள்வியுற்று, அங்கே போக எண்ணி ஸ்ரீ ராமாநுஜர் ஸ்ரீரங்கத்தை நோக்கிப் புறப்பட்டார். அதே ஸமயத்தில் ஆளவந்தாரும் தனக்குப் பிறகு விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு ராமாநுஜர் தான் ஸரியான நிர்வாஹகர் என்று நிச்சயித்து, அவர் அக்காலம் காஞ்சியில் யாதவப்ரகாசரிடம் இருந்தபடியால், அவரைத் திருத்தி ஆட்கொள்ளத் திருவுளம்பற்றி, தன் சிஷ்யரான பெரிய நம்பிகளை அனுப்பினார். இருவரும் யத்ருச்சையாக மதுராந்தகம் என்னும் க்ஷேத்ரத்தில் சந்தித்தார்கள். எதிர்பாராத லாபத்தை இருவரும் ஆநந்தித்தார்கள். அதுவே சிறந்த க்ஷேத்ரமும் காலமும் என்று எண்ணி சக்ரவர்த்தித் திருமகன் எழுந்தருளி யிருக்கும் விமானத்திற்கு வடமேற்குப் பக்கத்தில் ஒரு மகிழ மரத்தடியில் பெரிய நம்பிகள் ஸ்ரீ ராமாநுஜருக்கு பஞ்ச ஸம்ஸ்கார

மும் மந்த்ரோபதேசமும் செய்தார் என்று அவிகீதமான சரித்திரம் இருந்து வருகிறது. அதனாலேயே அவ்வூரிலுள்ள ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்நிதியில் ஸ்ரீ பாஷ்யகாரர் மற்ற க்ஷேத்ரங்களில் போல த்ரிதண்ட காஷாயங்களுடன் இராமல், கிரஹஸ்தாச்ரமத்தில இருக்கும் அவஸரத்தோடு ஸேவை ஸாதிக்கிறார். கீழ்ச் சொன்ன சரித்திரத்தை ஞாபகப்படுத்த அந்த இடத்தில் ஒரு மகிழ மரம் ரக்ஷிக்கப்பட்டு வருகிறது. பாஷ்யகாரரையும் பெரிய நம்பிகளையும் அந்தத் திருமகிழமரத்தினடியில் ஆண்டாள் ஸன்னதி மதலின் பின் புரம் சுவற்றில் எழுந்தருளப்பண்ணி யிருக்கிறது. இதனாலேயே இவ்வூருக்கு திரு மந்திரம் விளைந்த திருப்பதி என்று பிரஸித்தி.

இப்படி ராமாநுஜருக்கு பஞ்ச ஸம்ஸ்காரம் ஆன இவ்வாலயத்தில் இப்போது பகவத் பக்தி நிறைந்த மங்க்நீராம் ராம்குமார் என்கிற மஹோதாரர்கள் ஜீர்ணோத்தாரணம் செய்து வருகிறார்கள். அதற்காக ஸந்நிதி முன் மண்டபத்தில் பூமியை சோதிக்கும்போது வடபுறத்தில் பூமிக்குக்கீழ் படி வைத்துக் கட்டப்பட்ட ஒரு சிறிய அறை காணப்பட்டது. அது சுமார் ஆறடி அகலமும் 15 அடி நீளமும் 4 அடி உயரமுள்ளதாயிருக்கிறது. அவ்வறையில் வடமேற்கு மூலையில் சுமார் மூன்றங்குல உயரமுள்ள ஒரு ஸுந்தரமான நவநீத கிருஷ்ணன் விக்ரஹமும் திருவாழி திருச் சங்குகளும் காணப்பட்டன. நிதிபோல் அவை வைக்கப்பட்டதையும், பெரிய நம்பிகள் ஆராதனத்தில் வெண்ணைக் காடும் கண்ணன் இருந்ததையும் ஒத்துப் பார்க்கில், ஸ்ரீ ராமாநுஜருக்கு பஞ்ச ஸமஸ்காரம் அவ்வூரில் பெரிய நம்பிகளால் ஆனதற்கு இது ஒரு சான்றாக ஆகிறது. ஒரு சமயம் ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ஸமாச்ரயணம் செய்து திருமேனி ஸம்பந்தம் பெற்ற சங்க சக்ரங்கள் தானோ அவை என்று எண்ணும்படியாகவும் இருக்கிறது. அந்த கிருஷ்ண விக்ரஹமும் ஸுதர்சன பாஞ்சஜந்யங்களும் தத்காலம் அங்கு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ. உ. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமியின் நியமனப்படி அங்குள்ள ஸ்ரீ பாஷ்யகாரரின் ஸந்நிதியில் வைக்கப்பட்டு ஸேவார்த்திகளுக்குக் காண்பிக்கப்படுவதை அடியேனும் சென்ற வாரம் ஸேவித்து யங்ஞனதை விக்ஞாபிக்கலானேன்.

ஸ்ரீ. ஸ்ரீ.

---



(2)

## திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்.

### (1) கம்பர் திருநாட்கோண்டாட்டம் :—

திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கத்தின் 3 வது கம்பர் திரு நாள் கொண்டாட்டம் 26-3-37ட மாலை 3-30 மணிக்கு திருவல்லிக்கேணி தெள்ளிய சிங்கப் பெருமாள் கோயில் தவன உத்ஸவ பங்களாவில் மிகச் சிறப்பாக ஆரம்பமாகியது. பல கனதனவான்கள் விஜயஞ் செய்திருந்தனர்.

காரியதரிசி பாடிய கடவுள் வாழ்த்துக்குப் பின்னர் சங்கத்தலைவரால் மதுரை அட்வகேட் ஸ்ரீமான் டி. வி. ஸ்ரீநிவாஸய்யங்காரவர்கட்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பட்டதுடன் அன்னாரை அவைத் தலைமை வகிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. ஸ்ரீமான் வி. நரசிம்மாச்சாரியாரும் டாக்டர் சாமிநாதையரும் ஆமோதிக்க அய்யங்கார் அவர்களும் அங்கிகரித்துத் தலைமை தாங்கினார்.

கம்பர் திருநாளை வாழ்த்தி அனுப்பட்டிருந்த பல பாடல்களை பாடிய பின்னர் காரியதரிசி வருட நடவடிக்கை வாசிக்க, பலர் எழுதியனுப்பியிருந்த வியாசங்களின் சாராம்சங்களையும் எடுத்துரைத்த பின்னர் ஸ்ரீ உப. வே. ஸ்ரீகாழிச் சீராம விண்ணகரம் கம்ப ராமாயணம் ஆர். சந்தான கிருஷ்ணய்யங்கார் அவர்களால் கம்ப ராமாயணம் பாக்கள் சில இன்னிசையுடன் அழகாகப் பாடப் பெற்றன. தலைவரவர்கட்கும் உபந்யாசகருக்கும் சங்கத் தலைவர் பூமாலை யிட்டார்.

அவைத் தலைவர் முன்னுரையாக அழகியதோர் சிறு பிரசங்கம் செய்த பின் ஸேது ஸமஸ்தான மஹா வித்வானும் அண்ணாமலை யூனிவர்ஸிடி நீடருமான பாஷா கவிசேகர ஸ்ரீ உப. வே. ஆர். ராகவய்யங்கார் ஸ்வாமி 'கம்பர் கவித்திறம்' என்னும் விஷயம் பற்றி அரியதோர் உபந்யாசம் செய்தார்.

தலைவர் முடிவுரையாகச் சற்றுக் கூறி முடிதலும் காரியதரிசி வந்தனோபசாரம் அளிக்க இரவு 7 மணிக்குக் கொண்டாட்டம் இனிது முடிந்தது. சங்கத்தின் சார்பாக 31-3-37ட ஸ்ரீ உப. வே. ராகவய்யங்கார் ஸ்வாமிக்கு நூற்று முப்பது ரூபாய் ஸம்பாவனையாக ஸமர்ப்பிக்கப்பட்டது.

### (2) தமிழ்த் திரு நாட் கோண்டாட்டம்:—

ஈசுவர வருடம் 'சித்திரைமீ' முதல் தேதி 13-4-37 செவ்வாய்க்கிழமை மாலை 6-30 மணி முதல் 8 மணிவரை சங்கக் காரியாலயத்தில் தமிழ்த் திருநாட்கொண்டாட்டம் சிறப்பாக நடந்தது. "தமிழின் பெருமை" என்ற விஷயத்தை ஸ்ரீ உப. வே. ஆர். கேசவய்யங்கார் ஸ்வாமி உபந்யசித்தார்.

### (3) எம்பெருமானார் மஹோற்சவக் கோண்டாட்டம் :—

16-4-37ட முதல் 25-4-37ட முடிய பிரதிதினம் மாலை 6-30 மணி முதல் 8 மணிவரை சங்கக் காரியாலத்தில் அடியிற் கண்ட விபரப்படி உபந்யாசங்கள் நடந்தன.

1. ஸ்ரீ உப. வே. ஆர். கேசவய்யங்கார். 17-4-37; 19-4-37; 23-4-37; 24-4-37உ களில் முறையே எம்பெருமானும் வேதவ்யாசரும், எம்பெருமானும் வால்மீகியும், எம்பெருமானும் பாணினியும், எம்பெருமானும் தேசிகனும் விஷயங்கள்.

2. ஸ்ரீ உப. வே. வி. நரஸிம்மாச்சார் ஸ்வாமி 16-4-37; 20-4-37; 25-4-37; எம்பெருமானும் ஆழ்வாரும்; எம்பெருமானும் திருமங்கை மன்னனும்; எம்பெருமானும் ஆண்டாளும் முறையே விஷயங்கள்.

3. ஸ்ரீ உப. வே. குரிச்சி ஸ்ரீநிவாஸ வேதாந்தாச்சார் ஸ்வாமி 13-4.37உ எம்பெருமானும் ஆளவந்தாரும் விஷயம்.

4. ஸ்ரீ உப வே. ஸாது ராமாநுஜாச்சார் ஸ்வாமி. 21-4-37உ எம்பெருமானும் பட்டரும் விஷயம்.

5. ஸ்ரீ உப. வே. ஸ்ரீ ரங்கம் சடகோபாச்சார் ஸ்வாமி 22-4-37உ எம்பெருமானும் வரவர முனியும்.

**(4)** கோச்சி மஹாராஜாவுக்குப் பாராட்டு

2-5-37உ ஞாயற்றுக் கிழமை 4 மணிக்கு திருவல்லிக்கேணி ஸ்ரீ வானமாமலை மடத்தில் கொச்சி மஹாராஜாவின் சநாதன தர்ம நெறி நிற்கைக்கு விசேஷப் பாராட்டுக் கொண்டாட்ட விழா நடந்தது. ஸ்ரீமான் வி. நாரஸிம்மாச்சார் ஸ்வாமி தலைமை வகித்தார். கொச்சி மஹாராஜாவின் உறுதி மொழியான சநாதன தர்ம நெறிநிற்றலை நன்கு ஸ்லாகித்தும் அன்னார் ஆரோக திடகாத்ரராய் நெடுங்காலம் தர்ம பரிபாலனம் செய்யவேண்டுமென்றும் அவரது திவான் ஸர். ஆர். கே. ஷண்முகஞ் செட்டியாரின் நடுவு நிலைமையைக் கொண்டாடியும், திருவிதாங்கூர் மஹாராஜா இன்னும் இது விஷயத்தில் சாஸ்திர அசம்மதமான காரியத்தில் ஈடுபடுவதைக் கண்டித்துப் வைசிராயவர்கள் பிராசீன முறையை நிலை நாட்டி இதை முடிவு செய்யவேண்டுமென்றும், கூடல் மாணிக்கம் வைதிகர்களை நன்கு பாராட்டியும் தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறின. ஸ்ரீமான்கள் என். ஸ்ரீநிவாஸாச்சாரியார், ஸ்ரீராம் சடகோபாச்சாரியார், ஆர். கேசவய்யங்கார், வைத்யநாத ஸ்வாமி ஐயர், ஆர். நாராயணசாஸ்திரி அய்யர் இவர்கள் ஆதரித்துப் பேசினர். ஸ்ரீமான் எஸ். லக்ஷ்மி நரசிம்மாச்சாரியார் அளித்த வந்தனோபசாரத்துடன் சபை மாலை 6 மணிக்கு முடிவடைந்தது.

**(5)** அரிய உபந்யாசம்:—காரியதரிசியின் கனிஷ்ட குமாரன் அப்தபூர்த்தி விழாவையொட்டி 3—5—37உ காரியாலயத்தில் ஸ்ரீ ஸிம்ஹாதத்வம் எனும் விஷயம் உபந்யசிக்கப்பட்டது. இஷ்ட மித்ர பந்துக்களுக்கு இரவில் சிறு விருந்து ஒன்று நடந்தது.

**(6)** அமலனாதிப்பிரான் தோடக்கம்

இராயப்பேட்டை அய்யாமுதலி தெரு ஆறும் நம்பர் மேன்மாடியில் நடைபெற்றுவரும் தமிழ் பகுதியில் 5—5—37உ புதன் கிழமை சங்கத் தலைவர் அமலனாதிப்பிரான் தொடக்கம் செய்தார். பிரதிவாரம் காரியதரிசியால் இது தொடர்ந்து நடத்தப்படும்.

---

அதிர்ஷ்டம்! எப்படி?

**L. N. பெப்பர்மெண்டையே வாங்கவேண்டும்.**

குழந்தைகளின் சிநேகிதர்கள்! பெற்றோர்களின் களிப்பு!!

**விலை மலிவு! சுவை பெரிது!**

**நன்மை தரும்!**

இந்திய முதல்—இந்திய தொழிலாளிகள்.

**வாங்க முந்துங்கள்! கொடுக்கும் பணத்திற்கு**

**நல்ல பெப்பர்மெண்டு!!**

For Delicious and wholesome Confectionery made of selected Fruit Essence and healthy glucose, apply to:—

**SRI L. N. CONFECTIONARY,**

Sales Depot:—West Chitrai St., Madura.

*MADRAS OFFICE*:—**Phone No. 3658.**

Y. M. I. A. Buildings, Armenian St., Madras

---

**L** காயம்—பெருங்காயம் **G**

இதை ஹிங்கு—हिङ्गु என்று ஏனைய பாஷைகளிலும் வழங்குகிறார்கள். இது தன் குணத்தினாலும் நறு மணத்தினாலும் ஜீர்ணகாரியான மற்றச் சரக்குகள் பலவற்றையும் வென்றது என்பதை இப்பெயர் குறிக்கிறது. அதனாலேயே இதற்கு "ஸஹஸ்ர வேதி" என்றும் மற்றொரு பெயரும் வடமொழியில் வழங்கப்படுகிறது. "வயிற்றில் வாயு சேருவதையும், நெஞ்சில் கபம் சேருவதையும் தடுத்து விலக்கும்; வயிற்றுவலி முதலிய அஜீர்ணக் கோளாறுகளை அகற்றும்; பித்தஹரம்; சுவையில் காரமாயிருப்பதால், உணவை நன்கு ஜீர்ணம் செய்யும்; அரோசகத்தையும் போக்கும்; பசி தீபநம் செய்யும்" என்று ஆசார்ய வாக்படர் ஆயிரங் காலத்திற்கு முன் உயர்ந்த பெருங்காய குணங்களை உவந்து மொழிந்திருக்கிறார்.

" हिङ्गु वातकफानाहशूलघ्नं पित्तनाशनम् ।
कटुपाकरसं रुच्यं दीपनं पाचनं लघु ॥ "

இக்குணங்களையெல்லாம் பெற்ற பெருங்காயம் எல். ஜி. குறியுள்ளதைத் தவிர உண்மையில் வேறெதுவுமன்று. இதைக் கவனித்து எப்பொழுதும் காயம் வாங்குங்கள்.

**லால்ஜி கோது & கம்பெனி**

பிரபல பெருங்காய வியாபாரிகள்,

பம்பாய் சென்னை - கும்பகோணம்

अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

“अ इति भगवतो वाचकमकारं

प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।”

“ अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।”




தலைவலி, ஜலதோஷம்,

சுளுக்கு முதலான சகல

நோய்களையும் தீர்க்கவல்ல

ப்ரஸித்தமான லேபனம்—

## அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.

இளங்குழந்தை முதல் கிழவரீறாக

சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினால்

## ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்னம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப் பட்டது.

சாஸ்த்திர தந்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கி, முஸலீ கந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனால் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானால் அனுப்பப்படும்.

வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.

சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது

**வைர நகையே.**

ஸ்ரீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசநங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिरस्रैर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुण युक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் கம்பெனியாரே.



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.

Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by
Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras.

# SRI VEDANTA DIPIKA

Vol. 25] JUNE 1937 [Part 12

REGISTRAR OF ... 17 JUN 1937 ... MADRAS

# ஸ்ரீ
# வேதாந்த தீபிகை



ஈசுவர ௵ வைகாசி ௴

பத்ராதிபர் :
வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார்

CONDUCTED BY
Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd.,
VANI VILAS 4-5, BADRIAH GARDEN ST., PARK TOWN, MADRAS.

अमृतांजनम्

# அம்ருதாஞ்சனம்

உண்மையில் அம்ருதம் போன்றது. இப்பெயர் அகரத்தில் ஆரம்பிப்பதால் இது அகில மங்களமும் அளிக்கக் கூடியது என்று அடியில் கூறும் ப்ராசீன முது மொழி கூறுகிறது.

“अ इति भगवतो वाचकमकारं
प्रयुञ्जानेन किं नाम मङ्गलं न कृतम् ।”

“अकारोपक्रमश्चास्मिन्मङ्गलत्वाभिसन्धितः ।”




தலைவலி, ஜலதோஷம்,
சுளுக்கு முதலான சகல
நோய்களையும் தீர்க்கவல்ல
ப்ரஸித்தமான லேபனம்—

அம்ருதாஞ்சனம் லிமிடெட்

பம்பாய், மதராஸ், கல்கத்தா.


17 JUL 1937

ஸ்ரீ:

## நம்மாழ்வார் வைபவம்

[illegible]
[illegible] ॥

இந்த ஸ்ரீ ஸூக்தி யதிராஜ ஸப்ததியில் பகவான் முதல் ஸ்ரீ பாஷ்ய காரர் வரையிலுள்ள ஆசார்யர்களை அநுஸந்திக்கும்போது ப்ரபன்ன ஸந்தான கூடஸ்தரான நம்மாழ்வார் விஷயமாக ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்தது.

“[illegible] ॥”

(எந்த லக்ஷ்மண முனியின் ஸ்ரீ பாஷ்யாதி ஸூக்திரூபையான ஸ்திரீ யானவள் வேதமாகிற நாயிகையை ஸ்வாயீநமான பதியை உடையவளாகச் செய்கிறாளோ அல்லது அலங்கரிக்கிறாளோ) என்கிற ச்லோகத்திலும்

“[illegible] ॥”

(அல்பக்ஞர்களால் ஏற்பட்ட, பழமையான வேதங்களாகிற கிழப் பெண் பக்ஷிகளுடைய தப்பான அர்த்தமாகிற ஸரியில்லாத நடையை) என்கிற ச்லோகத்திலும் ச்ருதி முதலிய சப்த ப்ரயோகத்திலிருந்தும்

“[illegible] ॥”

(பழமையான வாக்கான வேதங்களாகிற நாயிகைகளின் வேதாந்தங்களாகிற கேசங்களை ஒற்றுமைப்படுத்துவதாகிற முடிச்சுப் போடுவதில் சேடிகளாயிருக்கின்ற யதீந்த்ரருடைய ஸூக்திகள்) என்கிற ச்லோகத்திலிருந்தும் வேதங்களுக்கு நாயிகாபாவம் தோன்றுவதால் இங்கு [illegible] பட்ட, [illegible] ச்ருதீநாம் என்கிற பதத்திலிருந்தும் வேதங்களுக்கு நாயிகாபாவம் தோன்றுகிறது. இங்கு வேதங்களுக்கு ஏற்படும் சிரமமாவது—அந்தந்த பகவத்குணத்தின் அதிசயத்தை வெளிப்படுத்துவதும் அளவற்றதும் அந்தந்த கல்பங்களில் நடந்ததும் விசித்ரமுமான [illegible] கோடிக்கும் குறைந்த அம்சத்தை கொஞ்சம் தெரிவிப்பது—இவ்வர்த்தம்

...சென்னை-600 ...

"ய... ஜாதே ஶ்ருதயோ நிர்மலம் ஸ்திதா: ॥"

என்கிற யாதவாப்யுதய ஸ்ரீஸூக்தியில் ஸ்பஷ்டம்.

நம்மாழ்வார் ஸ்ரீ ஸூக்தி வேத ப்ரதிபாத்யார்த்தத்தை நிரூபித்து ச்ருதிக்கு ஓய்வைக் கொடுக்கிறது என்றபிப்பிராயம். இவ்வர்த்தத்தில் 'ஶ்ருதய:' என்ற ரூபணத்திற்கும் 'ஸதாஸ்ரோதவாஸிதம்' என்கிற விசேஷணத்திற்கும் ப்ரயோஜனம் ஸரியாக ஏற்படவில்லை. ஆகையால்

"யஶ்ஶ்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத் ॥"

[எந்த எம்பெருமானார் வேதங்கள், ஸ்ம்ருதிகள், ப்ரும்ஹ ஸூத்ரங்கள் இவைகளுக்கு இருக்கும் உள்ளடங்கிய ஜ்வரத்தை (விரோதமான அர்த்தத்தை) போக்கடித்தாரோ] என்றும்

"அபாஹ்ருத ஸம்ஹவம் ஶ்ருதீநாம் ஜாதீநாம் ...யாயப்ரகாரம் என்றும், யதி ந்ருபதி ஸூக்தி: கதாப்ரவ்ருத்த ஸக்த கஹ கோலாஹல த்ரிவேதீ விநோதப்ரஸங்க விநோதப்ரணயிநீ ॥"

(வாதத்தில் கொழுப்படைந்த ஹைதுகர்களின் வாதப்ரதிவாதங்களுக்காக ஏற்படும் குயுக்திகளால் அபஹரணமாகச் செய்யப்பட்ட வேத த்ரயமாகிற நாயிகையின் துக்கத்தை அடுக்குவதாகிற) விளையாட்டில் ப்ரீதியுள்ள யதி ராஜரின் ஸூக்தி என்றும்

"உபநிஷதாம் குத்ருஷ்டி விப்லவாநபேக்ஷிணாம் ॥"

(குத்ஸித த்ருஷ்டிகளின் தொந்தரவு இல்லாத உபநிஷத்துகளுக்கு) என்றும்

"ப்ரஹ்மத்வேஷி குத்ருஷ்டி கல்பித பஹுஸித்தாந்தைகஹஸ்த ப்ரதை:
தர்க்கைர்பிந்ந ஶிரோவேதநாம் ஶிரஸ்ஸு நிர்ணயநோதாய ய: ।
ஸோऽயம் வாதிஹதீஶ்ருதிஸ்ஸு ஶிரஸ்ஸு ஸ்தாந கஸ்தூரிஹரி
ஸ்ரீமத்வேங்கடநாத ஶேகர த்ருதோ நாராயணோ ஸேவதாம் ॥"

(ப்ரும்ஹத்தினிடம் த்வேஷமுள்ள குத்ருஷ்டிகளால் கல்பிக்கப்பட்ட அநேகவிதமான ஸித்தாந்தங்களுக்கு கை கொடுக்கின்ற குயுக்திகளால் நானாவிதமாக விளக்கப்பட்ட (பிரிக்கப்பட்ட) வேதாந்தமாகிற தலையையுடைய வேதமாகிற நாயிகையின் தலை வலியைப் போக்கடிப்பதற்காக எவர் பூமியில் அவதரித்தாரோ வேதத்தைச் சேர்த்துவைப்பதில் குதூகலமுள்ளவரும் ஸர்வ வேதார்த்த ஞான நிதியுமான அந்த வெங்கடநாத தேசிகன் நமக்கும் நம் அனுபந்திகளுக்கும் வேதாந்தார்த்த ஞானமாகிற ஸம்பத்தை கொடுக்கட்டும் என்று அருளிச்செய்தபடிக்கும்



"பாரதீ காளிதாஸஸ்ய துர்வ்யாக்யாவிஷமூர்ச்சிதா ।
ஏஷா ஸஞ்ஜீவநீ டீகா தாமத்யோஜ்ஜீவயிஷ்யதி ॥"

(காளிதாஸனுடைய வர்க்காகிற ஸரஸ்வதியானவள் துர்வ்யாக்யானமாகிற விஷத்தால் மூர்ச்சையடைந்தாள். இந்த ஸஞ்சீவநீ என்னும் வ்யாக்யானம் இப்பொழுது அந்த ஸரஸ்வதியின் மூர்ச்சையை நிவர்த்தி செய்யப்போகிறது) என்றும் சொல்லுகிறபடிக்கும் பேத ச்ருதிகள், ஸகுண ச்ருதிகள் ஔபாதிகமாயும் நிருபாதிகமாயுமுள்ள அர்த்தத்தை தெரிவிக்கிறது என்றும் ப்ரம்மம் நிர்விஶேஷவஸ்து என்றும் 'அவசநேந ப்ரோவாச' என்றும்

"ஶாஸ்த்ரோக்தாநாம் வ்யாக்யாநம், ஶிஷ்யாணாம் ஹிதஸம்ஶயா: ॥"

என்றும் சொல்லுகிறபடி ப்ரம்மத்துக்கும் வேதத்துக்கும் ப்ரதிபாத்ய ப்ரதிபாதக ஸம்பந்தங்கூட கிடையாதென்றும் அத்வைதிகளும், அபேத ஶ்ருதிகளும் முக்தியில் ஸாம்ய ஸாரூப்யத்தைச் சொல்லும் ச்ருதிகளும் ஔபாதிகாபேத ப்ரதிபாதிகைகள் என்று சொல்லும் த்வைதிகளும் சிவனே பரதத்வம் என்று ச்ருதிக்கு தாத்பர்ய வர்ணனம் செய்யும் சைவர்களும் இம்மாதிரியான பல வாதிகளும் செய்யும் துர்வ்யாக்யானங்களால் வேதஸ்த்ரீகளுக்கு ஜ்வரம், தலைவலி, மூர்ச்சை முதலிய உபத்திரவமே இங்கு ச்ரமமாகக் கொள்ளவேண்டும். மிகுந்த பரிமளமுள்ள மகிழம் பூமாலையை மார்பில் அணிந்துகொண்ட நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பட்டிருப்பதால் அவ்வழியாக மிகுந்த பரிமளமுள்ளதும் சைத்யமுள்ளதுமான திருவிருத்தம் முதலிய ப்ரபந்த ப்ரவாஹம் வேதஸ்திரீகளுக்கு இருக்கும் ஜ்வராதி தோஷங்களைப் போக்கடிக்க வன்மை வாய்ந்தது என்றர்த்தம். அதாவது நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தி பாஹ்ய நிரஸநம் பண்ணி வேதங்களின் உண்மையான அர்த்தங்களை வெளிப்படுத்துகிறது என்று கருத்து.

நம்மாழ்வார் தனக்குப் பிறகு வரும் வாதிகளின் மதத்தை எவ்விதம் நிரஸிக்கக்கூடுமென்று நினைப்பதற்கில்லை. ச்ருதியிலும் ப்ரும்ம ஸூத்ரங்களிலும் அவைகளின் வ்யாக்யானமான போதாயன வ்ருத்தி முதலியவைகளிலும் ஸம்பாவிதமான மதாந்தரங்களை சக்தியினாலோ வ்யஞ்சனையினாலோ தூஷித்திருப்பதாலும் ஆழ்வார் த்ரிகாலக்ஞானபடியாலும் பின் வரும் வாதிகளின் மதத்தை நிரஸிக்கலாம். ஸ்ரீ மஹாசாரியர் ஶததூஷணீ

வ்யாக்யானத்தில் 35-வது வாதத்தில் நவீன மதத்தை நிராகரிப்பதற்காக ஸ்ரீ தேசிகன் 'தத்த்வ நிர்ணய நிரோதனம்' இத்யாதி ச்லோகத்தை அருளிச் செய்வதாக அவதாரிகை வைத்து அது எப்படி உசிதமாகும் என்று சங்கித்துக்கொண்டு

"க்ஷோபாய தோஷநிசயஸ்ய விநாசாய தீபஃ
ப்ராப்த: பதங்கபடலீமிவ ஸம்பதந்தீம் ।
க்ஷேமாய நோ பவதி யத்க்ருதிரத்ர ஸூக்தி:
பாஹ்யாதநாதனவிதிம் விஹிதாவரோதாம் ॥"

(இருளை நாசம் செய்வதற்காக தீபம் ஏற்றப்பட்டிருந்தாலும் பிறகு வந்து விழும் விட்டில் பூச்சிக் கூட்டத்தை அது நாசம் செய்வதுபோல் நமக்கு பூஜ்யரான ஸ்ரீதேசிகன் ஸூக்தி அந்தக் காலத்திலிருக்கும் மதத்தை நிரஸிப்பதற்காக செய்யப்பட்டிருந்தாலும் பிறகு வரும் வாதிகளைத் தடுப்பதற்கு ஸமர்த்தையே) என்கிற ச்லோகத்தை ஸமாதானமாக அருளிச் செய்தார். அதுபோல் இங்கும் சொல்லலாம்.

ச்ருத: என்று ஏகவசனமும் ச்ருதீநாம் என்று பஹுவசனமுமிருக்கின்றன. இவைகளிலிருந்து வெகு சாகைகளுடன் கூடின நான்கு வேதங்களுடையவும் தத்வார்த்தத்தை நம்மாழ்வார் ஸ்ரீஸூக்தி வெளிப் படுத்துகிறது என்கிறது வ்யஞ்சிதமாகிறது. இவ்வர்த்தம்

"யத்தத்வம் ச்ருதீநாம் கணநிகரை விஹிதைஸ் ஸேதிஹாஸை:
புராணைஸ் ஸாத்வதைஸ் ஸகலஸூரிபி: ச்ரேயஸே ஸந்நிதா ஸாரஸம்
ஸ்தநீ ।

(முனி ஸமூகத்தால் செய்யப்பட்ட, இதிஹாஸங்களுடன் கூடின புராணங்களால் வேதங்களுக்கு எந்தக் காரியம் ஏற்படுகிறதோ அவ் விஷயத்தில் ஸத்வ குணத்துக்கு எல்லை நிலமான சடாரி ஸம்ஹிதையினுடைய இந்த த்ராவிட ஸம்ஹிதையானது ஸக்வஸந்நிதியாக இருக்கிறது.) என்கிற ஸ்ரீமத் திரவிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளியில் ஸ்பஷ்டம்.

ஒன்பதினாயிரப்படியில் இந்த ச்லோகார்த்த விசாரத்தின் முடிவில்

"ஸ்வாதிஷ்ட்ட்ர்தியதேவ நிர்வஹண ஸமர்த்த ஸ்வஸ்யாஸ்ய ப்ரமேய ஸ்ய ச்ருத்யநுஸாரதயாநாமா யத்பூர்ணத்வ ப்ரதிபாதகத்யுவ யேத்தகல ஸம்ஸவேத இதிஹாஸ புராணஸ்ஸ்தானஷ்டிதத்வேந யோஷா ஹாவாக ॥"



என்கிற ஸ்ரீஸூக்தியில் ஸ்வாதிஷ்ட்ட்ர்தி போல் ச்ருதியை அநுமானம் செய்து ஆழ்வார் ஸ்ரீஸூக்தி ப்ரமாணமாவதால் இதிஹாஸ புராணஸ்தானத்தில் இருக்கத் தட்டில்லை என்று ஸமர்த்திக்கப்பட்டிருக்கிறது. ச்ருத: என்று அருளிச் செய்ததிலிருந்து ஆழ்வார் ஸ்ரீ ஸூக்தியின் நிரபேக்ஷ ப்ராமாண்யம் தோன்றுகிறது.

"தஸ்ய ஹவா ஏதஸ்ய மஹதோ பூதஸ்ய நிச்வஸிதமேதத் ॥"

என்கிற ச்ருதியில் வேதங்கள் பகவானுக்கு மூச்சுக் காற்றாக சொல்லப் பட்டிருக்கின்றனவென்னும் பரிமளமுள்ளவென்றும் ஸர்வகந்த: என்கிற ஸர்வ ஸ்ரீஸூக்திகளைக் கொண்டு வேதவேத்ய வரிஷ்டத்தில் நிரூபிக்கப்பட்டது. அவைகள் போல் இந்தத் தமிழ் வேதமும் பரிமளமுள்ளது என்பதை த்யோதிப்பதற்காக 'வகுளாபரண வாஸிதா' என்று அருளிச் செய்ததாகவும் சொல்லலாம்.

ச்ருதிஸம்ஹிதா சப்தத்தை ஆழ்வார் ஸ்ரீஸூக்திக்கு அஸாதாரணமாக அருளிச் செய்ததிலிருந்து

"பராசர ப்ரமுகாஸ்ஸ்வபி வேதாந்தரஹஸ்ய வைசத்ய ஹேது ஹரௌ சேத ஸ்ரத்தாபாவம் ஜநயந்தி ச பூர்வாசார்யா: ஸர்வேஷாம் ச ஸ்துத்யர்ஹா:
ராமாநுஜ ஸம்ஹிதே: ॥"

(ஸ்ரீ விஷ்ணு புராணத்தைக் காட்டிலும் வேதாந்த ரஹஸ்யார்த்தங்களின் மிகுந்த வைசத்யத்துக்குக் காரணங்களாயும் பக்தி ஜாட்யத்தால் பகவானிடத்தில் மனதுக்கு மிகுந்த உருக்கத்தை விளைவிப்பதாயும் எல்லோராலும் அப்யஸனம் செய்யத் தகுந்ததாயுமிருக்கிற உபப்ரஹ்மணங்களான திருவிருத்தம் முதலிய ப்ரபந்தங்களால்) என்று ஸ்தோத்ர பாஷ்யத்தில் 'ஸ்தோதா' என்கிற ச்லோகவ்யாக்யானாவதாரிகையில் நம்மாழ்வார் திவ்யஸூக்தி விஷயமாக அருளிச் செய்த அர்த்தம் வ்யஞ்சிதமாகிறது. சடா என்றால் வாயு அல்லது ச்ருதியில் சொல்லப்படாத அர்த்தத்தைச் சொல்பவர்கள் இவர்களை ஜயித்ததால் சடாரி என்ற நாமதேயம் வந்ததாக ப்ரமாண ரத்ன ஸாரம் முதலியதில் சொல்லப்பட்டிருக்கிறது. பகவானுடைய பாதுகைகள் சடது என்னும் அஸுரனை ஜயித்தன. ஆகையால் அவைகளுக்கு சடாரி என்ற நாமதேயம் ஏற்பட்டது. நம்மாழ்வார் அவைகளின் ஸ்தானத்தில் ஸ்தாநாபந்நமாக அந்தத் திரு நாமத்தை வஹித்தார் என்றும் சொல்வதுண்டு. அப்படிப்பட்ட நம்மாழ்வாரை தியானம் செய்கிறோம் என்று தாத்பர்யம். தேவதாவாச்யமந்த்ராவலீத என்கிற ச்ருதியை அநுஸரித்து இங்கு உபாஸ்மஹே என்று ப்ரயோகிக்கப்பட்டது. பஹுவசன

நம் ஸம்ஸாரிகளை, நடோ வாக்யமேவ, வ்யாணீமேவ என்பது போல் பாகவதசிஷ்யாதிகளைக் குறிக்கிறது. இதனால் நம்மாழ்வார் ஸர்வோத்தர வாஸ்யர் என்று ஏற்படுகிறது. இவ் வாழ்வார் அவதார திருநக்ஷத்திரம், அருளிச் செய்த ப்ரபந்தங்களின் கணக்கு, அவைகளின் கிரமம், அவைகளின் பாட்டின் ஸங்க்யை முதலிய விஷயம் ப்ரபந்த ஸாரத்தில் "முன்னுரைத்த திரு விருத்தம் நூறு பாட்டும், முறையின் வருவாசிரிய மேழு பாட்டும், மன்னிய நற்பொருள் பெரிய திருவந்தாதி மறவாதபடி எண்பத்தேழு பாட்டும், பின்னுரைத்தவோர் திருவாய்மொழி எப்போதும் பிழையற வாயிரத்தொரு நூற்றிரண்டு பாட்டும், இந் நிலத்தில் வைகாசி விசாகந்தன்னில் எழிற் குருகை வருமாருயிரங்கு நீயே" என்று அருளிச் செய்யப்பட்டது. இதில் திருவிருத்தம் ருக்வேத ஸாரம், திருவாசிரியம் யஜுர் வேதஸாரம், பெரிய திருவந்தாதி அதர்வவேத ஸாரம், திருவாய்மொழி ஸாமவேத ஸாரம் என்று குருபரம்பரா ப்ரபாவத்தில் சொல்லப் பட்டிருக்கிறது. அந்தந்த ப்ரபந்தத்தில் ப்ரதிபாதிதார்த்தத்தை ஸ்ரீ தேசிகன்,

> "ஆத்யே த்வய ப்ரபந்தே ஸம்ஸார விரக்தி ஸம்ஸ்ப்ருஹத்வம்
> த்விதீயே ஸ்வரூபோபாய புருஷார்த்தாநுபவ ஸக்தா
> த்ருதீயே ப்ரீயாம் பகவதநுபவே ஸ்ரீமதாயாஸ தீவ்ராம்
> துர்யே யதேஷ்டம் பகவதநுபவாத் ப்ராப்திம் ஸூரி: ॥"

[ஸ்ரீஶடாரி தன்னுடைய முதல் ப்ரபந்தத்தில் (திரு விருத்தத்தில்) ஸம்ஸாரம் பொறுக்க முடியாமலிருக்கிறது என்பதை அருளிச் செய்தார். பிறகு இரண்டாவது ப்ரபந்தத்தில் (திருவாசிரியத்தில்) நன்றாகக் காணப்பட்ட பகவானுடைய ஸ்வரூபம், உபாயம், புருஷார்த்தம் முதலிய எல்லா விஷயத்தையும் அநுபவித்தார். மூன்றாவது ப்ரபந்தத்தில் (பெரிய திருவந்தாதியில்) பகவதநுபவத்தில் அதிகமான தன்னுடைய ஆசையை ப்ரகாசிப்பித்தார். நான்காவது ப்ரபந்தத்தில் (திருவாய் மொழியில்) ஸ்ரீஶடாரி தன்னிஷ்டப்படி பகவானை அநுபவித்ததால் மோக்ஷத்தை யடைந்தார்] என்று த்ரமிடோபநிஷத்தாத்பர்ய ரத்நாவலியில் அருளிச் செய்தார்.

ஸ்ரீநாராயணாம்ஶமும் ஸேனேசாம்சமுமான இவ் வாழ்வாருக்கு ஆசார்யன் விஷ்வக்ஸேனர். இவ் வாழ்வாருக்கு ஆசார்ய பக்திமான்களில் ப்ரதமோதாஹரண பூதர்களான ஸ்ரீமன் மதுரகவியும் ஸ்ரீமந் நாத முனியும் சிஷ்யராவார்கள். இவ்வாழ்வாருடைய ப்ரபாவம் குருபரம்பரா ப்ரபாவம் முதலியதில் பரக்க நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படி நான்கு ப்ரபந்தங்கள் இருக்கச் செய்தேயும் திருவாய்மொழி பகவத் விஷயத்தில் அத்யாஸ்யவஸாயமுள்ள பூர்வாசார்யர்களின் ஸர்வாதிகாரத்தாலும் உத்கர்ஷத்தை வெளிப்படுத்துவதால் ஆசார்யர்களால் ப்ரவசனத்தாலும் வ்யாக்யான க்ரந்தங்களாலும் ஆதரிக்கப்பட்டு பகவத் விஷயம் என்று அஸாதாரண திருநாமம் வாய்ந்ததாய் ஸாபேக்ஷ ப்ரயோகமாய் அமைந்தது. பகவத்விஷயம் என்று திருவாய் மொழிக்கு திருநாமம் வந்ததற்குக்காரணத்தை நிரூபிக்கும்போது ஜகத்ஸ்ருஷ்ட்யாதி லக்ஷணம் ஸார்வஜ்ஞ்ய ஸர்வஶக்த்யாதிகளை ஆக்ஷேபிப்பது போல் இல்லாமல் நேராக பகவத் குணங்களை ப்ரதிபாதிப்பதாலேயோ, குணகர்த்ருத்வத்தை அவலம்பித்து ஸமஸ்த குணங்களை ப்ரதிபாதிப்பதாலேயோ,



> "ஜ்ஞாநஶக்தி பலைஶ்வர்ய வீர்யதேஜாம்ஸ்யஶேஷத: ।
> பகவச்சப்தவாச்யாநி விநா ஹேயைர்குணாதிபி: ॥"

என்கிறபடியே ப்ரபந்தாரம்பத்தில் ஹேய ப்ரத்யநீகத்வ கல்யாணைகதாநத்வ ரூபங்களான விசேஷங்களைச் சொல்லி பிறகு ஸாமான்யமாக அவ் விஷயங்களை முடிவு வரையில் ப்ரதிபாதநம் செய்வதாலேயோ ஞான ஸ்வரூபமான பகவான் விஷயியாக இருக்கவேண்டியிருக்க இதர கடபடாதி பதார்த்தங்கள் போல் இதில் விஷயமாவதாலேயோ பகவத்விஷயம் என்ற திரு நாமம் அமைந்தது, என்று சில வித்வான்கள் சொல்லுகிறார்கள். இந்த லக்ஷணங்கள் நம்மாழ்வாரின் மற்ற மூன்று ப்ரபந்தங்களிலும் மற்ற ஆழ்வார்கள் ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளிலும் ஸ்ரீராமாயணாதிகளிலுமிருப்பதால் அவைகளையும் பகவத்விஷயமென்று சொல்லும்படி வரும். ஆதலால் ஸ்ரீபாஷ்யகாரர் சாற்றின பகவத்விஷயம் என்ற திருநாமத்தை யோகரூடமாக எடுத்துக்கொண்டால் ஒருவித விரோதமுமில்லை என்பது சில வித்வான்களின் அபிப்ராயம். பகவானிடத்தில் பக்தியை உண்டுபண்ணும் ஆழ்வார் ஸ்ரீஸூக்திகளின் திவ்யார்த்தங்களை ஆசார்ய ஸகாசத்தில் மூலாத்யயன பூர்வகமாக ச்ரவணம் செய்து தத்ஸ்ரீவாஹமாக பகவத் பாகவதாசார்ய பக்தி த்த் கைங்கர்யங்களில் ப்ராவண்யம் பெற்று அவர்களின் க்ருபா பரீவாஹங்களான கடாக்ஷங்களை ஸம்பாதிப்போமாக

> ஸ்ரீநாதாய முநீந்த்ராய ஜ்ஞாதாநாம் வர்ஷம் யதந்ர ।
> ஹ்ருதி மே ஸந்நிதா ஸதா ஶடாரே: பதபங்கஜம் ॥

---

ஆயுர்வேத நூல்களும், ஆசார்ய மூலமாய் அச் சாஸ்திரங் கற்றுத் தேறிய வர்களும் ஆதுநிக வைத்திய முறையினரைப் போலல்லாது வைதிக தர்மங் களுக்கு வைபரீத்யம் விளையாமலே விலக்ஷணமான வழியில் ஆதுரர்களுக்கு ஐஹிக ஸுகத்தையும், ஆமுஷ்மிக ச்ரேயஸ்ஸையும் அளிக்கும் ஆற்றலுள் ளவர்க ளென்பதை அறிவிப்பதுதான் இவ்வியாஸத்தின் நோக்கம்.

## ஆயுர் வேதத்தை ஆன்றோர் பிரவிருத்திப்பித்ததேன் ?

பிராசீன தத்துவ ஜ்ஞானிகள் பிரஜைகளுக்கு வாதாதி தோஷ விகல் பங்களாலும், கர்ம விபாகங்களாலும், தேச காலாதிகளின் விஷம நிலைகளா லும், வேறு பல ஆகந்துக ஹேதுக்களாலும் நோய்கள் பல நேரிட்டதைக் கண்டு, அக் கேடுகளை அகற்றி ஆரோக்கியத்தையும் ஆயுள அபிவிருத்தியையும் அளித்திடும் உபாயங்களை உபதேசிக்க வல்ல ஆயுர்வேத கிரந்தங்களை ஆதி யில் மானிட வர்க்கத்தினிடம் மனமிரங்கி வெளியிட்டு உலகத்துக்கு உதவி செய்தனர்.

धर्मार्थकाममोक्षाणां आरोग्यं मूलमुत्तमम् ।
रोगास्तस्यापहर्तारः श्रेयसो जीवितस्य च ॥

प्रादुर्भूतो मनुष्याणां अन्तरायो महानयम् ।
अथ तेषां शमोपायं आयुर्वेदं पुनर्वसुः ॥

शिष्येभ्यो दत्तवान् षड्भ्यः सर्वभूतानुकम्पया ।
अथ भेलादयश्चक्रुः स्वं स्वं तन्त्रं कृतानि च ॥

श्रावयामासुरात्रेयं सर्षिसङ्घं सुमेधसः ।

அறம், பொருள், இன்பம், வீடென்னும் பேறுகளைப் பெற ஆரோக்கியமே அஸாதாரண காரணம். அதையும், வேறு நன்மைகளையும், உயிரையுங் கூட உறிஞ்சுவதற்கு உலகிற் பிணிகள் பல தோன்றிவிட்டனவே. இஹ-பர ஸுகங்களுக்கு இடையூறான இவ் வின்னலைத் தீர்க்க ஆயுர்வேத மொன்றே இன்றியமையாகக் கருவி. அவ் வாயுர்வேத மறிந்த பரத்வாஜ சிஷ்யரான புநர்வஸ்வாத்ரேயர் என்னும் புண்ணிய புருஷர் அக்னி வேசர், பேளர், ஜதூகர்ணர், பராசரர், ஹாரீதர், க்ஷாரபாணி என்னும் அதிக மேதாவிகளான ஆறு சிஷ்யர்களுக்கு உலகம் உஜ்ஜீவிப்பதன் பொருட்டு வைத்திய ஸம்பந்தமான விஷய தத்துவங்களை உபதேசித்தார். அப்பால் பேளாதி முனிவர்கள் தாம் பேரறிவு பெற்றதன் பயனாக அவரவரது பெய ரைக்கொண்டு வெவ்வேறு வைத்தியக் கிரந்தங்களை இயற்றி, இருஷி கணங் களுக்கிடையில் ஆசார்யரான ஆத்ரேயருக்குப் படித்துக் காட்டி அரங் கேற்றி வைத்தனர் என்பது முற் கூறிய ச்லோகங்களின் முழுக் கருத்து.



## ஆயுர்வேதமும் ஏஷணாத்ரயமும்

வையகத்தில் வாழ்பவருக்கு வைத்திய நூல்கள் ஆரோக்கியவழிகளை யும், வியாதி பரிஹாரங்களுக்கான உபாயங்களையும் உண்மையில் உபதேசிக் கலாம். ஆனால் ஆமுஷ்மிக தர்மங்களுக்கும் ஆயுர்வேதத்திற்கும் என்ன ஸம்பந்தமென்று வித்வான்களிற் சிலர்கூட வினவக் கேட்டிருக்கிறேன். அதற்கு அக்னிவேச-பேளாதி முனிவர்களுடைய முக்காலத்தும் பொய்யா மொழிகளே விவேகிகள் விரும்பும் விடை யெனக் கருதி, அதை விளக்க விரும்புகிறேன். அடியிற் கூறப்படும் விஷயம் அக்னிவேசர் திஸ்ரைஷணீ யாத்யாயாதிகளில் ஆஸ்திகக் கொள்கையை வைத்தியர்களுக்கு ஆணித்தர மாக உபதேசிக்க விரும்பி மொழிந்துள்ள வாக்கியங்களின் மொழி பெயர்ப் பாகும். “ இம்மையில்—ஸம்ஸாரத்தில்—மனிதன் மனந் தளாரது, மதியிற் குன்றாது, புருஷப் பிரயத்தினத்திற் பிறழாது, ஆண்மை அழிவுறாது வாழ வகை தேடுவானாயின், பாருலகிலும் வானுலகிலும்— இன்பந்தேட இசைந்துழைப்பானாயின், அவன் மூன்று ஏஷணைகள் என்கிற அவாக்களை ஆதரித்து, அதன்படி நடந்து அவற்றை நிறைவேற்ற வேண்டும். அவை பிரா ணைஷணை, தனைஷணை, பரலோகைஷணை (ஆயுளாரோக்கியத்தைக் காப்பது, பொருள் தேடுவது, மறுமைக்கான நன்மையை நாடுவது ஆகிய மூன்றை யும் விரும்பி யேற்றல்) என்பவையாம். ” *

इह खलु पुरुषेण, अनुपहत सत्त्वबुद्धि पौरुष पराक्रमेण, हितमिह चामुष्मिंश्च लोके समनुपश्यता तिस्र एषणाः पर्येष्टव्या भवन्ति । तद्यथा—प्राणैषणा, धनैषणा, परलोकैषणा चेति ।

### பிராணைஷணை

முற் கூறிய மூன்று ஏஷணைக ளென்கிற அபீஷ்டங்களுள் பிராணை ஷணை என்பதுதான் மிகப்பிரதானம். அவ்விஷயந்தான் ஆதியில் ஆலோ சிக்கப்படவேண்டியது. ஏனெனில் பிராணனைப் பாதுகாக்காவிடிற் பிரபஞ் சத்திற் பிறிதெதுவும் பறிகொடுக்கப்பட்டதேயாகும். பிராண பரிபாலன மென்றால் ஆரோக்கிய சாலியை அந்நிலைமையிலிருந்து தவறாமலும், வியா திக்கு வசமானவனை அதிலிருந்து விடுவிக்கும் விவேகத்துடன் பாது காப் பதேயாம். இவ்விதி நியமங்களை வைத்திய சாஸ்திரத்திற் கூறியுள்ளபடி அணுவளவும் தவறாது அநுஸரித்து வந்தால், ஆரோக்யம் அதிகரித்து ஆயுளும் வளர்ந்து வாழலாம். இது பிராணைஷணை என்னும் பிரதமா

* இந்த இச்சா த்ரயத்தை புத்ரைஷணை, லோகைஷணை, வித்தைஷணை என்று வேறு வகையாக வேதாந்திகள் வழங்குவர்.

சாரீர நோய்களையும், மனிதவர்க்கத்தினிடையே மானக் கேட்டையும், வேறு தொலையாத் துன்பங்களையும் தருவது அதுவே என்றும் வேறொரு வைத்தியாசிரியரும் வறுமையை வெறுத்துப் பொருளீட்டலை வற்புறுத்துகிறார். திருவள்ளுவரும் பொருளின் பெருமையை வெகு அழகாக வர்ணிக்கிறார். "பொருள் என்பது உண்மையில் ஒப்பற்ற ஒளியளிப்பது; மனத் தென்பையும் மற்றும் எல்லாப் பெருமையையும் தந்து மனிதனை மேதினியிற் கண்ணியப் படுத்துவது பொருளே; மனப்பிணி உடற்பிணி முதலிய துன்பங்களாகிற இருளை அகற்றி, நாநாவிதச் சுகத்துடன் நாட்டையாளும் கோரிக்கையையும் ஈட்டி வைப்பதும் அதுவே" என்கிற விசேஷ பொருள் அடங்கியது அடியிற் குறிக்கப்படும் திருவள்ளுவரது குறள்.

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

இச் செய்யுட் சூத்திரம் முற்கூறிய வடமொழி வசனத்தின் முழுக் கருத்தையும் பிம்பப் பிரதிபிம்ப ரீதியிற் பிரதிபாதிக்கின்றதல்லவா?

## பரலோகைஷணை

இனி மூன்றாவதான மறுமை விஷயமாயுள்ள பரலோகைஷணை என்பதை யெடுத்துக் கொள்வோம். இறப்புக்குப் பின் பிறப்பு முண்டோ என்கிற பூர்வ பக்ஷத்தைத் தாமே கிளப்பி, அவ்விதம் குழப்ப முறக் காரணத்தையும், அதற்கு விளங்கச் சமாதானத்தையும் விளக்குகிறார் சரகர். பிரபஞ்சத்திற் பிரத்யக்ஷ விஷயங்களையே பிரமாணமாகக் கருதும் ஒரு சாரார் உண்டு. எப்புலனுக்கும் புலப்படாத மறுமை யென்பதை மறுத்து அவர்கள் நாஸ்திகக் கொள்கை யுடையவர்களாயிருக்கின்றனர். விமர்சகர்களுக்கு விசேஷ சஞ்சலம் விளைவிக்கும் விப்பிரதிபத்தி ச்ருதிகளென்கிற சாஸ்திர வாக்கியங்களும் இப் பூர்வ பக்ஷம் எழுவதற்கு ஹேதுவாகின்றன என்றவாறு முனிவர் விவாதிக்கும் வாக்கியம் வருமாறு.

**अथ तृतीयां परलोकैषणां आपद्येत। संशयश्चात्र कथं भविष्याम इतश्च्युता न वेति। कुतः संशय इति चेत्, सन्ति ह्येके प्रत्यक्षपराः, परोक्षत्वात् पुनर्भवस्य नास्तिक्यमतिमाश्रिताः। श्रुतिभेदाच्च।**

## பல வேறு நாஸ்திக்யக் கொள்கைகளுக்கு ஸமாதானம்

விப்ரதிபத்தி வாதிகள் தம் ஸந்தேஹங்களுக்கு ஆதாரமாகக் கூறும் விஷயங்களென்ன? பிராணிகளின் பிறப்புக்கு மாதா பிதாக்களை மறுக்க



வியலாக் காரணமென்று கருதுகிறார்கள். சிலர் இயற்கையே இன்றியமையாக் காரணமென்பர். சிலர் பரம் பொருளென்பது ஒன்று மட்டும் உண்டென்றும், அதுதான் அகிலப்பிரபஞ்சத்தின் உற்பத்திக்கும் காரணமாகு மென்றும் கருதுபவரும் உண்டு. வேறொரு சாரார் தற் செய்லாகத் தானே உயிரினங்கள் உற்பத்தியாகின்றன என்கிறார்கள். ஆகவே மறுமை விஷயமே மனதுக்கு எட்டாமையால், அதைப்பற்றி விமர்சகர்களுக்கு விப்ரதிபத்தி யேற்படுகிறது. ஆனால் நாற்றை உற்பத்தி செய்தது வித்தா, வித்தை விளைவித்தது நாற்றா? என்கிற விஷயத்தை விவாதிக்கும் வகையில் நாஸ்திக்யக் கொள்கையினர் வியவஸ்தை யில்லாமலே வீண் விவாதத்தில் இறங்குவதால், உண்மைவிவேகி நாஸ்திக்யத்தை நாடாது மறுத்துத் தள்ளுவதோடு, மனக்குழப்ப மடையாது விஷய விமர்சம் செய்ய வேண்டுமென்கிறார் வைத்தியாசிரியரான மஹர்ஷி.

**मातरं पितरं चैके मन्यन्ते जन्मकारणम्।
स्वभावं परनिर्माणं यदृच्छां चापरे जनाः।**

**अतः संशयः किंनुखल्वस्ति पुनर्भवो नवेति। वीजसस्यन्यायात् अव्यवस्थितचित्तैः उपात्तस्य नास्तिक्यवादस्य नास्त्यवधिः संमाधाननिर्णये। तत्र महामतिः नास्तिक्यबुद्धिं जह्यात्। विचिकित्सां च। (भेल. सूत्र.)**

என்றாலும் விகல்பங்களை வெகு சாதுர்யமாகக் கிளப்பும் விமர்சகர்களுடைய வாக்கியங்களாலும், விவேசந பூர்வகமான பரிசீலனைகளாலும் முற் கூறிய வகையில் ஸம்சயச் சேதம் ஏற்படவில்லையாகையால், அதற்கு மேல் அக்னி வேசர் சிறிது ஸமாதாநம் ஸமஞ்ஜஸமாகக் கூறுகிறார். ஆஸ்திக்ய புத்தியை அவலம்பிப்பானேன் என்றால்—நம் புலன்களுக்குப் புலப்படுபவை மிகச் சொற்பம்; அவற்றிற்கு எட்டாதவை எண்ணிறந்தவை. பிரத்தியக்ஷத்திற் காணமுடியாதனவற்றைச் சாஸ்திரம், அநுமாநம், யுக்தி என்கிற வேறு பிரமாணங்களால் அறிய விவேகிகள் வகை கற்பித்திருக்கிறார்கள். புலன்களுக்குப் புலப்படாதனவற்றை நாம் நம்புவதெங்ஙனம் என்று எண்ணலாகாது. ஏனெனில், எந்த இந்த்ரியங்களைக் கொண்டு பிரத்தியக்ஷ விஷயங்களை உணருகிறோமோ, அந்த இந்திரியங்களே அப்பிரத்தியக்ஷங்கள்; என்றால் நம் புலன்களுக்கு அப் புலன்கள் புலப்படாதவை; எனினும் இந்த்ரியங்கள் உண்மையில் உண்டென்று நாம் அறிவோம். இவ் வுண்மையை உணர்வதற்கு அநுமாநம் என்னும் பிரமாணமே நமக்கு ஆதாரம். (என்றால் இந்த்ரியங்களின் இருப்பு அநுமாநத்தினால் அறியக் கூடியவை.)*

---

* நேத்திரம், செவி, நாசி, நா, சர்மம் என்கிற ஐந்து பாஹ்யேந்த்ரியங்கள் பிரத்தியக்ஷங்கள் அல்லவா என்று சிலர் கேட்கக்கூடும். மனதைப்போல் இந்த்ரியங்களும்

மஹான்களும் ஆப்தர்களே; சிஷ்டர்களான அவ்வறிஞர்களின் வாக்கும் வீண்போகாத உண்மைச் சொல்லாகும் என்றும் கூறப்படுகிறது.

रजस्तमोभ्यां निर्मुक्ताः तपोज्ञानबलेन ये ।
येषां त्रिकालममलं ज्ञानमव्याहतं सदा ।
आप्ताः शिष्टा विबुद्धास्ते तेषां वाक्यमसंशयम् ॥

முக்கால அறிவுபடைத்த முற்காலத்து முனிவர்களின் வேதவாக்குபோன்ற மொழிகளும் மறுபிறப்பு முதலிய மறை பொருளாயுள்ள உண்மைகளை நம்புவதற்குச் சரகோபஸ்கார வியாக்யாநம் உதஹரிக்கும் ஓர் உபாக்யாநம் இங்கெடுத்துரைக்கத் தகுந்தது. பிரஹ்மஞ்ஞாநத்திற் பிரவ்ருத்தியுள்ள பரமயோகிகள், பிரக்ருதிஸம்பந்தம் முற்றிலும் விலகுமுன்பே, அகக்கண் படைத்து, அதீந்த்ரிய விஷயங்களை அனுபவித்து, லோகாந்தர ஜந்மாந்தர தத்துவங்களைத் தெளிவாகத் தெரிந்து, அத்தத்துவங்களை உலகம் உஜ்ஜீவிக்கக் கருதி எழுதி வைத்துமிருக்கிறார்கள். அவ்வருஞ் சொற்களும் ஆப்தோபதேசத்தில் அடங்கும் அம்சங்களாகும். நமக்கு எட்டாத உண்மைகளை நேரில் அனுபவித்து அறிவித்தவர்களும் அவர்களே. இம்மைக்குப் பிறகு மறுமையும், இறப்புக்குப் பின்பு இன்ப துன்பங்களும் உண்டென்பதைக்கூறும் ஆப்தோபதேசமாக ஆடவ்ய-ஜைகமீஷவ்ய ஸம்வாதத்தை இங்கெடுத்துரைப்பது ஸமஞ்ஜஸமாகும். "பகவான் ஆடவ்யர் ஜைகமீஷவ்யரை நோக்கி வினவுகிறார். 'நீர் மஹாபுண்ணிய சீலர்; ஆகவே புத்தி விகாரத்தையோ மனோவிகாரத்தையோ சிறிதும் பெறாது, பெருமிதமாகப் பத்து முறை நிறைவேறிய படைப்புகளில் நரகவாஸம், வாயில்லாப் பிராணிகளின் வயிற்றில் பிறத்தல் ஆகியவற்றைப் துன்பமாகக் கருதி, தேவ மனுஷ்ய ஜன்மங்களை மேலானவையெனத் தேர்ந்தெடுத்து, அஜ்ஜாதிகளிலேயே அடிக்கடியும் ஜனித்தீரல்லவா? அப்பொழுதெல்லாம் இன்ப துன்பங்களிரண்டில் எதை அதிகம் அனுபவித்ததாகத் தெரிந்து கொண்டீர்?' அதற்கு ஜைகமீஷவ்யர்—'அப் பத்துப் படைப்புகளிலும் உண்மையில் மனதிலாவது மதியிலாவது மாலின்யம் அடையாமலே, நரகவாஸத்திலும் திர்யக் ஜந்துப் பிறப்பிலும் துன்பந்தவிர வேறில்லை யெனக் கருதி, தேவ மனுஷ்யர்களாகவே மேன்மேலும் ஜன்ம மெடுத்து வந்ததில், நான் அனுபவித்ததெல்லாம் துன்பமேயன்றி இன்பமல்ல வென்பது என் கருத்து' என்று முடிகிறது இச் சம்வாதம்."

अतीन्द्रियदर्शिना ज्ञानरूपेण चक्षुषा महर्षिभिः सत्त्वदोषनिवृत्तेः प्राक् स्वयमनुभूय पुनर्भवादयः सन्त्युपदिष्टाः । आटव्यजैगमीषव्यसंवादे चैवं श्रूयते । भगवान् आटव्यो जैगमीषव्यं उवाच । 'दशसु महासर्गेषु भव्यत्वात् अनभिभूत-



बुद्धिसत्त्वेन त्वया नरकतिर्यग्गर्भवासं दुःखं संपश्यता देवमनुष्येषु पुनःपुनरुत्पद्यमानेन सुखदुःखयोः किमधिकं उपलब्धम्' इति । भगवन्तं आटव्यं जैगमीषव्य उवाच । 'दशसु महासर्गेषु भव्यत्वात् अनभिभूतबुद्धिसत्त्वेन मया नरकवासं तिर्यग्जन्म च दुःखं पश्यता देवमनुष्येषु पुनःपुनरुत्पद्यमानेन यदनुभूतं तत्सर्वं दुःखमेव न तु सुखमिति प्रत्यवैमि । एष तयोः संवादः" । (योगदर्शने विभूतिपादे ।)

### பிரத்தியக்ஷப் பிரமாணம்.

2. இவ்விதம் வேதாதிசப்தப்பிரமாணத்தைப் பிரதாநமாகவும் பிரதமமாகவும் கிரஹித்து, அதீந்த்ரியமான விஷயங்களிலும் ஆதரவு பிறந்தாலன்றி, மனுஷ்ய வர்க்கம் மேம்பாடடைந்ததாகாது எனக் கூறி, அடுத்தாற்போல் ஸர்வ ஸாதாரணமான பிரத்தியக்ஷப் பிரமாணத்தைப் பிரதிபாதிக்கிறார் அக்னிவேசர். பௌதிகமான இந்த்ரியங்களால் நாம் உணர்ந்து அனுபவிப்பது அனைத்தும் பிரத்தியக்ஷம்: ஆத்மா, இந்த்ரியங்கள், மனது, சப்தாதி விஷயங்கள் ஆகிய இந் நான்கும் அணுகிச் சேருவதால் நமக்கேற்படும் விளக்கமான தாத்காலிக அறிவு பிரத்தியக்ஷஞ் ஞானம் என்று வழங்கப் படுகிறது. இதைத்தான் சரகமுனி

आत्मेन्द्रियमनोऽर्थानां सन्निकर्षात् प्रवर्तते ।
व्यक्ता तदात्वे या बुद्धिः प्रत्यक्षं सा निरुच्यते ॥

என்று விவரிக்கிறார். இவ்விஷயமே கௌதமஸூத்திரத்திலும் "आत्मा मनसा संबध्यते, मनः इन्द्रियैः, इन्द्रियाणि चार्थैः । तत्र इन्द्रियार्थसंनिकर्ष एव प्रत्यक्षे विशिष्टं कारणम्" என்கிற வாக்கியத்தினால் ஆத்மாதி விஷயாந்தமான தத்துவங்கள் அந்யோந்யம் அநுபந்தித்து, பிரத்தியக்ஷம் என்கிற ஞானத்தை முடிவாகக் கொடுக்கும் முறை விசதப் படுத்தப்பட்டிருக்கிறது.

பிரத்தியக்ஷமான விஷயங்களிற் கூட அநேகம் அம்சங்கள் சப்தப் பிரமாணத்தினால் ஸாதிக்கவேண்டியும், மறு பிறப்பு முதலியவை மறுக்க முடியாத உண்மை யென்று நம்பவும் வேண்டியிருப்பதாக வேறு பல வகைகளில் திறம்படச் செய்யப்படும் விவாதங்களைத் திஸ்ரைஷணீயாதி அத்தியாயங்களிற் படிக்கலாம். ரூப குணாதிகளால் மாதா பிதாக்களுக்கு மாறுபட்ட அநேகம் மாந்தர்களை நாம் பார்க்கிறோம். ஒரு வயிற்றிற் பிறந்த பல பிள்ளைகள் நிறத்தாலும், நிர்மாணரீதியாலும், குரலாலும், குணங்களாலும் அளவாலும், அதிருஷ்டத்தினாலும் ஒருவருக்கொருவர் வேறுபட்டிருப்பதையும் காண்கிறோம். ஒரே வஸ்துவில் அல்லது விஷயத்தில் ஒருவனுக்

பூததயையிலேயே நோக்கமுள்ள புநர்வஸ்வாத்ரேயர் புனிதமான தொழிலைப் பணத்தாசையாலும், இஹ பரங்களுக்கான கடமைகளிற் கருத்தில்லாமையாலும் துஷ்பிரயோகம் செய்வது துன்பத்திற்குக் காரணமாம் என்கிறார். ஆசைகளை யெல்லாம் அகற்றி நம் கடமையைச் செய்வதே அகில துன்பங்களும் தீர உற்றதோர் உபாயமாகும்.

**उपधा हि परो हेतुः दुःख दुःखाश्रयप्रदः ।**
**त्यागः सर्वोपधानां च सर्वदुः खव्यपोहकः ॥ (चरके कतिधापुरुषीये)**

துன்பங்களுக்கும், துன்பங்களுக்கு ஆதாரமான தேஹமெடுப்பதற்கும் துராசையே காரணம்; அகில ஆசையு மொழிந்திருத்தல் துன்பமனைத்தையும் துப்புரவே ஒழித்ததாகும். ஆகவே ஆசையின்றி, பலனிற் பற்றின்றி பொறுமையுடன் கடமையைக் கடை பிடிப்பவனுக்கு இஹ பரஸுகங்கள் ஈடேறும் என்று முற் குறித்த ச்லோகத்திற்கு தீபிகாகாரர் உரையெழுதுகிறார். இவ்விஷயம் பெரும்பாலும் " **शान्तिमाप्नोति नैष्ठिकीम् । अयुक्तः, कामकारेण फले सक्तो भविष्यति** " என்கிற கீதோபதேசத்தை ஒட்டி, உபய லோக ச்ரேயஸ்ஸாதநம் உபதாரஹிதமான உத்யமம் என்று தத்வோபதேசம் சொல்கிறதல்லவா?

## பொருளாசையும் பொல்லா வினைப்பயனும்.

திரவ்யாதிகளிலேயே திருஷ்டி வைத்து லௌகிக வ்ருத்திகளில் லோகத்துடன் உழலும் உத்யோகிகளென்போர் உபய லோகத்திலும் தமக்குத் தீராத தீமையையே தேடிக்கொள்கிறார்களே யன்றி வேறில்லை யென்பதை அத்புதமான திருஷ்டாந்தத்தைக் கொண்டு அக்னிவேசர் விளக்குவதை வியாஸத்தின் உப ஸம்ஹாரத்தில் வாசக நேயர்களுக்கு எடுத்துரைக்க விரும்புகிறேன். அவனியில் அரும் பெருங் காரியங்களைச் செய்து, அவ்வுலகை விசித்திர விநோத காட்சிகளால் மாட்சிமை பொருந்தியதாகச் செய்வது மானிடரே. ஆனால் அவர்கள் செய்யும் செயல்களிற் பெரும்பான்மையும் அளவிடக் கூடாத ஆசாபாசத்தைக் காரணமாகக் கொண்டு நிறைவேறுபவை யாகையால், தமது அவ்வித முயற்சிகளுக்கு முடிவான பயன் என்ன வென்பதை விவேகத்துடன் விமர்சிக்காமலே அவை செய்யப்படுபவை யாகையால், இறுதியில் அவை ஈதிபாதைகளிலேயே இவர்களை இழுத்துவிட்டு அழிக்கவும் காரணமாகின்றன என்பதை ஆத்திரக்கார மனிதர்கள் அறிவதில்லை. பளிங்கு போல் இவ் வுண்மையைப் படிப்பவருக்கு விளக்க, பட்டுப் பூச்சியின் பரிதாபகரமான முடிவை உதாரணமாக உரைக்கிறார் அக்னிவேசர். அவ் வேழைப் பூச்சிகள் வெகு அழகான உயரிய நூல்



களைத் தந்து, உலகத்தோரைச் சிறப்பிக்கின்றனவல்லவா? ஊர்ணநாபம் என்கிற கீடஜாதியைச் சேர்ந்த அப் பூச்சி தன் உடலிலிருந்து உயர்வகை நூல்களை உத்ஸாஹத்துடன் உண்டு பண்ணும்போது, தான் நிர்மிக்கும் கூட்டினுள் நிரந்தரமா யிருந்து வாழலாம் என்று எண்ணங் கொள்ளுமே யன்றி, ஏமாற்றமடைந்து அக்கூடு கட்டும் காரியமே தன் அழிவுக்குக் காரணமாம் என்று அதற்குத் தீர்க்காலோசனையுண்டா? அடுத்த ச்லோகத்திற் குறிக்கப்படும் 'கோசகார' என்னும் சொல் பட்டுப் பூச்சியைக் குறிப்பது. அது கோசமென்கிற தன் கூட்டை நிர்மிப்பதற்காகத் தன்னுடலிலிருந்தே தன் அழிவுக்குக் காரணமான அழகிய நாலிழைகளை நூற்கின்றது. அதுபோலவே அறிவிலியான மனிதன் மாயா பிரபஞ்சத்திற் பொல்லாப் பொருட்களை, அவை தன்னை என்னாளும் காக்குமென்னும் நோக்கத்துடன், ஓடியாடித் தேடி, அடி நுனி தெரியாத ஆசையாகும் பாசத்திற் சிக்குண்டு என்றைக்கும் துக்காதுரனாய் ஏங்கி மடிகிறான் என்பது அடியிற் குறிக்கப்படும் அக்னிவேசரது ச்லோகத்தின் தாத்பர்யம்.

**कोशकारो यथा ह्यंशूनुपादत्ते वधप्रदान् ।**
**उपादत्ते तथार्थेभ्यस्तृष्णां अज्ञः सदातुरः ॥**

அர்த்த பரர்களின் அநர்த்தச் செய்கையால் விளையும் பயனை இதைவிட வேறெவரும் விளங்கக் கூறார். வைத்திய சாஸ்திர ஸம்பந்தமான விஷயங்களை, அதற்கென்றேற்பட்ட ஆயுர்வேதம் இன்னும் நேர்த்தியாக விவரிக்குமென்பதைக் கூறவும் வேண்டுமோ? ஆகவே ஆரோக்கிய பரிபாலனத்திற்கும், பிணிகளைப் பரிஹரிப்பதற்கும் அவசியமான அகில அங்கங்களும் ஆயுர்வேதத்தில் அடங்கி யிருப்பதோடு, ஆமுஷ்மிகார்த்த ஸாதநமான தத்துவங்களையும் தாங்கி நிற்பது அச்சாஸ்திரம். ஆர்ய பூமியில் ஆர்ஷ பரம்பரையிற் பிறந்து ஆத்மார்த்தத்தில் தீவிர நோக்கமுள்ள வித்வான்கள் தீர்க்காலோசனையோடு வியாகரணாதி வேறு சாஸ்திரங்களைப் போலவே வைத்திய சாஸ்திரத்தையும் விசேஷ கௌரவங் காட்டிப் பாராட்டாவிடில், அவர்கள் நம் வைத்திய சாஸ்திரத்திற்கு மாத்திரமல்ல, தாம் அவலம்பித்த வைதிக மார்க்கத்திற்கே வேராறுக்கும் வேலையில் இறங்கியவராவர்.

## முடிவுரை.

முடிவுரையாக நான் மொழிவதென்ன வென்றால்—கற்பாறைகளைப் போல் கடினமான விஷயங்களை, விளங்காத பரிபாஷைகளைக்கொண்டு சர்ச்சை செய்யும் தர்க்காதிகளில் நற்சுவையில்லாத வீண் வாதங்களே வாசாமகோசமாய் நிரம்பியுள்ளன. அவை யுமன்றோ கல்வியாளரின் கழகங்க

ளிற் பெரிய சாஸ்திரமென்னும் பெயருக்கு உரியவையாகின்றன? இந் நாட்டிலன்றி வேறெங்குதான் இது அடுக்கும்? இந் நாட்டின் பொல்லா வினைப் பயன் காரணமாய் நம் அரிய வைத்திய சாஸ்திரம் ஏனைய சாஸ்திரங்களுக்குச் சரிசமானமாக அறிவாளிகளின் சபை நடுவே நன்மதிப்பைப் பெறவில்லை யென்றால், நமது நாட்டுப் பண்டிதர்களின் நாகரிகப் பெருமையை என்னென்றுரைப்பது?

**तर्कादीन्यपि कर्कशानि विविधैः पूर्णानि शुष्कैर्वृथा-**
**वादैः शास्त्रपदाहृतां ननु सतां गोष्ठीषु संबिभ्रति ।**
**देशे भारत एव दैवहतकव्यामोहतो वैद्यकं**
**वैशिष्ट्यं न सदस्स्वहो कृतधियां धत्तेऽन्यशास्त्रैः सह॥** (ஸ்வகீயம்)

தர்காதீந்யபி கர்கசாநி விவிதை: பூர்ணாநி சுஷ்கைர்வ்ருதா
வாதை: சாஸ்த்ரபதாஹ்ருதாம் நநு ஸதாம் கோஷ்டீஷு ஸம்பிப்ரதி।
தேசே பாரத ஏவ தைவஹதகவ்யாமோஹதோ வைத்யகம்
வைசிஷ்ட்யம் ந ஸதஸ்ஸ்வஹோ க்ருததியாம் தத்தேऽந்யசாஸ்த்ரை: ஸஹ॥

---

# தர்ம ப்ரமாண விசாரம்

[ஸ்ரீ. உ.வே. வி. அனந்தாசார்யர், பச்சையப்பன் கலாசாலை, மதராஸ்]

அநேக வித்வான்கள் அடியேனுடைய வ்யாஸத்தைக் கண்டிக்கப் புறப்பட்டார்கள். இதில் அடியேனுக்கு வெகு ஸந்தோஷமுண்டு. இந்த வ்யாஜத்தினாலாவது இதைப்போன்ற விஷயங்கள் வித்வான்களுடைய கடாக்ஷத்திற்கு விஷயமாகின்றன என்பதே ஸந்தோஷ காரணம்.

சிஷ்யர்களுக்குப் பாடம் தெரியவில்லை என்றால் உபாத்தியாயர் மீது தோஷம் சொல்லுவது உலக வழக்கம். அதுபோல் சிஷ்ய ப்ராயனை அடியேனுடைய மனதில் இருக்கும் களங்கங்கள் நீங்கும்படி வித்வான்கள் கிருபை செய்யவேணுமாய் பிரார்த்திக்கிறேன்.

ச்ருதி ஸ்மிருதிகள் முற்றும் ப்ரமாணமே என்று உறுதி கூறப்பட்டது. ப்ராமாணமாக ஒப்புக்கொள்ளப்பட்ட க்ரந்தங்களில் எல்லா



அம்சங்களுக்கும் **अनुष्ठान पर्यवसायि**யான ப்ராமாண்யம் ஒப்புக்கொள்ளாத வரையில் மேற் சொன்ன சபதம் நிலை நிற்குமா? ஆனால் அந்த சபதத்திற்கு அடியேன் இப்படி பொருள்கொள்கிறேன். அது சரியா தவறா? என்பதை வித்வான்கள் உணர்த்தவேண்டும். ச்ருதி, வேதம், ஸ்மிருதி, புராணேதிஹாஸ தர்ம சாஸ்திராகமாதிகள் இவையனைத்தும் ப்ரமாணமே. எப்படி ப்ரமாணமெனில், அவனவனுடைய வர்ணாச்ரமாசார நிபந்தனைகளுக்கும் **मतप्रयुक्त**மான நிபந்தனைகளுக்கும் உள்பட்டு. ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ஸ்ரீ பாஞ்சராத்திர ரக்ஷையில் இவ்விஷயத்தைப் பலபடியாய் நிரூபித்திருப்பதைக் காண்க. அதாவது சூத்திரகாரர்கள் அந்தந்த சாகா சூத்திரங்களைச் சேர்ந்தவர்களுக்கே நித்ய நைமித்திக கர்மங்களை உபதேசிக்கிறார்கள். ஸ்வ சூக்திரத்தில் சொல்லாதவைகளை ஸர்வ ஸாதாரணமான பாஞ்சராத்திரத்திலிருந்து எடுத்துக் கொள்ளவேணும் என்றும் பரக்கப் பேசப்பட்டிருக்கிறது. இதனால் வைஷ்ணவர்கள் சிவராத்ரி முதலான வ்ரதங்களை விட்டதற்குக் காரணம் நன்கு புலப்படவில்லையா? ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பரமோபாதேயமாக ஆசார்யர்களால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்ரீ ப்ரத்மோத்தராதிகளில் **अकरणे महाप्रत्यवायावह**மாகவும், ஸர்வர்க்கும் நித்யமாகவும் விதிக்கப்பட்ட சிவராத்ரி, விநாயக சதுர்த்தி முதலான வ்ரதங்களை உபேக்ஷித்ததற்கு முக்கியகாரணம், நம்முடைய **सूत्रकार**ர் நமக்கு உபதேசிக்காததும், நம்முடைய அதிகாரத்திற்கு ஒவ்வாததாக இருப்பதுமே தவிர வேறு இல்லை. நம்முடைய அதிகாரத்திற்கு ஒவ்வாததாயினும், **सूत्रकार**ர் சொன்னதை நாம் விடக்கூடாது. இந்த விடத்தில் தான் **अग्नीन्द्रादि** சப்தங்களை அந்தர்யாமி பர்யந்தமாகவோ, **साक्षादप्यविरोधं जैमिनिः** என்ற ந்யாயத்தாலேயோ மனதை ஸமாதாநம் செய்து கொள்ளவேணும் என்று ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம். நமது **सूत्रकार**ர் சொல்லாத அம்சங்களில் நாம் இதர சூத்திரகாரர்களை சரணமடைவதற்குப் ப்ரமாணம் இல்லை.

ஸ்ரீ தேசிகன் முதலான ஆசார்யர்களின் அநுமதியும் இல்லை. இவ்விஷயத்தைத் தெளிவிப்பதன் பொருட்டு ஸ்ரீ பாஞ்சராத்திர ரக்ஷையிலிருந்து சில பங்க்திகளை உதாஹரிக்கிறேன்: **न च बोधायन विखनश्शौनकाद्युक्तेषु भगवत्प्रतिष्ठार्चनादिषु सत्सु किमन्येनेति वाच्यम् । तदुक्तिरहित सूत्रनिष्ठानां अन्यापेक्षायाम् साधारण शास्त्रपरिग्रहोपपत्तेः । न कश्चित् पूर्णोपदेशः संभवति इति । येषु सूत्रेषु भगवदर्चनादिकं प्रत्यपादि तन्निष्ठानामपि भगवच्छास्त्रोक्त प्रक्रियया समाराधनादिकं प्रशस्ततमम् । तथा च शिष्टैरनुष्ठीयते इति ।** மற்றொரு விடத்திலும் கர்ம கலாபங்களை விதிக்கும் ஸூத்திரங்களைப் பற்றிச் சொல்லும்போது **तत्सूत्रनिष्ठान् प्रत्येव तत्प्रक्रियोपदेशात्** என்ற ஸ்ரீ தேசிகன் அருளிய வாக்யம் காணலாம். இந்த நிலையில் ஆகமங்களை ப்ரமாணமாக

ஒப்புக்கொள்ளாதவர்கூட மற்ற ஸூத்திரங்களிலிருந்து க்ரியா கலாபங்களை எடுத்துக்கொள்வது ப்ரயாஸ ஸாத்யம் எனத் தோன்றுகிறது. பகவச்சாஸ்திரத்தை ப்ரமாணமாக ஒப்புக் கொண்டவர் திறத்தில் கேட்க வேண்டியது என்ன? "ச்ருதி ஸ்மிருதிகள் முற்றும் ப்ரமாணமே" என்ற வ்யாஸத்தில் ஸ்ரீ பாஞ்சராத்திர ரக்ஷையிலிருந்து '**स्वसूत्रविहितमेव सन्ध्योपासनादिकं कर्तुमुचितम्**' என்ற வாக்யம் ப்ரமாணமாக உதாஹரிக்கப்பட்டது. அதில் ஸூத்திரத்தை **स्व** சப்தத்தால் விசேஷித்ததையும் **एवकार**த்தால் **अन्यव्यवच्छेदं** செய்திருப்பதையும் நன்கு கவனித்தால் இந்த வசநம் யாருக்கு அநுகூலம் என்பது விளங்கும். ஸூத்திரகாரர் சொல்லாத தேவதாந்தரயஜநங்களில் சிலவற்றை விட்டு சிலவற்றை செய்கிறோம். விடுவதற்கு காரணம் விலக்ஷணாதிகாரம். பரிக்ரஹத்திற்கு காரணம் விதி. இந்த வ்யவஸ்தைக்கு ப்ரமாணம் **महाजनो येनगतस्सपन्थाः** என்பது தவிர வேறு ஒன்றும் தென்படவில்லை.

**विशुद्धमेव कर्तव्यम् अनन्यै नैविमिश्रितम्** என்ற பாரத்வாஜ ஸம்ஹிதா வசநத்தை ப்ரமாணமாகக்கொண்டு, "சிவராத்ர்யாதி வ்ரதங்கள் விடப்பட்டன" என்று கூறப்பட்டது. இந்த அம்சத்தை அடியேனும் ஒப்புக்கொள்கிறேன். இதே வசநம் மற்ற தேவதாந்தர ஸம்பந்த வர்ஜநத்திற்கும் ஏன் ப்ரமாணமாகாதோ தெரியவில்லை? யாகம் செய்ததினால் மஹா ப்ரத்யவாயம் என்று அடியேன் நிரூபிக்க வரவில்லை. ஸ்ரீ வைஷ்ணவாதிகார விருத்தம் என்று மாத்திரம் கொள்கை. ச்ருதி ஸ்மிருதிகளில் செய்த யாக ப்ரசம்ஸையை நான் ஒப்புக்கொள்ளாதவனல்ல. அது ப்ராம்மண்யத்திற்கு மாத்திரம் பொருத்தமானது. ப்ரபந்ந பரமைகாந்தி ஸ்ரீ வைஷ்ணவத்வத்துக்குப் பொருந்தாது. யஜ்ஞாதிகளை அநுஷ்டித்தார்கள் என்று ஆசார்யர்கள் திறத்தில் ஸ்ரீ தேசிகன் அருளிச் செய்ததற்கும் ப்ரகிருதாநுகுணமாகவே அபிப்ராயம சொல்லலாம். கர்ப்பாதாநம் முதல் உபநயநம் வரையில் உள்ள ஸம்ஸ்காரங்கள் மாத்திரமே ஸர்வ நித்யம், என்று அடியேன் சொன்னதற்கு என்ன ப்ரமாணம்? என்று கேட்கப்பட்டிருக்கிறது. ஸர்வ ஸூத்ரகாரர்களும் சிறிது வித்யாஸத்தோடு எல்லாரும் அநுஷ்டிக்கவேணும் என்று விதித்திருப்பதும், அப்படியே அநுஷ்டித்து வருவதும் ப்ரமாணமாகாதோ? வேறு ப்ரமாணம் தேடவேணுமோ! கிரந்தத்தில் காணவேணும் என்று திருவுள்ளமானால் வைத்யநாத தீக்ஷிதீயம் வர்ணாச்ரமகாண்டத்தில் கர்ப்பாதாநாதி ஸம்ஸ்காரங்களைச் சொல்லுமிடத்தில் **अत्र च गर्भाधानादयः उपनयनान्ता एव संस्काराः सर्वेषां द्विजातीनां नियताः न पुनः स्नानादयः** என்ற வாக்யத்தைக் கடாக்ஷிக்கலாம்.

"ஸ்ரீ பாஷ்யத்தில் **उप शुद्धामितिचेन्न शब्दात्** என்ற சூத்திரத்தில் முமுக்ஷுவான ஸ்ரீ வைஷ்ணவர்களும் அப்படியேதான் செய்யவேண்டி

யது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது" என்று நிரூபித்திருக்கிறது. கீழ் கோடிடப்பட்ட வாக்யம். ஸ்ரீ பாஷ்யத்தில் தென்படவில்லை. இவ் விஷயம் இருக்கட்டும். ஸ்ரீ நிகமாந்த மஹா தேசிகன் யாகம் அநுஷ்டிக்கவில்லை, அப்படி அநுஷ்டிக்காமல் இருந்தது ப்ராமாணிகமே என்பது அடியேனுடைய கொள்கை.

---

# ஸ்ரீ ராமகிருஷ்ண உபயமூர்த்தி தேவாதிராஜன்.

ஹஸ்திகிரி,

24—5—37

ஸ்ரீ தேசிகன் 'ரகு வீரகத்யம்' என்கிற மகா வீர வைபவத்தின் முதல் ச்லோகத்தில் ஸ்ரீ ராமபிரானுடைய பரத்வத்தை விசேஷமாக அனுபவித்து பரம வ்யோம பாஸ்கரனாகவும் தன்னுடைய ஸீதையா தேவியார் பிரபாவானாகவும், ஆச்ரிதர்களுடைய ஸர்வவித பயமாகிற தமஸ்ஸை த்வம்ஸம் செய்யும் உதயத்தை உடையவனாகவும் மிகவும் ரஸமான உபமான ரீதியில் அருளிச் செய்திருக்கிறார். இது இப்படி யிருக்க ஸ்ரீ கிருஷ்ணன் விஷயத்தில் அவ்வவதாரத்தின் ஸௌலப்யாதிசயத்தை அனுபவித்தவராய் கோபால விம்சதியின் முதல் ஸ்லோகத்தில் பிருந்தாவன சரணாகவும் வல்லவீஜன வல்லபனாகவும் அருளிச் செய்திருக்கிறார். பரத்வ ஸௌலப்யங்களான பகவத் குணங்களை இவ்விதம் இவ்விரண்டு அவதாரத்தில் முறையே நிர்திஷ்டமான குண பரீவாஹமாக அருளிச் செய்து கோயில் திருமலை பெருமாள்கோயில் என்று ஸ்ரீ வைஷ்ணவ ஸமூகத்திற்கு முக்யமான திவ்ய ஸ்தலங்களாகக் கொண்டாடப்படும் க்ஷேத்ரங்களின் அர்ச்சாவதார தத்வங்களைத் தனித்தனியே ப்ரதர்சிப்பிக்கக் கருதி ஸ்ரீ ரங்கனாதனை "தோராத தனி வீரன் தொழுத கோயில்" என்னுமிடத்தில் ஸ்ரீ ராமாவதாரத்தின் மகிமையை காட்டும் ஸ்தலம் ஸ்ரீ ரங்கமென்றும், திருமலையில் ஸான்னித்யம் செய்தியும் ஸ்ரீநிவாஸனை "கண்ணன் அடியிணை எமக்கு காட்டும் வெற்பு" என்னுமிடத்தில் ஸ்ரீ கீதாசார்யனாய் சரம ச்லோகத்தில் சரணாகதி சாஸ்திரத்தின் தத்வார்த்தத்தை நேரில் காட்டிக் கொடுக்கும் ஸ்ரீ கிருஷ்ணாவதாரமாகவும் நிதர்சிப்பித்தவராய்க் கொண்டு அதிகார ஸங்கிரஹத்தில் பிரபன்னர்களுக்கு

வஸ்தவ்ய பூமிநிஷ்கர்ண ஸம்பத்தில் அத்திகிரி ஸாந்நித்யம் செய்திருக்கும் ஸ்ரீ தேவாதிராஜனை "அரக்கன் முடிபத்துமொரு கொத்தென் உதிர்த்த திறலோன்" என்னும் வாக்யத்தினால் ஸ்ரீ ராமபிரானாகவும் அந்த பாட்டிலேயே உத்தரார்த்தத்தில் "வெணெ வைத்ததுணும் அத்தனிடமாம்" என்னும் வாக்யத்தில் நவநீத சோரனான கண்ணபிரானாகவும் இவ்விரு அவதாரங்களையும் ஒன்று சேர்ந்து அருள்வரதன் நிற்கும் பெருமையை விவரித்தருளிச் செய்திருக்கிறார். ஆதலால் நம்முடைய புண்ய பூமியில் எல்லா ஆஸ்திகர்களாலும் கொண்டாடப்பட்டுவரும் ஸ்ரீராம கிருஷ்ண அவதாரங்கள் இரண்டும் ஓர் அர்ச்சாவதார மூர்த்தியாய் ஸத்ய விரத க்ஷேத்திர அத்திகிரியில் கொண்டு விளங்கும் க்ஷேத்திரமே நம்மவர் யாவருக்கும் பரமோத்தேசியம்.

---

## புத்தக விமர்சம்.

# "ஸ்ரீ வைஷ்ணவம்"

[ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய விஷயங்கள் அடங்கியது. பதிப்பாசிரியர், ஆ. ரங்கநாத முதலியார், "சுவர்ண விலாஸ்" 13, பெரியதெரு, திருவல்லிக்கேணி. விலை ரூ 1—8—0:]

ஸ்ரீமான் ஆ. ரங்கநாத முதலியார் அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற "ஸ்ரீ வைஷ்ணவம்" என்னும் புத்தகத்தைப் பார்த்து நாம் மிகவும் சந்தோஷிக்கிறோம். நமது ஸம்பிரதாயத்தைப் பின்பற்றுவோர் அறியவேண்டிய அனேக விஷயங்கள் இதில் அடங்கி யிருக்கின்றன. விசிஷ்டாத்வைத தத்துவத்தின் ப்ரக்ரியை, பகவத் விஷயத்தின் பெருமை, திவ்ய ப்ரபந்த ஸார ஸங்க்ரஹம், சில அவசியமான ஸ்தோத்திர பாடங்கள், திவ்ய தேசங்களின் தொகுதி முதலிய அநேக விஷயங்கள் பல நிபுணர்களால் விவரிக்கப் பெற்றுள்ளன. ஸ்ரீ பிள்ளை லோகாசாரியர் ஸாதித்த முமுக்ஷுப்படியை எளிய தமிழில் விளக்கி முதலில் அச்சிட்டிருக்கிறது. இவ்வரிய விஷயங்களை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒருங்கே அச்சிட்டு உதவவேண்டுமென்ற விஷயத்தில் மிகுந்த ஊக்கத்துடன் பாடுபட்ட ஸ்ரீமான் ரங்கநாத முதலியாரவர்களுடைய ஸம்பிரதாயச்ரத்தை மிகவும் கொண்டாடத்தகுந்தது.

---

# ஒரு ஆசார்யன் போதுமா? அல்லது பலர் வேண்டுமா?

[ஸ்ரீ. ஸ்ரீ.]

இவ்வுலகில் மானிடராய்ப் பிறந்தவர்களுக்குள் ஞானத்தை ஸம்பாதிக்க விரும்பாதவர்களே கிடையாது. அந்த ஞானத்தை ஸம்பாதிப்பது ஒரு குருவினுடைய உதவியாலேயே முடியும். பிறர் ஸஹாயமில்லாமல் தானாகவே ஒரு விஷயத்தை அறியமுடியாது, அறிந்தாலும் நிலை நிற்காது. 'ஆசார்யனிடமிருந்து கற்ற வித்தையே சிறப்பானது' (आचार्याद्धैव विदिता विद्या साधिष्ठं प्रापत्) என்று ச்ருதியும் ஓதுகிறது. இவ்வுலகிலுள்ள விஷயங்களுக்கே ஆசார்யன் அவச்யம் என்றால், ஸமஸ்தஜகத்தையும் படைத்தும், காத்தும், அழித்தும், ரக்ஷிக்கும் ஆற்றலுடைய பரமனையும், அவனுக்கு உடலாய் நிற்கும் ஆத்மாவையும் பற்றி அறியவேண்டுமானால், ஒரு குரு அவச்யம்வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். குரு என்னும் சொல்லுக்கே 'இருளைப் போக்குமவன்' என்று பொருள். 'கு-இருள், ரு-நீக்குவோன்.'

गुशब्दस्त्वन्धकारः स्यात् रुशब्दस्तन्निरोधकः ।
अन्धकारनिरोधित्वात् गुरुरित्यभिधीयते ॥

இனி குருவை அடையும் முறை யென்ன வென்றால்: ஒருவன் ஞானத்தை, அதிலும் வேதாந்த ஞானத்தை ஸம்பாதிக்க விரும்பினால் பொறுமை, வணக்கம், அடக்கம், ச்ரத்தை முதலிய குணங்களோடு கூடிய வனாய் பய பக்தியுடன் குருவை அணுகி, ஏதாவது உபஹாரம் (காணிக்கை) ஸமர்ப்பித்து நமஸ்கரித்து தன் விருப்பத்தை வெளியிடவேண்டும். அவரும் அவனுடைய ஆவலுக்கு ஏற்றபடி ஒரு வருஷமோ ஆறு மாதமோ இன்னும் குறைவாகவோ அவனைப் பரீக்ஷித்து, அவன் உபதேசம் பெறத் தக்கவன் என்று தெரிந்தால், உடனே மிகுதி குறைவற தன் கன்றுக்குப் பால் சுரந்து வளர்க்கும் பசுவைப் போல, அவனுடைய சக்திக்கும் அதிகாரத்திற்கும் தக்கபடி உபதேசிப்பார். உபதேசிக்கும்போதும் தனக்கு புகழ், லாபம், மரியாதை முதலியன கிடைக்கும் என்ற எண்ணமில்லாமல், சிஷ்யன் பெறும் நன்மையையே தனக்குப் பெரும் பேறாகக் கருதுவார். தகுந்த அதிகாரமுள்ளவனுக்கே உபதேசிக்கவேண்டும், அகப்பட்டது லாபம் என்று உபதேசிக்க ஆரம்பித்தால், அதனால் சிஷ்யனுக்கும் உபயோகமில்லை, குருவுக்கு பாபமும் விபரீத பலமும் ஏற்படும் என்கிற விஷ

யங்களெல்லாம் தேசிகன் அருளிச் செய்த ஸம்பிரதாய பரிசுத்தி, ரஹஸ்யத்ரய ஸாரத்தில் ஆசார்ய க்ருத்யாதிகாரம் முதலியவற்றில் விஸ்தாரமாகக் காணலாம்.

இப்படி வேதத்தின் உட்பொருளை உபதேசிக்கும் ஆசார்யன் மனித வேஷம் கொண்ட ஸாக்ஷாத் நாராயணனே என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**साक्षात् नारायणोदेवः कृत्वा कृत्वा मर्त्यमयीं तनुं ।**
**मग्नानुद्धरते लोकान् कारुण्यात् शास्त्रपाणिना ॥**

**‘आचार्य देवो भव’** ‘ஆசார்யனை தேவதையாக எண்ணு’ என்று சுருதியும் விதித்தது. இன்னும் பல விடங்களில் குருவை ‘பர பிரஹ்மம்’ என்றும், ‘பரையான கதி’ என்றும், ‘மிகச் சிறந்த பொருள்’ என்றும் (**परं ब्रह्म, परा गतिः, परा काष्ठा**) சொல்லியிருக்கிறது. தனக்கு உபயவிபூதி நாதனையே உபதேசித்தால் அளித்த ஆசார்யனுக்கு தகுதியான ஒருவித கைம்மாறும் சிஷ்யனால் செய்ய முடியாது. “ஏற்றி மனத்து எழில் ஞானவிளக்கை, இருளனைத்தும் மாற்றினவர்க்கு ஒரு கைம்மாறு மாயனும் காணகில்லான்.”

இப்படிப்பட்ட பெருமையையுடைய ஆசார்யனை அடையும்போது சிஷ்யனும் ஆசார்யனைத் விசாரித்தே ஆச்ரயிக்கவேண்டும். அவர்கள் ஞானம், அநுஷ்டானம் என்ற இரண்டு சிறகுள்ள பக்ஷி போன்றவர்கள். ஸரியான முறையில் பரம்பரையாக உபதேச பூர்வமாக வந்த சாஸ்திரார்த்தங்களை ஆசார்யர்களிடமிருந்து கேட்டும், கற்றபடிதான் அநுஷ்டித்தும், பிறரை அநுஷ்டிப்பித்தும் போருமவனே ஆசார்யன் என்று ஆசார்ய சப்தத்தின் பொருளாகக் கூறப்பட்டது.

**आचिनोति हि शास्त्रार्थान् आचारे स्थापयत्यपि ।**
**स्वयमाचरते यस्मात् तस्मादाचार्य उच्यते ॥**

ஒரு ஆசார்யனிடம் இருக்கவேண்டிய குணங்கள் என்ன என்பதை ‘ந்யாஸ விம்சதி’ என்ற ஒரு ஸ்தோத்திரத்தில் தேசிகள் வெகு அழகாக ஸாதித்திருக்கிறார்.

**सिद्धं सत्संप्रदाये स्थिरधियमनघं श्रोत्रियं ब्रह्मनिष्ठं**
**सत्वस्थं सत्यवाचं समयनियतया साधुवृत्त्या समेतं ।**
**डम्भासूयादिमुक्तं जितविषयगणं दीर्घबन्धुं दयालुं**
**स्खालित्ये शासितारं स्वपरहितपरं देशिकं भूष्णुरीप्सेत् ॥**



(ஸரியான ஸம்பிரதாயத்தினால் வந்தவரும், அறிந்தவற்றை திருடமாக வைத்துக்கொள்பவரும், ஒருவித தோஷமற்றவரும், வேதாந்த விஷயங்களைக் கேட்டு உணர்ந்தவரும், உணர்ந்தபடி அப்யஸித்து ப்ரஹ்மத்யானம் செய்பவரும், ஸத்வகுணம் பொருந்தியவரும் ஸத்யமான வாக்கை யுடையவரும், ஸரியான நடத்தையோடு கூடியவரும், டம்பம் அஸூயை முதலான துர்க்குணங்களற்றவரும், இந்திரியங்களை ஜயித்தவரும், பந்து போன்றவரும், சிஷ்யர்களிடத்தில் தயையுள்ளவரும், அவர்கள் தப்பினபோது திருத்தி ஆட்கொள்பவரும், தன்னுடையவும் பிறருடையவும் நன்மையில் ஈடுபட்டவருமே தேசிகர். தன் நன்மையையும் ஞானத்தையும் விரும்பும் சிஷ்யன் அவ்வித மானவரையே தேடி ஆச்ரயிக்க விரும்பவேண்டும்.) இதிலிருந்து ஆசார்ய வரணத்தில் சிஷ்யனுக்கு ஒரு பொறுப்பு உண்டு என்று புலப்படுகிறது.

ஆனால் பலம், ஞானம், ஆயுள், எல்லாம் பரிமிதமான இந்தக் கலியுகத்தில் சிஷ்யர்களை ஒரு வருஷம் பரீக்ஷிப்பது தகுதியல்லவென்று ஆஸ்திக்யமும் ச்ரத்தையும் இருந்தாலே போதும் என்று உபதேசாதிகள் நடந்து வருவது போல, சிஷ்யர்களும் தங்களுக்குப் போதிய ஞானமும் அனுபவமும் இல்லாததால் தன் பிதா யாரை குருவாக வரித்தாரோ அவரையே தாங்களும் குருவாக வரிக்கிறார்கள். அதனால் பரம்பரையாக இன்னாரைச் சேர்ந்த சிஷ்யர்கள் என்று இருந்து வருகிறது. ஸ்ரீ பாஷ்யகாரருடையவும் தேசிகனுடையவும் ஸித்தாந்தத்தில் இருப்பவர்கள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கவேண்டும். ஏற்பட்ட பேதங்கள் அவர்களுக்குப் பின்னிட்டு இருக்கவேண்டும். இதிலிருந்து தேசிகனுக்கும் பிற்காலத்தில் கூட சிஷ்யர்கள் குருவைத்தேடி ஏற்படுத்தினார்கள் என்று கிடைக்கிறது. இப்படியானால் இப்போதுமட்டும் பரம்பரையாக ஒருவருடைய சிஷ்யனாகத்தான் இருக்கலாம், மாற முடியாது என்று எப்படி நியமிக்க முடியும்? நடுவில் ஒருவர் குருவாக வர, அந்த பரம்பரையிலேயே ஒருவருடைய ஸந்ததியார் ஆச்ரயிக்கிறது என்கிற ஸங்கேதம் ஏற்பட, அதிலிருந்து விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் பல கிளைகள் உண்டாகி விட்டன. ஆனால் இந்தக் கிளைகள் ஆலம் விழுதுபோல் இருந்தால் மூலத்திற்கு பலம் உண்டு. அது இல்லாமல் இருப்பதே சோகிக்கத் தக்கது. கிளைகள் உண்டாக வேண்டும். அவை விழுதுகள் மாதிரி இருக்கவேண்டுமே யொழிய கிளைகளாகக் கூடாது. ஒரு சிஷ்யன் தன் முன்னோர் ஆச்ரயித்திருந்தவரையே ஆச்ரயித்து ஞானத்தைப் பெறவேண்டும் என்றும், அப்படி அந்தப் பரம்பரையில் ஞானவான்கள் இல்லாதபோதும், இருந்தும் தன் ஜீவனத்திற்காக வேறு இடம் சென்றுவிட்டால் அங்கு அவர்கள் கிடைக்காதபோதும் வேறொரு ஞானவானிடத்தில் விஷயத்தைக் கேட்க

லாகாது. அறிவீனனாகவே காலத்தைக் கழிக்கவேண்டும். என்றும் சில ஸங்கேதங்கள் ஏற்பட்டு, பலர் ஸித்தாந்தார்த்தங்கள் தெரியாமலும், சிலர் மலிவாகக் கிடைக்கும் விபரீதார்த்தங்களை உண்மையாக எண்ணியும் இருந்து விடுகிறார்கள். இப்படி விபரீதத்திற்குக் காரணமான ஸங்கேதமே ஸம்பிரதாயமாகவும் அதுவே ஸகல மரியாதைகளைப் பெறுவதாகவும் விளங்கி வருகிறது. ஸ்ரீ தேசிகன் நிஷேதித்த இவைபோன்றவை முன் வந்து, ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஒருவரை யொருவர் கண்டால் பரஸ்பரம் சந்தனம், நிலவு, தென்றல்போல் கலக்கவேண்டும் என்று சொன்னதையெல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டன.

ஒருவனுக்கு ஆபத்துக்காலத்தில் அருகிலுள்ள பெரியோரை ஆச்ரயிக்கலாம் என்பது இருக்க, ஒரு பரம்பரையைச் சேர்ந்தவன் அவ்விததசையில் மற்றொருவரை அணுகவும் கூடாது ஞானோபதேசம் பெறவும் கூடாது என்று உபதேசமும் அநுஷ்டானமும் இருக்குமானால் இதைவிட துக்கிக்கத்தக்க நிலைமை வேறு இல்லை. இப்படி நடப்பதற்கு ப்ரமாணமும் இல்லை; ஆசாரமும் இல்லை. இதற்கு மாறாக பல இடங்களில் கேட்க வேண்டும் என்பதற்கே ப்ரமாணங்களும் ஆசாரங்களும் இருக்கின்றன: "बहुभ्यः श्रोतव्यं बहुधा श्रोतव्यं"—பலரிடமிருந்து கற்கவேண்டும்; பல முறைகளிலும் கற்கவேண்டும் அப்படியே முன்னோர்கள் அநுஷ்டித்தார்கள் என்பது "எவ்வளவோ ஞான வ்ருத்தர்களை நான் உபாஸித்தேன்" (ज्ञानवृद्धा मया राजन् बहवः पर्युपासिताः) முதலான ப்ரமாணங்களால் கிடைக்கிறது. கீதையில் பகவானும் அர்ஜுனனுக்கு தான் உபதேசித்து விட்டு

तद्विद्धि प्रणिपातेन परिप्रश्नेन सेवया ।
उपदेक्ष्यन्ति ते ज्ञानं ज्ञानिनः तत्त्वदर्शिनः ॥

என்று 'ஞானவான்களிடமிருந்து மீண்டும் தெரிந்து கொள்' என்று விதித்தான். இவற்றால் பிறரிடமிருந்து தெரிந்து கொள்ளுவது தோஷமன்று என்பது தவிர, தான் கற்றது ப்ரதிஷ்டிதமாக பிறரிடம் சென்று கேட்க வேண்டும் என்று ஸர்வ பூத ஸுஹ்ருத்தான பகவானே சொன்னான். தவிரவும் ஆசார்யர்களே சிஷ்யர்களின் ஹிதத்திற்காக அவர்களை பஹுமுகமாகத் திருத்தவேண்டும். சுகர் என்னும் ப்ரஹ்மர்ஷி தனக்கு மலை, ஸமுத்ரம் முதலான பல ஆசார்யர்கள் உண்டு என்றார். பூர்வாசார்யர்களுடைய ஆசாரமும் இதையே ஊர்ஜிதப்படுத்துகிறது. நாத முனிகள் தம்முடைய திருப்பேரனான ஆளவந்தாருக்குத் தாம் உபதேசியாதே தம்முடைய சிஷ்யர்களை உபதேசியுங்கள் என்று ஆக்ஞாபித்தார். இதனால் குருவின் புத்ரனாயிருந்தாலும், அவன் தன் பிதாவின் சிஷ்யர்களிடமிருந்து



உபதேசம் பெறலாம் என்பதும், ஞான ஸந்ததியாலே முற்பட்டவர்களும் குருக்களாக ஆதரணீயர்கள் என்பதும் ஏற்படுகிறது. அவ்விதமே ஆளவந்தாருடைய ஆக்ஞையாலே ஸ்ரீ பாஷ்யகாரரை அங்கீகரித்த பெரிய நம்பி இவரை தமக்கு ஸப்ரஹ்மசாரிகளான திருக்கோட்டியூர் நம்பி பக்கலிலே ரஹஸ்யார்த்தங்கள் சிக்ஷை பண்ணவும், திருமாலையாண்டான் பக்கலிலே திருவாய்மொழி கேட்கவும், ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் பக்கலிலே நல் வார்த்தை கேட்கவும், திருமலை நம்பி பக்கலிலே ஸ்ரீ ராமாயணம் கேட்கவும் நியோகித்தார். இவ்விதமாக எம்பெருமானாருக்குப் பல ஆசார்யர்கள் உண்டு என்று தெரிகிறது.

ஆனால் ராமாயணம் பால காண்டம் த்ரிசங்கு உபாக்யானத்தில் 58-வது ஸர்க்கத்தில் கோவிந்தராஜர் ஆசார்யத்யாகத்தின் பலத்தைக் கூறுகிறார் என்று அவதாரிகை வைத்திருக்கிறார். இப்படியிருக்க, ஒரு குருவை த்யாகம் செய்வது எப்படிக் கூடும் என்று ஆக்ஷேபம் வருகிறது. இங்கு ஒரு குருவுக்கும் த்யாகம் சொல்லவே இல்லை. பலரிடத்தில் வேதாந்த விஷயங்களைக் கேட்கப் போனால், அதற்காக அபச்சேதந்யாயம் போலே முற்பட்டதை உதறித் தள்ளவேண்டும் என்னும் நியமமும் இல்லை. எல்லாரையும் ஆசார்யர்களாகக் கொண்டாடினால் ஒருவித ப்ரத்யவாயமும் கிடையாது. ஆனால் அவர்களுக்குள் ஒருவர் ப்ரதானர், மற்றவர் அப்ரதானர்.

स्वाधीनाशेष सत्तास्थितियतनफलं विद्धि लक्ष्मीशमेकं
प्राप्यं नान्यं प्रतीयाः न च शरणतया कञ्चिदन्यं वृणीयाः ।
एतस्मादेव पुंसां भयं इतरदपि प्रेक्ष्य मोज्झीः तदाज्ञाम् ॥

"ஸகல ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதிகர்த்தாவான பிராட்டியோடு கூடின ஸர்வேச்வரனே பர தத்வம்; அவனே அவனை அடைவதாகிய பலத்திற்கு உபாயம்; வேறு இல்லை; அவனுடைய ஆக்ஞைகளை மீறாமல் நடப்பதே ஒவ்வொரு ஆத்மாவின் கடமை" இது முதலானதும் மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் உபாயமான பக்தி ப்ரபத்திகளைப் பற்றிய உண்மையானதும் நிச்சயமானதுமான ஞானத்தை உண்டு பண்ணுபவனே ப்ரதானாசார்யன். இப்படி உண்டான ஞானத்தை கலங்காதபடி பண்ணுகிறவர்களும் அதற்கு வேண்டியவற்றை உபதேசிப்பவர்களும் அப்ரதானர்கள். அந்த அப்ரதானாசார்யர்களும் ப்ரதானாசார்யனால் அநுமதிக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும். இது இல்லாததினால் தான் த்ரிசங்குவுக்கு கஷ்டம் நேரிட்டது.

இவ்வாறு ஆசார்யர்களை தேவர்களைப் போல் உபாஸிக்கவேண்டும் என்றும், ஞானநுஷ்டானமுள்ள ஆசார்யனிடமிருந்தே வேதாந்தார்த்தங்களை அறியவேண்டும் என்றும், ஒரு குருவினிடம் கேட்டதை மற்றும் பல குருக்களிடம் கேட்டு ஸுப்ரதிஷ்டிதமாக்கிக் கொள்ளவேண்டும் என்றும் ஸ்ரீ தேசிகன் தன்னுடைய ஸம்ப்ரதாய பரிசுத்தியில் விஸ்தாரமாக உபபாதித்து, "இப்படி ஆசார்யாபிமத விஷயத்தில ஆசார்யாநுக்ஞையாலே அபேக்ஷித ஞானோப ஜீவனம் பண்ணுமது ஶாஸ்த்ரார்த்தம் என்னுமிடம் அந்திம தசாவதியாக அத்யந்தாவஹிதராய்க் கொண்டு ஸதாசாரபாலநம் பண்ணின ஸ்ரீ பாஷ்யகாருடைய அநுஷ்டானத்தாலே ஸித்தம். அத்

யாத்ம விஷயத்தில் ப்ரதான—அப்ரதானம்சங்களை ஒருவருக்குப் பலராக உபதேசிக்க வேதாந்தங்களிலே பல விடங்களிலே கண்டோம். ஓராசார்யர் பக்கலில் க்ருத்ஸ்னோபதேசமும் மைத்ரேயாதிகளுக்குப் போலே சிலருக்கு உண்டாம். ப்ரதான ச்ருதத்தினுடைய ப்ரதிஷ்டார்த்தமாக பலருப தேசத்தால், அவர்கள் பக்கலிலும் ஆசார்ய ப்ரதிபத்தி பண்ண ப்ராப்தம்” என்று உபஸம்ஹாரம் செய்தார்.

இப்படிப் பல குருக்களிடம் கேட்டால் பரஸ்பர விருத்தமான அர்த்தங்கள் ஏற்பட்டு சிஷ்யன் கலக்கமடைந்து விபரீதமாக ஆகாதா என்று கேட்கலாம். ‘எம்பெருமானாருடைய ஸித்தாந்தத்தில் அர்த்த பேதமில்லை, யோஜனாபேதமே உள்ளது’ என்றும், “ஸத்ஸம் ப்ரதாயத்தில் தோன்றும் விரோதம் தத்வ விஷயமாகில், தாத்பர்ய பேதத்தாலே விரோத சாந்தி உண்டாம். அநுஷ்டான விஷயமாகில் அவ்வோ விதிக்கு அநுகுணமாக வ்யவஸ்தித—அவ்யவஸ்தித---ப்ரக்ரியையாலே விகல்பமாம்” என்றும் வழிகாட்டினார் ஸ்ரீ தேசிகன். இவை எல்லாவற்றிற்கும் மாறாக அபிக்ஞர்களான ஆசார்யர்கள் உபதேசிக்க மாட்டார்கள். அப்படி உபதேசித்தால், அங்கு ஸங்கேதமும் ஆக்ரஹமுமே தோஷத்திற்குக் காரணம்; ஆகையால் அம்மட்டில் அந்த குருக்களை உபேக்ஷித்து, மற்றுள்ள அவர்களுடைய ஞானம், அநுஷ்டானம், ஆத்மகுணம், நமக்குச் செய்த உபகாரம் இவற்றுக்காக அவர்களை கௌரவித்து, ஸர்வேச்வரனையும் ஸந்தோஷப்படுத்தி, தான் உஜ்ஜீவிக்கும் வழியைத் தேடிக்கொள்ளவேண்டும்.

பெரிய நம்பிகள் தன்னுடைய ஸப்ரஹ்மசாரிகளைக் கொண்டு ஸ்ரீ பாஷ்யகாரருக்குச் சொல்லுவித்தார் என்பதிலிருந்து இன்னொரு விஷயம் கிடைக்கிறது. ஒரு ஆசார்யன் தன் ஜீவ்பகாலத்திலேயே தன் கூட வாசித்தவர்களைக் கொண்டோ, அல்லது தன் சிஷ்யர்களைக் கொண்டோ பிறருக்கு உபதேசிக்கும்படி செய்யலாம். தேசிகனும் தன் குமாரரைக் கொண்டு சிஷ்யர்களுக்கு ஓதுவித்தார் என்றும் சொல்லப்படுகிறது. ஆதலால் ஒருவித ப்ரத்யவாய மில்லாமல் பிறரைக்கொண்டு தன் சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்விக்கலாம். அப்படிச செய்வதினால்தான் எம்பெருமானாரின் ஸித்தாந்தம் தழைந்து ஓங்கும். இல்லாவிடில் வெகு சிரமப்பட்டு தேசிகன் கட்டின வேலி பாழ் இடத்திற்காகவே ஆகும். எம்பெருமானாரும் 74 ஸிம்மாஸனாதிபதிகளை ஏற்படுத்தி ஸ்ரீ பாஷ்யம், பகவத் விஷயம் முதலானவற்றை எல்லோருக்கும் உபதேசிக்கும்படி செய்தார்.

அவ்விதமே இப்போதுள்ள மதப்ரவர்த்தகர்களும் புத்திமான்களைப் பொறுக்கி அவர்களுக்கு நான்கு வருஷமாவது ஸம்ப்ரதாயார்த்தங்களை உபதேசித்து, ஆசார்ய குண பூர்த்தியுண்டாகும்படி செய்து நாலா பக்கங்களிலும் அனுப்பி எல்லோருக்கும் உபதேசிக்கும்படி செய்யவேண்டும். ஆதலால் குறுகிய எண்ணத்தை விட்டு பரந்த நோக்கத்தோடு நம் ஸித்தாந்தம் அபிவிருத்தியடையவேண்டும், எல்லா ஜீவன்களும் உஜ்ஜீவிக்க வேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடு எல்லோரும் நடக்கும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக.

---



சீபெரும் பூதூர் வள்ளல் சிந்தித்துச் சிறிது பின்னர்க்
காபல கமழும் பொன்னிக் கரைவள ரரங்க மேயினம்
மாபெருந் தரிசனக்கோர் மன்னனா மதனைநந்த
வாய்பரம் பொருளே யூன மடையுறு திதனை யாற்க. 117

எனவவன் கழலை யெண்ணி யியற்றினர் பிரபத் திப்பின்
னனகமா மரிய மேனி யாமய மடைந்து நிற்க
மன்னயர் பிள்ளா னங்கே மலிர்க்கரங் குவித்தாழ் வார்க
ளௌநம தெழிலார் விக்கி ரகமெமக் கியற்றி யீக. 118

இனியுளா ருய்யும் வண்ண மருச்சனை யிழைத்தற் கென்னக்
கனிவுளார் முதலி யாண்டான் கருணையங் கிழைத்திடரே
னனியுளார் சிறந்த விந்த நலந்திகழ் துறையு நாளும்
பணியுளார்ந் தகன்மே யென்று பரிவொடு மிரந்தாரன்றே. 119

கருணையங் கடலன் னாருங் கருத்துகந் தருளித் தாழார்
திருமலி வடிவ மூன்று செம்பொனிற் றிகழத் தீட்டி
யரியதங் கரங்க ளேய வவையுறத் தழுவி மற்று
மிருள்கெடும் பிள்ளா னண்டா னச்சானென் றிவர்கட் கீந்தே. 120

முறைமையின் முகில்கண் குஞ்சு முழுமணி யெயில்களேழா
ரறைதருங் கோயிற் கண்ணு மணியிரும் பூதூருள்ளு
நிறைதவத் தினரே நேரு நாரண புரத்தின் மேலு
மிறைகொள விருத்தி யுய்மி னென்றருஇ புரிந்தார் மன்னே 121

ஆரணம் பழுத்த நாவி னந்நாடா தூராழ் வானங்
கோரணி புகழி னெந்தம் மிலக்குவ முனிகா ளந்தப்
பேரரு ளாளன் செய்த பிழையென்னே வறியே னென்ன
நாருள முவந்தன் னாரு நகைதரு முளத்தி னேக்கா. 122

குலைமுதிர் கனிய ரம்பைக் கொடுவயற் கூரத் தாழ்வா
னிலவுறும் பிரிய பாகி னேயரென் றும்மைச் சொற்ற
நலமுறும் வாய்மை வாய்மை நன்றுநன் றென்று நாடி
யிலகுறுந் திருமா னின்ற வெழிலுறுந் தலங்கண் முற்றும். 123

நுந்திருக் கருத்தின் வண்ண நுவலுமெம் படிவம் பண்ணித்
தந்திழைத் திடுக பூசை தகுமென வருளி நிற்பச்
செந்துகிற் பாள வாயான் சீதா னரங்கற் குற்ற
வந்திருப் பணிக ளாற்று மவர்திரண் டெழுந்தா ரங்கே. 124

## வேறு

வந்திலக்கு மணமுனிப் பதந்தலைக்கண் வணங்குரு
வந்தலத்தை யடிகள்வின் டகல்கிலிந்த வடியவர்மே
லெந்தமற்ற விறையிறுய்வ தென்றகங் குழைந்திட
வந்தமற்ற பரிசினன்ன ரருள்சுரந் தறைகுவார். 125

நம்புஞான மகனெனச் சிறந்த விந்த நற்பிளா
னிம்பர்நன் கிருக்கநீவி ரேனகம்கள ரதிரா
லெம்பிரா னரங்கருக் கியைந்தசெம் பணிகளெலா
மும்பர்கண் டுவக்குமா றுஞற்றுகின்ன ருரை கொளா 126

இனியெனப் பகர்ந்துமற்று மிணையிலப்பிள் ளானையுங்
களிவொடுங் கிடாம்பியாச்சா னையுமலர்ந்து கண்டழைத்
தினியசில்ல மறைபொருள்க ளேனுமா றியம்பிமுற்
சனகி கொண்க னறுமறுக் கருள்புரிந்த தன்மை போல். 127

காலதத்து வம்படிக்க னுள்ளகாறுங் கமழுமிச்
சீலமுற்ற தரிசனஞ் சிறக்குமா றவர்களின்
கோலமுற்ற முடிமிசைதங் குரைகழல்க டமையணிந்
தேலமுத்த மிலகுமா றியம்புகிற்ப ரிஃதரோ. 128

எம்மதெம்ம தெம்மதென் றியம்புபல்ல சமயமுஞ்
செம்மையின் வழுத்தநின்ற வொருவனுயை சீதரன்
தன்மதந் தழைக்கவென்று நும்முகம் கொண் டசலமே
லம்மவுள்ள மினிவிழைந்த தன்மையாமு ணர்ந்துளேம். 129

ஆகையானி ஃதரியபாத்தி ரத் தளித் தலர்த்துமின்
வேகவெங்க லியின் புளர்ம்பின் வேறு சில்ல ரிளியோர்கா
லாகுமிந்த வருநெறிக்கி ரண்டிழைப்ப ராயினு
நாகணைப்ப ரன்பினன்றோர் நற்குருவை நல்கியே. 130

குன்றுருது மற்றிலங்கு குணமுணர்ந் திழைப்பனு
லென்றுவாய்ம லர்ந்துதாமா ராதனஞ் சேய்தேத்திய
வென்றனின்ன ருள்வாத னயமுகத்த னிவர்களை
நன்றுபிள்ளா னைச்சிறக்க ணித்தவர்க்கு நல்கினர். 131

நாடுபிள்ளா னற்கிடாம்பி யாச்சானிந்த நல்வரின்
பீடிணைந்த வொக்கறம்மின் முடிகழல்கள் பேணிவைத்
தாடியன்ன முகமலர்ந்து கண்வளர்ந்த ருள்கையின்
மாட்டர்ந்த முதலியாண்டான் மற்றுமுள்ள பெரியரும். 132



பிரமவல்லி யாதியாய பெருகுபகிட தங்களும்
விருதருஞ்சூழ் விசும்பெனுதி வெந்திருவாய் மொழிகளு
நிரைநிரையி னின்றுபாட நேருதாச நம்பிகள்
பரவைவயோதை யன்னபல்லி யம்பணில முழக்கவும். 133

பெரியநம்பி யடிநிணைந்து பெட்பிளுரு மேல்வையிற்
பிரமரந்தி ரந்திறந்து பெயர்ந்துமே லெழுந்தெழ
வரிசையா யிலங்குமண்ட லத்திறையும் வானவர்
பரிசினேடெ திர்ந்துசெய்ய நெறிபணிந்து காட்டவும். 134

இந்தவண்டம் விண்டுமின்வை குந்தமெய்தி யெம்பிரான்
றெண்டரோட ளாவியந்தத் தூமணிமா மண்டப
முந்தடைந்த கூரநாதன் முதலியோரி னேய்ந்துமா
ரந்தமில்பே ரின்பநண்ணி யாங்குறைவ ரென்பவே. 135

## வேறு

பிள்ளா னெழுவாயாம் பெரியமுத லித்திரள்பின்
கொள்ளாத் துயர்க்கடலுட் கொண்டழுந்திச் சேர்ந்துகிடந்
தெள்ளாக் கலையுணர்வி னெண்ணித் தெளிந் தெழுந்து
விள்ளாத் திருமிடறு வெம்புற் றுற்றினவே. 136

மற்றுமொரு வர்க்கொருவர் மன்னித் தெருட் டவுணர்
வுற்றெழலு மெல்லோரும் பிள்ளானு ரொண்கரத்திற்
பொற்றசா மப்பணிகள் புறையின்றன் னூவந்தார்க்
குற்றுவனைந் தென்ன விழைத் துடையவருந் தாப்படியே. 137

அத்தியய னச்சாறு மாங்கடைவே யாற்றுபுசெம்
பத்திமிகச் சீபாத தீர்த்தம்ப ருகினர்பின்
முத்திதரும் பிள்ளானுர் முன்பேமுன் னுருபிர
பத்தியனை வோரும்ப ணிந்திழைத் துய்ந் தொழுகினரால். 138

பின்பிள்ளான் கோவிலினும் பெரும்பூதூ ரென்பதியுள்
ளன்புள்ளா ரம்முதலி யாண்டாள்கி டாம்பியாச்சான்
வன்புள்ளா நல்லானு தியர்சிலர்மண் வாழ்த்துபவர்
நன்புள்ளா டுந்துகின்மே னூராய ணபுரத்தும். 139

செம்பொன்னு னெம்பெருமா னூர்முன்னஞ் செய்தளித்த
தம்பொன்னு ரும்முருவை மூலவரிற் றுமிருத்தி
யம்பொன்னு டாள்பவரு மன்றுடம் வந்துதொழ
வெம்பொன்னு ரும்பணிய விழாவயர்ந்து போந்தனரால். 140

### வேறு

கச்சிதனிற் கனம்பெருகு நடாதூ ராழ்வான்
கலையுறையும் பிள்ளைதிரு மலையினம்பி
மெச்சரிய திருமலையி னடிநாப் பண்மேன்
மூவுழியு மிருந்ததிருத் தலங்க டோறும்
பச்சைமுகிற் பரமனையங் கங்கே பாடிப்
பணிந்தொழுகும் பாகவத ரினையாழ் வாரி
னிச்சைகொளும் விக்கிரக மெழிலின் பாடி
யிலகுவித்தா ரடைந்தெவரு மென்று முய்வான். 141

இவ்வண்ண மீரறுபா ணுண்டு லீலா
விபூதியிடை யெம்பெருமா னிணையில் வாய்மை
தெவ்வெண்ணும் பரசமயத் தவருந் தீண்டாப்
பஞ்சமருந் தெளிந்துபரம் பதமே சேர்வா
னுய்வெண்ணு மழுக்காறு னிகளொன் றின்றி
யுயர்மறையைக் கோபுரத்தி னிவர்ந்து தூற்று
மவ்வெண்ணற் கரியகுணத் தவரின் பாடு
மரவணையான் பகடெனவே யலங்கு மாதோ. 142

---

## வேதாந்த தேசிகர்

### 29—வது சருக்கம்

திருத்தகும் பாய லனந்தனைப் பூதூர்
தேசிக ரென்னமுன் னுதிப்பித்
துரைக்கருந் தனது வாய்மையை வைய
முய்யுமா றுணர்வறப் பரப்பித்
திருப்பவின் னிசையார் கண்டையைத்தூப்புற்
றேசிக ரெனவுதிப் பித்தும்
பெருக்கிய வதனை வேங்கடத் திறைவன்
பேர் சொலார் நேர்செலா தவரே. 1

பின்திருக் குருகைப் பிரான்பிளா னிலக்கு
மணமுனி நியமனம் பேணி
நன்றினுக் கியையு மெங்களாழ் வான்முன்
நலந்திகழ் முதலிகட் குவமை



யின்றிமற் றுளிரும் பாடிய பகவத்
விடயமுன் னரும்பொரு ளவையு
நன்றுளத் தொளிர நவின்றருள் புரியா
நானிலம் புகழ்தர நடந்தார். 2

ஆரியர்க் கமுத மடும்பணி யிழைத்த
வழகரெங் கிடாம்பியாச் சானுஞ்
சீரது விளக்கிச் செல்கையி லவர்க்கோர்
செகஞ் சொலும் திருமக ருதிக்க
நேர்பெறி ராமா னுசப்பிளா னென்றந்
நின்மலர்க் கெழிற்பெயர் நிறுவி
யேர்பெறும் பருவத் துடையவ ரளித்த
பொருளெலாம் புதல்வருக் கீந்தே. 3

இப்பெருஞ் சமயத் திறைவரா யிலக
விழைத்தன ரிணையில்லை குந்தத்
தப்புறம் படர வெங்களாழ் வான்முன்
முதலிக ளவர்மகர்க் கரங்கொண்
டெப்பெரி யவரு மியம்புமா சரம
கிரியையை யியற்றினர் பிறகத்
தப்பறும் பிள்ளார்க் கவதரித் தனர்சீ
ரரங்கராச ரும்புவி தழைக்க. 4

அவர்தமக் கறைதற் கருந்திரு வாருங்
கச்சியிற் சித்திரை மதியி
லிவர்தருந் திருவா திரையிலோர் புதல்வ
ருதித்தன ரிவரிடை கேசற்
கவிர்கண நாதன் சுப்ரதிட் டன்ற
னஞ்சமா மவர் பிதா மகன்பே
ரெவர்களு முவகை யெய்துமா றெண்ணி
யிட்டன ரீன்றன ரவர்க்கே. 5

அத்திருக் குமர ரிளமையிற் றனே
யருமறை யாதியாம் பனுவ
லெத்தனை யியைவ வவையெலாம் பயின்று
புரையிகந் தொழுக்கமு மேன்று

முத்தரிற் சிறந்த முனிவரா யொழுகக்
கண்டிடு முனைவர்க ளிவரொண்
புத்தியப் புள்ளா ரோவெனப் புகழ
வதுமுதற் பரந்ததப் பெயரும். 6

அப்புளா ரனுசை யாயெழிற் கிடமா
மணங்கினு ளொருத்தியங் குதிக்கத்
துப்பிதழ் மடந்தைக் கீன்றவர் தோதா
ரம்மனென் றரும்பெய ரளித்திங்
கொப்பருந் தனயர்க் குயர்திரு மந்தி
ரார்த்தமு முதல்விசே டங்கண்
மெய்ப்புறப் புகன்று மிசையுறுந் திருநா
டெழுந்தனர் விழைந்துபே ரின்பம். 7

தந்தையர்க் குரிய தனயர்செய் கடன்க
டகவினின் வணைந்தெவற் றுள்ளு
முந்துவே தாந்த நூன் முறைப் பயிலு
முதிர் நசை மிடைந்தன ரிருப்பப்
பிந்தியங் குருகைப் பிரான் பிள்ளா னெங்க
ளாழுவா னுதியர் பெருக
நந்துநற் பொருள்கண் மொழிந்தனர்பாத
தீர்த்தமு நல்கியின் பரிவால். 8

தாமுமின் பூதூ ரிரைவரின் பாத
தாமரைத் தண்புன லருந்தி
நாமமீ ராறு நவிறரும் பரம
னுடெழுந் தருளனு மவர்க்குத்
தோமறும் பிரம மேதமா யாவுந்
தொல்முறை பிறழ்தலின் றயர்ந்தா
ராமவர் புதல்வர் புண்டரீ காக்க
ரங்காத் தடியவர் திரளா. 9

ஆனைமா மலையா னமர்தருங் கச்சிப்
பதிதனிற் சித்திரைத் திங்கட்
கானைசித் திரையி னடாதூராழ் வானுக்
கருந்திருப் பேரனு யதன்பின்



மானையா ரிசைசேர் தேவரா சப்பெம்
மானிடத் தவதரித் தொளிரு
மானடா தூரம் மாள்சுபத் திரன்ற
னஞ்சமாய் மகிதலம் புகழ்வார். 10

சிறுதிருப் பருவத் தேகலை யனைத்துஞ்
சிக்கறக் கற்றனர் மற்றும்
மறுவருஞ் சீபா டியந்தனைப் பயில்வா
னின்றவர் மலரடி தொழுது
மறிந்தவர் தமது மூப்பையுந் தாதைக்
கஞ்சினர் தனயரென் பதையு
முறுபா பரப்பு மூவரிரும் பனுவ
லோதலின் மற்றுளந் துணியா. 11

எங்குலம் வளர வுதித்திடுஞ் செல்வ
வெங்களாழ் வானிடம் படரா
வங்குமுன் குருகைப் பிரான்பிளா னருளிச்
செய்துள வரும்பொரு ளோடும்
வெங்கதிர்க் கடவு ளெனவொளிர் சீபா
டியத்தையும் விழுமிதாப் பயிலச்
சங்கையொன் றின்றி யினதுகண் டேதி
யடங்குறச் சாற்றுவ ரென்றார். 12

ஓமென வதனை யேன்றவர் மீளா
வுவர்தமைக் குறுகினர் தொழுது
தாமுளம் விழைந்த தன்மையு மதற்குத்
தாதையார் மொழிந்ததும் செப்ப
நாமகம் கொள்ளும் புத்திரத் தன்மை
நணுகுது மென்றுகூ றுரைக்கி
னுமள வுமதுள் ளருத்தியிங் கொழிய
வறைகுது மென்றன ரன்னார். 13

வேறு.

அம்மா ளந்தத் திருமொழியை மீளா வையர்க் கறிவுறுத்தச்
செம்மாந் தவருஞ் செய்குதியச் சேயா றுரையின் வண்ணமென
வம்மா வென்று திருகிமகிழ்ந் தாழ்வா னடியிற் றாழ்ந்தவர்முன்
செம்மா பாடி யஞ்சிரமேற் சேர்த்தே சபத மாங்கிழைத்தார். 14

அன்னா ரின்னார்க் ககமகிழா வரிய வுசவி னிறையோடும்
பொன்னார் பாடி யந்தொடங்கிப் பொலியும் பொருள்க ளவையாவுஞ்
சொன்னார் சொன்ன படியடையச் சோர்வின் றெழும்பு நிரைநிரை
முந்நீ ரலையிற் கிளரகத்துண் முதிரக்கொண்டார் முகமலரா. 15[யாய்

ஆரா வமுதம் பருகுவபோ லவைகண் முற்று மவாவுபவ
ரோரா யடையப் பின்பம்மா ளிசைக்குங் காலக் கேபமதை
நேரா நோக்கி யருளாழ்வா னிகரி லவரின் பெருந்திறனுஞ்
சீரார் குருவி னிடையகலா வன்புங் கண்டு சிறக்கணியா. 16

பின்னும் பெருகும் விசேடமெனப் பிறங்கும் பொருள்கள் பெறவருளி
முன்னெம் பெருமா னாரறைந்த முதன்மை செறியு நித்தியத்திற்
சொன்ன பரமை காந்திகளின் சொல்லற் கரிய தன்மையரே
யுன்னற் குரியா ரெனவுமந்த யுலையா நிட்டை யுறுகைக்கே. 17

தேடற் கரிய கத்தியத்திற் றெரித்த வுபாயா னுட்டானங்
கூடற் குரிய தெனவுமதின் கோடற் குரிய பொருடெரிவா
னாடற் கரிய பாடியமூ மழகார் கீதா பாடியமும்
வீடற் கரிய வெனமதியா விழவிற் பயிலவேண்டு மென்றும். 18

இப்பே ருணர்விங் கில்லவர்க ளெழிலா ரோரா ரியரடையா
வெப்பேர் பரமு மவரானே யிருடீ கேச னடிநிறுவித்
தப்பே தொன்று மிலராகித் தனிய ராயுய் குவரென்றுஞ்
செப்பா விதனை நற்பாத்தி ரத்திற் செலுத்து கெனவருளா. 19

போரா நந்தம் பெருகுதிரு நாட்டிற் குடனே பெயர்ந்தருளச்
சீரா ரம்மா னுளமாழ்கிச் சிந்தை தெளிந்தே யவர்க்கியன்ற
நீரார் ஞானப் புதல்வரெனு நியாயங் கொண்டு கிரியையெலா
மேரா யாரு மெடுத்துரைப்ப விழைத்தார் பரக்க வீங்கென்ப. 20

பயந்தோர்க் கியற்றும் பண்பெனவே சரம கிரியை பரிந்திழையா
நயந்தேல் புத்தி ரத்துவத்தை ஞாலம் புகழ நனிநாட்டி
யுயர்ந்தா ராய வாரியரி னோங்குங் கருணைக் கடைக்கணிப்பான்
மயர்ந்தார் தெருளும் வகைவனையு மறுவின் ஞான பூரணராய். 21

அருந்தத் துவசா ரம்மெனும்பே ரடையும் பனுவ லாதிபல
மருந்திற் பெருகப் புரிந்தருளா மதிளோங் கருளா ளன்மணிக
ளிருந்தெக் காலும் வில்லெறிய விரவும் பகலும் வேறறியாப் [ரும். 22
பரந்தொப் பின்றிப் பரம்பதம்போ னிலவுந் தளியுட் பாய்ந்தொளி



கச்சி வாய்த்தா னெனக்கழறுங் கால்கள் பலவார் மண்டபத்துண்
மெச்சுஞ் சீபா டியபகவத் விடய மாதி மெய்ந் நூல்க
ளிச்சித் தடையு மெழின்மதியார்க் கிமையா நாட்டத் தருங்கரவா
கச்சிச் செவிசேர்த் துவந்தொழுக நாளும் பகர்ந்து வந்தனரால். 23

காணா வதனை யிதுதக்க கருதுங் குருவின் நலமெனவே
பேணா விழைந்து கிடாம்பியெனும் பேரா ரப்புள் ளாருமொழின்
மாணார் குசையி னுதிமதிசேர் வடக்குத் திருவீ திப்பிளையு
மேணா ரவர்பா லியைந்திருவே தாந்தங் களையு மேய்ந்தனரே. 24

எங்கெங் குள்ள விருபிறப்பி னியையுந் திருவை ணவர்களெல்லாஞ்
சங்கங் குழுமி யம்மாளின் சவிசேர் சன்னி தியின்மிடையாத்
திங்கண் மருவு மெண்ணரிய திவிமீன் றொகுதி யெனச்சூழ்ந்து
பங்கம் பறியும் பனுவல்களின் காலக் கேபம் பண்ணுழியே. 25

சில்லோ ரிங்ஙுச் சீர்காலக் கேபஞ் செய்தற் கேதேனுஞ்
சொல்லா ரேது வுண்டுகொலோ சொல்லீ ரென்ன வம்மானா
நல்லோ ரேத்துந் திருக்கச்சி நம்பிக் கிவனே யருளாள
னெல்லா ருய்யு மிருமூன்று வார்த்தை புகன்றா ளெனப்புகன்றார். 26

## வேறு

பின்னோர்தினம் பெருகுந்திருப் பாராசர பட்டர்
பன்னுந்திருப் பேரானாகும் சுதரிசன பட்டர்
மின்னும்பல சிகரிச்சிர மேயெங்கணும் வசுவின்
பொன்னினகர் சிக்குமெனப் பொலிகச்சியிற் புக்கார். 27

அம்மாளருள் புரியங்காலக் கேபத்தழ கறியா
வம்மாவிதி னழகேயழ கென்றேயவ ரடியின்
னன்மாமுடி யிறையுஞ்சாவவ ரருளுங்கொடு நாளுஞ்
செம்மாந்துளம் வேதாந்தகா லக்கேபமுஞ் செய்தார். 28

அந்தப்படி யொழுகத்திரு ஞானத்தொளிர் பட்டர்
வந்துற்றில ரொருவைகலி லெனவம்பொழு தம்மா
ளந்தப்பெருங் காலக்கேப மறையாதவர் வரவைச்
சந்தத்திரு வுளமுன்னுபு சமழ்த்தேயிறை தாழ்த்தார். 29

அப்பேரவை தனிலன்னத ரொருமூலையி னமரா
வெப்போழ்திரு மலரினறை வளியுண்டுவ தெனலா
யொப்போதரு முறையின்பொரு ளுளமேவுவ ரதனை
யிப்பேதையை ரென்கண்டன ரென்றேனைய ரெண்ணா. 30

சுவைமாமது வெனவாய்விரு டும்மாளடி தொழுதே
யவையன்னவ ரடையாதுள தொருமூலையே வறிதே
நவையென்றது வேனுள்ளுபு நவிலாதவ மேயிங்
கெவையுந்தரு பொழுதுங்கழி வெய்தப்புரி வென்றார். 31

ஆசாரிய ரிவரன்னவ ரடறனனமு மறியார்
பேசாதுள நாளும்வகை யவரீடறு பெருமை
வீசாவொளிர் தரமாடுத மெனவுன்னிய வேளைத்
தேசாரவர் துணைவிற்படற் குற்றாரவை தேத்தே. 32

வந்தோர்முக நோக்காவிவண் வைபகல்பல வெம்மான்
மைந்தர்தரு சீபாடிய மருவிச்செவி மடுத்தீ
ரெந்தேடதி லிலகும்பொரு ளேனுஞ்சிறி திசைப்பீர்
சிந்தாவகை யுளவோசிறி தறிதும்மென் றுசெப்ப. 33

கையஞ்சலி செய்யாவவர் கருதுங்குரு மணிகாள்
வையஞ்சொலும் வகைபன்முறை வழங்குற்றனி ரவையுண்
மெய்யெஞ்சலி லெதுதொண்டனேன் மிழற்றற்குள மெனவே
யையஞ்செல லின்றேயவை யடையப்புகல் கென்றார். 34

கேளாவவர் கேட்போருளங் கிளரும்வகை யாசா
ளாலுரைத் தருளும் பல முறையின்பொரு ளடிக்
கோளார்க்கருங் கொண்மூபல குமுறிப்பொழி வதுபோல்
வாளாவசை தந்தோரகம் வட்கப்ரசிங் கித்தார். 35

குருவுந்தம தோள்கொண்டவர் குளிரத்தழு வினராய்
வெருவும்வணம் முன்னேசினர் விண்மைவிற்புகழ் தரலுந்
தெரிவின்றிவர் திறல் சொற்றன மெனயாவரு மவ்ர்பான்
மருவும்பெரு மதிப்பின்னது முதலுற்றனர் மாதோ. 36

ஆங்கேசுதர் சனபட்டரு மாசானுரை பலவுந்
தாங்கேட்டருள் வணமேமட றன்னிற்றினம் வரையாப்
பாங்கேபெரு கம்மாடிரு முன்னிட்டனர் பணிய
வாங்காவவ ரடையத்திருக் கண்சாத்துபு மகிழா. 37

இப்பாடிய வுரையேவையு மியையுஞ் சுவடிக்கே
யெப்பாலினுஞ் சுருதப்பிர காசிகையென் றெழிற்போர்
தப்பாதொளிர் தருமாலிகை யினிநீரதரை யெங்குஞ்
செப்பாவிரி தரவேநனி செய்வீரென வறைந்தார். 38



படியிப்படி யரியின்மதம் பரவச்செய வம்மா
ளிடியிர்கிளர்ந் தயலார்மத வாதச்சம ரிழைப்பா
னடிவைத்தறை கூவச்சவை யமரப்புளா ரடிகே
ளடியற்கரு டரினன்னவ ரகன்றாரினி யென்றார். 39

கண்டன்னவ ரூக்கந்திரு வுளங்கூர்தரு களிப்பி
னுண்டெம்முடைய யவரின்னருள் போய்வம்மினென் றுதவக்
கொண்டத்திரு மொழியேகியக் கூடார்திர ளிரியப்
பண்டைப்பெருந் தருக்கந்தனின் வயங்கொண்டனர் பண்பின். 40

அவலீலையி னவ்வாதிய ரழிந்தேகவப் புள்ளார்
தவவெற்றிமி டைந்தேசய கோடந்தமர் தழங்க
வவிர்வெங்கதி ரெனமீண்டெழு மழகுண்முகங் காணு
நவின்றார்வா திகசாம்புத ரென்னுந்திரு நாமம். 41

## வேறு

இன்னண மிளையாழ் வாரன் றெழில்பெறத் திருத்தி யென்று
மின்னுறு சமய மென்னு மிக்கெழு மமுத வெள்ளம்
பன்னரும் பிள்ளா னுச்சா னென்றிடும் படியிற் பாய்ந்து
தன்னிக ரரிய வைண வப்பயிர் தழைக்க மூற்றும். 42

அப்புளா ரென்னுஞ் செய்ய வகலமார் தடத்துட் டங்கி
நிற்பவே றுடற்று மூண்மை நேர்கிலாச் சமயத் தோரு
மொப்பருந் திறலைக் காணு வுவந்துளங் கரையுந் தூப்புற்
செப்பரும் பிள்ளை செய்தி செப்புதும் பிழைக்க மற்றும். 43

முத்தியின் பதிக ளேழுண் முக்கிய மெனும்பொற் கச்சி
யுத்தம தலத்துள் ளோங்கு முயர்தரு மெழுபா னுங்கு
சித்தரச் சிங்க வாத னுதிபர் களிலோர் சீர்மை
பெற்றவா னந்த சோம யாசிய ரெனும்பேர் பெற்றோர். 44

அவர்திருக் குமரர் நூலா மாழியின் கரைகண் டாழி
யவர்கரத் தரிய னன்பிற் குறையுளா யலங்கு மெங்கு
நவிறரும் புண்ட ரீகாக் கயச்சுவா வென்னு நாமச்
சவிகொளும் புதல்வர் வையந் தழைப்புற மனந்த சூரி. 45

வேதமா மூர்த்தி யென்ன விளங்குமவ் வனந்த சூரி
யோதிடா தொழிந்த நூலிங் கொன்றுமின் றெனவே யோதிக்
கோதறு மடியுந் தேசும் பருவமும் வனப்புங் கூர்ந்து
மாதவர் புகழா நிற்க வீன்றவர் மற்றுங் காணு. 46

நங்குலம் பெருகு மாறோர் நங்கையை வதுவை யாற்ற
விங்குவர்க் கிழைத்து மென்று வெண்ணினர் படர்ந்தப் புள்ளா
ரங்கரம் பிடித்து நந்த மனுசையாந் தோதா ரம்ம
னெங்களின் புதல்வற்கில்லா ளெனவர வருள்க வென்றார். 47

நாளையே நவில்வ துள்ளா ளுடியென் றவரைப் போக்கி
வாளையேய் விழியாள் செய்தி வரதனே யருள்க வென்று
தாளையே யவன தெண்ணித் தாந்துயில் கொள்ள வந்த
நாளையே யவரின் சொப்ப னத்திடை யவனு நண்ணி. 48

நாகநா சோரு வானுந் தங்கையி னலத்தின் மிக்க
தாகுமா லகட்டி ராமா நுசனதின் சித்தாந் தத்தைப்
பூகலத் தொளிர வெங்கும் புரியுமோர் புதல்வ னந்த
வாகைசே ரனந்த சூரிக் குதிப்பனீ வழங்கு கென்றான். 49

அப்புளார் துயிலு ணர்ந்தென் னருளாள னருளை யுன்னித்
தப்புளா வுள்ளம் பொங்கித் தக்கதோர் முகூர்த்தந் தன்னில்
வெப்புளா ரமரர் வாழ்த்தத் தூரியந் துவைப்பத் தங்கைக்
கப்புளார் கொடிய னணைப் படிமண மிழைத்தா ரன்றே. 50

குன்றுருக் குணக்குன் றன்ன கோதறு மனந்த சூரி
பின்றிருக் கற்புக் கில்லாம் பெண்ணவ ளுடனே நாளு
நன்றுறும் பஞ்ச கால பராயண ராகி நண்ணிக்
கொன்றிகழ் மனையின் வாழ்க்கை குறைவற வனைந்து போந்தார். 51

வேறு

இங்கிவ ராரக் கலிதோடத் தேன மிழைத்தொன் றுணர்வின்றி
மங்குப வர்க்கேழ் மலையானே மன்னு சரண்வே றின்றென்று
வெங்குமு ரைக்கும் படியோங்கு மென்றிரு வேங்க டம்முடையான்
சங்கொளிர் சக்க ரங்களைமுன் றுளடை வோர்க்கே தானொருவா. 52

தன்றன மின்றித் தானொளிர மற்றவை யின்றே தன்னியல்பு
மொன்றிட வுள்ளம் பரித்திழைத்த வெம்பரு மானூர் தரிசனத்துட்
கன்றிடு வெய்ய கலிபுணர்ப்பின் காசினி மீதே சிலரயரா
நன்றுற வங்கங் குளதொல்லை வைபவ வாதங் களைநாடார். 53

தம்முள மோடுந் தடமோடித் தக்கது ரைக்கும் பனுவல்களுக்
கம்மவ யிர்த்தங் களையோதி யாருமணங்குஞ் செயலானு
மம்மட முள்ளா ரினிமண்மே லாருவ ரென்ற வருளானுஞ் [54
செம்மையி னின்றோ ரணைகட்டிச் செய்குது மோர்கைம் மாறெனவே.



ஏருறு முள்ளத் தென்றுபுவெந் தானவ ரேங்கி யிரிதரவுஞ்
சீருறு மண்டர் வீறுகளி கூரவு மோதை செய்தொளிர் தன்
பேருறு நேரின் மணியாழ்வான் பீடுறு தூப்புற் றனிலுதிக்கக்
காருறு மேனித் திருமார்பன் கண்டுக ருத்திற் றுணிவுற்றான். 55

அஞ்சன வெற்ப னஃதிழைப்பான் பின்பொரு வைகற் காமிரவிற்
றஞ்சரு ளந்தச் சூரிகளின் றோமறு சொப்ப னத்தினெழா
வெஞ்சலி லென்றன் வேங்கடமா வெற்பினை நீயி ரெய்துவிரேன்
மஞ்சனை யிடின் மற்றருள்வே னென்றன னேகக் கண்விழித்தார். 56

கண்டிறந் தந்தம் பொற்கனவைக் கண்மணி யென்னுந் தங்கிழத்திக்
கொண்டளிர் மேனி வெண்ணகையா ளுண்மகிழ் வெய்த வோதலுமக்
கெண்டையங் கண்ணு ளெற்குமொரு கேடரு மங்க லந்தரித்தா
ளண்டம ளாய வம்மலைக்கே வாவென் றைந்தா ளென்றனளால். 57

காணவ ருங்க ளுவொருங்கே கண்டதி னந்தத் தம்பதிக
ளேணுறு விம்மி தத்துடனே யீடரு மோதத் தோடணையாப்
பேணின ரன்றே சென்று திருப் பீடுறு வேங்க டம்படரா
மாணுறு சாமி புட்கரணி மன்னெழி றாநீ ராடினராய். 58

தங்கன விற்கண் வந்ததெனத் தானொளிர் சீநி வாசனடி
யங்கமொ ரெட்டு மம்புவிமேற் றங்கவி றைஞ்சிப் பல்படியே
பங்கம கற்றுந் தீர்த்தமுடன் பைந்துள வுங்கொண் டின்னருளி
னெங்களிராமா நுசனடியு மீண்டினர் பல்கா லிறைஞ்சுபுபின். 59

ஆயிடை யோர்பா லின்னிசிவா யின்றுயில் கூர வங்கனவின்
மேயினன் வேங்க டத்துறைவான் மிக்கொளி வீசும் வாலிபனா
மேயும றைச்சீ வைணவனா யேதமி லந்தச் சூரிகளி
னேயமுடன் செந் தாமரையை நேரெழி றண்ட நோக்குபுமுன். 60

வாரிதி யாடை வையமெலாம் வாழ்த்துமோர் சேயை யீதுமுமக்
கேருள தீதோ வென்றுதவ வின்னிசை யாருங் கண்டையினை
நேரிதி னன்னார் கொண்டதுதங் கேரிழை யாளின் கையினிடச்
சீரதி ளந்தப் பைந்தொடியார் சிக்கென வுண்டார் கொண்டதனை. 61

வேறு

இத்தகைக் கனவினை யெழுந்து வைகறை
யத்திருப் பேறுள ரகத்துட் பொங்கியே
சித்திரச் செயலின னருளை யோவறப்
பத்தியி னினைந்தனர் வியந்து பாடியே. 62

அற்புறுந் தன்னுநற் கதனைச் சொற்றலுந்
தற்பரன் செயலினை யவரும் தம்முளம்
பொற்புற நினைந்தனர் நினைந்து போற்றியக்
கற்பினர் திறத்தையும் வியந்து கண்டனர். 63

ஈங்கிது நிகழவங் கெழுந்த ருச்சகர்
வீங்கிய வெயின்மணிக் கதவம் வீக்குபு
வோங்கிய சினகரத் தூடு சென்றுகண்
டாங்கனை குரன்மணி யாழ்வா னின்மையை. 64

தங்கர் நெரித்தனர் தயங்கி யுள்வெரீஇப்
பங்கயத் தவளுறை பரிய மார்பனே
யெங்குநின் திருமணி காந்த தென்செய்கும்
மங்களம் பெருகுற வழங்கு மாயவா. 65

கேசவா வென்றடிக் கிடத்தித் தம்முடி
யேசறுந் திருப்பணிக் கிறைவர் மாட்டிதைக்
கூசின ருரைத்தலுங் குழுமி யன்னவ
ரோசனை புரிந்துமற் றொன்றுந் தேர்கிலார். 66

அருந்தொழில் புரிகில ரகத்த யிர்த்துடன்
னிருந்தன ரொருத்திடற் கிருந்த போழ்தெலாந்
தெரிந்துளத் திருமலைச் சீயர் போந்தவண்
வழிந்தலீ ரறிந்தது வழங்கக் கெண்மினே. 67

அம்புவி புகழ்திரு வனந்த சூரிகட்
கெம்பிரா னெழின்மணி யீந்த தென்னயான்
வம்புறுங் கனவுகண் டெழுந்தேன் வைகறை
நம்புமி னெனவவர் நவில மற்றரோ. 68

சூரிக டமைவிளித் துசவ சூரிகள்
சீரிய தமதுசொப் பனமுஞ் செப்பிடக்
தேர்கில ரவர்பினுந் திகைத்து நிற்புறக்
காரிய முணர்ந்தருள் கருணை யாழியான். 69

சீயர்மே லிவர்ந்தவர் செய்ய வாய்கொடு
தாயயா மில்வுல கனைத்துந் தாங்குறற்
கேயுமெம் மிலக்குவ முனியி னின்மதஞ்
சாய்வுறு தீண்டினி தழைத்தற் கெண்ணியே. 70



தேசிக ரொருவரித் திகழுஞ் சூரிகட்
காசறு புதல்வரா யவதா ரஞ்செயத்
தேசுறுங் கண்டையைத் தெருள்க வீந்தனம்
வீசுமி னுமதுளத் தையம் விள்ளவே. 71

ஆதலா லின்றுதொட் டாட்டுங் கைம்மணி
தீதிலா விவணினித் தெழுத்தற் றீர்மினென்
றோதினு னகையி னுயரு மத்தலத்
தேதமில் சிறுமணி யிசைத்த லின்றுபின். 72

உண்டுமி ழுலகினற் குளுற்றும் பூசையிற்
கண்டையின் றெனிலது தனுசற்காய்விடு
மண்டலத் தெனினுமங் கரிய மாமணி
விண்டலஞ் செவிடுறத் தெழித்து வீறுமால். 73

இத்துணைப் புதுமையங் கிருந்து கண்டவர்
பித்தனுக் கருளிய பீதத் தாசின
னுத்தம வருடனை மணந்த வுத்தம
ரத்தவப் பேற்றினை வியந்தங் காடினர். 74

அனந்தமா சூரிக ளதன்பின் றேவியி
னனந்தலை யுலகொருங் களந்த நாயகன்
மணந்தரு மலரடித் துளவுந் தீர்த்தமு
மினுந்திகழ் வனபொருளெவையு மேய்ந்தனர். 75

தொழுதெழுந் தவனடி துதித்து மீண்டுவிண்
முழுதுபொற் சிகரிபொன் முடிகள் வெங்கதி
ரெழுதரு மெனபல விலகுங் கச்சியுட்
பழுதறு தூப்புலென் பதியை யண்மினர். 76

## வேறு

தோகைநிக ருந்தகைய தோதாரம்மன் கண்ட
வாகையுழு சொப்பனதி னத்துமுதல் வேய
மோகையுறு மொண்கருத ரித்ததுவு நாளு
மீகையின்வ ளர்ந்தநல மென்னவளர்ந் தன்றே. 77

அக்கருமி டைந்தமணி யாழுவானு மந்நா
ளெக்கலைஞ ரும்புகழ்ப ராசரனை யேய்ந்தே
யொக்கவரு டங்களுமீ ராறவனு றைந்தே
பக்குவம றிந்துபினு தித்தனர்ப டிக்கண். 78

ஆயிரநான் கோடுசெறி முந்நூற்றெழு பான்மே
லாயனமுஞ் சுக்கிலம டைந்தமதி கன்னி
தூயதிரு வோணமது தோன்றுதின மென்ப
மாயிருஞா லங்கிளர மாயனருள் கொண்டே. 79

அத்தகைய பேறுடனு தித்ததைய நிந்தே
யெத்தகைய ரும்புகழ வேய்ந்தவரப் புள்ளா
ரொத்தமரு மான்றனையு வப்பினெழுந் துள்ளம்
சித்திரமு றக்கண்டருள் செய்துவகை பூத்தே. 80

சாதகரு மம்வனைந்து சூரிகள்க ரத்தின்
னேதம்றும் வேங்கடவ னைய்ந்ததிருத் தீர்த்தத்
தோதருவி ழாவினிட யுதயமதி னனு
மாதரவி னப்பரம னவதரித்த தானும். 81

அத்திரும கர்க்கருளி யக்கடவு ளைமம்
வித்தகவி லச்சினையும் வேண்டிவனை விக்க
வெத்திசையு மப்புதல்வ ரின்சொல்வளர்ந் தென்ன
நித்தமொரு வண்ணமுற நேரிதின்வ ளர்ந்தார். 82

ஆயபரு வந்தனைய றிந்தனம ருந்தி
யேயபணி ரண்டுமதி யெய்தியபி னாண்டிற்
காயதிரு வுற்சவமு மாற்றியரு ளாளன்
சேயதப னீயவொளி செய்ந்நிலயஞ் சேர்ந்தே. 83

முந்தியெம தன்னைபெருந் தேவியருள் முன்னிப்
பிந்தியரு ளாளனிரு பீதகவ டிக்கண்
வந்துதொழு திட்டிடலும் வணங்கரிய வன்னான்
சிந்துகரு ணைத்துளியன் செய்துகடைக் கண்ணால். 84

பூசகன்மு கந்தனிலிப் பொருவரிய மைந்தன்
மாசறுமி ராமாநுச மாமுனிவ னென்ன
வாசறும வன்றரிச னக்கிளறவ னாகக்
காசினியி டைப்புகல்க வின்பெறுவ னென்றே. 85

இன்னருள்பு ரிந்துதன தினியபிர சாதந்
தன்னையும ளித்துவிடு தன்மையதி னன்றே
யன்னவரன் றேயடைக்க லங்கொணம தத்தி
மன்னுமலை யானென்னப்பின் மகிழ்ந்துமொழி குற்றார். 86



மற்று மூன்றினிற் சௌளமும் வனைத்துபின் னைந்தி
லுற்ற சூரிக ளக்கரப் பயிற்சியு முளுற்றக்
கற்ற யாவருங் களிப்புற வேங்கடா ரியருஞ்
சொற்ற தோர்தாஞ் சொலிப்புற மதியினுட் பயில்வார். 87

பயிலு பாலிய பருவம திடையொரு பகலே
வெயில்வி டுந்திரு மேனியிவ் வேங்கடா சிரியர்
மயல றுந்திரு மாமனோ டெழுந்தன ரம்மா
ளுயலு றும்பொரு ளுரைத்தருள் கோட்டியைக் குறுகா. 88

விருத்த ராமிரு விதத்துமம் மாள்பதம் பணியா
வருத்தி யோடெழுந் தொருசிறை யடங்குபு நிற்கக்
கருத்து மம்பகங் களுமவர் மேனியிற் கலக்கச்
சிரித்த வானனத் தொடுமிவர் திகைத்திருந் திட்டார். 89

வடக்கு றுந்திரு வீதியிற் பிள்ளையும் வனப்பிற்
கிடப்பெ ருங்குணத் திணையிலாச் சிறுவரியா ரென்ன
வடுக்கு மென்மரு மாமென வப்புளா ரறைய
வடக்க லின்றுளத் ததிசயங் கிளர்ந்தன ரவரும். 90

பின்ன ரெங்குரா நிருத்தினம் பெருகுறா லென்ன
மன்னுஞ் சீடரை வினவலு மலர்முகத் தம்மாள்
பன்ன ருந்திருத் தூப்புலன் பழுதறு வடிவின்
மின்னு கண்கருத் தழுந்திட மெய்ம்மறந் தவர்கள். 91

விட்ட தானமு மயர்ந்தனர் வெருமனே விழிக்க
மட்ட ருமலர்ச் சோலையந் தூப்புலார் மன்ன
னிட்ட மாயிவ னெழுகையி லெளியனேன் விடுக்கப்
பட்ட தானமு மிதுவன்றோ வெனவதைப் பகர்ந்தார். 92

கேட்ட வத்திரு மொழிதனைக் கிளர்தரு மம்மாண்
மீட்டு மிக்கிரும் பூதொடும் பெருமித மெய்தித்
தீட்ட ருந்திற லவர்தமை திகழ்புயத் தணையா
வேட்டு மோந்துபின் புச்சியை விழுமிதிற் பல்கால். 93

முன்ன ரின்புலத் தியன்பரா சரனெனு முனிவன்
றன்னை யின்னருள் புரிந்தவத் தகையென வருளிப்
பொன்னை யொத்தவே தாந்தமிப் புவியிடை யிலகப்
பண்ணி வேறுபுன் மதமெலாம் பாறிடத் தகர்த்தும். 94

வேத பாரகர் பணிதர விளங்குபு மற்றுங்
கோத றும்பல குணனிலாங் குன்றெனக் குலவும்
பூத லந்திகழ் குருவெனப் பொலிகெனும் பொருளான்
மேத குந்திருச் சுலோகமொன் றிலகுற மிழற்றி. 95

ஏயு மோரவ தாரமா மிதுவென வாழ்த்தித்
தூய பூதமா புரியிறை த்டக்கமாங் குரவர்
வாயி லாய்வரு மரபினின் பொருளெலாம் வழங்கற்
காய பாத்திர மாமவ ரொருவரே யென்றும். 96

மூப்பி னுெந்தன மாதலா னுமிவர் முகப்பக்
கோப்பு டன்புகன் றுவப்புறக் கொள்கிலே மென்றும்
யாப்பி னுள்ளயர்ந் தப்புளா ரருகுற விளித்துத்
தூப்பு லையனுந் துணைகெடத் துலங்குறு மிவர்க்கு. 97

மந்தி ரார்த்தமு மருவுசீ பாடிய மதுவுஞ்
செந்த மிழ்த்திரு மறைதனிற் செறிந்தசெம் பொருளு
முந்து நம்முடை யவருள முவக்குமா முழுதுந்
தந்து காண்மினென் றவர்கரம் பிடித்தனர் தந்தார். 98

வேறு

சின்னு ளாங்குச் சென்றபி னம்மா டிருநாடே
வுன்னு வேகத் தேசிகர் பாத முளங்கொண்டே
துன்னு வப்புள் ளாரெழு வாயாந் துகளற்றோ
ரன்னார் செல்வப் புத்திர ரம்பொற் கரத்தானே. 99

வீறுர் வேத மந்திர லோபம் விளையாமே
யாறு மாயி ரம்பொ னதற்குச் செலவிட்டுக்
கூறு வாருங் கூர்தர மோதஞ் சரமத்துப்
பேறுஞ் செய்கை பேணியி ழைத்துப் பெருகுற்றூர். 100

ஆடுஞ் சீலக் கம்பர மெங்கும் வெயில்காணு
நாடுந் தூப்புன் னுதனுபன யனங்கொள்ளாப்
பாடும் வேத மேவையு மோர்கால் பயில்வுற்றே
தேடும் யாமு னைத்துறை வாரிற் றெருண்டாரால். 101

அப்புள் ளாரப் பிள்ளையி னுண்ணே ரறிவிற்கிங்
கொப்புள் ளாரா ரென்றுளம் பொங்கி யொளிர்சத்தம்
வைப்புள் ளாடும் வாதநூ லெல்லாம் வழங்கப்பின்
னப்புள் ளாடுங் கேதன னுண்மை யறிவிப்பான். 102



வாயா மந்தி ரத்துட னேயப் பொருளும்பண்
பேயா வீறும் பாடிய மாதி யெழின்மன்னுங்
காயாவண்ணற் காகுவ வெல்லாங் கலைவல்லோ
ராயா விம்மி தங்கொள வல்லே யறைதந்தார். 103

சத்தஞ் சோதி டத்தொடு சாலுஞ் சுவையாவுந்
தத்துங் காவி யங்க ளலங்கா ரமுமெல்லா
நத்துங் கன்ம நாடு பிரம நவின்மீமாஞ்
சத்தின் னூலுஞ் சாற்றிட வொன்றே முறைகேளா. 104

என்னே கற்று ரெல்லையி லின்னூற் குவையாவும்
முன்னே யெட்டெட் டென்றல கோது முது நூல்கண்
மன்னே செய்தற் காமுர மற்றும் மலிந்துள்ளார்
பொன்னே யொப்பார் போல் பவ ரிந்தப் புவிமீதார். 105

கண்டா ருள்ளங் காமுற விந்தக் கலைஞர்க்கண்
மண்டா ழாழ்வார் மற்றுயர் நாத முனியுள்ளக்
கண்டா ழாநற் போனு முன்னுங் கலைவல்லோர்
கொண்டார் வாசங் கூர்தர வென்றுட் குளிர்ந்திட்டார். 106

வேறு

ஞானமோ டொழுக்க மாதி நற்குணக் கிடமா யிங்ங
னுனிலத் ததிச யித்து நாலைந்து வயதி னெல்லா
நீனிற முகிலைப் பேணு நின்மல ரடியு மாசா
னுவ ரிவரோ யென்ன யாவரு மறைய நின்றூர். 107

நின்றவப் பொலிவைக் காணு வப்புள்ளார் நிலவு மில்வாழ்
வென்றெடுத் துரைப்ப தேமிக் கினியதென் றிரண்டி னுன்னு
மின்றொடுத் தனைய மேனி மங்கையா ரெனுமின் பேரோர்
துன்றறற் குழலி னுளைத் தூயமா மரபிற் பேசி. 108

பல்லியங் கறங்க வேத பாரகர் மறைக ளோத
மெல்லியற் சுமங்க லீகள் சோபன மிடைந்து பாட
நல்லியன் முகூர்த்தந் தன்னி னுவல ராசி கூறச்
சொல்லிய விதியின் வண்ணஞ் சூழ்மணம் புரிவித் தாரால். 109

குழைகிழித் தகன்ற கண்ணு டிருமங்கை யெனும்பேர் கொண்டா
ளழகினுக் குறையு ளாளவ் வணங்கனு ளுடனே யையன்
பழகியிற் றரும மெல்லாம் பண்புற விழைத்து வையம்
விழைதரத் தரிச னத்தை விளக்குபு விளங்கி னூரால். 110

பிள்ளையார் நிருவா சத்தை யப்புளார் பெரிதுங் காணு
வள்ளனம் வசந னன்று கனவிடை யளித்த மாற்றந்
தெள்ளிதிற் பலித்த தென்று திருவுள மகிழ்மீ தூர
வெள்ளரு மவர்க்குக் கண்ணி னெச்சிலொன் றெய்தா வண்ணம். 111

பரமதம் பறக்கப் பண்ணிச் சுயமதம் பல்கச் செய்தற்
குரமிகும் வணமு முன்னி யுவர்தமை யருக ழைத்துக்
கருடமந் திரத்தைக் காதிற் புகட்டிபு யதிமன் செல்வந்
தரணியிற் றழைக்கு மாறு தாங்குகென் றருளிச் செய்தார். 112

கழிவுறப் பகலுஞ் சில்ல வங்ஙனங் கருதப் புள்ளார்
மழைநிறக் கரிய மாலின் மகிழ்பதம் புகுத வீழாக்
குழைதருந் திருநோய் மேனி கூர்தர மருகற் கூவி
விழைவொடுங் கடைக்கண் செய்து விள்ம்புவ ரிதனை மாதோ. 113

தடைவயற் பூதூ ரையன் றரிசின நமது வாயா
லுடைதிரைப் பரவை ஞாலத் தோங்கிட வவரி னுள்ள
முடையதென் றுரைத்துள் ளார்நம் முயர்நடா தூரம் மாளத்
தடமதி னடையு மிந்த வவரடி நிலைக டாமும். 114

அகமெனு மாணி யத்தை யழித்திடுஞ் திகிரி சங்கும்
வகையுறப் பெறுதி ரென்னு வழங்கிட வவரும் வாங்கி
யுகவொடு சிரத்திற்சூடி யுஞற்றுநா டோறு முய்வான்.
மிகுதருந் திருவாராத னத்துடன் மிளிரவைத்தார். 115

வைத்தவர் வனச மானு மடிகளைத் தமது கண்ணி
லொத்துபு விழிநீர் வார வுளைந்தன ரொதுங்கி நிற்பத்
தொத்தறு மவரும் பிள்ளை யாரொடு துதைந்து நிற்கும்
பத்தர்கட் கருளிப் பாத தீர்த்தமும் பரிவின் மற்றும். 116

தந்திருக் குரவர் பாதந் தகவுற நினைந்துகொண்டே
முந்துறத் திருவை குந்த முதமுடன் மிடையத் தூப்பு
லெந்தையா ரெழுவா யாய முதலிக ளிரங்கிச் செய்தா
ரந்தவப் புதல்வர் கையாற் சரமகைங் கரிய மார. 117

வேறு

அதன்பிறகே வேங்கடவா ரியர்காசி.
யாதியெழி னகரி யெல்லா
மிதம்பெருகுங் கச்சிதனக் கிணையாகா
வெனவில்கு மதன்வா யொன்றி



முதம்பெருக மொழிமுனிவ ருரைகளெலா
முகில்வண்ண னுவக்க வன்னுன்
மதம்பெருக மொழிகுறவர் வார்த்தைதனக்
கிணையாகா வென்னும் வண்ணம். 118

எப்பொழிலும் பேர்போய வெழிற்குரவ
ரிசைத்திருவாய் மொழிகள் கொண்டே
யொப்பரிய சிந்தாத்தப் பிரவசன
முஞற்றுபுநன் கொழுகு நாளிற்
செப்பரிய வீரவல்லிப் பேரருளா
ளையனொடுஞ் செறிந்த ஞானத்
தப்பெரிப கிருட்டினமா சாரியரே
யாதியர்வந் தடைந்தா ராங்கே. 119

வந்தவர்க்குத் திருவிலச்சி னையைமுதலா
வணிந்தருளி வையந் தாயோன்
மந்திரமந் திரார்த்தமினு மங்களஞ்சேர்
விசேடமெலா மயர்வின் றீன்றே
யிந்தியுய்யப் பெரியதிரு வடியரைநேர்ந்
தடிபணிந்து பிறங்கக் காண்பான்
முந்துமயல் கொடுநினைந்தம் மூர்த்தியருள்
புரியுமிட முளத்தா ராய்ந்தார். 120

அன்றுலக முண்டுமிழ்ந்தா ஞணைதனிற்
றன்மூக்கி னகழ்ந்து போழ்ந்து
குன்றடருங் குடதிசையிற் கொணர்ந்ததனு
னப்பெயரி னெழுகிக் கூறுந்
துன்றுபுனற் றரங்கிணியின் கரையினவ
றுளமுவக்குந் துணைய தாயும்
மன்றலரும் செங்கமல வல்லிமண
வாளனிதம் மணப்ப தாயும். 121

விண்முடிசே ரோடதியென் விழுப் பெயரார்
வெற்பருகே யொளிர்வ தாயுங்
கண்மனமுங் கண்டவரைக் கவர்வதுமா
வளரைந்த புரத்துட் காண

வுண்மகிழத் துணிவெய்தி யெழுந்திடையே
　　யோங்குமது ராந்த கத்தின்
மண்மலிய வெழுந்தருளுஞ் சானகியி
　　ராமனடி வணங்கி வாழ்த்தி. 122

கடலாடைக் காசினிநற் கதிகொள்வா
　　னவதரித்த பூதூர் வள்ளன்
மிடலாகு மைந்திருத்த மிடைந்தமலர்
　　மலிமகிழை யிறைஞ்சி மீளா
விடலாகா விழைவதனுக் கிருப்பிடமாந்
　　திருவைந்த புரத்தே மேவி
மடலாறுந் தாமரையுட் பெடையொடன
　　மருவுகலு ழன்ற ஞற்றில். 123

நீராடா நித்தியகன் மம்புரிந்து
　　நிவந்தேறி யதனீள் கோட்டிற்
காராருங் கடிமதில்சூழ் கனகமுடிக்
　　கோபுரநீள் ககனந் தாவுஞ்
சீராருஞ் சினகரத்துட் சென்றுமுனஞ்
　　செங்கமலக் கொடியின் பாத
மாராவன் புடனிறைஞ்சி யன்னையருள்
　　மன்னியவ ணகன்று மற்றும். 124

அயனரனிந் திரனாதி யமரரெலா
　　மருளேக்கா மாணைக் கஞ்சி
நயனுறவே தந்தொழிலை நடத்துவதா
　　ளருந்தெய்வ நாத னென்னும்
பெயருடைய பெருமாளின் திருவடிமுன்
　　முடியாரவும் பெட்பிற் காண
வியனழகைப் பன்முறையே வீழ்ந்துதொழு
　　துள முருகி விழநீர் வார. 125

ஆயிரகா வுடையானு மளவிறந்த
　　பொழுதுணர்ந்தும் பழிச்சற் காகா
மாயிருசெங் குணம்பலவு மெடுத்தேத்த
　　மகிழ்ந்துதிரு மலராண் மார்பன்



சேயதிருச் சிறக்கணிப்புஞ் செய்திவனுஞ்
　　சித்தியுறு மெனவே செம்மை
யாயைவிட வொடுபிரசா தமுமளிக்க
　　வவைமணந்துட் களிப்பின் மீண்டார். 126

மீண்டிவரா வோடதிவெற் புயர்முடியை
　　மிடைந்தங்கா ரழகு சிங்கன்
வேண்டியுறைந் தருணிலயக் கெதிர்சோம
　　சவனமெனத் தழைத்து வீறித்
தீண்டுமல ரைந்தருவைச் சிணைக்கரத்திற்
　　றிகழரசி னடியைச் சேர்ந்து
காண்டகுசெங் கருடனது மந்திரத்தை
　　யுரு வேற்றிக் கடிது நோற்றார். 127

## வேறு

வைகல் சில்லங் ககல மாமறை
மெய்க லந்தொளிர் மேனி வீமனும்
பொய்க ழன்றவப் புனித ருக்கெதிர்
வைக வன்னவர் வளர்மு தத்துடன். 128

பாடி யாடியப் பன்ன காசனன்
ஞட கப்பொருப் பனைய மேனியை
வீட ரும்வியப் புடனும் வீழ்ந்துகண்
டாட லேவையும் மறிந்து போற்றினர். 129

போற்ற வத்திருப் புட்க ளீசன்முன்
பாற்றல் சானுநம் மாழு வார்துகண்
மாற்று மந்திரார்த் தங்க ளோடெலா
மேற்ற நாதமா முனிகட் கீந்தபோல். 130

பூத மாபுரிப் புனித ரின்றுறை
மேதி னித்தலை மிளிர்மி டுக்குறற்
கோதி னாவ ருயர்செ விக்குளே
யாதி மாவயக் கிரிவ னம்மறை. 131

அந்த மந்திரஞ் செறிந்த வாரியர்
செந்த லைத்திரு வயின தேயனைப்
பந்த நாகனே பதும நாபனின்
முந்து வாகன முடிவி லாற்றலாய். 132

ஆர ணக்கட லமுத மீதெழுங்
கார ணத்துவெற் பாய காவலா
சீரெ ணற்கருஞ் செவ்வி யோய்திரு
நார ணற்கடி யவரி னையகா. 133

தூயநின்றிருத் தூவி யானெழும்
வாயு வால்வட வரைந டுங்குமே
மாய வென்வினை யருள்க மற்றெனச்
சேய பொற்பதந் தொழுது செப்பினர். 134

காசி பன்றரு கனக வெற்பனு
னுசி சொல்லிமற் றரிய தூப்புலார்
தேசி கன்றனைச் சிறக்க ணித்துடன்
வீசி வெஞ்சிறை மிசையெ ழுந்தனன். 135

பின்பு பிள்ளையா ரன்பு வேதனுக்
கன்பி னாரண மளித்த மாமுகத்
தென்ப ரன்பத மலரி ரண்டையும்
வன்பி னுண்மலர் வளர வைத்தரோ. 136

தாமொ ருதியந் தகையு மெண்ணிலார்
பூமி யெங்கணும் பூத வூரிறைக்
காம ருந்தரி சனம லங்குறற்
கேம வம்மறை யியைய வெண்ணியே. 137

அன்ன மந்திரம் பகலு மல்லுமே
முன்னி நாவினுன் முணுமு ணென்னவே
பன்னி யன்புமீ தூரு பான்மையார்
மன்னி னூரெதிர்ந் தருளு மாயனே. 138

வேறு

உள்ளா யவாறு பகையோட வொறுத்த வையன்
விள்ளா தவன்பின் விறலீர்த்திட நாறு குல்லைக்
கள்ளாட லங்கள் கமழம்புய மாக்க ழுத்தன்
றள்ளா வருளி னவர்கண் ணுறத் தானெ ழுந்தான். 139

அண்டங் குலுங்க வதிருங்கணைப் போகு வெள்ளைக்
கண்டந் துலங்க வொளிருந்திரு மேனி கண்ணிற்
கண்டங் கமெங்கும் புளகுற்றிடக் கைகள் கூப்பித்
தண்டம் புரிந்து தரமற்றமு தத்தி னடி. 140



பாடிக் குதித்துப் பரவப்பல வாய கல்விக்
கூடுற் றொளிரு மொருமூலம தாய வையன்
மோடுற்ற பூதூர் முனியின்னெறி முற்று மோங்க
நாடிப் பகர்ந்து நலமுண்கென நன்க றைந்தே. 141

காலுங் கருணா ரதமார்கடைக் கண்ணி னோக்கிப்
பாலுங் கறக்கும் படிவத்துடன் விண்ணிற் பாயக்
கோலங் குலவுங் கொழுந்தூப்புலர் முன்ன ராங்கே
யேலுங் கலைக ளவையோவவை யாவு மெய்தி. 142

இந்தி வரத்தி னெழிற்றுசா திக்கு முன்னர்
வந்தே வலுற்ற வகையத்திர வித்தை யெல்லா
மெந்தா யருள்க வெனநிற்புற வேன்ற வற்றைக்
கந்தா யுலகங் கரையேறிட மின்னி னரால். 143

முன்னே பரியின் முகன்றேத்திர மின்ப முற்றும்
பொன்னேய் கருடற் குறுபைம்பதும் பொற்பி னூற்றி
மின்னேய் கமலை மிடைதேவர்க ணாய்கன் பாத
மென்னே யமென்றங் கெழுந்தார்தொழு தேத்தி னரே. 144

என்று ளடைந்தார்க் கிடுக்கண்வினை கீழி றங்கு
மென்றே குறிப்ப தெனக்கைம்மலர் தம்மி லொன்று
பொன்னேய் விரல்கள் புவிநோக்கம லர்த்தி நிற்கு
மென்றே வநாத னிதயங்குளிர்ந் தன்பி னோக்கி. 145

செந்தா மரைக்குஞ் சிறுக்கந்தருந் தாளி னீருங்
கொந்தார் துளவுங் கொளவீந்துகு ணத்த கத்தீர்
நந்தார் கரத்து நமதின்விட யம்பொ ருந்துஞ்
சிந்தா தநாலுஞ் செயுமிங்கெனச் செப்பி னனே. 146

வேறு

சேலாரும் வேல்விழித்தோ தாரம்மன் செய்தவத்தின்
பாலால வதரித்த பார்புகழ்வே தாந்தகுரு
நாலாய வாரணமு நாடரியா னன்மொழியை
யேலாவி டையுடனே யெழின்மாளி கைமணந்தே. 147

என்றேவ நாயகபஞ் சாசத்து மின்பொழுகு
நன்றேயச் சுதசதக மென்னு நறுநாலு
பொன்னேய் வடமொழியிற் புகன்றுபுவ னஞ்சிறக்கப்
பின்றேன்பெ ருகதமிழ்வ ணைந்தருளப் பேணியுளம். 148

ஊசற்பா பந்துப்பா வொண்கழற்பா வம்மனைப்பா
வேசற்பா வெழில்வளரு நவரத் தினமாலை
தேசற்காத் திருவழியு மும்மணிக்கோ வையெனவே
பேசற்கா மொன்பதுநூல் பெட்புறவங் காற்றியபின். 149

ஏதேறு நிகரரிய வித்தகைநூ லின்முனைவா
யாதார ஞானதனை யாற்றியதே யரும்பயனென்
றேதாவ வையாவு மொண்டிருவாழ் மார்பனிரு
பாதம்பு யத்தளித்துப் பணிந்தவனைப் பழிச்சினரால். 150

ஏமாம்பு யக்கொடியு மெம்பெருமா னுங்காணா
வாமாமெ னவுகந்தெம் மாற்றறெலா மிவ்வரிய
வாமாக ரநூலின் வாயான்வி ளக்கியதா
ஞமாயெ திரியற்று நற்சிறப்பா நுந்தமக்கே. 151

நஞ்சடகோ பந்தனையே நல்குதுமென் றேயருள
வுஞ்சனனென் றேயவரு மேன்றுதலை யுண்மகிழ
வெஞ்சலிலென் றரிசனத்தை யீண்டுறைந்தே யெவ்வுலகும்
விஞ்சவி ளைந்துவி ளக்குகென மீண்டுரைத்தார். 152

மற்றத்தி ருத்திவ்விய தம்பதிகண் மாற்றமதைப்
பெற்றப்ப டியதிரா சன்மதமே பேறுளதென்
றற்றற்ற கம்வறிதே யயற்சமயத் தாரிரியக்
கொற்றத்தி றங்கொடுசெய் தங்கே குலவுற்றார். 153

கண்ணாதா ரன்றிரிய நாட்டும்பெ ருநூலைப்
பண்ணார்ப ரமதபங் கம்மென்றே பகருமுல
கண்ணாரு மேத்தெடுக்கு மப்பெரிய ராற்றுதவி
யெண்ணாத வைணவரும் வைணவரா மென்பதென்னே. 154

அம்மான்பின் றேரமையத் தரக்கர்கு லங்களைந்த
பெம்மான டிதொழுது பேரழகைக் கண்டிழைத்த
செம்மாம றைநிகருஞ் செப்பரிய தோத்திரத்தை
யெம்மார குவீர கத்தியமென் றறைகுவரே. 155

முல்லைமு கைமலரு மொய்குழலா ரின்குரவை
யல்லும்ப கலுமயர்ந் தவனைக் கண்டிழைத்த
சொல்லரிய தோத்திரத்தைக் கோபால விம்சதியென்
றெல்லவருங் கண்ணுற்றே யின்புறுவ ரன்புறவே. 156



சொல்லாருந் தூப்புலிறை யில்வண்ண மாங்குறைய
வல்லாரு யர்நூலில் வந்துபல ரக்குரவ
ரெல்லாருங் கேட்ப விசைத் தருளும் வைகரியு
மெல்லாரும் பூதூரி றைவரருள் பாடியத்தை. 157

கூடாருங் கொண்டாடக் கூர்ந்தொழுகு மின்சுவையே
நாடாரு நற்கவிக ணவிலும்பெ ருந்திறலுங்
கோடாக்கு லைகுலையப் பரசமயக் கொள்கையெலா
மாடாவ மர்வாதத் தாங்கடையும் வென்றிகளும். 168

காணாவி யந்துகளப் பென்னுங்க டலாடி
யேணார்க விதார்க்கி கசிங்கமென் றிரைந்து
பேணாவி றைஞ்சிப்பெ யர்ந்தனர்க ளன்றுதொட்டுக்
கோணாடிக் கொண்டாடு மப்பெயரை யெப்பொழிலும். 169

## 27-வது சருக்கம்.

வீணைமா முனியு மஞ்ச விழுமிய பிரம சாரி
யானெனப் புகன்றவ் வண்ண மபிமன னயர்ந்த சேயுங்
காணவா னவரோ டாரு முயிர்த்தெழக் கருணை கூர்ந்த
மாணரா வணையின் பாத மனமுறார் மனிதர்தாமே. 1

ஆனிய மதன்பின் சில்ல வாங்கிறந் தகத்தி ஞடி
வானவ ரிறைவன் கஞ்ச வல்லியா ரடியுங் காணாத்
தேனிமிர் துளப தீர்த்தத் துடனவர் விடையு மேய்ந்து
கானமர் பொழில்சூழ் கோவ லூரினைக் களித்துச் சென்றார். 2

அஞ்சிறை யெகினங் காரண் டங்களு மரிய நேமி
மஞ்சுள பதங்கந் தாமு மணந்துள பெடைக ளோடுங்
கொஞ்சிய படியு லாவுங் குளிர்புனற் பெண்ணை யாடி
விஞ்சிய கரும மெல்லாம் விழைதர விழைத்துப் பின்னும். 3

பொன்முடிச் சிகரி வாயிற் சினகரம் புகுந்து மூவர்
முன்மிட லுணர்ந்து போற்ற விடைகழி முளைத்த வாயன்
றன்மல ரடியிற் றாழ்ந்து ததைந்தவ னருளை வையஞ்
சொன்மிகுந் தேக ளீச தோத்திரந் துளைவிற் பாடி. 4

அவனருள் விடையு மேய்ந்தங் ககன்றெழுந் தமரர் தம்மூர்க்
கிவணினி தெனவெப் போழ்து மீண்டின ருறையுங் கச்சி
யிவர்தரு நகையிற் சென்றங் கீர்ங்கதி ருடலந் தேய்ந்தே
யவிர்தரு மெயில்கள் சூழு மம்மணி நிலயம் புக்கார். 5

புக்கவர் பரிசத் தானும் புரோக்கணம் புரிச லானுந்
தொக்கவெம் பவங்க ளெல்லாம் தொலைதருந் திவியா னந்த
புட்கர ணியினன் ருடிப் புரிந்துநாட் கருமமு முன்னர்
நெக்குரு ககத்திற் றுயார் நிலவுதாள் பணிந்து போற்றி. 6

கவ்விய வபையின் வேதன் கவின்பெறு மகத்தெ ழுந்த
கொவ்வையங் கனிவா யையன் குரைகழ றொழுதெ ழுந்து
செவ்விய சிறக்க ணிப்பெற் கிளைமையிற் செய்தா யைய
வுய்வகை யெளிய னென்ன வுதவியை யுணர்ந்தன் றேத்தி. 7

அன்றெதிக் கிறைவர் கத்தி யந்தனி லருளிச் செய்த
வின்றிரு பிரபத் திக்கே யியைந்தசெந் நெறியை நாடி
நன்றுறப் புள்ளார் தங்க ணல்கிய படியே யுய்வான்
றுன்றுறப் பொலியு மங்க பஞ்சகத் துவக்கு மென்னே 8

பரசமர்ப் பணத்தை யன்னோன் பாதபங் கயமே விட்டுப்
பரசிநிற் பராய் நிற்கப் பங்கய விழியோ னன்பின்
விரைசெறி துளப தீர்த்தமாதிதன் விழுமி தீந்தே
யுரைசெறி பிரபந் தர்க ளுளுற்றுக வெமக்கென் றோதி. 9

ஆரிய ருடலமெல்லா மாதரத் தருளிச் சேப்பச்
சீரிய சிறக்க ணிப்பச் செய்தனன் விடுக்க வன்னோர்
நேரிதி னவைக ளெல்லாஞ் சிரந்தனு னிவல வேன்றே
யாரினி யெமக்கெங் கீடென் றவனருள் கருதி மீண்டார். 10

மீண்டயன் மிளரு மாழ்வா ராரியர் நிலைய மேவிக்
காண்டகு முறையி னன்னோர் கழல்களும் பணிந்து போற்றிப்
பூண்டவ ரருளு மீண்டு புரியெங்கும் புரிந்து வாழ்த்த
வீண்டினர் படரத் தொண்டர் மாளிகைக் கெழுந்தார் மன்னோ. 11

வரந்தரு வரத னாணை நிறைவுறும் வகையே நாடி
யுரந்தரு முயர்வார் நியாச சதகமு முணர்ந்து போற்றிற்
புரந்திடும் வரத ராச பஞ்சாசத் ததுவும் பொற்பிற்
பரந்திடுந் தேவ பாடை பயனுற விழைத்து மற்றும். 12

அருத்தபஞ் சகமு நாடு படைக்கலப் பத்தும் வீறுந்
திருச்சின்ன மாலை சீவை ணவதின சரியை யோடு
முறைப்பவர்க் குயர்வே யோங்கும் பன்னிரு நாமப் பாட்டுந்
திரைங்கட லமுத மன்ன செந்தமிழ் கவியிற் செய்தார். 13



தித்திக்கு மத்தி யூரைச் சேர்பவர்க் கெனவே நாடி
யெத்திக்கு மிசைக்கு மந்த வைந்தினி னிறுதி யோதி
மற்றத்தி கிரிமா காண்மி யம்மென மகிழ நூலோன்
றத்தக்க திவிய தேசத் தண்ணலு மறைந்தா ரன்றே. 14

## வேறு

பின்னமருங் கருகிருந்து கடைக்கணிக்கும்
விளக்கொளியான் பெருமை தன்னை
மின்னுசர ணாகதிதீ பிகையெனவே
மிழற்றறிய நூலா யாற்றி
மன்னுதரு வட்டபுயம் வெஃகாவே
ளுக்கைகளில் வதியு மாயன்
பொன்னடியும் புகுதிறைஞ்சி யங்கங்கே
டொலியுதிரு மூர்த்தங்கட்கும். 15

எத்தனுறு மட்டபுயாட் டகந்தனையு
மேமமுறு மெதோக்த காரி
தோத்திரமுங் காமாசி காட்டகமுந்
தோமறவே நிரலே யாற்றிப்
பூத்தலையிற் பவளவடி யோதிமமின்
பெடையோடும் பொருந்தியாடு
மார்த்தகவன் பனைசூழு மணிமதிலார்
புட்குழியை யடைந்தா ரன்றே. 16

அப்பதியி னலங்குதிரு மரகதவல்
லியனடியைத் தொழுது முன்னர்
முப்பொழுது முத்தொழிலு மூவுருவுந்
தானாகி மூல மாய
வொப்புயர்வின் றொளிர்விசய ராகவனைத்
தொழுததன்பி னவர்க்கே யொன்றுஞ்
செப்பரிய பரமார்த்த துதியென்றோர்
செழும்பனுவ லருளிச் செய்தார். 17

மீண்டொருகாற் சுதரிசனுட் டகஞ்சோட
சாயுததோத் திரமு மேன்மை
பூண்டொளிரப் புகன்றருளி யுத்தமவ
மர்த்தலமென் றுவந்து போற்று

மேண்டிகழுங் கவிப்படியி ராகவனுங்
கண்ணுறுமிவ் விறைவன் பங்கென்
ருண்டவறி வாளர்சொலு மருளாளன்
விடயமுற வருளிச் செய்தார். 18

பவக்கடலின் சுழிவலியைப் படலாற்றுந்
தேசிகர்கட் பார்வைக் குற்றே
னவைக்கிடனுந் தொழில்களிலார் நசையற்றே
னயல்விரகோ வெவையு நண்ணேன்
தவர்க்கரிய தத்துவஞா னக்கனினென்
சங்கையெலாந் தகர்த்துத் தேர்ந்தேன்
சுவைக்கனியீ யளப்பரிய வருணிதியே
யயர்படுந் துயக்கந் தீர்ப்போய். 19

மூலமொன வோலமிடுங் கரிக்கருளுங்
கரிகிரியார் முதல்வா வுன்றன்
சீலமுறுஞ் சேவடிமே லென்பரத்தைச்
சேர்த்தினனு யினியோர் துன்பென்
பாலனுகா தென்றடியே னிர்ப்பானுய்
நிர்ப்பயனுய்ப் படிந்தே னென்னுங்
கோலமுறும் பொருளமைந்த கவியொன்றை
நினைந்தனருட் குளிர்ப்ப நின்றுர். 20

அக்காலப் புள்ளாரி னருமகளாங்
குடங்கையென வகன்ற கண்ணுண்
மைக்காரின் மலர்க்குழலாண் மலர்தருபுண்
டரீகாக்கர் மனைக்கி முத்தி
தக்காரே புகழ்தருமோர் தனயசிகா
மணிவயிறு வாய்த்தாளென்ன
மிக்காய வுளமகிழ்வி னெழுந்தருளி
மிளிர்மகவை யருளானேக்கி. 21

## வேறு

தான வாரித மைக்கிட னுமதற்
கான காவலி லச்சினை யாற்றுபு
ஞானி வாசனெ னுந்திரு நாமமு
நானி லம்புகழ்ந் தார்த்திட நல்கியே. 22



செய்தி யன்னதி ராயனோர் சீடன்பா
லெய்தி யுத்தர தேயமி ருந்தருண்
மெய்தி கழ்திரு மேவிய தந்தைபா
னெய்து சேரநு வன்றுடன் விட்டனர். 23

விட்ட நன்மை யறிந்த விழுமியோர்
மட்டொ ழிந்தம கிழ்வுள மீறவே
தொட்ட ருந்தவெ ழுந்துளி தூயநீர்
பட்ட தென்புலப் பண்ணவ ராடினுர். 24

ஆடி மைந்த னவதரிப் பென்விழா
நாடி நன்கு சொண் டாடிங லக்கெலாட்
வீடெ னுந்திருக் கச்சிமி டைதரற்
கூடெ ழுந்தந ரையுட னுற்றனர். 25

அன்றி ராவவர்க் காயக னவிடை
யென்றி ருக்குரு கைப்பிரான் பிள்ளானுக்
கன்று பாடிய காரா ருளிய
வொன்ற யத்திருக் கண்டனு முற்றரே: 26

ஐய நின்திரு மைந்தனுக் காதரஞ்
செய்யி லச்சினை யோடுதி ருப்பெய
ருய்ய நல்கிய வொண்டிருத் தூப்புலன்
கையி லெம்மைக் கலந்தளி யென்றனன். 27

கண்டி றந்துக ருதிக்க ளுவினை
மண்டி ராயனி டஞ்சொல மற்றவன்
புண்ட ரீகக்க ணர்பதம் போற்றியே
யெண்ட ணந்தப ரிசுக ளீந்துடன். 28

எம்மை யுய்யவி ழைத்தரு டேசிகர்
நம்மி ருரென நுண்முக மன்பல
செம்மை யார்தரச் செப்பின னன் றுபோய்
வம்மி னென்றுவ ழிவிட்டு மீண்டனன். 29

பின்ன ரந்தப்பெ ருப்புக ழாரியர்
மின்னு பொன் மணித் தண்டிகை மீதிவர்ந்
தின்ன ருந்திற லேத்துற நான்மறை
மன்னு நாவல ரேந்தம திக்குடை. 30

அள்ள ருந்து மமுதென வின்னிசை
யெள்ள ரும்பல மேளமி யம்பிட
விள்ள ரும்பல வீறுட னேகியே
கள்ள ரும்பொழிற் கச்சியை யண்மினர். 31

அந்த வேலையி லானைம லைப்பரன்
சந்த வார்நில யந்தனைச் சார்ந்தவர்
கந்த மாலைமு தற்பல கைக்கொளா
வந்தெ திர்ந்தனர் வண்மைவ ரிசையின். 32

சீரி னன்னவர் சீநரஸ் கோயிலின்
காரி யங்கொளுர் காவல ரன்றியும்
பேரி ராட் திருவெனும் பெற்றியா
ளுரு மவ்வன மன்பினெ திர்ந்தனர். 33

வேங்க டாரிய ரும்மய வெஞ்சிர
னீங்கெ ழுந்தன னென்றெதிர் போதரப்
பாங்கி னன்னவர் பண்புருந் தூப்புலர்க்
காங்கு பன்முறை யஞ்சலி யாற்றியே. 34

கண்ட சொப்பனச் செய்தி கழறியப்
பண்டை மாமுக னுய பரன்றனைக்
கொண்டு நாளுங் குறைவறும் பூசனை
யண்ட யாவையையு மாற்றுகென் றீந்தனர். 35

பிள்ளை யாரடங் காது பெருமித
முள்ள நின்று புறம்பெழுந் தோங்குற
வள்ள வாய்மலர்க் கைகளி லேந்தியே
கள்ள ருந்திக்க ளித்தன ரென்னவே. 36

ஆடி யாடிய கங்கரைந் தேயிசை
பாடி நாடிக்கு ணங்கள் பலபட்
நாடி யாவது நற்பய னெய்துமா
றீடி லாதவென் சொற்களி னேத்தியே. 37

அன்றி ழைத்தவ யமுக னின்றுதி
யின்றெ னக்குப்ப லித்ததென் றேயிரைந்
தென்று மெற்கொரி டுக்கணி லையெனு
மதைப்படித் தாரங்கு நாடியே. 38

இளங்குழந்தை முதல் கிழவீறாக
சரீரம் திடமாகவும் புஷ்டியாகவும் இருக்க விரும்பினுல்

ஆயுஷ்ய ரஸாயனம்

ஒன்றே அவர்களுக்கு இன்றியமையாதது.

சுவையில் தேனினும் இனிது.

வைத்தியரத்தினம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார்,
ஆயுர்வேத பூஷணம் ஆயுர் வேதாசார்ய அவர்களால் தயார்செய்யப் பட்டது.

சாஸ்த்திர தத்துவப்படி ஒவ்வொரு தாதுவின் போஷணைக்கும் இன்றியமையாத பொறுக்கி யெடுத்த சரக்குகளான அச்வகந்தி, பார்ங்கீ, முஸலீ கந்தம், அயக்காந்த பஸ்மம், சிலாஜது, பஞ்சமூலங்கள் முதலியவற்றின் ஸத்துவங்களைக்கொண்டு தயார் செய்யப்பட்டது.

நூற்றுக்கணக்கான வைத்தியர்களால் புகழப்பெற்றது. தவறாமல் குணம் செய்வது. இருபது வருஷங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான ரோகிகளுக்குக் கொடுத்து எவ்வித பலஹீனத்தையும் சொஸ்தம் செய்யக் கூடியதென்று விசேஷ அனுபவத்தின்பேரில் இவ்விதம் விளம்பரம் செய்யப்படுகிறது. ஆயுஷ்ய ரஸாயனம் இரத்த விருத்தி செய்யும். ஆகவே ஜ்வரம் முதலிய பல வியாதிகளாலுண்டாகும் இரத்தக்குறைவு, சர்ம வியாதிகள், கீல்வாயு, இளைப்பு முதலியவை இதனுல் தீரும். மூளையையும், நரம்புகளையும், தசைகளையும் பலப்படுத்தும். இருதயத்துக்கு வன்மை யுண்டாக்கும். ஸகல தாதுக்களையும் புஷ்டியுள்ளதாகச் செய்யும். க்ஷயரோகத்தில் மிக்க உபயோகமானது. இளைத்துப்போயுள்ள குழந்தைகளுக்கு உண்மையில் இது அமுதம் போன்றது. சுமார் 48 வேளைக்குப் போதுமான புட்டிக்கு ரூ. 3-4-0.

வேறு ஔஷதங்களுக்கு ஜாபிதா தேவையானுல் அனுப்பப்படும்.
வியாபாரிகளுக்கும் வைத்தியர்களுக்கும் விசேஷ கமிஷன்.

சார்ங்கதர ஸம்ஹிதையிற் கூறியுள்ள பெரும்பான்மையான ஔஷதங்களும் ஆர்யன் பார்மஸியில் கிடைக்கும்.

ஆர்யன் பார்மஸி,
11, ஆதியப்ப முதலித் தெரு,
வேப்பேரி, மதராஸ்.

Registered No. M. 916.


சீரும் சிறப்பும் செழித்துப் பெருமையாய் வாழ
அழகிய ஆபரணங்களை அணிவது அவசியம்.
ஆபரணங்களுக்கெல்லாம் அரசனுயிருப்பது

## வைர நகையே.

சீமைக் கமலங்களைச் செம்மையாகத் தேடியணிபவரிடம் ஸ்ரீதேவி தானே வந்து தாண்டவமாடுவள். இது விளம்பரக் கட்டுரையென்று வீணில் நினைத்துவிடாதீர்கள். வைரம் முதலிய இரத்தினங்களின் அருமை பெருமைகளைப் பகுத்தறிந்த பண்டைக் காலத்திய பண்டிதோத்தமர்கள் நிர்ணயித்து நிரூபித்துள்ள வசநங்களையும் வாசித்துப் பாருங்கள்.

षड्भिर्वाष्टभिर्यत् बहुभिर्वा समन्वितम् ।
अम्बुदेन्द्रधनुर्वारिधरं वज्रं प्रशस्यते ॥
वज्रस्य सर्वदा तादृग्गुणयुक्तस्य धारणम् ।
शोभाकरं श्रेयसां च साधकं दोषघातकम् ॥

"ஆறு பட்டைகள், எட்டு பட்டைகள், அநேகம் பட்டைகள் உள்ள வைரங்கள் குணத்தில் ஒன்றுக்குமேல் ஒன்று உயர்ந்தவை. நீர்கொண்ட மேகத்தில் தோன்றும் இந்திர தனுஸ்ஸுக்கு ஒப்பான நிறங்களோடுகூடி நிரம்ப நீரோட்டமுடைய வைரக்கல் வெகுப் பிரசஸ்தமானது. அவ்வாறு உயர்குணமுள்ள வைரத்தை எப்பொழுதும் அணிவதால் அழகும் ஒளியும் ஓங்கி வளரும்; சீரும் சிறப்பும் செழிக்கும்; பீடையும் பிணிகளும் பற்றறவே ஒழியும்."



உத்தம குணம் பொருந்திய வைரங்களே அணிபவருக்கு அவ்வித அழகையும் ஐச்வர்யத்தையும் அளித்திடுமென்பதை ஆற அமர யோசித்து அவ்வித வைரங்களை வாங்கியணிய முயலவேண்டும். அவ்வகை வைர நகைகளை நாகரிகமான மோஸ்தரில் நன்றாகச் செய்து நம்பிக்கைக்குப் பாத்திரமாய் பெரும் வியாபாரம் செய்பவர் ஸூராஜ்மல் **கம்பெனியாரே.**



SURAJMAL'S
The Jewellers
313 ESPLANADE, MADRAS.


Printed by Kabeer Printing Works, Triplicane, and Published by
Vankipuram S. Vasudevachariar, for Sri Vaishnava Siddhanta Prachara Sabha, Ltd., Madras